உ

கடவுள் துணை

# தமிழ்வரலாறு

(பிற்பாகம்-முற்பகுதி)

தஞ்சாவூர்

K. S. ஸ்ரீநிவாஸ பிள்ளை

எழுதியது.

மூன்றாம் பதிப்பு.

தஞ்சாவூர்

பூர்ணசந்திரோதய பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1930.

விலை] [ஒரு ரூபா

Printed at the Poornachandrodaya Press, Tanjore.

உ

வி ணை ம ற ஆ

கடவுள் துணை

கும்பகோணம் துரைத்தன உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப் பு
தலைமை வகித்தவரும், தமிழ்க் கல்வியை வரையாது வழங்
கிய வள்ளல்களின் தலைமை பூண்டதாற் பெற்ற தியாக
ராஜ மகிபன் என்னும் காரணப்பெயரையே தமது
இயற் பெயராகத் தாங்கியவரும், தமிழையும்
சிவ பக்தியையும் பரவச் செய்வதைத்
தமது பிறவிப் பயனாகக் கொண்
டொழுகிய வரும், மாரிபோற்
கைம்மாறு வேண்டாது
ஆயுள்நாள் முழு
வதும் இடையறாது
அனேகருக்குத் தமிழறிவைப்
பெருக்கியவரும், என்னையும் பொ
ருட் படுத்தி எனது சிற்றறிவுக்கேற்பத்
தமிழைக் கற்பித்து எனக்குத் தமிழ் மொழி
யிடத்துப் பேரன்பூட்டிய பெருமானும் ஆகிய
**மகான். தியாகராஜ செட்டியார் அவர்கள்**
செய்த பேருபகாரத்தை நினைந்து நினைந்து உள்ளம் உருகி
அவர்களுடைய திவ்ய சரணாரவிந்தங்களில் இப் புத்தகத்தை
மிக்க விநயத்துடனும் பேரன்புடனும் சமர்ப்பிக்கின்றேன்.

உ

கடவுள் துணை.

# முன்னுரை.

---

நான் தமிழ்ப்புலவன் அல்லேன். ஆயினும், தமிழினிடத்திலுள்ள மட்டற்ற அன்புதூண்ட, பல தமிழறிஞர்கள் அவ்வப்பொழுது ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருப்பனவற்றை நான் அறிந்த அளவையில் தொகுத்தும், எனது ஆராய்ச்சியின் பயனுயுள்ளனவற்றைக் கூட்டியும் இப் புத்தகத்தை எழுதுகின்றேன்.

மகாமகோபாத்தியாய ப்ருஹ்மஸ்ரீ-உ. வே. சாமிநாதஐயர் அவர்கள், ப்ருஹ்மஸ்ரீ திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் இவர்கள் இடத்தில் அறிந்து கொண்டனவும் இதில் அடங்கியுள்ளன.

ஸ்ரீமான் மு. இராகவ ஐயங்கார் அவர்கள் செந்தமிழ்த் (தொகுதி 13—பக்—265) பத்திரிகையில் இம்முறையில் ஒரு கட்டுரையை வரைந்துள்ளார்கள். இப் புத்தகம் பெரும்பாலும் அது போன்றதாகும்.

இதில் உள்ள குற்றங்கள் அனைத்தையும் எனக்குரிமையாக்குதலே கிரமமாகும். மேலும், குற்றங்களைத் தமிழறிஞர்கள் எனக்கு விளக்கிக் காட்டினால், நான் அவர்கள் சொல்வனவற்றை வந்தனத்துடன் சிரமேற்கொண்டு மறு பதிப்பில் திருத்த முயலுவேன்.

இப் புத்தகத்தின் தொடக்கத்திற் கூறியாங்கு இதனை நான்கு காலப் பகுதிகளுடனும் சேர்த்து வெளியிடவேண்டும். ஆயினும், இதில் அடங்காத மூன்றாவது நான்காவது காலப்பகுதிகளின் சரித்திர சம்பந்தமாக எழுதி வைத்திருந்த குறிப்பு முழுவதும் களவுபோய்விட்டன. அதனால் இதனுடன் சேர்த்து வெளியிட இயலவில்லை. இது, தமிழுலகத்துக்குப் பயன்படுகிறது என்பதை அறிந்தால் அப்பகுதிகளையும் வெளியிட முயலுவேன்.

தமிழ் இலக்கண இலக்கியத்துறை முற்றப்போயவரும், பலவகை ஆராய்ச்சியிற் பேராற்றல் உடையவரும், சொல்லணி பொருளணி செறிந்த அழகான உரை நடை எழுதுவதில் மிகச் சீர்த்தி பெற்றவரும், பலராலும் நன்கு மதிக்கப்பட்டவரும் ஆகிய ஒரு நண்பரை மூன்றாவது, நான்காவது காலப்பகுதிகளை எழுதி வெளியிடுவதற்கு உதவி புரியுமாறு வேண்டிக் கொண்டிருக்கிறேன்.

இப் புத்தகத்தை எழுதி வெளியிடுவதற்குக் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராமய்யர் அவர்கள் பலவகையிலும் செய்த பேருதவிகள் என்றென்றும் மறக்கற்பாலன அன்று.

அளவில் ஆற்றலும் அறிவும் உள்ள கருணைக்கடலாகிய இறைவன் அருள் புரிவானாக.

தஞ்சாவூர், 8—5—22.

இங்ஙனம்,
ஸ்ரீநிவாஸன்.

உ
சிவமயம்.

# தமிழ் வரலாறு.

## பிற்பாகம்.

---

தமிழ்ப்புலவர்களும் அவர்கள் இயற்றிய நூல் முதலியனவும்:— தொன்றுதொட்டு நாளிதுவரையில் உள்ளகாலத்தை நான்குபகுதிகளாக்கி, ஆதிமுதல் சங்கத்திறுதிக்காலம் வரையிலுள்ள அளவை முதலாங் காலப்பகுதியாகவும், சங்கத்திறுதிக்காலம் முதல் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் ஈறுவரையிலுள்ள கால அளவை இரண்டாங்காலப் பகுதியாகவும், கி. பி. பதினோராம் நூற்றாண்டின் தொடக்கமுதல் பதினான்காம் நூற்றாண்டின் ஈறுவரையிலுள்ள கால அளவை மூன்றாங்காலப் பகுதியாகவும், கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் துவக்கம் முதல் நாளிதுவரையிலுள்ள காலத்தை நான்காங்காலப் பகுதியாகவும் அமைத்திருக்கிறேன்.

நாம் இப்பொழுது அளவிட்டு அறிதற்கு அரிதாய்உள்ள பல்லூழி காலங்களாய்த் தமிழ்மொழி மேன்மையான நிலைமையிலிருந்து வந்திருக்கிறது. அகத்திய முனிவர் தமிழ்நாடு வருவதற்கு முன்னரே அது தழைத்தோங்கி வளர்ந்திருந்தது என்றும், அவருக்குமுன் இந்நாட்டிலிருந்த புலவர்கள் இன்னார் என்றுவது, அவர்கள் இயற்றிய நூல் முதலியவை இன்ன என்றுவது அறியக்கூடவில்லை. அம்முனிவர் காலந்தொடங்கி நாளிதுவரை தமிழ்மொழியை அலங்கரித்த புலவர்கள் எண்ணிறந்தனர். அவர்கள் எல்லாருடைய சரித்திரத்தையும் எழுதி முடிப்பது என் போலியர்க்கு இயலாததொன்றும். தமிழுக்குப் பேரணிகலமாயுள்ள சான்றோர் ஒருவர் தமிழ் நாவலர்கள் சரித்திரத்தைப் பல ஆண்டுகளாய்த் தமக்கு அவகாசம் கிடைத்த காலங்களில் எழுதி வருவதை அறிய அளவில் ஆனந்தமுடையவனாயிருக்

கிறேன். ஈண்டு நான் எழுதமுயல்வது முக்கியமான புலவர்களிற் சிலரைப்பற்றி மட்டுமே. அதிலும், அவர்கள் இருந்த காலத்தை நிர்ணயிக்க முயல்வதே எனது முக்கிய நோக்கம்.

தமிழறிஞர் பலர், பலவகை ஆராய்ச்சிகளைச் செய்து தங்கள் ஆராய்ச்சியின் பயனுகஉள்ளவற்றைத் தமிழ்ப் பத்திரிகைகளிலும், ஆங்கிலப் பத்திரிகைகளிலும், சிறிய புத்தகங்களிலும், பெரிய புத்தகங்களிலும் வெளியிட்டிருக்கின்றனர். அவைகள் சிதறிக் கிடக்கின்றமையால் நான் அறிந்த அளவையில் அவற்றைத்திரட்டி எனது ஆராய்ச்சியின் பயனுக உள்ளவற்றையும் அவற்றுடன் கூட்டி இச்சிறுபுத்தகத்தை எழுதுகின்றேன். ஆராய்ச்சி இப்பொழுது இருக்கிற நிலைமையில் ஒன்றையும் முடிவுரையாகக் கொள்வதற்கில்லை. சில நண்பர்களின் தூண்டுதலால் இதை எழுதத் தொடங்கினேன். குறைந்த கல்வி அறிவை உடைய நான், அறிஞர்கள் எழுதியிருப்பவற்றை நன்குணராமையால், எழுதுவதில் பல தவறுதல்கள் காணப்படலாம். குற்றங்கள் உள்ளவற்றை எனக்குக் கற்பிப்பது கிரமமாகும். இதை வாசிக்கும் அறிஞர்கள் எனது தவறுதல்களைச் சுட்டிக்காட்டி, கூட்டியும் குறைத்தும் மாற்றியும் செய்யவேண்டுவன இவை என்பதை எனக்குத் தெரிவிப்பார்களானல் அவர்கள் சொல்பவற்றை வந்தனத்துடன் சிரமேற்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். யாதேனும் ஒரு பத்திரிகைக்குத் தங்கள் அபிப்பிராயத்தை எழுதி அதனுடன் நிறுத்திவிடுவார்களானல் நான் அவர்கள் எழுதியதை அறிந்து திருத்திக் கொள்வதற்கு இடமில்லாமற் போய்விடலாம். எங்ஙனமேனும் தமிழின் உண்மைச் சரித்திரம் வெளி வரவேண்டியதொன்றே எனது நோக்கம்.

தமிழ்நாவலர் சரிதை, தொண்டை மண்டல சதகம், சோழமண்டல சதகம், புலவர் புராணம்போன்ற ஆதாரங்களைக்கொண்டு தமிழ்ப் புலவர்களின் சரித்திரங்களையும், அவர்கள் இருந்த காலங்களையும், நிர்ணயிக்கப் பலர் முயலுகின்றனர். அவைகள் ஒருவாறு பயன்படுமேனும், அவற்றுட் சொல்லப் பெற்றுள்ளவற்றை எல்லாம் சந்தேகமற உண்மையென ஏற்றுக்கொள்வதற்கில்லை. இதுவரையில் வெளிவந்துள்ள பலஆராய்ச்சி உரைகளால், அவற்றுட்

பல உண்மையல்லாத செய்திகளும் சேர்க்கப்பட்டுள்ளன என்பது அறியப்படுகிறது. தமிழ் நாவலர் சரிதை கி. பி. பதினாறும் நூற்றாண்டிற்குப் பின்னர் இயற்றப்பட்டது. அந்தக்கவி வீரராகவ முதலியாருடைய பாட்டுக்கள் அதனுள் அடங்கியிருப்பதே அதற்குச் சான்றாம். தொண்டை மண்டல சதகம் படிக்காசுப்புலவர் இயற்றியது. அவர் கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர். சோழமண்டல சதகம் இயற்றப்பட்டது அக்காலமாகவோ அல்லது பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கமாகமோ இருத்தல்வேண்டும். புலவர் புராணமுடையார் வெகு சமீப காலத்தவர். இப்புத்தகங்களெல்லாம் பெரும்பான்மை பரம்பரை வழக்கில் பலமாறுதல்களுடன் வந்த கதைகளை ஆதாரமாகக்கொண்டு இயற்றப்பட்டன என்பது யாவரும் அறிந்ததே. தொன்றுதொட்டுச் சரித்திரங்களை எழுதிவைக்கும் வழக்கம் நம்மவர்க்குள் இல்லை. இவ்வகைப் புத்தகங்களை மட்டும் ஆதாரமாகக்கொண்டு புலவர்களது சரித்திரத்தை எழுதுவது பலபிழை பொதிந்திருக்கும் என்பதில் ஐயமென்னை?

## முதலாங்காலப்பகுதி.

போது:—சங்கத்திறுதிக்காலம்வரை இருந்த புலவர் பல்லாயிரவர். அவரில் பெரும்பாலார் முத்தமிழும் வல்லோர். இறந்தன போக எஞ்சிய சங்கச்செய்யுள், நூல் இவைகளை ஆராய்ந்து கணக்கிட்டதில், ஐஞ்ஞூறுக்கு மேற்பட்ட புலவர்கள் பெயர் தெரிவதாகக் கனகசபைப்பிள்ளை அவர்கள் எழுதியிருக்கிறார்கள். மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயரவர்கள் தாம் அவ்வாறு கணக்கிட்டதில் எழுநூறுக்கு மேற்பட்ட சங்கப்புலவர்களின் பெயர் தெரிவதாகச் சொல்லக்கேட்டிருக்கிறேன். இவர்களுடைய பெயர் ஊர், சரித்திரம், இயற்றிய நூலும் செய்யுளும், அவற்றில் அடங்கிய விஷயம் முதலியவற்றைச் செவ்வனே ஆராய்ந்து வெளியிடுவது பயன்தரத்தக்கதாம். இப்புலவர்களில் முந்தியவர் இன்னார், பிந்தியவர் இன்னார், அவர்கள் காலத்திருந்த அரசர்கள் வள்ளல்கள் இன்னார், அவர் காலத்துக் கொள்கைகள், ஒழுக்கங்கள், நாட்டின் வரலாறு, தெய்வ வழிபாட்டுமுறை, தமிழின் நிலைமை.

தமிழ் மக்களது நிலைமை முதலியவற்றை அவ்வாராய்ச்சியால் ஒருவாறு அறியலாம். ஆராய்ச்சியில்வல்ல நுண்ணறிவுடைய சான்றோர் எவரேனும் அப்பணியை மேற்கொள்வதே தக்கதாம். அத்தகையார் எவரும்மேற்கொளளாவிடில் தமிழ்க்கல்வி அறிவில் மிகவும் கீழ்ப்படியிலுள்ள யான் என் சிற்றறிவிற் கெட்டிய அள வில் ஒன்றை எழுதி வெளியிடக் கருதியிருக்கிறேன்; அறிவுடைய பெரியோர் எவரேனும் அதைக் கூட்டியும், குறைத்தும், திருத் தியும் பயன்படுமாறு செய்வர் என்ற துணிபுபற்றி. தமிழறிஞர் எவரையேனும் அப்பணியை மேற்கொள்ள முன்வருமாறு செய்ய எல்லாம் வல்ல கடவுளைப் பன்முறையும் பிரார்த்திக்கின்றேன்.

சங்கத்திறுதிக்காலம்:—இனி, முதலாங் காலப்பகுதி என்பது தமிழ்ச் சங்கம் இருந்த காலமாம். குமரிக்குத் தெற்கே கடல் கொண்ட 49 நாடுகளில் பஃறுளியாற்றங்கரை மேலிருந்த தென் மதுரை என்னும் நகரத்தில் முதற்சங்கமும், அந்நாட்டில் கவாட புரம் என்னும் நகரத்தில் இரண்டாஞ் சங்கமும், வையைக் கரை யிலுள்ள மதுரையில் மூன்றாஞ் சங்கமும் இருந்தன என்பர் பலர். சிலர் வையைக் கரையிலுள்ள மதுரையிலேயே எப்பொழு தும் சங்கம் இருந்துவந்தது என்றும்; 49 நாடுகளும், மூன்று சங்கங்களும் இருந்தன என்பார் கூற்றுப் பொருத்தமில்லாத கதையாம் என்றும் கூறுவர். அஃது எவ்வாறாயினும் ஆகுக. சங்கம் வெகு நீண்டகாலம் நிகழ்ந்ததென்பதை ஒருவரும் மறுப் பதற்கில்லை. சங்கத்திறுதிக்காலம் இன்னதென்பதைப் பலர் பல வகையாகக் கூறுகின்றனர். சிலர் கி. பி. பதினோராம் நூற்றாண்டு என்றும், சிலர் எட்டாம் நூற்றாண்டு என்றும், சிலர் ஐந்தாம் நூற்றாண்டு என்றும், சிலர் இரண்டாம் நூற்றாண்டின் இறுதி என்றும், சிலர் மூன்றாம் நூற்றாண்டின் துவக்கம் என்றும், இன் னும் பலவகையாகவும் கூறுவர். அவர்கள் துணிபுகளை ஆராயப் புகுந்தால் அது பெரிதும் விரிந்து ஒரு புத்தகமாகுமாதலால் அதனைத் தனியே எழுதி வெளியிடக்கருதி, சரித்திர ஆராய்ச்சிக் காரர் பலருடைய கொள்கையாகிய மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தையே சங்கத்திறுதிக்காலம் என எனது கொள்கை யாகக் கொண்டு எழுதுகின்றேன்.

அகத்தியர்:—நாம் அறிந்தவரையில் தமிழறிஞர்களில் முந்தியவராயும்; தமிழுக்குப் புத்துயிர் கொடுத்து மிகவும் கொண்டாடுதற் குரியதும் உலகத்தில் இணையில்லாததுமாகிய பேரகத்தியம் என்னும் உயர்ந்த இலக்கண நூலை இயற்றியருளியும், பலருக்குத் தமிழைக் கற்பித்தும், பாண்டியஅரசனது உதவியை ஏற்றுப் பெரியதோர் சங்கத்தை நிலைநாட்டித் தமிழைப் பரவச்செய்தவராயுமுள்ள பரமோபகாரியாகிய மகான் அகத்தியமாமுனிவர் ஆவர். அச்சங்கத்தில் தமிழ் நாட்டின் எல்லா திக்குகளிலிருந்தும் புலவர்கள் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்திருந்தன ரென்பது அவர்களது பெயரின் பகுதியாயுள்ள ஊரின்பெயரால் அறியப்படுகிறது. இவருக்குத் தமிழர் அளப்பரிய கடப்பாடுடையர். இவரை இடைவிடாது நினைத்து உள்ளம் உருகித்தொழுவது தமிழ்ப் பெருக்கத்துக்கு உபாயமாம். இவர் இயற்றியது பேரகத்தியம் என்றதும், சிலர் சிற்றகத்தியம் என்றோர் நூல் இருந்ததென்பர். அது வெள்ளிய கைலாயம் என்றால் கரிய கைலாயம் ஒன்று உண்டு என்றல் போலாம். "இயற்கைப் பொருளை இற்றெனக்கிளத்தல்" என்பதுபோல முனிவர் இயற்றிய நூலின் பெருமையை நோக்கிப் பேரகத்தியம் என்றதேயாம். அந்நூல் முத்தமிழ் இலக்கணமும் அடங்கியது. 12,000 சூத்திரங்களைக் கொண்டதென்பர்.

இக்காலத்தில் இம்மகான் இயற்றின எனப்பெயரிட்டு அச்சிடப்பட்ட பலவைத்திய புத்தகங்கள் சில்லறைப் புத்தகக்கடைகளில் விற்கப்படுகின்றன. அவற்றிலுள்ள தமிழை வாசிப்போர், பேரகத்தியத்தை இயற்றித் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித்தவரும்; மாதொருபாகனிடத்தும், முருகக் கடவுளிடத்தும் தமிழைக் கற்றுத் தொல்காப்பியர், நக்கீரர்முதலாயவருக்குக் கற்பித்தவரும் ஆகிய அம்முனிவர் எழுதிய தமிழ் என்று சொல்லத்துணியார் என்பது எனது கொள்கை.

நம்முனிவரர் சங்கம் தோன்றுவதற்கு முன்னரே இருந்தவராவர். இம்மகான் சான்றோருள் தலைமை வகிப்பவராதலால் அவரது ஆயுளின் அளவை நிர்ணயிப்பது எம்மனோர்க்கடாததொன்றும். அவர் இன்னும் பொதியிற்கண் வசிக்கின்றனர் என்

பது தமிழறிஞர் பலரின் துணிபாம். பலகதைகளும் அதற்கா தாரமாய் வழங்குகின்றன.

தொல்காப்பியர்:—இவர், அகத்தியமா முனிவருடைய மாணாக்கர் பன்னிருவருள் தலைமை பூண்டவர். தென்மொழி வடமொழி இரண்டினும் இவருக்குள்ள பேரறிவு வியக்கத்தக்கதாம். பின்கண்ட சூத்திரங்கள் அதைவிளக்கும். அவை,

"வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனாப் பெருமை அகத்திய னென்னும்
அருந்தவ முனிவ னாக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியன்."

(பன்னிருபடலம்—பாயிரச்சூத்திரம்.)

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்ந்த தொல்காப்பியன்."

(பல்காப்பியப் புறனடைச் சூத்திரம்.)

"ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்."

(தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம்.)

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன்."

(புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரம்.)

"பூமலி நாவன் மாமலைச் சென்னி
ஈண்டிய விமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விந்த நெடுங்கிரி மிகைதீர்த்
தலைகட லடக்கி மலயத் திருந்த
இருந்தவன் றன்பா லியற்றமி ழுணர்ந்த
புலவர்பன் னிருவருட் டலைவ னாகிய
தொல்காப் பியன்." (அகப்பொருள் விளக்கப் பாயிரம்.)

"மதிவெயில் விரிக்குங் கதிரெதிர் வழங்கா
துயர்வரை புடவியி னயர்வுற வடக்கித்
தென்புவி வடபுவி யின்சம மாக்கிக்
குடங்கையி னெடுங்கட லடங்கலும் வாங்கி
யாசமித் துயர்பொதி நேசமுற் றிருந்த
மகத்துவ முடைய வகத்திய மாமுனி
தன்பா லருந்தமி ழின்பா லுணர்ந்த
வாறிரு புலவரின் வீறுறு தலைமை
தொல்காப் பெருந்தவத் தொல்காப் பியமுனி."

(இலக்கணக் கொத்துரைச் சிறப்புப்பாயிரம்.)

என்பன. தொல்காப்பியர் ஜமதக்னி முனிவரது புத்திரராதலால் ஜாமதக்னி எனப்படுவர். திரணதூமாக்கினி என்பது அவரது இயற்பெயர். இவர், தொல்காப்பியக் குடியினராதலால் தொல்காப்பியர் என அழைக்கப்பட்டனர் என்பர் இளம்பூரணர். அப்பெயரினையுடைய ஊர் ஒன்று சீகாழிக்குப் பக்கத்தில் உளது. நிலந்தருதிருவிற் பாண்டியன் அவைக்களத்து அதங்கோட்டாசிரியர் ஒப்பத் தொல்காப்பியம் புலப்படுத்தப்பட்டது. அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் அதங்கோட்டாசிரியர் ஒருவர். அக்காலத்து உடனிருந்து தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் இயற்றியவர் அகத்திய முனிவரது மற்றொரு மாணாக்கராகிய பனம்பாரனார். அச்சிறப்புப்பாயிரத்தில் 'முந்துநூல்கண்டு முறைபட எண்ணி' என்றதனால் அது வழி நூலாம். முந்துநூல் என்றதை அகத்தியம் என உரையாசிரியர்கள் கூறுவர். சிலர், 'அகத்தியம் அன்றியும் இலக்கண நூல்கள் இருந்தன; அவற்றையும் தழுவிச் செய்யப்பட்டது தொல்காப்பியம்' என்று கூறி, அடியிற்கண்ட தொல்காப்பியச் சூத்திரங்களை அதற்குச் சான்றாகக் காட்டுவர். அவை,

> "நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே"
> "கடிநிலை யின்றே யாசிரி யர்க்க."
> "நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்."

என்பன. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று பகுதிகளை உடையது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒன்பது ஒன்பது இயல்கள் உள. முப்பகுதிகளுக்கும் ஓராயிரத்து அறுநூற்றுப்பத்து சூத்திரங்கள் உள. இக்காலத்து ஆயிரத்து அறுநூற்றுப் பன்னிரண்டு சூத்திரங்கள் காணப்படுகின்றன. இப்பொழுதுள்ள தமிழ் இலக்கண நூல்களுள் இத்துணைச்சிறப்புடைய வேறு நூல் இன்றும். பண்டைத் தமிழ் மக்களது ஒழுகலாற்றினை உணர்வதற்கு இஃதோர் அரியபெரிய கருவியாகும். சங்கச் செய்யுள்களாக இப்பொழுது கிடைத்துள்ளனவெல்லாம் காலத்தால் இதற்குப் பெரிதும் பிந்தியனவாதலால் தமிழரது மிகப் பண்டைக்காலத்திய ஒழுக்கங்களைக் காட்டுவது இந்நூல் ஒன்றேயாம். பிறமொழிகளிலுள்ள இலக்கண நூல்களைப்போ

லாது தமிழ் இலக்கணநூல் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களேயும், மக்களது ஒழுகலாற்றினையும், பிறவற்றையும் முற்ற உணர்த்துவதாம். வடமொழியில் இலக்கணத்தை வியாகரணம் என்பர். அஃது எழுத்து, சொல் என்ற இரண்டனை மட்டும் உணர்த்தும். வடமொழியில் செய்யுள் இலக்கணம் வியாகரணத்தின் பகுதியன்று. அணியை வடநூலார் அலங்காரம் என்பர்; அது தனி சாஸ்திரம். வடமொழி பயில்வோருள் இம்மூன்றில் ஏதேனும் ஒன்றைமட்டிற் கற்றவர் பலர் காணப்படுவர். தமிழிலுள்ள பொருளிலக்கணம் போன்ற நூல் பிறமொழிகளிற் காணப்படவில்லை. சங்ககாலத்தும் அதற்குப் பின்னர் அநேக நூற்றாண்டுகள் வரையும் இயற்றப்பெற்றுள்ள இலக்கியங்களுக்குத் தொல்காப்பியம் இலக்கணமாதலால் அதனைக் கற்றறிதல் அவசியம்.

இவரைச் சிலர், ஜைந மதத்தினர் என்கின்றனர். அகத்திய மாமுனிவரது மாணக்கரும், ஜமதக்னி மூனிவரது புத்திருமாகிய இவர் எக்காலத்து ஜைனர் ஆனரென்பதை அவர் குறிப்பிடவில்லை. ஜைன மதம் தென்னாடு வந்தது கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் என்பர் சரித்திர ஆராய்ச்சியில் வல்லோர். தொல்காப்பியர் காலம் அதற்கு முந்தியதாம். ஜைனம், பௌத்தம் என்ற இம்மதங்களின் கொள்கைகளாவது, அம்மதத்தினர் ஒழுக்கங்களாவது தொல்காப்பியத்திற் காணப்படா. தொல்காப்பியர் ஜைனர் அல்லர் என்பதைச் 'செந்தமிழ்'ப் பத்திரிகையில் பலரும் விரித்தெழுதியிருப்பதால் அதை இதனுடன் விடுகின்றேன்.

இனி, சிலர் தொல்காப்பியர் கி. பி. நான்காம் நூற்றாண்டினர் என்றும், சிலர் கி. பி. ஆறாம் நூற்றாண்டினர் என்றும் கூறுகின்றனர். அவர்கள் அவ்வாறு கூறுவதற்கு ஆதாரமாயுள்ள நியாயங்களைக்கண்டு எழுதுவாராயின் அவர்கள் கூற்று எம்மட்டில் நிற்கும் என்பதை ஆராயலாம். அவர்களும் தமிழர் ஆதலால் தமிழில் எழுதி யாவரும் அறியும்படி வெளியிடுவது மிகப் பொருத்தமுடையதாம். தமிழ் அறிந்த பல சான்றோர்களின்

கொள்கையோடு இவர் கூற்று முரண்படுவதால் அதில் இப்பொழுது அதிககாலம் போக்குவதற்கில்லை.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்கள் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் என ஐவர். இவர்களுள் இளம்பூரணர் மற்றவர்க்குமுந்தி உரை செய்தவர். ஏனைய உரையாசிரியர்கள், உரையாசிரியர் எனச்சொல்வது இவரையேயென்பது அவரவர் உரையில்ஒட்டியோ மாறுபட்டோ குறிப்பிடுவன இவரது உரையிற் காணப்படுகின்றமையால் விளங்கும். சிலர் உரையாசிரியர் வேறு, இளம்பூரணர் வேறு என்பர். அவர் தாம் வேறுபடுத்திக்கூறும் உரையாசிரியரது இயற்பெயர் முதலிய விவரங்களைக் கூறிற்றிலர். உரையாசிரியர் கூறியவென ஏனைய உரையாசிரியர்கள் குறிப்பிடும் பகுதிகள் அடங்கிய உரை இளம்பூரணர் உரையையன்றி இப்பொழுது காணக்கூடவில்லை. இவரது கூற்று சான்றோர் பலரது கொள்கையோடு முரணுவதால், இவர், தம் கூற்றுக்குத்தக்க ஆதாரங் காட்டும் வரை அதனை ஒருபுறம் வைப்பாம். இவரது உரை தொல்காப்பியம் முழுவதற்கும் உளது. எழுத்ததிகாரம், பொருளதிகாரத்தின் முதல்இரண்டியல் இவைகளுக்கு அச்சில்வெளிவந்துள்ளது. "ஒல்காப்புலமைத்தொல்காப்பியத்துள்-உளங்கூர் கேள்விஇளம்பூரணரெனு-மேதமின் மாதவர்" என மயிலைநாதரும், "உளங்கூருரையா மிளம்பூரணம்" என இலக்கணக் கொத்துரையுடையாரும் எழுதி யிருப்பன இவரது பெருமைக்குச் சான்றாம். பேராசிரியரது கல்வி அறிவின் பெருமை அளவிடற்கரிது. நச்சினார்க்கினியரது உரை பெரும்பான்மை இவருரையைத் தழுவியதே. செய்யுளியலுக்கு இருவருரையும் உள. அவற்றை ஒப்புநோக்கில் இது விளங்கும். இவரது உரை சொல்லதிகாரத்திற்கும், பொருளதிகாரத்தின் இறுதி நான்கு இயல்களுக்கும் உளது. பொருளதிகாரத்தின் இறுதி நான்கு இயல்களுக்கும் உள்ள உரை, நச்சினார்க்கினியர் உரையென அச்சில் வெளிவந்துள்ளது. சேனாவரையர் சொல்லதிகாரம் ஒன்றற்கே உரை எழுதியுள்ளார். யாவராலும் மேம்பட்டஉரையெனக் கொண்டா

டப்படுகிறது. "வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர் எழுத்ததிகாரத்திற் குரைசெய்தாராயின், இன்னோரன்ன பொருளனைத்துந் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந் துரைப்பர்". எனச் சிவஞான முனிவர் தமது தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தியுட் கூறியிருப்பதும். "ஆறு வியல்பிற் சேனா வரையம்" என இலக்கணக் கொத்துரையுடையார் எழுதியிருப்பதும் மேற்கூறியதற்குச் சான்றாம். அவ்வுரை அச்சில் வெளிவந்துள்ளது. நச்சினார்க்கினியர் பெரிதும் கொண்டாடப்பட்டவர். இலக்கணக் கொத்துரையுடையார் "உச்சிமேற் புலவர்கொளனச்சினார்க் கினியம்" என இவரதுஉரையைச் சிறப்பித்துக் கூறுவர். "நச்சினார்க் கினிய னெச்சில் நறுந்தமிழ் நுகர்வர்நல்லோர்" என்ற அவருடைய உரைச் சிறப்புப்பாயிரத்தானும் இவரது பெருமை விளங்கும். பொருளதிகாரத்துள்ள மெய்ப்பாட்டியல், உவமவியல், மரபியல் என்ற மூன்று இயல்கள் தவிர நூல்முழுவதுக்கும் இவரது உரை இப்பொழுது அச்சாகி வெளிவந்துள்ளது. கல்லாடரைச் சங்கப்புலவரெனக் கூறுவோர் சிலருளர். கல்லாடர் எனப் பெயரிய சங்கப்புலவர் ஒருவர் இருந்தது உண்மையே. அவர் தொல்காப்பியத்துக்கு உரை எழுதினதாகத் தெரியவில்லை. எழுதியிருந்தாலும் வெகுகாலத்திற்கு முன்னரே அஃது இறந்துபட்டிருக்கவேண்டும். ஏனைய உரை யாசிரியர்கள் அவரைக் குறிப்பிடாமலிருப்பதே இதற்குச் சான்றாம். 'ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திற் குரையிடை யிட்ட விரகர் கல்லாடர்' என ஒரு தொடர்மொழி வழக்கில் இருக்கிறது. இதன் உண்மை ஆராயற் பாலது. கல்லாடர் உரையென இக்காலத்துள்ளது சொல்லதிகாரத்திற்கு மட்டுமேயாம் என அறியப்படுகிறது. அதைப்படித்தோர் பலர் அவ்வுரையை அவ்வளவு உயர்ந்ததாகக் கொள்ளவில்லை. சில சூத்திர உரைகளை நான் பார்த்திருக்கிறேன். நான் பார்த்தவரையில் அவ்வுரையைப்பற்றி முழுவதும் அவர்களுடன் ஒவ்வுகிறேன். இஃது இன்னும் அச்சில் வெளிவரவில்லை. இவ்வுரை யெழுதியவர்கல்லாடம் என்னும் புத்தகத்தை இயற்றியவரோ அல்லது அப்பெயர்கொண்ட வேறொருவரோ? கல்லாடம் என்ற ஊரினர் என்பதனால் இப்பெயர்

அமைந்துமிருக்கலாம். இவர், தொல்காப்பிய உரையாசிரியர்களுள் பிற்பட்டவர் எனத்தோன்றுகிறது. இவருரையைப் பாராட்டுவாரைக்காணேன். இவர்களுள் இளம்பூரணரைப்பற்றிய வரலாற்றை இரண்டாங்காலப் பகுதியிலும்; பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவர்களது வரலாற்றை மூன்றாங்காலப் பகுதியிலும் காண்க.

பிறநூலாசிரியர்:—தொல்காப்பியரோடு ஒருசாலை மாணாக்கராக இருந்த பதினொருவருள் காக்கைபாடினியார், நற்றத்தனார், அவியநயனார், வாய்ப்பியர், பனம்பாரனார் என்றஇவர்கள் இயற்றிய நூல்கள் இறந்துபட்டனவேனும் சில சூத்திரங்கள் கிடைத்துள. பிற்காலத்து நூலாசிரியர்களுள் பல்காயனார், சங்கயாப்புடையார், கையனார், நல்லாறனார், பரிமாணனார், கடியநன்னியார், நக்கீரனார், சிறுகாக்கை பாடினியார் முதலிய பலர் செய்த சூத்திரங்களும் கிடைத்துள.

ஒரு பெயர் தாங்கிய பலபுலவர்கள்:—சங்கத்திறுதிக்காலம் வரையிருந்த புலவர் பல்லாயிரவர் என முன்னே கூறப்பட்டது. அவர்களில் ஒரே பெயருள்ளார் தொகைகள் பல காணப்படும். சாத்தனார் என்னப்பட்டார் எத்தனைபேர்? கீரனார் எத்தனைபேர்? கண்ணனார் எத்தனைபேர்? கொற்றனார், சேந்தனார், ஆந்தையார், பெருந்தேவனார், கபிலர் என்னப்பட்டார் எத்தனைபேர்? இவர் முதல் பன்னிருவர்வரை ஒரு பெயர் தாங்கியவர் தொகை காணப்படும். ஒருபெயர் தாங்கிய பலருள் ஒருவரினின்றும் ஒருவரைப் பிரித்துக் காட்டுவதற்கு அடைமொழி கொடுப்பதுண்டு. அவ்வடைமொழிகளிற் சில அவரது தந்தை பெயராயும், சில அவரது ஊர்ப்பெயராயும், சில அவரிருந்த காலத்தைக் குறிப்பதாயும், பிறவகையாகவும் வரும். ஒரு பெயரைத் தாங்கியவர் ஒருவராகவே இருந்தால் பெரும்பான்மை அடைமொழி வேண்டியிராது. ஒருபெயர் தாங்கிய பலர் சமகாலத்தினராக இருப்பதும் உண்டு; வெவ்வேறு காலத்தினராக இருப்பதும் உண்டு; வெவ்வேறு காலத்தினராயிருந்தால் அடைமொழி பெரும்பாலும் பிற்காலத்திற் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். தொல்கபிலர்

எனப் பெயர்தாங்கிய புலவருக்குத் 'தொல்' என்னும் அடைமொழி பிறிதொரு கபிலர் எனப் பெயர்தாங்கிய புலவர் தோன்றிய பிறகு தானே கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். அவர் வெறுங் கபிலராகவும் ஒரு காலத்தில் இருந்திருக்கவேண்டுமே. அவரியற்றிய பாடல்களை அக்காலத்தவர் 'கபிலரது பாட்டு' என்று சொல்லியிருப்பார்களா? 'தொல்கபிலரது பாட்டு' என்று சொல்லியிருப்பார்களா? அடைமொழியின்றிச் சொல்லியிருப்பரென்பதில் ஐயமில்லை. சங்கம், அப்பெயருடனே அல்லது அவை, கழகம் முதலிய பிறபெயருடனேவெகுகாலம் நடந்து வந்தது யாவரும் அறிந்ததே. ஒருபெயர் தாங்கியபலருடைய தொகைகள் காலக்கிரமத்தில் பெருகிக்கொண்டு வந்தது அறியப்படுகின்றது. சரித்திரக்குறிப்பு எழுதிவைப்பது தமிழர்களுக்குள் வழக்கமில்லை. ஆதலால் பிற்காலத்தார் ஒருவரை மற்றொருவரெனக் கொண்டு மயங்குவதற்கு இடமிருந்திருக்கிறது. சங்கச்செய்யுள்களைத் தொகைசெய்த காலத்தும் இம்மயக்கம் இருந்ததென்று தோன்றுகிறது. இப்புலவர்களின் சரித்திரங்களைக் கிடைத்தவரையில் மகா மகோபாத்தியாய ஐயர் அவர்களும், பின்னத்தூர்-அ. நாராயணசாமி ஐயர் அவர்களும் தாங்கள் பதிப்பித்த சங்கச்செய்யுள்களில் விஸ்தாரமாக எழுதியிருக்கிறார்கள். அவற்றை ஆண்டுக் கண்டுகொள்க.

சங்கத்திறுதிக் காலத்திற்குமுன் இருந்த சில புலவர்:—அக்காலத்தில் நாற்பத்தொன்பதின்மர் சங்கமிரீஇயினர் என்றும்; அவர்களுள் தலைமை பெற்றவர் நக்கீரர், கபிலர், பரணர் முதலியோர் என்றும் இரு திருவிளையாடல்களும் கூறுகின்றன. அக்காலத்துச் சங்கத்தை நடத்திய பாண்டியர்கள் முறையே ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன், வெற்றிவேற் செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்; உக்கிரப்பெருவழுதி ஆகியவர் ஆவர். இவருள் வெற்றிவேற் செழியன். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பவர் ஒருவரோ இருவரோ என்பது ஆராயற் பாலது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தே கபிலர், பரணர், நக்கீரர் இம்

மூவரும் இருந்தனர். இவனை நக்கீரர் நெடுநல்வாடையிற் பாடினர். ஆந்நெடுஞ்செழியனும் சங்கப்புலவருள் ஒருவன். அவன் அக்காலத்திருந்த சங்கப்புலவருள் மாங்குடி மருதனாரை மேலாக மதித்திருந்தான் என்பது,

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர்பா டாது வரைகவென் நிலவரை." (புறம்.)

என அவன் இயற்றிய செய்யுளால் அறியப்படுகிறது. மேற்கண்ட மூன்று புலவருள் பரணர் காலத்தால் முற்பட்டவர் என்பது அவரியற்றிய செய்யுட்களிற்காணப்படும் அரசர்களது பெயரால் அறியப்படுகிறது. பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்துப் பாடியவர்இவர். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலியவற்றுள் இவருடைய தனிச்செய்யுட்கள் பலகாணப்படுகின்றன. இவர், "பரணன் பாடினன் மற்கொல்" என ஔவையாற் சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ளார். கபிலர், பாண்டி நாட்டில் மணிவாசகர் பிறந்த வாதவூரில் பிறந்தவர் என்று பழைய திரு விளையாடல் கூறுகின்றது. இவர்பாடியன பத்துப்பாட்டில் ஒன்றாகிய இன்னா நாற்பது; பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்து; ஐங்குறுநூறு கலித்தொகைகளிற் குறிஞ்சிப் பகுதி; நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலியவற்றிற் பல செய்யுட்கள் முதலியன. ஏனைய சங்கப்புலவர்கள் இவரைப்பெரிதும் புகழ்ந்து பாடியிருப்பது அடியிற்கண்டவற்றால் விளங்கும். அவை,

"உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன்." (அகம்—நக்கீரர்.)

"வயங்குசெந் நாவி னுவலை கூராக் கவலையி னெஞ்சி
னனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்."
(பதிற்று—பெருங்குன்றூர்கிழார்.)

"காவிரி, மல்ல னன்னாட் டல்ல தீரப்
பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடுவரை." (புறம்—மாறோக்கத்து நப்பசலையார்.)

"நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற வந்த ணாள
னிரந்துசென் மக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்" (புறம்-மாறோக்கத்துநப்பசலையார்.)

"செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்."
(புறம்--பொருந்திலிளங் கீரனர்.)

எனப் பல. நக்கீரர், மேற்கண்ட மூவருள் காலத்தாற் பிற்பட்டவர்; மதுரைக் கணக்காயனார் என்னும் சங்கப்புலவரின் மகனுவர். இவர்திரு முருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்றவற்றையும்; நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலியவற்றிற் சில தனிப்பாடல்களையும் பாடியுள்ளார் நாலடி நாற்பது என்னும் இலக்கண நூலும் இவர் இயற்றியது. அதை அடிநூல் என்றும் கூறுவர். இறையனர் என்ற தலைப்பின்கீழ் நான் எழுதியிருப்பதைப்பார்க்க. இவர் சங்கப் புலவரில் தலைமை வகித்தார் எனத்திருவிளையாடல்கள் கூறுவதற்குச் சங்கச்செய்யுள்களில் ஆதாரங் காணப்படவில்லை. பரணர், கபிலர், மாங்குடி மருதனர் என்ற இவர்களைச் சங்கப்புலவர்கள் புகழ்ந்து பாடியிருப்பதுபோல இவரைப் பாடியதாகத் தெரியவில்லை. பரணர், கபிலர், நக்கீரர் என்ற இம்மூவரும் அந்தணர் குலத்தினர். அக்காலத்தில் வேட்டலை மேற்கொள்ளாத அந்தணர் குலத்தினர் சிலர் சங்கறுப்பதைத் தமது தொழிலாக மேற்கொண்டனர் என்பது அறியப்படுகிறது. நக்கீரர் அவ்வகையினரில் ஒருவர். இம் மூன்று புலவர்களும் பாடியனவாகச் சில செய்யுட்கள் பதினோராம் திருமுறையிற் காணப்படுகின்றன. அவர்கள் பாடியதென்பது பலரால் மறுக்கப்பட்டுள்ளது. அங்ஙனம் மறுப்போர், அவர்கள் செய்தனவாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட செய்யுட்களில் சொன்னேக்கு, பொருளேக்குகளை இவற்றேடு ஒப்பிட்டு வேறுபாடு காட்டுகின்றனர்.

ஒளவையார்.—இவரைத் திருவள்ளுவதேவரது தமக்கை என ஒருகதை வழங்குகின்றது. அக்கதை உண்மையானது எனத்தோன்றவில்லை. இவர் பாடியனவாகப் பல தனிச்செய்யுள்கள் சங்கச்செய்யுள்களிற் காணப்படுகின்றன. நல்வழி முதலிய நீதிநூல்களைப் பாடியவரும் இவரே என்பர் சிலர். அவர் இவரின் வேறு என்பது,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

என்ற நல்வழி இறுதிவெண்பாவால் விளங்கும். நல்வழிபாடிய ஔவை தேவாரம்பாடிய மூவர்க்கும், மணிவாசகருக்கும் காலத்தாற் பிற்பட்டவர் என்பது வெளிப்படை. முதலாவது குலோத்துங்க சோழன் காலத்தில் இந்த ஔவை இருந்ததாகச் சிலர் கூறுகின்றனர்.

பாரதம் பாடிய பெருந்தேவனார்:—சங்க காலத்தில் பாரதத்தைத் தமிழிற் செய்தவர் இவர். அவர் மொழி பெயர்ப்பு இக்காலத்துக் கிடைக்கவில்லை. சின்னமனூர்ச்சாஸனம் முதலியவற்றிற் பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவராகச் சுட்டப்படுபவர் இவரே. இக்காலத்தில் வழங்கும் பாரதவெண்பாவைப் பாடிய பெருந்தேவனார் வேறு. அவரைச் சிலர் இரண்டாவது நந்திவர்மன் காலத்தினரென்றும், சிலர் மூன்றாவது நந்திவர்மன் காலத்தினரென்றும் கூறுவர். அவர்கூற்றின்படி இவர் கி. பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டினர் ஆவர். இரண்டாங்காலப் பகுதியிற் காண்க. கி. பி. பதினோராம் நூற்றாண்டின் இறுதியிலோ அதற்குப்பின்னரோ ஒருபெருந்தேவனார் இருந்துளார். அவர், வீரசோழியத்திற்கு உரை எழுதியவர். இவரது வரலாற்றை மூன்றாம்காலப் பகுதியிற்காண்க. சங்ககாலத்தில் பெருந்தேவனார் எனப்பெயரிய வேறு புலவர் இருந்தனர் என்றும் தெரிகிறது.

கல்லாடர்:—சங்ககாலத்திருந்த கல்லாடர் வேறு; கல்லாடம் என்னும் நூலை இயற்றிய கல்லாடர்வேறு. கல்லாடம்இயற்றியவரைப் பற்றி இரண்டாம் காலப்பகுதியிற் பார்க்க. சங்ககாலத்துக் கல்லாடர், தொல்காப்பியத்துக்கு உரை இயற்றினர் என்பதுவது இல்லை என்பதுவது அறியக்கூடவில்லை. இந்தக் காலப்பகுதியில் தொல்காப்பியர் என்ற தலைப்பின்கீழ்ப் பார்க்க.

பொய்கையார்:— இவர், களவழி நாற்பது என்னும் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றைப் பாடியவர். சிலர், இவரை

வைணவ ஆழ்வார்களில் ஒருவர் என்பர். அல்லர்என்பதை இரண்டாங்காலப் பகுதியிற் காண்க. பெயரொற்றுமையைக்கொண்டு அவ்வாறு கூறுகின்றனர். அங்ஙனமாயின், இவர் ஐங்குறு நூற்றில் முல்லைப்பகுதி பாடிய பேயனாரைப் பேயாழ்வார் என்பர் போலும்.

கூலவாணிகன் சாத்தனார்:—இவர், சீத்தலைச் சாத்தனார் என்றும் பெயர் பெறுவர். சீத்தலை என்னும் அடைமொழிக்கு ஆதாரமாகச் சிலர்,

> "சீந்திநீர்க் கண்டந் தெரிசுக்குத் தேனளாய்
> மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—சாந்தி
> மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
> றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு."

என்ற திருவள்ளுவமாலை வெண்பாவைக் காட்டுவர். இதை மறுத்துச் சீத்தலை என்பது ஓர்ஊராம் என்பர் சிலர். இவர், தமிழில் ஐம்பெருங்காவியங்களில் ஒன்றாகிய மணிமேகலையை இயற்றியவர். அது துறவின் பெருமைகளை விரித்துக் கூறுவதோடு அக்காலத்திய மதங்களின் கொள்கைகள் இன்னவென்றும் காட்டுவது. சேரன் செங்குட்டுவன் அவைப்புலவராக இருந்தாரெனப் பலர் கூறுவர். ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன், உக்கிரப்பெருவழுதி என்ற இந்நால்வர் காலத்தும் இவர் இருந்தனர் என்பர். இவரியற்றிய மணிமேகலையும், இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும் இருபெருங்காப்பியங்களாக எண்ணப்படினும் இரண்டும் ஒரு தொடர்ந்த கதையைச் சொல்வனவாம். இவர் பௌத்த மதத்தை நன்றாய் அறிந்தவர். அதன் பெருமையைத் தமிழ்மக்கள் அறியும்படி தெளிவாய் இவர் சொல்லியிருப்பதுபோல் வேறு நூல் தமிழில்இல்லை. இவர்காலத்தில் பௌத்தமதம் தமிழ் நாட்டில் பரவியிருந்ததைச் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரண்டாலும் அறியலாம். இவரது கல்விப்பெருமை 'தண்டமிழ்ச்சாத்தன்', 'தண்டமிழ்சார்ழான் சாத்தன்' 'நன்னூற்புலவன்' என இளங்கோவடிகள் சொல்லியுள்ளமையால்விளங்கும். இவர், இலக்கணநூலும் செய்தார்என்பர். *கூலம் என்பது தானியவகை. அஃது எட்டுத்தானியங்களைக்குறிப்பதென்றும் கூறப்படும். அவற்றை வியாபாரம்

செய்துவந்ததனால் இவருக்கு இப்பெயர் வாய்ந்தது. மணிமேகலை என்னும் இவரியற்றிய பெருங்காப்பியத்திற்கு உரையில்லை என்னும்குறையை நிவர்த்திசெய்ய மகாமகோபாத்தியாய ஐயர் அவர்கள் ஒரு சிறந்த உரையை எழுதியுள்ளார்கள்.

இளங்கோவடிகள்:— இவர், சேரன் செங்குட்டுவனோடு உடன் பிறந்தவர். இவர் துறவு பூண்டு தனியே இருந்துவந்தார். முத்தமிழிலும் இவருக்குள்ள அறிவு, ஆற்றல்கள் மிகப் பெருமை வாய்ந்தன என்பதற்கு இவரியற்றிய சிலப்பதிகாரமே சான்றாம். இவர், சங்கப் புலவரில் ஒருவராக எண்ணப்படாவிடினும் அக்காலத்திருந்தவர் என்பதை மறுத்தற்கியலாது. இக்காலத்துள்ள இலக்கியங்களில்பண்டைக்காலத்து இசைத்தமிழ் நாடகத்தமிழ்களின் பெருமையை உணர்த்துவது இவரியற்றிய சிலப்பதிகாரமே. கற்பின் தன்மை, பெருமைகளையும் விரித்துக் கூறுவது. இவரைச் சிலர் ஆருகதர் என்றும், சிலர்சைவரென்றும் கூறுவர். இவர்பிறந்த குலமும் இவர்காலத்து ஆட்சிசெய்து வந்த இவர் தமையன் செங்குட்டுவனும் சைவமதத்தை தழுவியவராவர். சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்த மகா மகோபாத்தியாய ஐயரவர்களும் இவரைச் சைவரென்றே கூறுகின்றனர். இவர் நாடுகாண் காதையில் காவுந்தியையை, அருகக்கடவுளைத் தொழுதிருப்பது முதலியவற்றைச் சொல்லியிருப்பதைக்கொண்டு சிலர் இவரை ஜைனரென்கின்றனர். ‘குணவாயிற் கோட்டத் தரசு துறந் திருந்த’ என்றவரிக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் கோட்டத்தை அருகன் கோயில் என்றனர். கோட்டம் என்பது எல்லாக் கோயில்களுக்கும் பொதுப்பெயரேயன்றி அருகன் கோயிலுக்கு மட்டும் உள்ளபெயரன்று. இதை நிகண்டுகளிலும், சிலப்பதிகாரத்து மற்றைய இடங்களிலும், ஏனைய இலக்கியங்களிலும் பார்க்கலாம். அரும்பத உரையாசிரியர் கோட்டத்தைக் கோயில் என்றனர்; அருகன் கோயில் எனக்கூறவில்லை. இளங்கோவடிகள் ஒவ்வொரு மதத்தையும் பற்றிச்சொல்லுங்காலத்து அவ்வம்மதத்தைச் சேர்ந்தவர் எனப் படிப்போர் நினைக்கும்படி கூறும் ஆற்றலுள்ளவர். இவர், ஆய்ச்சியர் குரவையிலும், மற்ற இடங்களி

லும் விஷ்ணுவைப்பற்றிக் கூறுமிடத்து வைணவர் எனத்தோன் றும். சிவனைப்பற்றிக் கூறுமிடங்களைப் பார்த்தால் பரமசைவர் எனத்தோன்றும். இதற்கு இரண்டு உரைகள் உள. அரும்பத உரையாசிரியர் உரை ஒன்று. அவர்இன்னாரென்றுதெரியவில்லை. அடியார்க்கு நல்லார் உரை ஒன்று உளது. அது முழுவதற்கு மில்லை. இவ்வுரைகள் இல்லையேல் அதன் பொருளை உணர்தல் அரிதாம். ஐயரவர்கள் இப்புத்தகத்தைப் பதிப்பித்திருக்கும் மாதிரி பெரிதும் போற்றற்குரியதாய் உளது.

இறையனார்:—சிவபெருமான் சங்கப்புலவருள் ஒருவராயி ருந்து களவியல் என்னும் அகப்பொருள் இலக்கணத்தை இயற்றி னார் என்பர். அந்நூல் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களை உடையது. அது, களவின்சிறப்புநோக்கிக் களவியல் எனப்பெயர்பெற்றது. இதற்குச்சிறந்தோர் உரையுளது. அஃது அச்சில் வெளிவந்துள்ளது. அதனை நக்கீரர் எழுதியதென்று சில ரும், அன்றென்று சிலரும் கூறுவர் அதை ஆராய்வாம். களவிய லுரைப் பாயிரத்தில், முருகக்கடவுளாகிளாகிய உருத்திர சன் மன் சங்கபுலவர்கள் இயற்றிய களவியலுரையைக்கேட்ட வா லாறு கூறுமிடத்து "எல்லாரும் முறையே உரைப்பக்கேட்டு வாளாவிருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஓரோவழிக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்திப் பின்னர்க் கணக்காயனார் மகனார்நக்கீரனார் உரைத்தவிடத்துப் பதந்தோறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப் பெடுத்து மெய்யுரை பெற்றும் இந்நூற்கென்றார்." என்பது பயின்று வருகிறது. இதற்கு மாறாகத் திருவிளையாடல்கள் கூறு கின்றன. அவை,

> "அறிபவ னெங்கு முள்ளா னலவா யமுத வாக்கன்
> இறையவன் முன்னஞ் சொன்ன விரும்பொருட் சூத்திரத்திற்
> குறுமுரை யெழுதித் தத்த முரையினை வியந்தோர் காலம்
> மறுவறு கவிதைச் சான்றோர் மலைந்தனர் மாறிபட்டே."

இவ்வாறு மாறுபட்ட சங்கப்புலவர்கள் சோமசுந்தரக் கடவுளைக் குறுகித் தாங்கள் செய்த வுரையில் நல்லவுரை இன்னதென் றரு ளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க, அவர்.

'உமைமயின் ஞானிநாம முருத்திர சன்ம னென்போன்
நவையிலா வுரைய னைத்து மவன்றன்மு னவின்று லொன்றை
அவையிடைக் கைக்கொண்டானே லஃதுரை யையமில்லை
கவலுற வேண்டா வென்னக் கண்டவர் தொண்டிற் போற்றி.'

'தோன்றுநாட் டொடங்கி யூமன் சொற்றா வலனே வென்ன
என்றசெந் தமிழ்ச்சோர் செட்டிக் கியாதெரு செய்யுள் கேட்டால்
தோன்றிய புளக மெய்யுந் துளிபடு கண்ணு முணடோ
ஆன்றவச் செய்யு ளல்லது செய்யு ளன்றே.'

என்றனர். (ஈண்டுச் செய்யுள் என்றது உரைச்செய்யுளை என்க.)
என்றலும், புலவர்கள் கடவுள் பகர்ந்ததே செய்வம் எனப்

'பத்தியிற் போந்து தெய்வப் பாவறி மண்ட பத்துச்
சித்திசேர் மூங்கை தன்னைச் சிறப்பொடு மழைத்துச் சிங்கச்
சுத்தமார் தவிசி னேற்றித் தூபதீ பாதி நல்கி
ஒத்துமுன் றமுரைத்த வுரையெலா முரைத்தா ரோங்க.'

"வளமுறு கீரன் றரைபுகழ் கபிலன் மாசறு பரணனிம் மூவர்
தளர்வறு முரையைக் கேட்டலு மூங்கை தணிவரு பெருவிப் பெய்திப்
புளகித மெய்யுந் துளிபடு கண்ணும் பொருந்தல்கண் டதிசயித் தியாரும்
உளம்வரும் பொளிப் பொருள்கடா மென்றே யொப்பரு மப்பொருள்
கொண்டார்.'

(திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்துள்ள உமை தமிழறிந்த திருவிளையாடல்).

எனவும்,

'இத்தன்மைய ஞகிக்கலை வல்லோர்தமி ழெல்லாஞ்
சித்தங்கொடு தெருட்டுஞ்சிறு வணிகன் றெருள்கீரன்
முத்தண்டமிழ் கபிலன்றமிழ் பரணன்றமிழ் மூன்றும்
அத்தன்மைய னறியுந்தொறு மறியுந்தொறு மெல்லாம்.'

"பல்காசொடுகடலிற்படு பவளஞ்சுடர் தரளம்
எல்லாநிறுத் தளப்பானென வியல்வாணிக குமரன்
சொல்லாழமும் பொருளாழமுந் துலைநாவெனத் தூக்க
நல்லாறறி புலவோர்களு நட்டாரிகல் விட்டார்."

(இவை, பரஞ்சோதி திருவிளையாடல்—சங்கத்தார் கலந்தீர்த்த படலம்.)

எனவும் வருவனவற்றால் அறியப்படும்.

இவர், சங்கப்புலவர்களுள் மாறுபாடு தோன்றியதை, 'களவியலுரையைப்பற்றியது என்னுது தாம் தாம் இயற்றிய பாடல்

களைப்பற்றியது' என்கின்ற ஒருவேறுபாடு தவிரப் பிறவனைத்தும் இரண்டு திருவிளையாடல்களிலும் ஒருபடித்தாகவே கூறப்பட்டுள்ளன. இவற்றுள் நக்கீரர், கபிலர், பரணர் என்ற மூவருரையும் ஒருதரமாய் உருத்திரசன்மனார் ஒத்துக்கொண்டனர் என்பது நன்கு கூறப்பட்டுள்ளது. மருதனிள நாகனார் பேச்சையே காணேம். களவியலுரையுடையார்கூற்று திருவிளையாடலுடையார் இவரது கூற்றோடு முரணுகின்றது. களவியலுரையுடையாரைத் தழுவிச் சொல்லுவாரைக் காணேம்.

மேலும், களவியலுரைப்பாயிரத்தில், "இனி, உரை நடந்து வந்தவாறு சொல்லுதும். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர் கிழார்க்குரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க் குரைத்தார், அவர் செல்வத்தாசிரியர் பெருஞ் சிவனார்க் குரைத்தார்; அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப்பெருஞ்சேந்தனார்க் குரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்பெருங் குமாரனார்க் குரைத்தார்; அவர் திருக்குன்றத்தாசிரியர்க்குரைத்தார்; அவர் மாதவளனார் இளநாகனார்க் குரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க் குரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை" என்று எழுதப்பட்டுள்ளது. இதில் நக்கீரரும், பின்வந்த ஒவ்வொருவரும் உரையை உரைத்தாரென்று சொல்லியிருக்கிறதே யொழிய எழுதினர் என்று சொல்லவில்லை. கடையிற்கேட்ட நீலகண்டனார் எழுதியதாகவுஞ் சொல்லவில்லை. உரையைப் பரம்பரையில் வாய்மொழியாய்ச்சொல்லும் வழக்கம் இந்நாட்டில் எங்கும் உள்ளதே இப்பொழுதுள்ள களவியலுரையை இன்ன காலத்தில் இன்னரெழுதினரென்று அறியக்கூடவில்லை. நக்கீரர் உரையைக்கேட்ட பரம்பரையிலுள்ளார் ஊரைக் கேட்பதைக்கொண்டு அன்னார் தமிழ்நாட்டின் பலதிக்குகளிலும் இருந்தவரென்பது தெரிகிறது. பத்துத் தலைமுறையாய்த் தமிழ்நாட்டின் ஒவ்வோர் மூலையில் ஒவ்வோர் காலத்தில் வாய்மொழியாய்ச் சொல்லப்பட்டுவந்த வுரை நக்கீரனார் சொல்லிய மொழித் தொடரில் திரியாது வந்ததென்று கொள்வது எவ்வாறுகூடும்? "காலதேச வர்த்தமானங்களை யநு

சரித்து ஒவ்வொருவரும் கூட்டியும் குறைத்தும் திரித்தும் சொல்வதியல்பே. ஆதலால் நக்கீரர் பரம்பரையிலுள்ள ஒருவரால் இவ்வுரை எழுதப்பட்டிருப்பினும், பல தலைமுறைகளுக்குப் பிறகு எழுதியஉரை நக்கீரர் சொன்னவாறே திரிபின்றி யெழுதப்பட்டதென்பதியலாது. அன்றியும், நக்கீரர் தம்காலத்துக்குப் பின்னர்த் தம்முரையைக் கேட்கப்போகிற பத்துத் தலைமுறையோர் பெயரை விவரத்துடன் சொன்னாரென்பது கேட்போர்க்கு வியப்பைத் தருவதே.

இதுநிற்க, களவியற்பாயிரத்தில் "இனி, கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர் கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும் கணக்காயனார் மகனார் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்றுநாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறம் நானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பதுகலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்னுமித் தொடக்கத்தன. அவருக்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமுமென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல் கொள்ளப் பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி யீறாக நாற்பத் தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப" என்று எழுதியிருக்கிறது. இதைப் படிப்போர் பல ஐயவினாக்களை எழுப்புவர் என்பதில் சந்தேகமென்னை? கடைச் சங்கப் புலவர்களில் கபிலர், பரணர், மாங்குடி மருதனார் இவர்கள் மிக்க புகழ் பெற்றவராவரே. அவர்கள் பெயர் காட்டப் படாதிருப்பதற்குக் காரணமென்னை? "இத்தொடக்கத்தார்" என்பதில் அடங்கியிருக்கின்றன வென்றால் சங்கத்தின் தலைமைவகித்த அவர்கள் பெயரை அவ்வாறு முதலியவர் என்பதினுள்ளடக்குதல் தகுதியுடையதாமோ?

நக்கீரர் இவ்வுரையை யெழுதியிருந்தால் தம்பெயரைமட்டும் "கணக்காயனார் மகனார் நக்கீரனார்" எனப்பெருமையுடன் எழுதி அவர்கள்பெயரை விட்டிருப்பாரா? நக்கீரர் பெயர் வருமிடங்களில் மிக்க மரியாதையுடன் எழுதியிருப்பதைப்பார்க்க அவரிடத்தில் மதிப்புள்ள வேறொருவரால் அஃது எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று தோன்ற வில்லையா? "சங்கமிருந்தது உத்தரமதுரை யென்ப" என்று எழுதியிருக்கிறது. சங்க காலத்துச் செய்யுட்களிலெல்லாம் வையைக்கரையிலுள்ள மதுரையைத்தென் மதுரையென்று சொல்லியிருக்கிறதேயொழிய உத்தர மதுரை யென்று ஓரிடத்திலும் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லையே. அக்காலத்துச் சான்றோர் கூற்றுக்குமாறாய் நக்கீரர் வையைக் கரை மதுரையை உத்தரமதுரை யென்றெழுதியிருப்பாரா? கடைச்சங்கம் நடைபெறுங்காலத்தில் அவ்வுரை சொல்லப்பட்டிருந்தால் அச்சங்கம் முடிவுபெறுவதற்கு முன்னரே, அச்சங்கத்திறுதிக்காலம்வரை அதை நடத்திய பாண்டியர்களின் தொகையையும், அச்சங்கம் இரீஇயபுலவர்களின்தொகையையும் அப்புலவர்கள் சங்கத்திறுதிக்காலம்வரை இயற்றிய செய்யுள் களின்தொகையையும், அச்சங்கம் முடிவுபெறும்வரையுள்ள கால அளவு 1850 ஆண்டு என்பதையும் சொல்ல எவ்வாறு முடியும்? இவற்றால் சங்கம் முடிவுபெற்றதற்குப் பிந்தியும், சங்கச்செய்யுள் கள் தொகுக்கப்பட்டற்குப் பிந்தியும் ஒருகாலத்தில் அவ்வுரை யெழுதப்பட்டிருத்தல்வேண்டும் என்பது பெறப்பட வில்லையா?

பாயிரத்தில் மற்றோரிடத்தில் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றதனானே சங்கப்புலவர்கள் பிறநாடு புக்கனரென்றும், அவர் போய்ப் பன்னீரியாண்டு கழிந்தபின்னர் நாடுமலிய மழைபெய்ததென்றும் "பெய்த பின்றை அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக்கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை யெங்குந் தலைப்பட்டிலே மென்றுவந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று, என்னே? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொரு

ளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்' எனச்சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக்கடவுள் சிந்திப்பான். 'என்னைபாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அது தானும் ஞானத்திடையதாக லான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்'. என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்'' என்றும் சொல்லியிருக்கிறது. பெருமானடிகள் செய்த அறுபது சூத்திரங்களே களவியல் எனப்படுவது. மேற் கண்டவை பல வினக்களுக்கு இடம் கொடுக்கும். பொருளிலக் கணம் உணர்த்தும் அகத்தியம், தொல்காப்பியம் இரண்டும் சங் கத்திறுதிக்காலம்வரை நூலெனக் கொள்ளப்பட்டிருந்தன வென் பது பாயிரவுரையால் தெரிகிறது. தொல்காப்பியப் பொருளதிகா ரம் இன்றும் உளது. பன்னிருபடலமும் ஐயனரிதனர் காலம் வரை இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு என்ன பொருள் இலக்கணம் முன்னிருந்தது; வற்கடம் நேர்ந்தபின்னர் இல்லாது போய்விட்டது? பொருளை யுணர்த்தும் இலக்கியங்க ளாகிய எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள் முதலியன பல வற்கடத்துக்கு முன்னிருந்தன இன்றும் உளவே. வற்கடத் துக்கு முன்னிருந்து பிறநாடு சென்ற புலவர்கள் தாமே திரும்பி வந்தார்களும்? களவியலுக்குச் சிறந்த உரைசொன்ன நக்கீரர் வற்கடத்துக்கு முன்னும் சங்கப்புலவராயிருந்தவரன்றே? அவர் தமக்கு முன்னிருந்த பொருளிலக்கண அறிவைக்கொண்டுதானே உரையைச்சொன்னர்? வற்கடகாலத்துக்குப் பிறகு ஒருவரிடத் தும் புதிதாய்ப் பொருள் இலக்கணத்தை ஓதியுணர்ந்தாரென்று சொல்வதற்கில்லையே. மற்றுள்ள சங்கப் புலவர்களும் களவிய லுக்கு உரை செய்தனரென்று சொல்லப்பட்டுள்ளதே. அப்படி யிருக்க, "பொருளதிகாரம் வல்லாரை யெங்குந்தலைப்பட்டிலேம்'' என்று சொன்னரென்பது பொருத்தமுடையதாகுமா? பொரு ளிலக்கணம் வல்லாரிவராயின், உள்ள பொருளிலக்கணங்களுக் குப் புத்துரை செய்தோ, வேறு வகையாகவோ அவர்களுக்கு அவ்வறிவைப் புகட்டுவதைவிட்டுப் புதுநூல் செய்வதனுற் பயன் என்னை? மேலும் பொருளதிகாரம் ஒன்பது இயல்களையுடைய

தாயிருக்க அவைகளில் இரண்டு இயல்கள் மட்டும் அடங்கிய களவியல் முழுப்பொருள் இலக்கணமாகுமா? அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தம் நான்கில் இன்பத்தின் ஒருபகுதி மட்டுந் தானே களவியலில் அடங்கியுள்ளது. அகத்திணை முழுவதுங்கூட இல்லையே! புணர்ச்சி, பிரிவு, ஊடல் இவற்றினிலக்கணமில்லாததனால் உலகம் முழுகிப்போய்விடுமோ?

கடைச்சங்கத்தைப் பற்றியும் சில கேள்வி எழும். "கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப; அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப" என்றதனால் இத்தொகையினரில் 400 புலவர்கள் சங்கமிருந்து தமிழாராயாது பாடினவர்மட்டும் ஆவர். அவர்கள் 49 புலவர்கள் காலத்தினரா? வேறு காலத்தினரா? தமிழாராய்ந்த புலவர்களைச் சமகாலத்தவர் என்று சொல்லியிருப்பதுபோல் காணப்படுகிறது. திருவள்ளுவமாலையும் அவ்வாறு கூறுவதில் ஒன்றும். கடைச்சங்கத்தின் கால அளவோ 1850 யாண்டு. அதை நடத்திய பாண்டியர்களின்தொகை 49. ஒருபாண்டியன் காலத்துச் சங்கமிருந்து தமிழாராய்ந்தார் நாற்பத்தொன்பதின்மர், பாடினோர் நானூறு புலவர் என்றால் எஞ்சிய 48 பாண்டியர்கள் காலத்துத் தமிழாராய்ந்த புலவர் எத்தனை? பாடினோர் எத்தனை? அவர்கள் பெயர் முதலிய விவரங்கள் என்ன? கடைச்சங்கம் முழுவதும் இருந்த புலவர்கள் தொகை 449 என்றால் ஒவ்வொரு பாண்டியருக்குச் சுமார் ஒன்பது புலவர் தானே வீதத்துக்குக்கிடைப்பார்கள். தமிழ் நாடு முழுவதிலும் ஒரு தலைமுறைக்கு ஒன்பது புலவர்கள் தானா இருந்திருப்பார்? அதுவும், தமிழ் பெருகியிருந்த காலத்தா? சங்கம் என்பது சராசரியில் ஒருகாலத்தில் ஒன்பது புலவர்களையுடையதென்று ஏற்படுமே. தமிழரசர்கள், தமிழ்வள்ளல்கள், தமிழ் மக்கள் யாவரும் தமிழையாதரித்த காலத்தில், அரசர் பாஷையென்று நாட்டில் வேறொன்று நடைபெறாதகாலத்தில், ஆங்கிலம் முதலிய பிறமொழிகள் போற்றப்பட்டும், தமிழ் தாழ்த்தப்பட்டும் இருக்கும் இக்காலத்து உள்ள புலவர் தொகையிலும் அக்காலத்துக் குறைந்திருந்ததென்றல் பொருத்தமுடையதாகுமா? துருஷ்

கர், ஆங்கிலேயர்களின் ஆட்சிகாலத்துத் தமிழ் பரவியிருக்கும் அளவு தமிழரசர்காலத்துத்தமிழ் நாட்டில் தமிழ் பரவியிருக்க வில்லை யென்றேற்படுமே. மிகச்சிறந்த புலவர் என யாவரும் பாராட்டும் நக்கீரர் அவ்வுரையை எழுதினரென்று சொல்லத் துணிவது சரியென்று தோன்றவில்லை.

மேலும், நெடுமாறன் என்னும் பாண்டியன்மீதியற்றப்பட்ட கோவையிலிருந்து 315 கலித்துறைகள் களவியல் உரையில் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன. அந்நெடுமாறன் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்தவனென்பது சரித்திர ஆராய்ச்சி வல்லோரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சங்ககாலத்திருந்த நக்கீரர் அவர்காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இயற்றப்பட்ட கோவைச் செய்யுள்களைத் தாம் எழுதிய உரையில் உதாரணமாகக்காட்ட எவ்வாறு இயலும்? சிலர் இக் காட்டுச்செய்யுள்கள் பிற்காலத்து இடைச்செருகல் என்கின்றனர். உரையில் சில இடங்களில் அக்கலித்துறைகள் அமைந்திருக்கும் மாதிரியைப்பார்த்தால் இடைச்செருகல் என்பது பயனில் கூற்றெனமுடியும். மேற்சொல்லியவற்றால் ஊர், பெயர் தெரியாத ஒருவரால் களவியலுரை பிற்காலத்தெழுதப்பட்டதென்றும், நக்கீரர் எழுதியதன்றென்றும் புலப்படும்.

சங்ககாலத்துச் செய்யுள்கள்:—பத்துபாட்டு, எட்டுத் தொகை, பதினென் கீழ்க்கணக்கு என்பன அவைகளில் முக்கியமானவை. இவை மேற்கணக்கு கீழ்க்கணக்கென இருவகைப்படும் மேற்கணக்கு கீழ்கணக்குகளை

“அகவ லுங்கலிப் பாவும்பரி பாடலும்
பதிற்றந் தாதி பதிற்றைம்ப தீறா
மிதத்துடன் றொகுப்பன மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறின்
எள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே.”

“ஐம்பது முதலா வைந்நூ றீறா
வைவகைப் பாவும் பெருநெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்.”

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்."

என்ற பன்னிருபாட்டியல் இனவியற் சூத்திரங்களால் அறியலாம். பத்துபாட்டு, எட்டுத்தொகை யென்பன மேற்கணக்கு. பத்துப் பாட்டாவது

"நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
யேறிய வடியி னீரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டென வருமே."

"அதுவே, அகவலின் வருமென வறைகுநர் புலவர்."

என்றதனால் அறியப்படுவது. ஈரைம்பாட்டுகள்

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

என்பன. அவை, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. ஆற்றுப்படையாவது.

"புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயிறெறு மிருங்கா னத்திடை
வறுமை யுடன்வருஉம் புலவர் பாணர்

பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவல னூர் பெயர்கொடை பராஅய்
ஆங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை"

"புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே"

என்ற பன்னிருபாட்டியல் இனவியற் சூத்திரங்களால் அறியப்படுவது.

"தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலெடை நிலையுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்றபெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்."

(தொல்காப்பியம், புறத்திணையியல்).

என்ற சூத்திரமும் அதனைக்காட்டும்.

திருமுருகாற்றுப்படை :—நக்கீரர் இயற்றியது. இது புலவ ராற்றுப்படை யெனவும் படும். "வீடுபெறுதற்குச் சமைந்தா னோர் இரவலனை வீடுபெற்று ஒருவன் முருகனிடத்தே யாற்றுப் படுத்தது" என நச்சினார்க்கினியர் எழுதியிருப்பது இச்செய்யு ளுக்குப் பெயர் வாய்ந்ததற்குக் காரணத்தையும், அதிலடங்கியிருக் கும் பொருளையும் விளக்கும். முருகக்கடவுளது திருவருளைப் பெற விரும்புவோர் திருமுருகாற்றுப் படையைப் பாராயணம் பண்ணுவது மரபு.

பொருநராற்றுப்படை :—சோழன் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் பாடியது. பொருநர் ஏர்க்களம் பாடு வோர், போர்க்களம் பாடுவோர், பரணிபாடுவோரெனப் பலர். அவருள் இச்செய்யுளில் காணப்படும் பொருநன் போர்க்களம் பாடுவோன். "ஆசிரிய நடைத்தே வஞ்சி" என்பதனால் இச் செய்யுளில் வஞ்சிமிக்கு வந்தது.

சிறுபாணாற்றுப்படை :—ஓய்மாநாட்டு நல்லியக்கோடனை இடைகழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. பாணர்—பாடு வோர். அவர் சிறுபாணர் எனவும், பெரும்பாணர் எனவும் இரு வகைப்படுவார். இச்செய்யுளில் "இன்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ" என்று சொல்லியிருப்பது இனிய ஓசையையுடைய சிறியயாழை வாசிப்போனை ஆற்றுப்படுத்ததென்பதை விளக்கும். பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி யென்னும் வள்ளல் எழுவரது கொடைத்திறத்தைக்கூறும்.

பெரும்பாணாற்றுப்படை :—தொண்டைமான் இளந்திரைய னைக்கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. இச்செய்யுளில் "இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி" என்று சொல்லி யிருப்பது இடனுடைய பெரியயாழை வாசிக்கும் பாணனை ஆற் றுப்படுத்ததென்பதைக் காட்டும்.

சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையில்

"குரலினும் யாழினும் குரன்முத லேழும்
வழுவின்றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்,"

என்று சொல்லியிருப்பது பெரும்பாணர் இன்னாரென்பதையும், அவர் சிறுபாணரின் வேறு என்பதையுங் காட்டும். இளந்திரையன், காஞ்சி நகரத்து ஆட்சிபுரிந்த அரசன். கிள்ளிவளவன் என்னும் சோழ அரசன், நாககன்னிகையொடு புணர்ந்து மகற் பெற்றது மணிமேகலையில் சொல்லியிருக்கிறது. நாகர் என்பவர் ஒரு சாதியார். அவர் தமிழ் நாட்டில் சிலவிடங்களிலும் சாவகத் தீவிலும் இருந்தனர். சாவகத்தீவு ஜாவா என்று இப்பொழுது சொல்லப்படுகிறது. கிள்ளிவளவன் புணர்ந்தது சாவகத்தீவு அரசன் மகளாகிய பீலிவளை யென்பாளை. 'அவள் கம்பளச்செட்டி யென்னும் சோழநாட்டு வணிகன் வசம் தான் பெற்ற மகவை யனுப்ப அம்மகவு ஏறிவந்த கப்பல் கடலில் மூழ்கியது. கிள்ளி வளவன் அதையறிந்து மிகவும் இரங்கியகாலத்து ஒரு மகவை கடற்றிரை கொண்டுவந்து ஒதுக்கியதாகச் சிலர் அவனிடத்துக் கொடுக்க, அவன் அதைத் தன் மகவெனவேற்றுத் தனது ஆட்சியிலிருந்த காஞ்சிநாட்டரசனாக அம்மகவை முடிசூட்டினான்' என நினைப்பதற்குப்பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. மணிமேகலை ஆபுத்திரனோடு மணி பல்லவமடைந்த காதையில்

> "நாக நன்னா டாள்வோன் றன்மகள்
> பீலிவளை யென்பாள் பெண்டிரின் மிக்கோள்
> பனிப்பகை வானவன் வழியிற் றோன்றிய
> புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தி."

என்று சொல்லியிருப்பதில் குழவியென்பது தொண்டைமானிளந் திரையனை. இளமைப் பருவத்தில் திரையால் ஒதுக்கப்பட்டதால் இளந்திரையன் என்னப்பட்டான். பீலிவளை தொண்டைக் கொடியில்வைத்து அனுப்பியதால் தொண்டைமான் என்னும் பதம் அவன் பெயர்க்குமுன் சேர்க்கப்பட்டது. நாககன்னிகை யென்பதை உரககன்னிகை யென்றும், சோழனை நாகபட்டினத்துச் சோழனென்றும் நச்சினார்க்கினியர் கூறியது பொருத்தமுடையதல்லவென்று தோன்றுகிறது. அதை விரிப்பதற் கிஃது இடமல்லவாதலால் விடுத்தேன். தொண்டைமான் இளந்திரையன் சங்கப்புலவனாகப் பாடிய செய்யுள்கள் காணப்படுகின்றன.

முல்லைப்பாட்டு:—காவிரிப்பூம்பட்டினத்து நப்பூதனார் பாடியது. அகத்திணையில் முல்லையொன்று. அஃது அத்திணை உரிப் பொருள் கூறும் தொல்காப்பியச் சூத்திரத்தில் சொல்லிய இருத்தல் என்னும் உரிப்பொருளாம். நச்சினார்க்கினியர் முல்லைப்பாட்டு உரையின் தலைப்பில் "இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன்கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை முல்லையாமென்று கருதி இருத்தல் என்னும் பொருள்தர முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் கூறினமையின்" என்று எழுதியிருப்பது இப்பாட்டிற்குப் பெயர் வாய்ந்ததை விளக்கும். "மக்கணுதலிய அகனைந் திணையும்—சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்" என்ற அகத்திணையியல் சூத்திரப்படி தலைவன் பெயர் இப்பாட்டில் சுட்டப்படவில்லை.

மதுரைக்காஞ்சி:—தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடியது. காஞ்சியென்பதற்குப் பன்னிருபடலத்திற்கூறிய பொருள் வேறு; தொல்காப்பியர் கூறிய பொருள் வேறு. தொல்காப்பியர் காஞ்சி இலக்கணம் "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்—நில்லா வுலகம் புல்லிய நெறித்தே" என்னும் புறத்திணையியல் சூத்திரத்திற்கூறினார். நச்சினார்க்கினியர் "வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமை சான்றோரறையுங் குறிப்பினது காஞ்சித்திணை" என்றதனால் அதுவிளங்கும். மதுரைக்காஞ்சி யென்றதற்கு மதுரையிடத்து அரசற்குக்கூறிய காஞ்சி என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுவர்.

நெடுநல்வாடை:—பாண்டியன் நெடுஞ்செழியனை நக்கீரனார் பாடியது. நெடிதாகிய நல்லவாடையென விரியும். தலைவிக்குப் பாலைத்திணையும், தலைவனுக்கு வாகைத்திணையும் உணர்த்துவது. நச்சினார்க்கினியர் "தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு ஒருபொழுது ஒரூழிநெடிதாகிய வாடையாய்ப் பாலையாகிய உரிப்பொருள் உணர்த்திற்று. அகத்தொடுங்கிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும் அரசன் போகம் வேண்டிப் பொதுச்

சொற்பொருளுய் அப்போகத்தின் மனமற்று வேற்றுப் புலந்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின் அவற்கு நல்லதாகிய வாடையா யிற்று. எனவே காமத்திடத்து வெற்றியெய்தலின் வாகைத்திணை யாயிற்று; இப்பாட்டுச் சுட்டியொருவர் பெயர் கொள்ளாமையின் அகப்பொருளாமேனும் 'வேம்புதலையாத்த நோன்கா ழெஃகம்' என அடையாளப்பூக் கூறினமையின் அகமாகாதாயிற்று" எனக் கூறியது இதை விளக்கும். இச்செய்யுளின் அடியில்கண்டவரிகள் பாலைத்திணையை யுணர்த்துவன். அவை,

> "செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
> குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
> இன்னே வருகுவ ரின்துணை யோரென
> உகத்தவை மொழியவும் ஒல்லாள் மிகக்கலுழ்ந்து
>
> * * * *
>
> உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
> மாயிதழ் ழேந்திய மலிந்துவீ ழரிப்பனி
> செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
> புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்
> கின்னு வரும்படர் தீர.' என்பன.

குறிஞ்சிப்பாட்டு:—ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்த தற்குக் கபிலர் பாடியது. "இயற்கைப்புணர்ச்சியும் பின்னர் நிக ழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களுங் கூறுதலின் இதற்குக் குறிஞ்சியென்று பெயர் கூறினார்" என நச்சினார்க்கினியர் எழுதி யிருப்பது குறிஞ்சிப்பாட்டில் சொல்லியிருப்பதை விளக்கும். 'பெருங்குறிஞ்சி' என்றும் இச்செய்யுளுக்கோர் பெயருண்டு. குறிஞ்சி, புணர்ச்சி என்பன ஒருபொருட்கிளவியாம். இச்செய் யுளில் குறிஞ்சியை யுணர்த்தும் வரிகள் சிலவற்றை அடியிற்காட் டியிருக்கிறேன். அவை,

> "மாதரு மடனு மோராங்குத் தணப்ப
> நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
> யிருவேமாய்ந்த மன்ற லிதுவென
> நாமறி வுருவிற் பழியு முண்டோ." என்பன.

பட்டினப்பாலை:—சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடிய லூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. இஃது ஆசிரிய அடிவிரவி வந்த ஏந்திசைத்தூங்கல் சீர்ளடி வஞ்சிப்பாவாகலின் வஞ்சி

நெடும்பாட்டு என்றும் பெயர் பெறும். இப்பாட்டு வேற்றுநாட்டகல்வயின் விழுமத்துத்தலைவன் செலவழுங்கிக் கூறியது. பட்டினத்தைச் சிறப்பித்துக்கூறிய பாலைத்திணையாகலின் இதற்குப் பட்டினப்பாலை என்றும் பெயர் வாய்ந்தது. கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்து இப் பாட்டைக் கரிகாற் பெருவளத்தான் கொண்டானென்பது "தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன், பத்தொடாறுநூறாயிரம் பெறப், பண்டு பட்டினப் பாலை கொண்டதும்" என்னும் கலிங்கத்துப்பரணி வரிகளால் அறியக்கிடக்கிறது. பாலை, பிரிவு என்பன ஒரு பொருட்கிளவியாம். இச்செய்யுளில் பாலையை யுணர்த்தும் சிலவரிகளை அடியிற்காட்டியிருக்கிறேன். அவை,

> "முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
> வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
> வாரேன், வாழிய நெஞ்சே' என்பன.

"வாரே னென்றான் அவனை யாற்றுவித்ததுப் பின்பு பிரிதல்கருதி" என் நச்சினார்க்கினியர் எழுதியிருப்பது பாலையை யுணர்த்தும்.

மலைபடுகடாம்:—பல்குன்றக்கோட்டத்து நன்னனை இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது. இதற்குக் கூத்தராற்றுப்படை யென்றும் பெயருண்டு. கூத்தரை நன்னனிடத்துப் பரிசில் பெற ஆற்றுப்படுத்ததாம். கூத்தர்—கூத்தாடுபவர். ஆகுளி, கஞ்சதாளம், கொம்பு, வங்கியம, குழல், கடிகை, சல்லி, ஒரு கண்மாக்கிணை முதலிய பலவும் அவருக்கு வாத்தியங்களாம். இச் செய்யுளில் மலைக்கு யானையையுவமித்து அதன் கட்பிறந்த ஓசையைக்கடாமெனச் சிறப்பித்த அதனால் இப்பாட்டிற்கு மலைபடுகடாம் எனப்பெயர் வாய்ந்தது. அவ்வுவமை பின் கண்ட வரிகளில் காணப்படுகின்றது. அவை,

> "அலகை தவிர்த்த எண்ணருந் திறத்த
> மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப"

என்பன. இப் பத்துப்பாட்டுகளும் பொருள் இலக்கியங்களாம் திருமுருகாற்றுப்படை வீடு பேற்றிற்கு வழிகூறுவது. பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுபடை,

கூத்தராற்றுப்படை இவை பொருள் பேற்றுக்கு வழி கூறுவன. இவையைந்தும் புறத்திணை இலக்கியங்களாம். முல்லைப்பாட்டு அகத்திணையில் முல்லை அல்லது இருத்தல் என்னும் உரிப்பொருளையும், குறிஞ்சிப்பாட்டு அகத்திணையில் குறிஞ்சி அல்லது புணர்ச்சியென்னும் உரிப்பொருளையும், பட்டினப்பாலை அகத்திணையில் பாலை அல்லது பிரிதல் என்னும் உரிப்பொருளையும், நெடுநல்வாடை அகத்திணையில் பாலையையும் புறத்திணையில் வாகையையும், மதுரைக்காஞ்சி புறத்திணையில் காஞ்சி யென்னும் உரிப்பொருளையும் கூறுவனவாம். பத்துப்பாட்டிற்கும் நச்சினார்க்கினியர் சிறந்த உரையெழுதியிருக்கின்றார். மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் தாம் பதிப்பித்த புத்தகத்தின முகவுரையில் ஒவ்வொரு பாட்டையும் பற்றி விரிவாயெழுதியிருப்பது படிப்போர்க்கு மிகப் பயன் அளிப்பதாம். அவர்கள் ஒவ்வொரு பாட்டிற்கும் எழுதியிருக்கும் குறிப்புரை அவர்கள் கல்வியளவிற்கு ஒரு சான்றாம்.

இனி, எட்டுத்தோகையாவன,

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத்தொகை."

என்பன. இவை எண்பெருந்தொகை யென்றும், எண்கோவை யென்றும் சொல்லப்படும்.

நற்றிணை:—175 சங்கப்புலவர்களால் பாடப்பட்ட 400பாடல்களை யுடையது. இதைத் தொகுப்பித்தோன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி. இதிலுள்ள அகவற்பாக்கள் ஒன்பதடிச் சிறுமையும், பன்னிரண்டடிப் பெருமையுமுள்ளன. இஃதொரு சிறந்த அகத்திணை இலக்கியம். இதற்குரைசெய்து அச்சிட்டவர் சில யாண்டுகளுக்கு முன்னர்க் காலஞ்சென்ற பின்னத்தூர்— அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் ஆவர். உரை மிகவும் நல்லது.

குறுந்தொகை:—205 சங்கப் புலவர்களியற்றிய 401 பாடல்களை யுடையது. தொகை முடித்தான் பூரிக்கோ. இப்பாடல்களில் 20 பாடல்கள் ஒழிய மற்றவற்றிற்குப் பேராசிரியர் உரை யெழுதி

ரென்றும், அவர் உரை யெழுதாதுவிட்ட 20 பாடல்களுக்கும் நச்சினார்க்கினியர் எழுதினரென்றும் தெரிகிறது. சீவகசிந்தா மணிச் சிறப்புப்பாயிரத்தில்

"நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருட்ரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்."

என்று நச்சினார்க்கினியரைச் சொலலியிருப்பது அதைக்காட்டும். அவ்வுரைகிடைத்தல். குறுந்தொகையிலுள்ளபாடல்கள் நாலடிச் சிறுமையும் எட்டடிப்பெருமையுமுள்ளன. இதுவும் அகத்திணை யிலக்கியம். சௌரிப்பெருமாளரங்கன் என்னும் புலவர் உரை எழுதி யச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர்.

ஐங்குறுநூறு:—ஐந்து புலவர்களியற்றிய ஐஞ்ஞூறு அகவற் பாக்களையுடைய அகத்திணை யிலக்கியம்.

"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலர்—கருதிய
பாலை யோதலாந்தை பன்முல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு"

என்னும் வெண்பாவல் இன்னதிணைச் செய்யுள்களைப் பாடியவர் இன்ன புலவர் என அறியலாம். ஒவ்வொரு திணைக்கும் நூறுபாக்கள உள்ளன. இதைத்தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தார் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறை. சிறந்தபழையவுரை யொன்றுளது. அதை யெழுதியவர் பெயர், ஊர் முதலிய விவரம் ஒன்றுந்தெரியவில்லை. மகாமகோ பாத்தியாய ஐயர் அவர்கள் இதை அச்சிட்டு வெளியிட்டிருக் கின்றனர்.

பதிற்றுப்பத்து:—10 புலவர்களியற்றிய 100 பாடல்களை யுடைய புறத்திணையிலக்கியம். பாடப்பட்டோர் சேரர் பரம்பரை யினர். இப்பொழுது முதல்பத்தும், பத்தாம்பத்தும் கிடைத்தில. இரண்டுமுதல் ஒன்பதுவரையுள்ள பத்துக்களைப்பாடியோர் குமட்

[illegible]ர்க்கண்ணனார், பாலைக்கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், காக்கைபாடினியார், நச்செள்ளையார், கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் என எண்மர். இதற்குப் பழைய உரையொன்றுளது. அதை எழுதியவர் பெயர், ஊர் முதலிய விவரம் ஒன்றும் தெரியவில்லை. அவர் சின்னூலைச் சொல்லியிருப்பதால் சின்னூலியற்றிய நேமிநாதருக்குப் பிற்பட்ட காலத்தவராதல் வேண்டும். மகாமகோபாத்தியாய ஐயரவர்களால் இஃது அச்சிட்டுப் வெளியிடப்பட்டிருக்கின்றது. நேமிநாதரைப்பற்றி மூன்றுங்காலப் பகுதியில் பார்க்க.

பரிபாடல்:—இஃது ஒரு பாவின் பெயர். அப்பாவடங்கிய தொகைநிலைச்செய்யுளுக்குப் பெயராயிற்று. பரிபாடலாவது:

"பரிபா டல்லே தொகைநிலை விரியி
னிதுபா வென்னு மியனெறி யின்றிப்
பொதுவாய் நிற்றற்கு முரித்தென மொழிப." (தொல்—செய்யுளியல்)

"கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தொடு
செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்." "

"சொற் சீரடியு முடுகிய லடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்." "

"பரிபாடல்லே
நாலீ ரைம்ப துயர் வடிவாக
வையைந் தாகு மிழிபடிக் கெல்லை." "

நச்சினார்க்கினியர் "பரிபாடலென்பது பரிந்து வருவது; அது கலியுறுப்போலாது நான்கு பாவானும்வந்து பலவடியும் வருமாறுநிற்கும்" என்றெழுதியிருக்கிறார். இது பல புலவர்பாடிய 70 பாடல்களையுடைய அகத்திணை, புறத்திணை யிலக்கியமாம். இப்பொழுது கிடைத்துள்ளன 24 பாடல்களும், சில பாடல்களின் உறுப்புகளுமே. கிடைத்துள்ளவற்றைப் பாடினோர் பதின்மூவர். தொகுத்தோர் தொகுப்பித்தோர் இன்னாரென்று தெரியவில்லை. இதற்குச் சிறந்த உரையுளது. மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் அதைப் பரிமேலழகர் உரை யென்கின்றனர். அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

கலித்தொகை:—150 கலிப்பாக்களை யுடையதாய் அகப் பொருளிலக்கியம். இவற்றைப் பாடியோர்

‘பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்
மருதனிள நாகன் மருதம்—அருஞ்சோழ
னல்லுருத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.’

என்ற வெண்பாவால் இன்னாரென விளங்கும். இதனை நல்லந்துவனார் இயற்றியதென்று சிலர் சொல்வர். இத்தொகையினீற்றில் “இத்தொகையைப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என இம்முறையே கோத்தார் நல்லந்துவனார்” என்று எழுதியிருப்பது அதற்குற்ற காரணமாயிருக்கலாமென்று தோன்றுகிறது. இத்தொகையை நச்சினார்க்கினியரெழுதிய சிறந்த உரையுடன் தாமோதரம் பிள்ளையவர்கள் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர்.

அகநானூறு:—இதற்கு நெடுந்தொகையென்றும் பெயருண்டு. 145 புலவர்கள் பாடிய 400 செய்யுட்களையு டையது. இத்தொகைப் பாட்டிற்கடியளவு சிறுமை பதின்மூன்று, பெருமை முப்பத்தொன்று. தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. தொகுத்தான் மதுரை உப்பூரி குடிகிழான் மகனுவான் உருத்திரசன்மனென்பான். இது களிற்றியானை நிரை, மணிமிடைபவளம், நித்திலக்கோவையென மூன்று பகுதிகளையுடையது. இத்தொகைக்குக் கருத்து அகவலாற் பாடினான். இடையளநாட்டு மணக்குடியான் பால்வண்ணதேவனான வில்லவதரையன். அதற்கெழுதிய பாயிரத்தின் வரிகள் பின்வருவன:

“நின்ற நீதி வென்ற நேமிப்
பழுதில் கொள்கை வழுதிய ரவைக்க
ணறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
யருந்தமிழ் மூன்றுந் தெரிந்த காலை
யாய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப் பாட்டு
ணெடிய வாகி யடிநிமிர்ந் தொழுகிய
வின்பப் பகுதி யின்பொருட் பாட
ணானூ றெடுத்து நூனவில் புலவர்
களித்த மும்மதக் களிற்றியா னைநிரை

மணியொடு மிடைந்த வணிகிளர் பவள
மேவிய நித்திலக் கோவை யென்றாங்
கத்தகு பண்பின் மூத்திற மாக
முன்னினர் தொடுத்த நன்னெடுந் தொகை'

இதில் தொகுத்தோன் தொகுப்பித்தோன் பெயர் காணப்படவில்லை. முதல் தொண்ணூறு பாட்டுகளுக்குப் பழைய உரையொன்றுளது. இத்தொகை, சம்பர்விலாசம்: வே. இராஜகோபால ஐயங்காரவர்களால் அச்சில் வெளிவந்துளது. சேதுசமஸ்தானம்: வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் திருத்தமா யெழுதி வைத்திருந்த பிரதி அச்சிடுவதற்கு உதவியாயிருந்ததெனத் தெரிகிறது.

புறநானூறு:—159 புலவர்கள் பாடிய 400 பாடல்களையுடைய புறப்பொருள் இலக்கியம். தொகுத்தோர், தொகுப்பித்தோர் இன்னாரென்று தெரியவில்லை. பழைய சிறந்த உரை ஒன்றுளது. அதை எழுதியவர் இன்னாரென்று தெரியவில்லை. சீவகசிந்தாமணிச் செய்யுளை உதாரணமாகக் காட்டுகின்றனர். ஆதலால் சிந்தாமணியுடையாருக்குப் பிற்காலத்தவராதல் வேண்டும்.

தொகைப்பாட்டினுள் அகப்பொருள் இலக்கியம் 6; புறப்பொருள் இலக்கியம் 2. மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் நான்கு தொகைகளை அச்சில் வெளியிட்டிருக்கிறார்கள். எஞ்சிய நான்கும் ஒவ்வொருவரால் ஒவ்வொன்றாக வெளிவந்துள்ளன. ஒவ்வொரு தொகையின் முன்னுரையிலும் பதிப்பித்தோர் அத்தொகையைப் பற்றிய விவரங்களை எழுதியிருக்கிறார்கள். மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் புறநானூற்றுப் பதிப்பின் முகவுரையில் எட்டுத் தொகையையும் பற்றி விவரித்து எழுதியிருக்கிறார்கள்.

இனி, பதினெண்கீழ்க்கணக்கு ஆவன,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

என்பன.' இவ்வெண்பாவிலுள்ள "இன்னிலை" என்னும் சொற்றொடர் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றனது பெயர் என்று

கொள்வோர் சிலர். சிலர், அதைக் காஞ்சியென்னும் பெயரின் அடைமொழியின் பகுதியதாக்கி வெண்பாவினீற்றடியில்இருக்கும் கைந்நிலை யென்பதைப் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றன் பெயர் எனக்கொள்வர். கைந்நிலையைப் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றெனக் கொள்வோருள் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் ஒருவராவர். அவர்களெழுதிய ஐங்குறு நூற்றின் முகவுரையைப் பார்க்க. இன்னிலையைப் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றெனக் கொள்வோருள் ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் ஒருவராவர். அவர்கள் பதிப்பித்த இன்னிலை யென்னும் புத்தகத்தைப் பார்க்க.

நாலடியார்:—அறத்துப்பால் 13 அதிகாரம், 130 வெண்பாக்களும்; பொருட்பால் 26 அதிகாரம், 260 வெண்பாக்களும், காமத்துப்பால் ஓரதிகாரம், 10 வெண்பாக்களும் ஆக 408 வெண்பாக்கள் அடங்கியது. ஒல்வொரு வெண்பாவும் ஒவ்வொரு ஜைன முனிவரால் ஒரு காலத்தில் செய்யப்பட்டனவென்று சிலரும், பலகாலத்தில் செய்யப்பட்டனவென்று சிலரும் கூறுவர். நாலடியார் பாடப்பட்டதைப்பற்றி யொன்றுக்கொன்று விரோதமான பல கதைகள் வழங்குகின்றன. அவற்றின் உண்மை எவ்வாறாயினும் ஒரு காலத்தில் நாலடியாரில்கண்ட வெண்பாக்கள் திரட்டப்பட்டு முப்பாலாகவும், நாற்பது அதிகாரங்களாகவும் பகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அப்பாகுபாடு உக்கிரப்பெருவழுதி காலத்து நடந்ததெனச் சிலரும், பிற்காலத்துப் பதுமனார் என்னும் ஜைன முனிவரால் நடத்தப்பட்டதெனச் சிலரும் கூறுகின்றனர்.

பதினெண் கீழ்க்கணக்கில் முதன்மையாகக் கொண்டாடப்படுவன திருக்குறளும், நாலடியாரும். நாலடியார் ஜைனமுனிவர்களால் பாடப்பட்டதேனும் அதைச் சிரமேற்கொள்ளாத சைவ வைணவர்கள் இந்நாட்டில் இல்லை. அதிலடங்கிய நீதிகளும், விதிகளும் மிகச் சிறந்தன. சிறுவர்கள் தமிழ் படிக்கக் கற்றுக்கொண்டவுடன் நாலடியாரை அவர்கள் கையில் கொடுத்துப் பாடம் பண்ணச் செய்வது இந்நாட்டில் வழக்கமாயிருந்ததென்பதை வயதில் முதிர்ந்த தமிழர்களறிவார்கள். அவ்வாறு இளமையில் படிப்பிக்

கப்பட்டவரில் யாரொருவன். பின்கண்ட வெண்பாக்கள் நாலடியாரின் பெருமையைச் சொல்லுவன:

"நானூறும் வேதமாம் நானூறு நானூறும்
நானூறுங் கற்றற்கு நற்றுணையாம்—நானூறும்
பண்மொழியாள் பாகம் பகிர்ந்து சடைக்கரந்த
கண்ணுதலான் பெற்ற களிறு.'

"வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோர்கள்
எல்லாருங் கூடி யெடுத்துரைத்த—சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா வென்மனத்தே
சீலமுட னிற்க தெளிந்து."

ஆர்விகுதி சேர்த்து நாலடியார் என்று சொல்வது அது பெருமையுடையதென மக்கள் மதித்திருப்பதற்குச் சான்றாம்.

இதைச் சங்ககாலத்துச் செய்யுள் அன்றென்று அதிலுள்ள பின்கண்ட இரண்டு வெண்பாக்களை ஆதாரமாகக்கொண்டு சொல்வாருளர். அவை,

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்.'

"மல்லன்மா ஞாலத்து வாழ்பவரு ளெல்லாம்
செல்வ ரெனினுங் கொடாதவர்—நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச்சென் றிரவா தார்."

என்பன. முத்தரையர் என்று மேற்கண்ட வெண்பாக்களில் சொல்லப்பட்ட அரசன் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் தஞ்சை, அதற்கடுத்த வல்லம் இவ்விடங்களில் ஆட்சிபுரிந்தவன். ஆதலால் நாலடியார் கி. பி. எட்டாம் நூற்றாண்டிலோ, அதற்குப்பிந்தியோ பாடப்பட்டிருத்தல் வேண்டுமென்கின்றனர். அவர்கள் குறிப்பிடும் வம்சத்தில் முத்தரையர் என்னும் பெயருடையவராய் இரண்டு அரசர்கள் இருந்தனர். அவர், அந்த வம்சத்தில் கடைசி அரசனும், அவன் பிதாமகனும் ஆவர். இந்த வம்சத்தினர் காஞ்சியை ராஜதானியாகக்கொண்ட பல்லவ அரசர்களுக்கு உட்பட்டவர்கள். பல்லவர்களிற் சிலர் முத்தரையன் என்னும் பட்டப்பெயர் வகித்

திருந்தனர். அக்காலத்து வழக்கப்படி பல்லவர் தஞ்சை அரசர்களுக்குத் கொடுத்ததனால் இஃது அவர்களுக்குக் கிடைத்த பட்டப் பெயராகும். முத்தரையன் என்னும் தொடர்மொழியை, மூன்று + தரையன் என்றும் அல்லது முத்து + அரையன் என்றும் பிரிக்கலாம். மூன்று + தரையன் என்று பிரித்தால் மூன்று தரைகளை உடையவன் என்று பொருள்படும். தரை, நாடென்பன ஒரு பொருட்கிளவியாம். மூன்று நாட்டையுடையவன்என்றுகும். மூன்று நாடு யாவை? என்னும் வினாவெழும். தமிழ் நாடு மூன்றும் என்பது விடை. பல்லவர் தமிழ்நாட்டு மூவேந்தரையும் ஜயித்து அவர் நாடுகளைக் கைக்கொண்டதாக எண்ணிஇப்பட்டப் பெயரைத் தரித்தனர்போலும்! தமிழ் முடிமன்னர் மூவரது நாடுகளை முழுவதும் கைக்கொள்ளாவிடினும், ஒவ்வொரு பகுதியைக் கீழ்ப்படுத்தினும் பட்டப் பெயர் தரிப்பதற்கு அது போதுமே. மும்முடியன் இதுபோன்ற ஒரு பட்டப்பெயராம். முத்தரையர் என்பது ஒரு காலத்தில் இருந்த ஓர் அரசனைமட்டும் குறிப்பதன்று என்றும், சில வம்சத்தார்கள் இதைப் பட்டப்பெயராகக் கொண்டிருந்தன ரென்றும் அறியக்கிடக்கிறது. இஃதன்றி முத்தரையர் என்பது குறுநில மன்னரினின்றும் வேறுபடுத்தி முடிமன்னராகிய சேர, சோழ, பாண்டியர் ஆகிய தமிழ்நாட்டு மூவேந்தரையும் குறிக்கலாம். மேற்கண்ட நாலடியார் வெண்பாக்களில் முத்தரையர் என்னும் மொழிபன்மையில் உபயோகப் படுத்தப் பட்டிருக்கிற தென்பது வெளி. 'செல்வரைச்சென் றிரவாதார் பெருமுத் தரையரே' என்று ஜைனமுனிவர்கள் கூறியிருப்பதை ஒருவரைக் குறித்துச் சொன்னதாகக் கொள்வதற் கிடமில்லை. பன்மையில் பொதுவாய்ச் சொல்லியிருப்பதுபோலக் காணப்படுகிறது. இரத்தற் றொழிலை மேற்கொள்ளாதவர் முடிமன்னரை யொப்பர் என்பது அத்தொடரின் பொருளாம். ஆதலால் முத்தரையர் என்னும் மொழியைக்கொண்டு நாலடியாரைக் கி. பி. எட்டாம் நூற்றூண்டினதாகச் செய்ய முயல்வது இயலாது.

சிலர் கி. பி. 651-ஆம் ஆண்டில் காலஞ்சென்ற சமஸ்கிருத பண்டிதர் பர்த்திருஹரி செய்த சுபாஷிதம் என்னும் கிரந்தத்தி

னுள்ள பல சுலோகங்களை யொட்டி ஜைன முனிவர்கள் நாலடியா ரில் சில செய்யுட்கள் செய்திருக்கின்றனர். ஆதலால் நாலடியார் கி. பி. ஏழாம் நூற்றுண்டிற்குப் பின்னர் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்கின்றனர். சுபாஷிதம் என்று பர்த்திருஹரி கிரந் தத்திற்கும் பெயர் வந்ததற்குக் காரணம் பலசான்றோர் பற்பல காலங்களில் செய்து நீண்டநாளாய்த் தனிச்சுலோகங்களாக உலவி வந்தனவற்றை அவர் திரட்டித் தொகுத்தது தானே. அந்தக் கிரந்தத்திலுள்ள சுலோகங்கள் பர்த்திருஹரி இயற்றியனவல்ல; தொகுத்ததொன்றே அவர் செய்ததாம். அந்தச் சுலோகங்கள் பர்த்திருஹரி காலத்திற்கு எத்தனை நூற்றுண்டுகளுக்கு முன் முதல் வழங்கிவந்தனவென்று சொல்ல இயலாது. வடமொழியி லும் வல்லுநராகிய ஜைன முனிவர்கள் அவ்வாறு நடைபெற்ற சுலோகங்களில் பலவற்றை அறிந்திருந்தார்களென்பது பொருத்த முடையதன்றே? பூர்வமாயுள்ள கிரந்தங்களில் பர்த்திருஹரி சுபாஷித சுலோகக் கருத்துக்களடங்கிய சுலோகங்கள் எத்தனை காணப்படுகின்றன? அவைகளை அறிந்த ஜைனமுனிவர்கள் நாலடி யாரிற் சில செய்யுட்களைச் செய்திருத்தல் கூடாதா? ஒரே விஷ யத்தைச் சிந்திப்பார் பலருக்கு ஒரேவிதமான கருத்துக்கள் தோன்று வதியல்பன்றே? ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வந்து சில நூற் றுண்டுகள் ஆயின. அவர் இங்கு வருவதற்கு முன் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டிருக்கும் கிரந்தங்களிலுள்ள பல கருத்துக்கள் பூர்வ மாயுள்ள தமிழ்ச் செய்யுட்களில் உளள கருத்தோடு ஒத்திருக்க வில்லையா? இருவர் கருத்துக்கள் ஒத்திருந்தால் ஒருவரைப் பார்த் துத்தான் ஒருவர் சொல்லியிருத்தல் வேண்டுமென்று சொல்வது சரியன்றே.

ஆயினும், உக்கிரப்பெருவழுதியால் ஆதரிக்கப்பட்ட ஜைன முனிவராகிய புலவர்கள் நாலடியார் செயயுட்களை இயற்றினரென் பது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. நாலடியார்ச் செய் யுட்களைச் சங்கப்புலவரியற்றிய செய்யுட்களாகக் கொண்டு பதி னெண் கீழ்க்கணக்கில் நாலடியார் ஒன்று என்கின்றனர். கடைச் சங்கத்தில் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்த புலவர், பாடிய புலவர்

என்ற இருவர் எண்ணும் கூட்ட 449-ஆம் என்று சொல்லியிருக்கிறது. இதில் நானூற்றுவர், பெயர் ஊர் தெரியாத ஜைன முனிவர்களென்ருல் ஏனையோர் நாற்பத்தொன்பதின்மரே யாவர். நாம் அறிந்தவரையில் பெயர் தெரிந்தவராயும், ஜைன முனிவரல்லாதாராயும் 49 என்னும் எண்ணுக்குமேல் பல புலவர்கள் உளர். அதனல் இக்கதையின் உண்மை ஆராயற்பாலதேயாம்.

கி. பி. ஐந்தாம் நூற்றூண்டின் பிற்பாதியில் மதுரையில் வஜ்ர நந்தி என்னும் ஜைனமுனிவர் தமிழ்ச்சங்கம் ஒன்று நிலைநாட்டினுரென்று தெரிகின்றது. நாலடியார்ச் செய்யுட்கள் அக்காலத்தில் இயற்றப்பட்டனவோ என்பது ஆராயத்தக்கது. நாலடியார்ச் செய்யுட்கள் பண்டைக் காலந்தொட்டு உரையாசிரியர்களால் ஆளப்பட்டு வருகின்றன.

நான்மணிக்கடிகை:—விளம்பி நாகனுராலியற்றப்பட்டது. கடவுள் வாழ்த்துள்பட 101 வெண்பாக்களையுடையது. சிறந்த நீதிநூல். செய்யுள்தோறும் 4 நீதிகளடங்கியுள்ளன.

கார்நாற்பது:—இயற்றியவர் மதுரைக் கண்ணங்கூத்தனுர். கார்காலத்தைச் சொல்லும் 40 செய்யுட்களையுடையது.

களவழி நாற்பது:—பொய்கையார் இயற்றியது. 41 வெண்பாக்களடங்கியது. கணைக்காலிரும்பொறை என்னும் சேரனைக் கோச்செங்கட் சோழன் கழுமலம் என்னுமிடத்தில் போரில் வென்று சிறைப்படுத்தியபோது, சேரன் நண்பராகிய பொய்கையார் இச்செய்யுளைப்பாடி அவனை விடுவித்தனர் என்பர் சிலர். சிலர் இது பொருந்தாத கதையென்பர். களவழிபாடிய பொய்கையாரே பிந்தி வைஷ்ணவ ஆழ்வாராயினர் என்பாருமுளர். இரண்டாங்காலப் பகுதியில் பொய்கையாழ்வார் சரித்திரத்தைப் பார்க்க.

இன்னுநாற்பது:—கபிலரியற்றியது. 40 செய்யுளுடையது. இன்னுதனவற்றை விளைவிப்பன இன்னவென்று செய்யுள்தோறும் அடுக்குகின்றது.

இனியவை நாற்பது:—மதுரைத் தமிழாசிரியர்மகனார் பூதஞ்சேந்தனாரியற்றியது. 40 செய்யுளுடையது. இனிமை பயக்கத்தக்கன இவை எனக் கூறுகின்றது.

ஐந்திணை ஐம்பது:—மாறன்பொறையனாரியற்றியது. 50 செய்யுட்களை யுடையது. உரிப்பொருளாகிய இருத்தல், புணர்தல், பிரிதல், ஊடல், இரங்கல் என்னும் ஐவகை ஒழுக்கங்களையும் முறையே முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என ஐந்திணையாகவைத்து ஒவ்வொருதிணைக்கும் பப்பத்துக்கூறுதலான் ஐந்திணைஐம்பது எனப் பெயர்பெற்றது.

திணைமாலை நூற்றைம்பது:—மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார் இயற்றியது. அகனைந்திணைக்கும் திணைக்கு முப்பது முப்பது வெண்பாக்களாக நூற்றைம்பது வெண்பாக்களை உடையது.

திணைமொழி ஐம்பது:—சாத்தந்தையார் மகனார் கண்ணன் சேந்தனார் இயற்றியது. திணைக்குப்பத்து வெண்பாக்களாக ஐம்பது வெண்பாக்களை யுடையது. பழையவுரை உளது.

ஐந்திணை எழுபது:—மூவாதியார் இயற்றியது. திணைக்குப் பதினான்கு வெண்பாக்களாக 70 வெண்பாக்கள் அமைந்துள்ளது. இதற்குப் பழைய உரையுளது.

திருக்குறள்:—பதினெண் கீழ்க்கணக்கைத் தொகுத்துச் சொல்லும் வெண்பாவில் முப்பால் என்றது திருக்குறளை. முப்பாலென்றது திருக்குறளன்றென்பாருமுளர் ஜீ. யூ. போப் என்னும் ஆங்கிலத் தமிழ்ப்பண்டிதர் உலகத்திலுள்ள பாஷை நூல்களில் ஒப்புயர்வற்றது திருக்குறள் என்றனர். இவ்வாறே, திருக்குறளைப் புகழ்ந்து கூறிய மேல்நாட்டுப்புலவர் பலர். நமது நாட்டில் ஒன்றோடொன்று மாறுபடும் சமயங்கள் பலவுளவேனும், அச்சமயத்தினர் யாவரும் திருக்குறளை உச்சிமேற்கொண்டனர். திருவள்ளுவமாலையில் கல்லாடர் பாடியதென்றுளவெண்பா இவ்வுண்மையைக்கூறுவதாம். அஃது,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி."

என்பது. திருவள்ளுவநாயனாரைச் சைவர் தங்களது சமயத்தின ரெனவும், வைணவர் தங்களது சமயத்தினரெனவும், ஆருகதர் தங்களது சமயத்தினரெனவும், பிற சமயத்தவர்களும் தத்தம் சமயத்தினரெனவுங் கூறுவர். இவர்கள் வாதம் இன்றும்ஒழிந்தி லது. மேல்நாட்டாரிற் சிலர், கிறிஸ்தவமதம் வெகு யாண்டுகளு க்கு முன்னரே இந்நாட்டிற் பரவியது. நாயனார் அதன் கொள்கை களை நன்குணர்ந்த பின்னரே குறளை இயற்றினரென்பர். திருக் குறள் முப்பால் எனப் பெயர் பெறினும், தேவர் நாற்பாலையும் இதில் நன்று புகட்டியிருக்கின்றனர் என்பது இதைப்படிப்போர் எளிதில் அறியக்கூடியதாம். இக்கருத்தேபற்றி "முப்பாலில் நாற் பான் மொழிந்தவர்" எனக் கூறுவர். உண்மையையுணர்த்தும் நூல்கள் பலவுளவேனும், திருக்குறளுக்கிணையான தொன்று மில்லை என்போர் அநேகர். பிற்காலத்திருந்த ஔவை இதுபற் றியே தாமியற்றிய நல்வழியில் "தேவர் குறளும்" என "நான் மறை முடிவு"க்கு முன்னர்க் குறளை வைத்ததாம். திருக்குறளு க்கு முப்பானூல், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி; வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை எனப் பெயர்களுண்டு. திருவள்ளுவருக்கும் நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், எனப் பல பெயர்களுண்டு. திருக் குறள் 1330 குறள் வெண்பாக்களடங்கியது. இது, திருவள்ளுவ மாலையில் "ஆயிரத்து முன்னூற்று முப்ப தருக்குறளும்—பாயி ரத்தி னொடு பகர்ந்ததற்பின்" என்று கூறப்பட்டுளது. அக் குறள்வெண்பாக்கள் பத்து அடங்கியன ஓர் அதிகாரமாகத் திருக் குறள் 133 அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. இதை, மாலையில் "ஐயாறுநூறு மதிகார மூன்றுமாம்" என்று கூறியி ருக்கின்றனர். நூல் அறம், பொருள், காமம் என முப்பாலாகப் பிரிக்கப்பட்டுளது. அறம் 38, பொருள் 70, காமம் 25 என அதி

காரம் தொகைபெறும். இதை, மாலையில் "அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்—திறமிருபத் தைந்து" எனக்கூறினர் அறத்தை நான்கு பகுதிகளாகவும், பொருளை ஏழுபகுதிகளாகவும், காமத்தை மூன்று பகுதிகளாகவும் பிரித்திருக்கின்றனர். இதை, மாலையில் "அறநான்கு அறிபொரு ளேழொன்று காமத்—திறமூன் றெனப்பகுதி செய்து" எனக்கூறுகின்றனர். அறத்துப்பாலின் நான்கு பகுதிக ளின்னவென்றும், அவை ஒவ்வொன்றிலு மடங்கிய அதிகாரத்தொகை இத்துணையவென்றும் பின் கண்ட வெண்பாச்கூறும். அது,

"பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—வாய
அறத்துப்பால் நால்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனர் தேர்ந்து."

என்பது. பொருட்பாலின் ஏழுபகுதிக ளின்னவென்றும், அவை ஒவ்வொன்றிலுமடங்கிய அதிகாரத்தொகை இத்துணையவென்றும் பின்கண்ட வெண்பாவாலறியலாம். அஃது,

"அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
தருவல் லரணிரண் டொன் றொண்கூழ்—இருவிய
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை"

என்பது. இவ்வாறே காமத்துப்பாலின் மூன்றுபகுதிகளின்னவென்றும், அவை ஒவ்வொன்றிலும் அடங்கிய அதிகாரங்களித்துணையவென்றும் காட்டுவது பின்கண்ட வெண்பா. அஃது,

"ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு."

என்பது: அறம், பொருள், காமம் என்னும் மூன்றற்கும் இலக்கணங் கூறப்புகுந்த தொல்காப்பியர் காமத்திற்கிலக்கணத்தை முன்னும்; பொருள், அறத்திற்கு அதற்குப் பின்னுங்கூறினர். நாயனர் "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்—அறத்துவ

ழிப் படூஉந் தோற்றம் போல" என்பாரோடொத்து அறம், பொருள், காமம் என்னும் முறையில் பொருள்களை வைத்து நூல் செய்தனர். தொல்காப்பியர் அகத்திணை, புறத்திணைகளைச் சிறப்பித்துக்கூறி அறம், பொருள, இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அவற்றிலடக்கிக் கூறினர். நாயனர் புருஷார்த்தங்களைச் சிறப்பித்துக்கூறித் திணைகளை யவற்றிலடக்கினர்.

திருக்குறளின் பெருமையை விரிக்க நான் எவ்வாற்ருனுந் தகுதி யுள்ளவனல்லேன். அதை அன்புடன் ஓதுதலாலுள்ள பயனும், ஓதாததனுலுள்ள குறைவும் மிகப்பெரிய. பின்கண்ட வெண்பா அதையுணர்த்தும். அது,

> "தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
> பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்
> குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
> செயலில்லை யென்னுந் திரு"

என்பது. ஏசுநாதர் என்பார் சகல மதங்களினுடைய உண்மையையும் சுருக்கி இரண்டு கட்டளையாகத் தெரிவித்தார் என்றும், அவற்றைக் கடைப்பிடிப்பவர்கள் மேலானகதியை அடைவது திண்ணமென்றும் கிருஸ்தவர்கள் கூறுகின்றனர், அவ்விரண்டு கட்டளைகளாவன '(1) கடவுளினிடத்து முழு அன்பையுஞ் செலுத்து; (2) அயலானையும் உன்னைப்போல் நேசி' என்பன. அஃதாவது தெய்வபக்தியும், ஜீவகாருண்யமும் உள்ளவன் கடைத்தேறுவன் என்பது. நாயனர் அம்முதல் கட்டளையைக் கடவுள்வாழ்த்து அதிகாரம் முதலிய இடங்களில் சொல்லிருக்கின்றனர். ஈண்டு அவரியற்றியவற்றில் ஒரு குறளை உதாரணமாகக் காட்டுகிறேன். அது,

> "பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு"

என்பது, பிறரிடத்து அன்பு செலுத்துவது ஒருவனது கடமை என்பதற்கும் அவர் குறளில் ஒன்றை உதாரணமாகக் காட்டுகிறேன். அஃது,

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு"

என்பது. நாயனார் சகல மதங்களின் சாராம்சங்களையும் மிகவும் சுருக்கமாயும், அழகாயும் சொல்லுகின்றவர் எவற்றிற்காகக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் கொண்டாடுகின்றனரோ அவை நாயனார் சென்ற வழியெல்லாம் சிதறுகின்றன.

இது நிற்க, உக்கிரப்பெருவழுதிகாலத்தே திருக்குறள் தமிழ்ச்சங்கத்தில் புலப்படுத்தப்பட்டதென்றும், இறையனாருள்பட சங்கமிருந்து தமிழாராய்ந்த புலவர் புகழ்ந்து அக்காலத்துக் கவியியற்றினரென்றும், அவைகளடங்கிய செய்யுளுக்குத் திருவள்ளுவமாலை எனப் பெயர் என்றும் சொல்லுவர். ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் இறந்த அணிமையில் கூலவாணிகன் சாத்தனார் செங்குட்டுவன் என்னும் சேர அரசனோடு பேரியாற்றங்கரை சென்று கோவலன் கதையை அவ்விடத்துச் சொல்லியதும், கூட இருந்த இளங்கோவடிகள் அக்கதையைச் செய்யுளில் செய்வேனென்ற பொழுது சாத்தனார் கதையின் தொடர்ச்சியை மணிமேகலை யென்னும் செய்யுளாகத் தாம் செய்வதாய்ச் சொல்லி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைச்செய்து முடிப்பதற்கு முன்னரே மணிமேகலையைப் பாடிமுடித்தன ரென்பதும் "மணிமே கலைமே லுரைப் பொருண் முற்றிய சிலப்பதிகாரம்" என்று நூற்கட்டுரையில் இளங்கோவடிகள் சொல்வதனானே விளங்கும். சாத்தனார் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் காலமுதற்கொண்டுள்ளவர். அவனுக்குப்பின் பட்டமடைந்த வெற்றிவேற்செழியன் காலத்து மணிமேகலையும் சிலப்பதிகாரமும் இயற்றப்பெற்றன. மணிமேகலையில்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்."

எனச்சாத்தனார் நாயனாரது ஒரு முழுக்குறள் வெண்பாவையுங் காட்டி நாயனாரைப் பொய்யில் புலவன் எனப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர். சிலப்பதிகாரத்திலும் குறள்கள் காணப்படு

கின்றன. இவ்விருதொடர்நிலைச்செய்யுட்களும் இயற்றப்பெற்ற காலத்திருந்த வெற்றிவேற்செழியனுக்குப் பிறகு பாண்டிய ஆட்சியை நடத்தியவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். அவனுக்குப் பிறகு பட்டம் பெற்றவன் உக்கிரப்பெருவழுதி. உக்கிரப்பெருவழுதி காலத்தே குறள் அரங்கேற்றப்பட்டதென்றும், அவ்வழுதியுள்ளிட்ட புலவர்கள் திருவள்ளுவமாலைச் செய்யுட்களை அக்காலத்துப் பாடினரென்றும் ஒரு கதை வழங்குகின்றது. உக்கிரப் பெருவழுதி காலத்திற்கு இரண்டு தலைமுறைக்குமுன் சாத்தனூர் ஒரு முழுக் குறள்வெண்பாவையும் தாமியற்றிய மணிமேகலையில் காட்டிப் பொய்யில் புலவன் எனப் புகழ்ந்து கொண்டாடியிருப்பது திருவள்ளுவமாலைக் கதையோடு முரணுமோ என்றையுறுகின்றேன். திருவள்ளுவமாலை வெண்பாவைத் தவிர்த்து உக்கிரப்பெருவழுதி காலத்துக் கூலவாணிகன் சாத்தனூர் இருந்தார் எனக் காட்டக் கூடிய செய்யுட்களையும் காணேம். இஃது ஆராயற்பாலது.

திரிகடுகம்—நல்லாதனாரியற்றியது. கடவுள் வாழ்த்துள்பட 101 வெண்பாக்களையுடையது. திரிகடுகு என்பன சுக்கு, திப்பிலி, மிளகு ஆம். இவை மக்களுக்கு வியாதியைப் போக்கி நன்மை பயப்பதுபோல், நன்மை பயக்கும் மூன்று உபாயங்கள் ஒவ்வொரு வெண்பாவிலும் சொல்லப்பட்டுள்ளன.

ஆசாரக்கோவை—பெருவாயின் முள்ளியாரியற்றியது. தற்சிறப்புப்பாயிர முள்பட 101 பாடல்களையுடையது. ஒழுக்கத்தின் விதியைச் சொல்லுவது.

பழமொழி :—முன்றுறையரையனாரியற்றியது. அவர் ஜைனர். 400 வெண்பாக்களையுடையது. பழைய உரை ஒன்றுளது. செந்தமிழ்ப்பத்திராசிரியர் பிர்ம்மஸ்ரீ திருநாராயண ஐயங்கார் அவர்கள் ஒரு சிறந்த குறிப்புரையை எழுதிவருகிறார்கள். பதினெண் கீழ்க்கணக்கில் திருக்குறள், நாலடியாருக்கு அடுத்தபடியிலுள்ளது.

சிறுபஞ்சமூலம்:—காரியாசான் இயற்றியது. இந்நூலுடையாரைச் சொல்லும் வெண்பா

"மல்லிவர்தோண் மாக்காயன் மாணுக்கன் மாநிலத்துப்
பல்லவர் நோய்நீக்கும் பாங்கினாற்—கல்லா
மறுபஞ்சத் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலஞ்செய் தான்' என்பது.

கடவுள் வாழ்த்துள்பட 104 வெண்பாக்களையுடையது. சிறுபஞ்சமூலமாவன கண்டங்கத்தரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சில்வேர், பெருமல்லிவேர் என்பன. ஒவ்வொரு வெண்பாவிலும் நன்மைபயக்கத்தக்கனவாய் ஐந்து நீதிகள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாய் முதல் வெண்பாவைக் கீழே வரைகின்றேன். அஃது,

"ஒத்த வொழுக்கம் கொலைபொய் புலால்களவோ
டொத்த விவையல வோர்நாலிட்—டொத்த
உறுபஞ்ச மூலந்தீர் மாரிபோர் கூறீர்
சிறுபஞ்ச மூலஞ் சிறந்து." என்பது.

இன்னிலை:—இது பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றன்றென்பாருளர் என முன்னரே சொன்னேன். இஃது அக்கணக்கில் சேர்ந்ததென்று கூறுவோர் "கைந்நிலையவாம்" என்று வெண்பாவின் நான்காவது அடியிலுள்ள சொற்களுக்கு "ஒழுக்கத்தைப் பற்றிக்கூறு நூல்களாம்" எனப் பொருள்கொள்பவர். இதைச் செய்தவர் பொய்கையார் என்றெழுதியிருக்கிறது. இன்ன பொய்கையார் என்று தெரியவில்லை. 45 செய்யுள்கள் அடங்கியது. அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டுப்பாலென நான்கு பகுதியினை யுடையது. இதை இயற்றியோர் சிறந்த புலவரென்பதில் ஐயமில்லை.

முதுமொழிக்காஞ்சி:—கூடலூர்கிழாரியற்றியது. ஒவ்வொன்றும் பத்து முதுமொழிகள் அடங்கிய பத்துப்பகுதிகளையுடையது. காஞ்சித்திணைப் பொருளை சொல்வதனால் காஞ்சியெனப் பெயர்வாய்ந்தது.

ஏலாதி:—கணிமேதாவியாரியற்றியது. கடவுள் வாழ்த்துள்பட 81 செய்யுட்களையுடையது. இயற்றியவர் ஜைனர்

ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு இவ்வாறும் ஒன்றுமுதல் ஆறுவராகனெடைகளாகச் சேர்ந்த சூர்ணம் தேகத்துக்கு நன்மை பயப்பதுபோல் ஆறு நீதிகளைப்புகட்டி நன்மை பயப்பது. பெயர்க்காரணமும் இதனால் விளங்கும்.

கைந்நிலை:—இதனைப் பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றென் போர் கீழ்க்கணக்குகளைத் தொகுத்துச் சொல்லும் வெண்பாவில் "இன்னிலைசொல் காஞ்சி" என்பதற்கு "இனிமையாகிய நிலைமையைச் சொல்லுங்காஞ்சி" எனப் பொருள் கூறுவர்.

பதினெண் கீழ்க்கணக்கில் கைந்நிலை தவிர ஏனைய உரையுடன் அச்சில் வெளிவந்துள்ளன.

மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் ஐங்குறுநூறு இரண்டாம் பதிப்பு முகவுரையில் எழுதியிருப்பது ஈண்டுக்கவனிக்கத் தக்கது. அஃது: "ஐந்திணை யொழுக்கங்களை மேற்கூறியவாறு பாகுபாடு செய்து தொகுத்துத் தனித்தனியே கூறும் வேறு பழைய நூல்களுள் இப்பொழுது தெரிந்தவை வருமாறு."

"எட்டுத்தொகையுள் கலித்தொகையும்; பதினெண் கீழ்க்கணக்கினுள் ஐந்திணைஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணையெழுபது, கைந்நிலை என்பனவும்; பத்துப்பாட்டின் மதுரைக்காஞ்சி முதலியனவும், பழைய உரைகளிற் காணப்படுகின்ற சிற்றட்டகமென்பதுமாம்;......"

"மேற்கூறிய இலக்கிய நூல்களிலும் தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களிலும் திணைகளைக்கோத்துள்ள முறை ஒருபடியாக விருக்க வில்லை அவை வருமாறு:"

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐங்குறுநூறு ... | மருதம் | நெய்தல் | குறிஞ்சி | பாலை | முல்லை |
| கலித்தொகை ... | பாலை | குறிஞ்சி | மருதம் | முல்லை | நெய்தல் |
| ஐந்திணை ஐம்பது ... | முல்லை | குறிஞ்சி | மருதம் | பாலை | நெய்தல் |
| திணைமாலை நூற்றைம்பது ... | குறிஞ்சி | நெய்தல் | பாலை | முல்லை | மருதம் |
| திணைமொழி ஐம்பது ... | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் |
| ஐந்திணை எழுபது ... | குறிஞ்சி | முல்லை | பாலை | மருதம் | நெய்தல் |
| கைந்நிலை ... | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் |
| மதுரைக்காஞ்சி ... | மருதம் | முல்லை | குறிஞ்சி | பாலை | நெய்தல் |
| பெருங்கதை ... | மருதம் | முல்லை | குறிஞ்சி | பாலை | ... |
| தொல்-பொருளதிகாரஉரை ... | முல்லை | குறிஞ்சி | மருதம் | நெய்தல் | |
| இறையனாரகப்பொருளுரை ... | குறிஞ்சி | நெய்தல் | பாலை | முல்லை | மருதம் |
| நாற்கவிராஜநம்பி யகப்பொருளுரை | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் |
| வீரசோழியம் ... | முல்லை | குறிஞ்சி | மருதம் | பாலை | நெய்தல் |
| மாறனகப்பொருள் ... | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் |
| இலக்கண விளக்கம் ... | குறிஞ்சி | பாலை | முல்லை | மருதம் | நெய்தல் |

# இரண்டாங்காலப்பகுதி.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் ஒரு பகுதிவரை தமிழ்ச் சங்கமிருந்ததென்று சொன்னேன். சங்கத்திறுதிக்கால முதற் கொண்டு கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதிவரையுள்ள காலம் இரண்டாங் காலப் பகுதி எனக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப் பகுதியில், தமிழிலுள்ள பெருங்காவியங்கள் ஐந்தில் சங்ககாலத்து இயற்றப்பட்ட மணிமேகலை, சிலப்பதிகாரம் தவிர, ஏனைய சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி மூன்றும் இயற்றப்பெற்றன. சிறு காவியங்கள் என்னப்படினும் அவை அதிமேதாவிகளாகிய சிறந்த தமிழ்ப்புலவர்களால் இயற்றப்பட்ட உயர்ந்த காவியங்களாம். புறப்பொருள் வெண்பாமாலை, இறையனார் அகப்பொருள் உரை, தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் எழுதிய உரை, கல்லாடம், பாரதவெண்பா, நந்திக்கலம்பகம் முதலியன இக் காலப்பகுதியன. சைவசமயாசாரியர்கள் நால்வர் இருந்ததும், முதல் பதினொரு திருமுறைகளில் பெரும்பான்மை பாடப்பட்டதும், நம்பியாண்டார் நம்பி பதினொரு திருமுறைகள் வகுத்ததும் இப்பகுதியில், வைணவ ஆழ்வார்கள் அனைவரும் இருந்ததும், பிரபந்தங்கள் செய்ததும் இக்காலப்பகுதியில். தமிழ் மொழியிலுள்ள முக்கிய நிகண்டுகளாகிய திவாகரம், பிங்கலம், சூடாமணி இவை இயற்றப்பட்டதும் இப்பகுதியில். யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, சிறு காவியங்களிற் சில இவை இயற்றப்பட்டது இப்பகுதியி னீற்றிலோ அடுத்த காலப்பகுதியின் துவக்கத்திலோ வென்பது இப்பொழுது நிச்சயிக்கக்கூடவில்லை. சங்கராசாரியர் இருந்ததும். ஏகாத்மவாதம் பரவத் துவக்கியதும் இப்பகுதியில. சைவம் வைணவம், ஆருகதம் என்ற இவை தலையோங்கிப் போர்புரிந்ததும், பௌத்தம் குன்றியதும் இப்பகுதியில். சங்கத்திறுதிக்காலம்முதல் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் மத்தியகாலம் வரை ஆட்சிபுரிந்த சேர, சோழ, பாண்டிய அரசர்கள் இன்னாரென்றாவது; அக்காலத்திருந்த தமிழ்ப்புலவர்கள், அவர்களியற்றிய நூல், செய்யுட்கள் முதலிய இன்னவென்றாவது இப்பொழுது சரித்திர ஆராய்ச்சியிருக்கும் நிலைமையில் தெளிவாய் அறியக்கூடவில்லை. நாம் இப்பொழுது செய்யப்புகும் ஆராய்ச்சிக்கு அவசியமானவரை பாண்டிய, சோழ, பல்லவ அரச வம்சாவளிகளை அடுத்த பக்கங்களிற் காட்டியிருக்கிறேன்..

## பாண்டிய வம்சாவளி.

பாண்டியாதிராஜ பரமேச்சுர முதுகுடுமிப் பல்சாலைப் பெருவழுதி.

களப்பிராதர் இடைக்கால ஆட்சி.

1 கடுங்கோன்: பாண்டியாதி ராஜன்.

2 அதிராஜமாறவர்மன், அவனி சூளாமணி.

3 செழியன் சேந்தன்

4 மாறவர்மன், அரிகேசரி, அஸமஸமன், நெல்வேலியில் வில்வேலிப்படையை முறியடித்தவன்.

5 கோச்சடையன், ரணதீரன், மருதூர்ப்போர்புரிந்தவன்; மங்கலபுரத்தில் மஹாரதரை முறியடித்தவன்.

6 அரிகேசரி, பராங்குச மாறவர்மன், தேர்மாறன், குழும்பூரிற் பல்லவரை முறியடித்தவன், சங்கரமங்கையிற் பல்லவர்களை வென்றவன்; ராஜஸிம்ஹன் I, பல்லவமல்லனை முறியடித்தவன்; கூடல், வஞ்சி, கோழி இவற்றின் மதிற் சுவர்களைப் புதுக்கியவன்.

7 ஜடிலன், நெடுஞ்சடையன், பராந்தகன்; பெண்ணுகடத்திற் காடவரை முறியடித்தவன். கி. பி. 769—70.
(வேள்விக்குடி சாஸனத்தை அளித்தவன்.)

8 ராஜஸிம்ஹன் II.

9 வரகுணமகாராஜன்; ஜயந்தவர்மன்.

10 ஸ்ரீமாறன், ஸ்ரீவல்லபன், ஏகவீரன். பரசக்ரகோலாகலன்; மாயாபாண்டியன், கேரளன், ஸிம்மளன், பல்லவன், வல்லபன் இவர்களை வென்றவன்; பல்லவ பஞ்சனன்.

11 வரகுணவர்கன், (பட்டம் பெற்றது.) (கி. பி. 862—63.)

12 பராந்தகன். வீரநாராயணன், சடையன்; கரிகிரியிற் போர் புரிந்தவன்; பெண்ணுகடத்தை அழித்தவன்; வானவன் மாதேவியை மணந்தவன்; ஜடில நெடுஞ்சடையன். (சிறிய சின்னமனூர்ச் சாஸனத்தையும், சென்னைப் பொருட்காட்சி சாலைச் சாஸனத்தையும் அளித்தவன்.)

13 ராஜஸிம்ஹன் III, மந்தரகௌரவ அபிமானமேரு.

குறிப்பு—சென்னைச் சிலாசாஸன பரிசோதகர் வெளியிட்ட 1908 வருஷத்திய அறிக்கை, பக்கம் 66.

## சோழ வம்சாவளி.

1 விஜயாலயன்.

2 ஆதிதயன் I,

3 பராந்தகன் I, வீரநாராயணன், வீரசோழன்.

4 ராஜாதித்யன். (இறந்தது கி. பி. 949-50)
5 கண்டராதித்தன். (கி. பி. 956-7)
6 அரிஞ்சயன். (மதுரை கொண்டராஜகேசரி)
ராஜகுமாரன் உத்தமசீலி.
ராஜகுமாரன் அரிகுலகேசரி.

9 மதுராந்தகபரகேசரி. (உத்தமசோழன்) கி. பி. 969-70 & 16 ஆண்டுகள்.
7 பராந்தகன் II, பரகேசரி, சுந்தரசோழன், வீரபாண்டியனை மாய்த்தவன்.

8 ஆதித்யன் II.
குந்தவ்வையார். = வில்லவரையர் வந்தியதேவர்.
10 ராஜாராஜன். கி பி. 985—1013)

11 ராஜேந்திரன், கங்கைகொண்ட சோழன். கி. பி. 1011-2, 1042-3.
குந்தவ்வையார்=கீழைச் சளுக்கிய விமலாதித்யன் (1011-22)

12 ராஜாதிராஜன். ஜயங்கொண்டசோழன் (கி. பி. 1018-1092)
13 ராஜேந்திரன், (கி. பி. 1050-62-3)
15 வீரராஜேந்திரன். (கி. பி. 1062-3-1070)
அம்மங்கதேவி=ராஜாராஜன் I, (கி. பி. 1022-1061-2)

விஜயாதித்யன் VII.
(வேங்கி ராஜப்பிரதிநிதி.)
(கி. பி. 1062-3—1076.)

16 அதிராஜேந்திரன் — ஒருமகள் = விக்கிரமாதித்தன் VI.

14 ராஜமகேந்திரன்.

மதுராந்தகி=17 ராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன் I.
(கி. பி. 1070—1118)

சோழகங்கன்.
(வேங்கி ராஜப்பிரதிநிதி.
கி. பி. 1084)

மும்மடிச்சோழன்.
(வேங்கி ராஜப்பிரதிநிதி:
கி. பி. 1077)

வீரசோழன்.
(வேங்கி ராஜப்பிரதிநிதி:
கி. பி. 1078-88-9)

18 விக்கிரமசோழன்.
(கி. பி. 1118-1135)

வேறு மூன்று பிள்ளைகள்.

19 குலோத்துங்க சோழன் II (கி. பி. 1123-46

20 ராஜராஜன் II. (கி. பி. 1146-1178)

21 ராஜாதிராஜன் II. (கி. பி. 1171-1186)

22 குலோத்துங்கசோழன் III. (கி.பி. 1178-1216)

23 ராஜராஜன் III. (கி.பி. 1216-1248)

24 ராஜேந்திர சோழன் )கி. பி. 1245-1267)

25 திருபுவன வீரதேவன் (கி. பி 1331-2)

---

குறிப்பு:—இதிற் காணப்படும் உறவின்முறை, காலம் இவற்றுள் சிலவற்றை வேறுபடுத்திக் கூறுவாருமுளர்.

## பல்லவ வம்சாவளி.

பாபதேவர்.
|
ஸ்கந்தவர்மன்.
|
புத்தவர்மன்.
|
புத்யங்குரன்.
|
விஷ்ணுகோபன்.
|
ஸ்கந்தவர்மன்.
|
குமாரவிஷ்ணு. I.

- புத்தவர்மன.
  - குமாரவிஷ்ணு II.
- ஸ்கந்தவர்மன்.
  - வீரவர்மன்.
    - ஸ்கந்தவர்மன்
      - ஸிம்ஹவர்மன்.
        - ஸ்கந்தவர்மன்.
          - நந்திவர்மன் I.
      - யுவமஹாராஜன், விஷ்ணுகோபன்
        - ஸிம்ஹவர்மன்.
          - விஷ்ணுகோபன்
            - ஸிம்ஹவர்மன்.
              - ஸிம்ஹவிஷ்ணு.
                - மஹேந்திரவர்மன் I.
                - நரஸிம்ஹவர்மன் I.
                - மஹேந்திரமர்மன் II.
                - பரமேச்சரவர்மன் I.
                - நரஸிம்ஹவர்மன் II.
                - பரமேச்சுரவர்மன் II.
              - பீமவர்மன்.
                - புத்தவர்மன்
                - ஆதித்யவர்மன்.
                - கோவிந்தவர்மன்.
                - ஹிரண்யவர்மன்.
                - நந்திவர்மன் II.
                - தந்திவர்மன்.
                - நந்திவர்மன் III
                - நிருபதுங்கன்
                - அபராஜிதன்.

குறிப்பு:—இது. புதுச்சேரியிலுள்ள ப்ரொபஸர் ஜி. ஜே. துப்ரீல் அவர்கள் வெளியிட்ட பல்லவ வம்சாவளியின் நகல். இதிற் காணப்படும் உறவின் முறையுட்சிலவற்றை மாற்றிக் கூறுவாருமுளர். ப்ரொபஸர் குறித்த காலங்களைக் காட்டவில்லை.

அவைகளில் பாண்டிய வம்சவிருட்சத்தைப் பார்ப்பதனால் சங்கத்திறுதிக்காலத்துக்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் பாண்டியர் ஆட்சியில் களப்பிரர் ஆக்கிரமித்தார்கள் என்றறியலாம். எவ்வளவுகாலம் அவர்கள் ஆட்சி தமிழ் நாட்டில் நடைபெற்றது என்பது தெரியவில்லை. சொல்பகாலந்தான் நடந்திருக்கவேண்டுமென்று ஊகிப்பதற்கிடமிருக்கிறது. கடுங்கோன் எனப் பெயரிய அரசன் காலத்து மறுபடியும் பாண்டிய வம்சம் தோன்றியதென வம்சவிருட்சம காட்டுகிறது. இந்தவம்சாவளி வேள்விக்குடி சாஸனம், சின்னமனூர்ச் சாஸனம், ஆனைமலைக் கல்வெட்டு முதலிய பல ஆதாரங்களைக்கொண்டு சரித்திர ஆராய்ச்சி வல்லோரால் அமைக்கப்பட்டது. அதில் ஏழாவதாகக் குறிப்பிட்டிருக்கிற நெடுஞ்சடையன் என்னும் அரசன் கி. பி. 769, 70-ஆம் ஆண்டில் ஆட்சி புரிந்தான் என்பதை அவன் சாஸனம் ஒன்றால் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். நான்காவதாகக் குறிப்பிட்டிருக்கிற மாறவர்மன் என்பான் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் காலத்தவனான நின்றசீர்நெடுமாறன் ஆவன் என்று அவர்கள் சொல்லுகின்றனர். சம்பந்தமூர்த்தி சுவாமிகள் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் மத்தியென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் மாறவர்மனும் அக்காலத்தவனென்று கொள்ளல்வேண்டும். மாறவர்மன, நெடுஞ்சடையன் இவர்கள்காலம் தெரிந்திருப்பதைக்கொண்டு கணக்கிட்டால் ஒரு பாண்டிய அரசன் ஆட்சி 30 ஆண்டுகளுக்குக் குறைவின்றி நடந்ததாகத் தெரிகிறது அவ்வாறு கணக்கிட்டால் முதலாவதாகச்சுட்டப்பட்டிருக்கிற கடுங்கோன் கி. பி. ஆறும் நூற்றாண்டின் நடுவில் இருந்தவன் எனக் கொள்ளுதல் பொருத்தமுடைத்தாம்.

சோழவம்சத்தில் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, நலங்கிள்ளி இவர்கள காலத்திற்குப் பின்னரும், கி. பி. 849-ஆம் ஆண்டில் விஜயாலயன் தஞ்சையில் தோன்றுவதற்கு முன்னரும் ஆட்சிபுரிந்த சோழர்கள் இன்னாரென்றாவது, அவர்கள் இருந்த நாடு நகரம் இன்னவென்றாவது நன்றாய் அறியக்கூடவில்லை.

பாழ்போகாமல் அந்த வம்சத்தினர் இருந்து வந்திருக்கிறார்கள் என்று நினைப்பதற்கிடமிருக்கிறது.

சேரர் வம்சத்திலும் இளஞ்சேரலிரும்பொறை, கணைக்காலிரும்பொறை காலத்திற்குப் பிந்தி, கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் துவக்கம் வரை. ஆட்சிபுரிந்த சேரர்களின் விவரம் நன்றாய்த்தெரியவில்லை.

பல்லவ அரசர்கள் காஞ்சி நகரத்தை ராஜதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்கள். அப்பரம்பரையினர் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முதற்பாதியின் ஒரு பகுதிதொட்டு ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை ஆட்சி புரிந்தனர். ஒரு காலத்தில் அவர்கள் ஆட்சிபுதுக்கோட்டைக்குத் தெற்கேயுள்ள வெள்ளாறுமுதல், கிருஷ்ணா நதிக்கு வடக்கேயுள்ள நாடுகளிலும் பரவியிருந்தது. சோழராட்சி இடையில் ஒடுங்குவதற்குப் பல்லவர்கள் முக்கிய காரணராவார்கள்.

பாண்டியர்நாட்டைக் களப்பிரர் ஆக்கிரமித்துச்சிலகாலம் ஆண்டனர் என்றறிந்தோம். களப்பிரர் என்பார் யாவர்? களப்பிரர் என்னும் மொழி கலபூரியர் என்பதன் சிதைவு. கலபூரியர், கலசூரியர் எனவும் படுவர். துங்கபத்திரை நதிக்கு வடக்கில் பல இடங்களில் இந்த வம்சத்தினர் இருந்தனர். இவர்கள் பெரும்பான்மை ஜைன மதத்தைத்தழுவி யொழுகினவர். கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வீரசைவ மதப்பிரவர்த்தகராகிய பசவரை மந்திரியாகக்கொண்டிருந்த கல்யாணபுரத்தரசன் விச்சலன் இவ்வம்சத்தினன். கல்யாணபுரம் என்பது கிருஷ்ணா நதிக்கு வெகுதூரம் வடக்கில் உள்ள ஓர் ஊர். துங்கபத்திரைக்கு வடபக்கத்துள்ள நாடு கரிய பூமியையுடையதாதலால் கருநாடு அல்லது கருநாடகம் என்று சொல்லப்பட்டது. இப்பொழுதுள்ள அநந்தபூர் ஜில்லா, பெல்லாரி ஜில்லா, கடப்பை ஜில்லா, கர்நூல் ஜில்லா, நைஜாம் நாட்டின் ஒருபாகம் முதலியவெல்லாம் சேர்ந்து பழைய கருநாடகமாகும். வடுகக்கருநாடர் பாண்டியன் நாட்டைக் கைக்கொண்டனரென்று பெரியபுராணத்திலும்,

வேம்பத்தூரார் திருவிளையாடலிலும் சொல்லியிருப்பது மேற்கண்ட களப்பிரர் ஆக்கிரமணத்தையென்று சில சரித்திர ஆராய்ச்சிக்காரர் சொல்லுகின்றனர். அவர் சொல்லுவது பொருத்தமுடைய தன்றென்பதற்கில்லை. கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன் பிற நாட்டாரால் பாண்டியனாடு முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டது ஒரு முறைதான் என்று தெரிவதனாலும்; அப்படி ஆக்கிரமித்தவர்கள் துங்கபத்திரைக்கு வடக்கிலிருந்து வந்தவர்களென்றும், ஜைனர்கள் என்றும் தெரிவதனாலும்; பெரிய புராணத்திலும் திருவிளையாடலிலும் கருநாடர் என்றுசொல்லியிருப்பதும், சாஸனத்தில் களப்பிரர் என்று சொல்லியிருப்பதும் ஒரு வகுப்பினரையே குறிக்குமென்று கொள்ளலாம். அவை,

"கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவல்
மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள் வானா
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்டேர்
சேனைக் கடலுங் கொடுதென்றிசை நோக்கி வந்தான்."

"வந்துற்ற பெரும்படை மண்புதைய பரப்பிச்
சந்தப் பொதியிற் றமிழ்நாடுடை மன்னன் வீரஞ்
சிந்தச் செருவென்று தன்னாணை செலுத்து மாற்றால்
கந்தப் பொழில்சூழ் மதுராபுரி காவல் கொண்டான்."

"தாமும் சமண்கையர் தவத்தைமெய் யென்று சார்ந்து
வீழுங் கொடியோ னதுவன்றியும் வெய்ய முன்னைச்
சூழும் வினையா லரவஞ்சுடர்த் திங்க ளோடும்
வாழுஞ் சடையா னடியாரையும் வன்மை செய்வான்."

(மூர்த்தி—புராணம்.) எனவும்

"துன்னு சேனையிற் றுளங்கிய வொருகரு நாட
மன்ன னன்னநாள் வந்தருட் டென்னனை யோட்டிக்
கன்னி மண்டலங் கொண்டமண் கையர்கை விழுந்து
முன்ன நீடிய வைதிக முறையையு மொழிந்தான்."

(வேம்பத்தூரார் திருவிளையாடல்மூர்த்தியார்க்குஅரசளித்ததிருவிளையாடல்).
எனவும் வருவன. சரித்திர ஆராய்ச்சிக்காரர் சொல்வதற்கும், புராணக்கதைகளுக்கும் முக்கியமல்லாத சில செய்திகளில் வேறுபாடுகள் காணப்படலாம்.

சைவசமயாசாரியர்கள்:—இக் காலப்பகுதியின் துவக்கத்தில் சொல்லிய பலவற்றில் சைவசமயாசாரியர்களைப் பற்றி முதலில் ஆராய்வாம். சைவனொருவனை உனது சமயாசாரியார் ஆவார் யாவர் என்று வினவில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என விடையளிப்பன். இம்முறை தொன்றுதொட்டு வழங்குவதொன்றும். திருமுறைவகுத்த நம்பியாண்டார் நம்பி, சம்பந்தமூர்த்திகளைப் பரம்பரை வழக்கிற்குமாறாய் அப்பருக்கு முன் வைத்தனரே யென்னில், திருமுறை வகுப்பில் அவ்வாறு அவர் வைத்ததற்குள்ள நியாயங்களை நான் திருமுறை வகுப்பைச் சொல்லுமிடத்துக் காட்டுவேன். பரம்பரை வழக்கு முறை, திருமுறை வகுப்புமுறை என்ற முறைகளைவிட்டு நான் செய்யப்புகும் கால ஆராய்ச்சிக்கு நலம் பயப்பதொன்றனைக் கருதிப் பின்கண்ட முறையைக் கைக்கொண்டேன். அப்பர், சம்பந்தர், சுந்தரர் இம்மூவர் சரித்திரங்களும் விரிவாய்ப் பெரிய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்கள் பாடிய தேவாரங்களிலும் காணலாம். மணிவாசகரைப்பற்றிச் சொல்லுமிடத்து அவர் சரித்திரமடங்கிய புராணங்கள் இன்னவென்று சொல்லுவேன்.

சம்பந்தமூர்த்திசுவாமிகள்:—சீகாழியில் கௌணிய கோத்திரத்தினராய்ச் சிவபாத ஹிருதயர் என்பார்க்குத் தவப்பயனாய் அவர் மனைவி பகவதியார் வயிற்றில் சம்பந்தமூர்த்தியடிகள் அவதரித்தனர். அவர்க்கு மூன்றும் ஆண்டில் பொன்வள்ளத்துப் பாலூட்டிய கதையை யாவருமறிவர். மூன்றும் ஆண்டு என்பதெது? நிறைவுபெற்ற ஆண்டைக் குறிப்பிடுவதே நம்மனோர் வழக்கம்; நடைபெறும் ஆண்டைக் குறிப்பிடுவதில்லை; ஆதலால் பிள்ளையார்க்கு இச்சம்பவம் நிகழ்ந்த காலத்து நடைபெற்றது நான்காம் ஆண்டாம். உடனே பிள்ளையார் தலயாத்திரை செய்யத் துவக்கினர். தில்லை, முதுகுன்றம், பழுவை முதலிய பல தலங்களுக்குச் சென்று பதிகம்பாடிச் சீகாழி வந்து சேர்ந்து சில யாண்டுகள் அங்கு வதிந்தனர். உபநயனச்சடங்கு நடந்தது. வயது ஏழாயிற்று. அப்பர்சுவாமி, பிள்ளையாரை இறைஞ்சுதற்

ருக் காழிவந்தனர். பின்கண்ட செய்யுள் அக்காலத்து அவர் தேகத்தில் வயது முதிர்ச்சியால் நடுக்கமிருந்ததைக் காட்டும். அது;

"சிந்தையிடை யறாவன்புந் திருமேனி தனிலசைவுஞ்
சந்தைமிகை யாங்கருத்துங் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறு
மந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய.'

(திருஞான—புராணம்.)

என்பது. பிள்ளையாரும் அப்பரும் சிலகாலம் காழியில் உடனுறைந்தனர், பிறகு அப்பர்சுவாமிகள் தலயாத்திரை புறப்பட்டனர். பிள்ளையார் காழியில் இருந்து சிவபெருமான்மீது பல வகைச் சித்திரகவிகளும் பாடினர். பிறகு தலயாத்திரை செய்யப்புறப்பட்டுச் சோழநாடு, மழநாடு, வடகொங்கு, கீழ்கொங்கு, தென்கொங்கு இந்நாடுகளில் நூற்றுக்கணக்கான தலங்களில் சிவபெருமானை வணங்கிப் பதிகம்பாடினர். அந்த யாத்திரையில் திருச்செங்காட்டங்குடி வந்து சேர்ந்தனர். அத்தலம் வருவதற்கு முன் அவர் சென்ற தலங்களில் பெரியபுராணத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன நூற்றுக்குமேலுள. பெயர் குறிப்பிடப்படாதன பல நூறெனவறியலாம். அநேக தலங்களில் நீண்டநாள் தங்கியிருந்தனரென்று தெரிகிறது. பல அடியார்கள் கூட்டத்துடன் தலயாத்திரை செய்வது, தமிழ்நாடு அக்காலத்திருந்த நிலைமையில் காலஹரணம் ஆகக்கூடியதே. ஒருவாறு கணக்கிடுவதால் திருச்செங்காட்டங்குடி வந்தகாலத்துப் பிள்ளையாருக்கு 11 அல்லது 12 வயதாவது நிறைந்திருக்கவேண்டும். பிள்ளையார் வருகையைத் தெரிந்துகொண்டு சிறுத்தொண்ட அடிகள் எதிர்சென்று வணங்கிப் பிள்ளையாரைத் தம்மூர்க்கு அழைத்துச் சென்றனர். பிள்ளையார் சிறுத்தொண்டர் மனையில் அவர் உபசரிக்கத் தங்கியிருந்தனர். திருச்செங்காட்டங்குடிப் பதிகத்தில் சிறுத்தொண்டர் பெயரை வைத்துப் பாடினர். அவை,

"பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே."

"செந்தண்ணல்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
வந்தண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவும்
சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர் தக்கோரே."

என்பன. ஈண்டுச் சிறுத்தொண்ட அடிகள் வரலாற்றைச் சற்று ஆராய்வாம். சிறுத்தொண்டர் என்பது காரணப்பெயர். அவரது இயற்பெயர் பரஞ்சோதியார். இவர் காஞ்சியில் பல்லவ அரசன் நரசிம்மவர்மனிடத்துச் சேனாதிபதியாயிருந்தனர். பல்லவர்களுக்கும், துங்கபத்திரை நதிக்கு வடபாலுள்ள குந்தளநாட்டரசர்களாகிய சளுக்கியர்களுக்கும் ஓயாது போர்நடப்பது வழக்கம். நரசிம்மவர்மன் காலத்திருந்த சளுக்கிய அரசன் இரண்டாவது புலிகேசி யென்பான். அவன் மிக்க பராக்கிரமசாலி. அநேக அரசர்களைப் போரில்வென்று அவர்கள் நாடுகளைக் கீழ்ப்படுத்தினன். அக்காலத்தில் ஹர்ஷவர்த்தன னென்னும் கன்னோசி நாட்டரசன் ஒருவன் இருந்தனன். அவன் நருமதையாறு தொடங்கி ஹிமயமலைவரை உள்ள நாடுகளையும், அவற்றிற்குக் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள நாடுகளையும் போர்புரிந்து தனக்குக் கீழாக்கினன். பெருங்கீர்த்திபெற்ற பராக்கிரமசாலி. அவன் குந்தளநாட்டின்மீது படையெடுத்து வந்தபோது புலிகேசி II என்னும் குந்தள நாட்டரசன் அவனைமுறியடித்தான். பாரதவருஷத்திலிருந்த அரசர்களில் ஹர்ஷவர்த்தனனை வென்றவன் புலிகேசி II ஒருவனே என்றால் அவன் பராக்கிரமத்தின் அளவு எத்துணையதாம். இவனது தலைநகர் வாதாபி. யுவான்சுவாங் என்னும் பிரசித்திபெற்ற சீனதேச யாத்திரிகர் கி. பி. 641-ஆம் ஆண்டில் வாதாபி சென்று சிலகாலந்தங்கினர். அந்நகரத்தினதும், நகரத்தரசனதும் ஆகிய பெருமையை அவரெழுதிய புத்தகத்தில் மிகப் பாராட்டியிருக்கின்றனர். அடுத்த கி. பி. 642-ஆம் ஆண்டில் பரஞ்சோதியார் பல்லவனது திரண்டபடையோடு குந்தள நாட்டு அரசனுடன் போர்செய்யச்சென்று மிக்க பராக்கிரமசாலியாகிய புலிகேசி II என்பானது தலைநகராகிய வாதாபியைத் துகளாக்கி அங்குப் பல்லவனது ஜயஸ்தம்பத்தை நாட்டினர். குந்தளராட்சி நிலைகுலைந்து போய்விட்டது. வாதாபி நகரம்

அதனோடு பாழாய்ப் போய்விட்டது. 13 வருஷகாலம் சளுக்கியராட்சி மங்கித் தத்தளித்துக் கொண்டிருந்தது. கி. பி. 655-ஆம் ஆண்டில் புலிகேசி II என்பானது மகன் விக்கிரமாதித்தன் I என்பான் கிருஷ்ணா நதிக்கு வெகுதூரம் வடக்கேஉள்ள கல்யாணபுரம் என்னும் நகரத்தைத் தனது தலைநகராக்கினன். பரஞ்சோதியார் வாதாபி நகரத்தைப் பாழ்படுத்தியதை அடியில் கண்ட பெரியபுராணச்செய்யுள் விளக்கும். அது,

“ மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தே யிகலரசன் முன்கொணர்ந்தார்.

என்பது. நரசிம்மவர்மன், அவர் மூலமாக வெற்றி பெற்றதற்குப் பெருமகிழ்ச்சி கொண்டானேனும், அவர் தனது வழிபடு கடவுளாகிய சிவபெருமானது அணுக்கத்தொண்டரென அறிந்து, அவரைத்தன் கீழ்வைத்து வேலை வாங்குவதனால் பெரியசிவாபராதம் வருமென அஞ்சி, அவருக்குத் திரண்ட நிதியும், மானியங்களும் கொடுத்துத் திருத்தொண்டு செய்துகொண்டு இஷ்டப்படியிருக்க வேண்டினன். அவன் வேண்டுகோளுக்கிணங்கிப் பரஞ்சோதியார் தம்மூராகிய திருச்செங்காட்டங்குடி வந்து வதிந்தனர். பின்வரும் பெரிய புராணச் செய்யுட்கள் இதனை விளக்கும். அவை,

“ கதிர்முடிமன் னனுமிவர்தங் களிற்றுரிமை யாண்மையினை
யதிசயித்துப் புகழ்ந்துரைப்ப வறிந்தவமைச் சர்சளுரைப்பார்
மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலி யுடைமையினா
லெதிரிவருக் கிவ்வுலகி லில்லையென வெடுத்துரைத்தார்.”

“ தம்பெருமான் றிருத்தொண்ட ரெனக்கேட்ட தார்வேந்தன்
உம்பர்பிரா னடியாரை யுணராதே கெட்டொழிந்தேன்
வெம்புகொடும் போர்முனையில் விட்டிருந்தே னெனவெருவுற்
றெம்பெருமா னிதுபொறுக்க வேண்டுமென இறைஞ்சினான்.”

“ இறைஞ்சுதலு முன்னிறைஞ்சி யென்னுரிமைத் தொழிற்கடுத்த
திறம்புரிவே னதற்கென்னோ தீங்கென்ன வாங்கவர்க்கு
நிறைநிதிக் குவைகளுட னீடுவிருத் திகளளித்தே
அறம்புரியுஞ் செங்கோலா னஞ்சலிசெய் துரைக்கின்றான்.”

"உம்முடைய நிலைமையினை யறியாமை கொண்டியற்றி
ரெம்முடைய மனக்கருத்துக் கினிதாக விசைந் தமது
மெய்ம்மைபுரி செயல்விளங்க வேண்டியவா றேசரித்துச்
செம்மைநெறித் திருத்தொண்டு செய்யுமென விடைகொடுத்தான்.

'மன்னவனை விடைகொண்டு தம்பதியின் வந்தடைந்து
பன்னுபுகழ்ப் பரஞ்சோதி யார்தாமும் பனிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச் சரத்திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னைநிலை மையில்வழுவா முறைமையின்பிற் செய்கின்றார்.'

(சிறுத்—புராணம்.)

என்பன. திருச்செங்காட்டங்குடி வந்து சிறிது காலத்தில் அவர் சீராளர் என்னும் மகவைப்பெற்றார். கி. பி. அறுநூற்று நாற்பத்திரண்டிலோ, அறுநூற்று நாற்பத்து மூன்றின் துவக்கத்திலோ அவர் திருச்செங்காட்டங்குடிக்கு வந்திருத்தல் வேண்டும். வந்து எவ்வளவு காலத்துக்குப் பின்னர் சீராளர் பிறந்தார் என்பது தெரியவில்லை. இரண்டொரு ஆண்டுகள் இருக்கலாம். சம்பந்த மூர்த்திகள் வந்த காலத்துச் சீராளருக்கு நிறைந்த வயது மூன்று என்பது பின்கண்டவற்றால் விளங்கும். அவை,

"வந்தவளர் மூவாண்டின் மயிர்வினைமங் கலஞ்செய்து
தந்தையா ரும்பயந்த தாயாருந் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொற்றெளிவிற் செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரைப் பள்ளியினி லிருத்தினார்."

"அந்நாளிற் சண்பைநக ராண்டகையா ரெழுந்தருள
முன்னாக வெதிர்கொண்டு கொடுபுகுந்து முந்நூல்சேர்
பொன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலிகா வலனார்தம்
நன்னாமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார்.'

(சிறுத்—புராணம்.)

என்பன. பிள்ளையார் வந்தது கி. பி. 646-7ஆம் ஆண்டிலோ அதற்கு இரண்டொரு ஆண்டுபின்னரோ இருத்தல்வேண்டும். ஏனென்றால் சீராளருக்கு நான்காம் வயது நடைபெற்றகாலம் அது. அவர் கர்ப்பத்தில் பத்துமாதம் இருந்திருப்பர். சிறுத்தொண்டர் தம்மூர் வந்த ஆண்டொடு இக்காலத்தைக் கூட்ட 646-7 ஆகும். அவர் ஊர்வந்த காலத்துக்கும், சீராளர் கர்ப்பத்தில் உத்பவித்ததற்கும் இடையில் 2, 1 ஆண்டு நிகழ்ந்ததென்றால் நான் மேற்சொல்லிய கணக்கு சரியாய்விடும். கி. பி. 646-7க்கும்,

648-9க்கும் இடையில் பிள்ளையார் திருச்செங்காட்டங்குடி வந்தனர் என்று வைத்துக்கொள்ளலாம். பிள்ளையார் பிறகு பல தலங்கள் சென்று திருப்புகலிவந்தனர். அங்கு நாவுக்கரசர்வர, இருவரும் இன்னும்பல தொண்டர்களுடன் சிலநாள் வசித்துத் திருநாவுக்கரசருடன் தலயாத்திரைசெய்ய ஆரம்பித்தனர். பல தலங்களுககுச் சென்று திருமறைக்காடு வந்தனர். அங்கு நின்று திருநாவுக்கரசரை விட்டுப்பிரிந்து மதுரை சென்றதும், சமணரை வாதில் வென்றதும், பாண்டியனைச் சைவனாக்கியதும் யாவரும் அறிந்தனவே. மதுரையைவிட்டு நீங்கிப் பலதலங்கள் சென்று திருப்பூந்துருத்திவந்து திருநாவுக்கரசரைச் சந்தித்தனர். அவரைவிட்டுப்பிரிந்து காழிசென்று உடனே வடபக்கம் யாத்திரை சென்றனர். காஞ்சீபுரம், திருவொற்றியூர், திருமைலை முதலிய தலங்கள் சென்று பதிகம்பாடிச் சிவபிரானை வணங்கிச் சீகாழி வந்தனர். இவருக்கு மணம் புரியும் வயது வந்ததால் பெற்றோர் முதலாயினோர் முயற்சியால் மணம் அமர்ந்ததும், சோதியில் கலந்ததும் பலருக்கும் தெரிந்தனவே. இவர் சோதியிற் கலந்த காலத்து இவருக்கு ஆண்டு பதினாறு எனக் கீழ்க்கண்ட வெண்பாக் கூறும். அஃது,

> "அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
> செப்பியநா லெட்டினிற் றெய்வீகம்—இப்புவியிற்
> சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
> கந்தம் பதினாறறி.'

என்பது. சம்பந்தமூர்த்திகளைத் தவிர்த்து ஏனையோர்க்கு பெரியபுராணம் வயது கூறவில்லை. "திருவளர் ஞானத்தலைவர் திருமணஞ்செய்தருளுதற்குப்—பருவமிது வென்றெண்ணி யறிவிக்கும் பாங்கணைந்தார்" என்று அப்புராணத்தில் சொல்வதால் அவர்க்கு மணஞ்செய்யும் பருவம் வந்ததெனக் கொள்ளலாம். அக்காலத்தில் மணஞ்செய்யும் பருவத்தை ஆணுக்குப் பதினாறும், பெண்ணுக்குப் பனிரண்டும் எனக்கொண்டிருந்தனர் என்று சொல்வதற்கு ஆதாரங்கள் பல உள. மணமுடிந்த காலமும், சோதியிற் கலந்த காலமும் ஒன்றேயாதலால் இவருக்கு "அந்தம் பதினாறறி" என்று வெண்பாவில் கூறியிருப்பது பொருந்த

முடையதேயாம். திருநாவுக்கரையரைச் சீகாழியில் முதலில் சந்தித்தபோது இவருக்கு உபநயனமாகிவிட்டது. எட்டாம் வயது நடைபெறுங்காலம். அதற்குப்பிறகு சிலகாலம் சீகாழியில் தங்கியிருந்து பின்னரே தலயாத்திரை செய்யப் புறப்பட்டனர். அப்போது இவருக்கு எட்டுவயதெனக் கொண்டால் அது முதல் திருமணம் நடக்கும் வரையுள்ள காலம் எட்டு ஆண்டுகளாகும். திருப்புகலூர், திருவீழிமிழலை, மதுரை முதலிய சில தலங்களில் நீண்டகாலம் தங்கியிருந்தனர். இவர் திருச்செங்காட்டங்குடி வருவதற்குமுன் செய்த யாத்திரை 3, 4 ஆண்டுகள் சென்றிருக்கலாம். இவர் சோதியில் கலந்தது சிறுத்தொண்டரை முதலில் சந்தித்ததற்கு 4, 5 ஆண்டுகளுக்குப் பின்னர்த்தாம். சோதியில்கலந்த காலம் கி. பி. 655-க்குச் சிறிது காலம் முன்னேயிருக்கலாம். இவர்சமணரையும், பௌத்தரையும் வாதில்வென்று சைவத்தைப் பரவச் செய்தனர். ஜைனராயிருந்த பாண்டிய அரசனைச் சைவத்தை தழுவச் செய்தனர். திருமுறைகண்ட புராணத்தில் இவர் பாடியனவாகக்கூறிய பதிகங்களின் தொகை 16000. இப்பொழுதுள்ளன 384. இவர் சரித்திரத்தை வாசிப்பேரர் அப்பர்சுவாமிகள் சரித்திரத்தையும், திருமுறைவகுப்பையும் சேர்த்து வாசித்தல்வேண்டும்.

அப்பர் சுவாமிகள் :—இவருக்குத் திருநாவுக்கரசர், வாகீசர் என்னும் மறுபெயர்களுமுண்டு. கி. பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பாதியில் நடுநாட்டின் ஒருபகுதியாகிய திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் அவதரித்தனர். மருள் நீக்கியார் என்பது அவரது பிள்ளைத்திருநாமம். உலகநிலையாமையை உணர்ந்த இவர் அறத்துறந்து ஆருகதமே உண்மை நெறி எனக்கருதி அம்மதத்தைத் தழுவி ஒழுகலாயினர். சமணநூல்களை நன்கு கற்றும், சமணர் பலருக்குக் கற்பித்தும் அவர்களால் மதிக்கப்பெற்று அவர்கள் அளித்த தருமசேனர் என்னும் சிறப்புப்பெயரோடும் வதிந்தனர். பிறகு சூலைநோய் இவரை அடைந்து வருத்தியதும், இவர் ஆருகதத்தைவிட்டுச்சைவத்தைக் கடைப்பிடித்ததும் யாவருமறிந்தனவே. இவர் சைவமதத்தைத் தழுவிய பின்னர் வதிந்

தது திருவதிகை என்னும் தலத்தில். அக்காலத்தில் திருவதிகை, பாடலிபுத்திரம் முதலிய இடங்கள் காஞ்சியைராஜதானியாகக் கொண்டிருந்த பல்லவ அரசன் ஆட்சியில் இருந்தன. அவ்வரசன் பெயர் மகேந்திரவர்மன். அவன் ஜைன மதத்தைச்சார்ந்தவன் சமண அடிகள் வேண்டுகோளுக்கிணங்கி அப்பரை நீற்றறையி லிருத்தியவனும், அவர் தலையைக் காலால் இடற யானையை ஏவிய வனும், கல்லில்கட்டிக் கடலில்போட்டவனும் இம்மகேந்திரனே. பிறகு தான் செய்தன அனைத்தும் பெருந்தவறென அறிந்து இரங்கித் திருவதிகைசென்று அப்பர்சுவாமிகள் சரணங்களைப் புணையாகக்கொண்டு அவர் திருவருளால் சைவனாயினன். பின்தி பாடலிபுரத்திலிருந்த ஜைனப்பள்ளிகளை இடித்துத் திருவதிகை யில் சிவபெருமானுக்குத் தன் பெயரால் "குணபரேச்சுரம் என் னும் ஆலயமமைத்தான். குணபரன் என்பது மகேந்திரனது சிறப்புப் பெயர்களில் ஒன்று. இப்பொழுது வழங்கும் பெரிய புராணப் பிரதிகளில் அவ்வாலயம் குணதரேச்சுரம் என்று காணப்படுகிறது. மகேந்திரன் கி. பி. 600 முதல் கொண்டு 625-30 வரை ஆட்சிபுரிந்தவன். இவனாட்சி முற்பாதியில் இவன் சைவனாகியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. சைவனான பிறகே திருவதிகை, வல்லம், தளவனூர், சீயமங்கலம், பல்லா வரம், திரிசிராப்பள்ளி முதலிய இடங்களில் சிவன் கோயிலும், மகேந்திரவாடி யென்னும் இடத்தில் விஷ்ணு கோயிலும் இவ னால் அமைக்கப்பட்டன. திருசிராப்பள்ளியில் இவன் காலத்து ஏற்பட்ட கல்வெட்டில் அடியில்கண்ட வரிகள் காணப்படுகின்றன. அவை,

"गुणभरनामनि राजन्यनेन लिङ्गेन लिङ्गिनि ज्ञानम् ।
प्रथताञ्चिराय लोके विपक्षवृत्तेः परावृत्तम् ॥"

என்பன. இவற்றின் பொருள் 'லிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் பெயரோடுகூடிய அரசன் இந்த லிங்கத்தினால் (பெற்ற) விபட்ச விருத்தியிலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்ட காலம் நிலைநிற்பதாக' என்பது விபட்சவிருத்தி—ஜைனமதம்.

இதில் அவ்வரசன் அந்நிய மதத்தைப் பற்றியிருந்ததைவிட்டுச் சைவனானது சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கண்ட கோயில்களைக் கட்டுவதற்குப் பல ஆண்டுகள் சென்றிருக்க வேண்டுமாதலால் இவன் ஆட்சி முற்பாதியில் இவன் சைவனாகி யிருக்கலாமென்று சொன்னேன். அஃதாவது கி. பி. 613, 614 ஆம் ஆண்டுகளுக்கு முன்னிருக்கலாம். அப்பர் சுவாமிகள் ஜைனமதத்தைவிட்டுச் சைவமதத்தைப் பற்றியது கி. பி. 610-ம் ஆண்டை யொட்டியிருக்கலாம். பிறகு சுவாமிகள் திருவதிகையில் சிவபெருமானுக்குத் தொண்டு செய்துகொண்டு பல ஆண்டுகள் இருந்துவிட்டனர். மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் நரசிம்மவர்மன் பல்லவர் ஆட்சியை அடைந்தனன். அவன் ஆட்சி கி. பி. 660-ஆம் ஆண்டுக்குப் பின்னருமிருந்ததென்பர் ப்ரொபசர் துப்ரீல் கி. பி. 640-ஆம் ஆண்டில் யுவான்சுவாங் எனப் பெயரிய சீனதேசயாத்திரிகர் நரசிம்மவர்மன் தலைநகராகிய காஞ்சிக்குவந்து அங்குச் சிலகாலம் தங்கியிருந்தனர். அவர் பௌத்தர். அக்காலத்தில் காஞ்சிநகரத்தில் புத்தப் பள்ளிகள் நூற்றுக்குமேல் இருந்தனவென்றும், பௌத்த சந்நியாசிகள் பதினாயிரம் பேர் இருந்தனரென்றும், ஜைன ஆலயங்கள் பல இருந்தனவென்றும் அவர் தாமெழுதிய புத்தகத்தில் சொல்லியிருக்கின்றனர். இவர் காஞ்சி வருவதற்குமுன் கன்னோசி நகரத்தரசன் ஹர்ஷவர்த்தனனிடத்தில் சிலகாலம் தங்கியிருந்தனர். ஹர்ஷசரித்திரம் முதலிய எழுதிய பட்டபாணர் என்னும் பிரசித்திபெற்ற வடமொழிப் புலவர் அக்காலத்தில் இருந்தவர். இந்தக் காலமெல்லாம் அப்பர் சுவாமிகள் திருவதிகையில் வசித்தகாலம்.

சைவநெறியைத் தழுவியகாலத்து அப்பர் சுவாமிகளுக்கு வயதென்ன என்பதை விசாரிப்போம். சிலரைப்போல் மனைவி, மக்கள் அல்லது மாதா, பிதா முதலியவர்களிடத்து உதித்த மனவருத்தத்தினாலாவது; வறுமை, பெண்ணாசைபோன்ற பிற ஹேதுக்களினாலாவது பிற மதத்தையும், சந்நியாசத்தையும் அப்பர் சுவாமிகள் ஏற்றவரன்று. உலகவாழ்வும், ஐம்பொறியின் வாயிலாய்வரும் இன்பமும் நில்லாவென உணர்ந்து உண்மை

நெறியையாராய்ந்து கடைப்பிடிக்க வேண்டினவர். அவர் ஜைன நெறியைப் பற்றுவதற்கு முன் செய்த காரியங்கள் இன்னவென்பதைப் பின்கண்ட செய்யுட்கள் காட்டும். அவை,

"மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யாரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
ஆசின்றச் சாலைகளுந் தண்ணீர்ப்பந் தருமமைப்பார்."

"காவளர்த்துங் குளந்தொட்டுங் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியுநா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத வீகைவினைத் துறைநின்றார்."

"நில்லாத வுலகியல்பு கண்டுநிலை யாவாழ்க்கை
அல்லேனென் றறத்தாறந் து சமயங்க ளானவற்றி
னல்லாறு தெரிந்துணர்ந்து நம்பரரு ளாமையினால்
கொல்லாமை மறந்துறையு மமண்சமயங் குறுகுவார்."

(திருநா—புராணம்.)

என்பன. இப்பாட்டுகளிற் கண்டனவற்றைச் செய்யக் காலமும் ஆற்றலும் வேண்டும். எல்லாவற்றையும் யோசிக்க இவர் ஜைனரானகாலத்து இவருக்கு 25 வயது இருந்திருக்கலாமென்று கொளவது தவறாகா தென்னலாம். இவர் ஜைனரான பின்னர்ச் செய்தன இன்னவென்பதைப் பின்வரும் செய்யுட்கள் காட்டும். அவை,

"அங்கவரு மமண்சமயத் தருங்கலைநூ லானவெலாம்
பொங்குமுணர் வுறப்பயின்றே யந்நெறியிற் புலன்சிறப்பத்
துங்கமுழ வுடற்சமணர் சூழ்ந்துமகிழ் வாரவர்க்குத்
தங்களின்மே லாந்தரும சேனரெனும் பெயர்கொடுத்தார்."

"அத்துறையின் மீக்கூரு மமைதியினா லகலிடத்திற்
சித்தநெறி யறியாத தேரரையும் வாதின்கண்
உய்த்தவுணர் வினில்வென்றே யுலகின்க ணொளியுடைய
வித்தகரா யமண்சமயத் தலைமையினின் மேம்பட்டார்."

(திருநா-புராணம்.)

என்பன. சமயநூல்களை எல்லாம் நன்காராய்ந்தனர். பிற சமயிகளுடன் வாதுபுரிந்து ஜைனத்தை ஊன்றச்செய்தனர். ஜைன அடிகளில் யாவரினும் மேம்பட்ட நிலையை அடைந்தனர். ஜைன மதத்திற்கே பேரிலக்காய் விளங்கினர். இவர் சைவநெறியைத் தழுவிய

காலத்து ஜைனர் தங்கள்சமயம் அதனோடு ஒழிந்துபோய்விடுமோ என்றும் பயந்தனர். பின்கண்ட செய்யுட்பகுதிகள் இதை விளங்கும். அவை,

"மருவு நம்பெருஞ் சமயம்வீழ்ந் ததுவென மருள்வார்"

"மலையும் பல்சம யங்களும் வென்றுமற் றவரால்
நிலையும் பெற்றவித் நெறியினி யழிந்ததென் றழுங்கி."

"இவ்வ கைப்பல வமணர்கள் துயருட னீண்டி"
மெய்வ கைத்திற மறிந்திடில் வேந்தனும் வெகுண்டு
சைவ னாகிநம் விருத்தியுந் தவிர்க்குமற் றினிநாஞ்
செய்வதென்?" (திருநா—புராணம்)

என்பன. சைவர்களோ அப்பர் சைவரானதால் தங்கள்மதம் பெரிய வெற்றியை அடைந்ததாகக்கருதி உத்ஸவம் கொண்டாடினர். அது,

"பரசுங்கரு ணைப்பெரி யோனருளப்
பறிபுன்றலை யோர்நெறி பாழ்படவந்
தரசிங்கருள் பெற்றுல குய்ந்ததென
வடியார்புடை சூழதி கைப்பதிதான்
முரசம்பட கந்துடி தண்ணுமையாழ்
முழவங்கிளை தூந்துபி கண்டையுடன்
நிரைசங்கொலி யெங்கு முழங்குதலா
னெடுமாகட லென்ன நிறைந்துளதே."
(திருநா—புராணம்)

என்ற செய்யுளால் விளங்கும். மேற்கண்டவற்றை யெல்லாம் பரியாலோசித்துப் பார்த்தால் அப்பர் ஜைன மதத்தில் இந்நிலைமையை அடைய 15 ஆண்டுகளாவது சென்றிருத்தல்வேண்டும். இவர் மீட்டும் சைவத்தைத் தழுவியகாலத்து இவருக்கு வயது நாற்பதை ஒட்டி இருந்ததென்று கொள்ளலாம்.

அப்பர் சுவாமிகள் திருவதிகையிலிருந்து தலயாத்திரை செய்யப் புறப்பட்டுத் திருவெண்ணெய் நல்லூர், திருக்கோவலூர், பெண்ணாகடம் முதலிய தலங்களில் சிவபிரானை வணங்கிச் சிதம்பரம் வந்தனர். அங்குச்சிலநாள் தங்கியிருக்குங்காலத்துத் திருஞானசம்பந்தமூர்த்திகளுக்குத் திருமுலைப்பால் ஊட்டிய விருத்தாந்தத்தை அடியார்கள் சொல்லக்கேட்டு அவரைவணங்குதற்குச் சீகாழி வந்தனர். அடிகள் காழிக்கு வந்தகாலத்துத் திருஞான சம்

பந்த மூர்த்திகள் திருமூலப்பாலூட்டப்பெற்று நான்கு ஆண்டுகள் ஆயின. அக்காலத்து அப்பர் சுவாமிகள் தேகத்தில் வயது முதிர்ச்சியால் நடுக்கமிருந்ததென்று சொன்னேன். சிலர் "திருமேனி தனிலசைவும்" என்றது 'ஆனந்த பரவசத்தாலாய தளர்நடையை யுணர்த்தும்' என்பர். அவர் கூற்றுப்பொருந்த முடையதென்று தோன்றவில்லை. அப்பர் சுவாமிகளுக்கு எழுபதாண்டுக்கு மேல் இருக்கவேண்டும். இதனால் சுவாமிகள் திருவதிகையில் சற்றேறக் குறைய முப்பதாண்டுகள் கழிந்தனவென்று கொள்ளலாம். சீகாழியில் திருஞானசம்பந்த அடிகளோடு சிலநாள் உடனுறைந்து பின்னர்த் தலயாத்திரை செய்யப் புறப்பட்டனர். மறுபடியும் திருப்புகலூரில் ஞானசம்பந்த மூர்த்திகளைச் சந்தித்தனர். சந்தித்தது, சம்பந்தமூர்த்தி அடிகள் திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்ட அடிகளைச் சந்தித்ததற்குப் பின்னர். சீகாழியில் உடனுறைந்ததற்கும், திருப்புகலூரில் சந்தித்ததற்கும் இடையில் நான்காண்டுகள் சென்றிருக்கலாம். திருப்புகலூரில் சிறுத்தொண்டர், நீலநக்கர் முதலிய அடிகளும்வர, யாவரும் முருகனார் மடத்தில், அவர் குறைவறுக்க உடனுறைந்தனர். பின்கண்ட செய்யுட்கள் இதை விளக்கும். அவை,

"பிள்ளையா ரெழுந்தருளப் பெருவிப்பால் வாகீசர்
உள்ளமகிழ்ந் தெதிர்கொண்டங் குடனுறையு நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர் மற்றவர்பா லெழுந்தருள
எள்ளருஞ்சீர் நீலநக்கர் தாமும்எழுந் தருளினார்."

"ஆங்கணையு மவர்களுட னப்பதியி லந்தணராம்
ஓங்குபுகழ் முருகனார் திருமடத்தி லுடனாகப்
பாங்கில்வருஞ் சீரடியார் பலருமுடன் பயில்கேண்மை
நீங்கரிய திருத்தொண்டி னிலையுணர்ந்து நிகழ்கின்றார்."

"திருப்பதிகச் செந்தமிழின் றிறம்போற்றி மகிழ்வுற்றுப்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பாகர் பொற்றாளில்
விருப்புடைய திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தங்
கொருப்படுசிந் தையினார்க ளுடனுறைவின் பயன் பெற்றார்."

(திருநா—புராணம்.) எனவும்,

"நாவினுக் கரசரும் நம்பிசீர் முருகரு மற்று நாமச்
சேவுகைத் தவர்திருத் தொண்டரா னவர்கள்முன் சென்று சீதப்
பூவினிற் பொலிபுனற் புகலியார் போதகத் தெதிர்ப ணிந்தே
மேலமற் றவருடன் கூடவே விமலர்கோ யிலைய டைந்தார்."

"நீலநக் கடிகளு நிகழ்சிறுத் தொண்டரு
முடனணைந் தெய்து நீர்மைச்
சீலமெய்த் தவர்களுங் கூடவே கும்பிடுஞ்
செய்கைநேர் நின்று வாய்மைச்
சால்பின்மிக் குயர்திருத் தொண்டி னுண்மைத்திறந்
தன்னையே தெரிய நாடிக்
காலமுய்த் தவர்களோ டளவளா விக்கலந்
தருளினார் காழி நாடார்." (திருஞா—புராணம்.)

எனவும் வருவன. இவ்வாறு அடியார்கள் திருப்புகலூரிலுட னுறைந்ததை நான் சம்பந்தமூர்த்திகள சரித்திரத்திற் சொல்லியவற்றோடு சேர்த்து யோசித்தால் கி. பி. 650-ஆம் ஆண்டுக்குச் சிறிதுகால முன்னராய் இருக்கலாமென்று நினைப்பதற்கு இடம் கொடுக்கும். இவ்விடத்து நாம் கவனிக்கவேண்டிய வேறொரு செய்தியுமுளது. ஞானசம்பந்த மூர்த்திகள் சிறுத்தொண்டரைத் திருச்செங்காட்டங்குடியில்சந்தித்த காலத்துச் சீராளருக்கு மூன்று வயதென்று சொன்னேன். திருப்புகலூரில் உடனுறைந்தது அதற்குப் பிறகுதான். அஃது, எம்பெருமான வைரவராய் வந்து பிள்ளைக்கறி வேண்டியதற்கு முந்தியது. பிள்ளைக்கறி வேண்டியகாலத்துச் சீராளருக்கு வயது ஐந்து என்பது பின் கண்ட பெரிய புராணச் செய்யுட்களால் விளங்கும். அவை, "வைரவரும், நாமுண்ணப் படுக்கும் பசுவும் நரபசுவாம்; உண்பதஞ்சு பிராயத்தி லுறுப்பின் மறுவின்றேல்" எனவும்.

"வள்ள லாரு மனையாரை நோக்கி வந்த மாதவர்தா
முள்ள மகிழ வமுதுசெய விசைந்தார் குடிக்கோர் சிறுவனுமாய்க்
கொள்ளும் பிராய மைந்துளனா யுறுப்பிற் குறைபா டின்றித்தாய்
பிள்ளை பிடிக்க வுவந்துபிதா வரிந்துசமைக்கப் பெறினென்றார்."

'மனைவி யார்தம் முகநோக்கி மற்றித் திறத்து மைந்தர்தமை
நினைவு நிரம்ப நிதிகொடுத்தாற் றருவா ருளரே நேர்நின்று
தனையன் றன்னைத் தந்தைதா யரிவா ரில்லைத் தாழாமே
எனையிங் குய்ய நீபயந்தான் றன்னை யழைப்போ மியாமென்றார்."

(சிறுத்தொண்—புராணம்.)

எனவும் வருவன திருப்புகலூரில் அடியார்களுடனுறைந்தது சீராளரது மூன்றாமாண்டுக்கும் ஐந்தாமாண்டுக்கு மிடைப்பட்ட காலத்திலாம்.

பிறகு சம்பந்தமூர்த்திகளும் திருநாவுக்கரசரும் சில தலங்கள் சென்று திருவீழிமிழலைவந்து நீண்டகாலந் தங்கினர். அங்கிருந்து இருவரும் புறப்பட்டுப் பல தலங்களுக்குச்சென்று வேதாரணியம் வந்தனர். அவ்விடமிருந்து சம்பந்தமூர்த்தியடிகள், அப்பர் சுவாமிகளை விட்டுப்பிரிந்து மதுரை சென்றனர். அப்பர் சுவாமிகள் வேதாரணியத்தைவிட்டுப் புறப்பட்டுத் திருவீழிமிழலை சென்று சிலகாலம் அங்குத் தங்கியிருந்தனர். பின்னர்த் தலயாத்திரை செய்யவேண்டும் விருப்புத்தூண்ட, காவிரி இருகரையிலுள்ள தலங்களுக்கெல்லாஞ் சென்று பரமசிவனை வணங்கி, மழநாட்டுத் தலங்களுங்குச் சென்று அங்குமவரைத்தொழுது திருமுனைப்பாடிநாடு சென்றனர். அண்ணாமலையாரை வணங்கித் தொண்டை நாடு சென்றனர். கச்சி ஏகம்பரை வழிபட்டுப் பின்னும் பல தலங்களுக்குச்சென்று திருக்காளத்தி வந்தனர். அது தென்கைலாயம் எனப் பெயர் பெற்றது. திருக்காளத்தீச்சுரரை வணங்கும்பொழுது வடகைலை சென்று சிவபெருமானைத் தொழவேண்டுமென்னும பெருங்காதலை அடைந்தார் அங்கிருந்து புறப்பட்டு .இடையிலுள்ள நாடு, காடு, மலை, யாறு முதலியனவற்றை யெல்லாங் கடந்து காசிவந்து விசுவேச்சுரரை வணங்கினர். புகைவண்டியும், மின்சாரத்தந்தியுமுள்ள இக்காலத்தில் காசிபோவதுபோல் அக்காலத்தில் போவது எளிதல்ல. போவதற்குவேண்டிய சௌகரியங்களெல்லாம மிகவும குறைவாயிருந்தகாலம். அப்பர்சுவாமிகள் தளர்ந்த யாக்கையோடு நடந்தே போகவேண்டும். காசி போய்ச்சேரவே நீண்ட நாள் பிடித்திருக்கவேண்டும். அங்கிருந்து புறப்பட்டு வடக்கு நோக்கிச் சென்று, பெருங்காடுகளைக்கடந்து பாலைக்கற்சுர மடைந்தனர். கந்தமூலங்களை உண்ணுதலுமற்றது. தேகத்திலுள்ள தசைதேய்ந்தது. கால்கள் தேய்ந்து போயின. கையால் தாவிச்சென்றனர். கைகளுந்தேய்ந்தன. மார்பினால் நகர்ந்து சென்றனர். மார்பின் தசையுந்தேய்ந்தது. எலும்புகள் முறிந்தன. பிறகு புரண்டு போயினர் அங்கமெல்லாங் குறைந்தன செயலற்று இருந்தனர். அப்பொழுது பரமசிவன் தவவேடங் கொண்டுவந்து இவருக்கு அருளியது யாவருமறிந்ததே ஒரு

பொய்கையைக்காட்டி இதில் மூழ்கினால், திருவையாற்றில் 'கைலையில் நாமிருக்கும் திருக்கோலத்தோடு நம்மைக் காண்பாய்' என அப்பர் அவ்வாறே மூழ்கித் திருவையாறடைந்தனர். அப்பர் சுவாமிகள சம்பந்தமூர்த்திகளைத் திருமறைக்காட்டில் பிரிந்த காலத்துக்கும், பொய்கையில் மூழ்கித் திருவையாறு அடைந்ததற்குமிடையில் சில ஆண்டுகளாவது சென்றிருத்தல் வேண்டும். திருவையாற்றிற் சிலநாள் தங்கித் திருப்பூந்துருத்தி சென்றனர். அங்கே,

"தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரானு ரருள்பெற்றுத்
திசைளுஞா யிறுந்தோயுந் திருமடமாங் கொன்று செய்தார்."
(திருநா—புராணம்.)

அம்மடத்தின் ஒரு பகுதி இப்பொழுதுமுளது. அதில் நீண்ட நாள் தங்கி இருந்தனர். மதுரை சென்ற சம்பந்தமூர்த்திகள் அவண் வந்து அப்பரைச் சந்தித்தனர். வேதாரணியத்திற் பிரிந்ததற்கும் திருப்பூந்துருத்தியில் சந்தித்தற்குமிடையில் பல ஆண்டுகள் கழிந்திருத்தல் வேண்டும். பிறகு சம்பந்தமூர்த்திசுவாமிகள் வடநாட்டிலுள்ள காஞ்சி முதலிய தலங்களுக்குச்சென்றனர். அப்பர் சுவாமிகள் மதுரைசென்று பாண்டிமாதேவியார், பாண்டியன், குலச்சிறையார் இவர்களால் உபசரிக்கப்பெற்று அங்குத்தங்கியிருந்தனர். பிறகு இராமேச்சுரம், திருநெல்வேலி, பாண்டிநாட்டில் மற்றுமுள்ள தலங்கள் இவற்றிற்குச் சென்று இறைவனை இறைஞ்சிச் சோழநாடுவந்து, பலதலங்களுக்குச் சென்று வணங்கிப் புகலூர்வந்து தங்கினர். அங்குப் பலநாள் வதிந்து சிவனது குஞ்சித பாதத்தை அடைந்தனர். அடைந்தகாலம் கி. பி. (655) அறுநூற்றைம்பத்தைந்தை ஒட்டி இருத்தல்வேண்டும். சம்பந்தமூர்த்திகளைத் திருப்பூந்துருத்தியில் பிரிந்தபின் இவர் தென்னாட்டில் யாத்திரை செய்த காலமும், திருப்புகலூரில் வதிந்த காலமுமே இவர் இவ்வுலகிலிருந்தன. பெரிய புராணத்தில் இவர் சிவபதமடைந்த காலத்து இவருக்கு வயது இன்னதென்று சுட்டவில்லை. முதிர்ந்த வயதினரென்று மட்டும் அறியலாம்.

இவர் காலத்திலேயே சைவத்தில் பல உட்பிரிவுகளுண்டாகி, அவை தமிழ்நாட்டிலும் பரவியிருந்தன வென்பது அவர்பாடிய பின் கண்ட திருவாரூர்த் தேவாரத்தால் தெரிகிறது. அஃது,

"அருமணித் தடம்பூண் முலையரம் பையரோ டருளிப்பாடி
உரிமையிற் றொழுவா ருருத்திர பல்கணத்தார்
விரிசடை விரதிக ளந்தணர் சைவர் பாசுபதர் கபாலிகள்
தெருவினிற் பொலியுந் திருவாரூ ரம்மானே."

என்பது. இவர் பாடிய பதிகங்களின் தொகை திருமுறைகண்ட புராணத்தில் சொல்லியபடி 49000. இதைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநின்றியூர்ப் பதிகத்தில் "இணைகொளே ழெழுநூ றிரு பனுவ லீன்றவன் றிருநாவினுக்கரையன்" எனக்குறிக்கிறனர். இப்பொழுதுள்ளன 311. இவர் ஜைனராயிருந்தபொழுது பௌத்தரோடுவாதுசெய்து வென்றனர். ஜைனனாயிருந்த பல்லவ அரசன் மகேந்திரவர்மனைச் சைவனாக்கினர். இவர்சரித்திரத்தை வாசிப்போர் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தையும், திருமுறை வகுப்பையும் சேர்த்து வாசித்தல் வேண்டும்.

சுந்தரமூர்த்தி அடிகள்:—திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் அவதரித்தவர். தம்பிரான் தோழர், நாவலூரார் முதலிய பல மறுபெயர்கள் இவருக்குண்டு. இவர் அப்பர், சம்பந்தருக்குக் காலத்தால் பிந்தியவர். இவர்பாடிய திருத்தொண்டத் தொகையில் அவர்கள் பெயரைவைத்துப் பாடியிருப்பதுமன்றிப் பதிகங்களிலும் அவ்வாறே பாடியிருக்கின்றனர். அது,

"நாவின்மிசை யரையனொடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் கடியானடித் தொண்டன்
தேவன்றிருக் கேதாரத்தை யூரன்னுரை செய்த
பாவின்றமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே."
(திருக்கேதாரப் பதிகம்.)

என்பது. அப்பர், சம்பந்தர் இவர்கள் கி. பி. அறுநூற்றைம்பத்தைந்தை ஒட்டிச் சிவனது குஞ்சிதபாதத்தை அடைந்தன ரென்று கொள்ளலாமென்றேன். இதனால் சுந்தரமூர்த்திகள் கி. பி. 655க்குப் பிந்திய ஒரு காலத்திலிருந்தவராவர்.

வரகுணபாண்டியன் II என்பான் மதுரையில் கி. பி. 862-3ல் பட்டம் பெற்றான். இவன் கும்பகோணத்துக்கடுத்த திருப்புறம்பயம் என்னும் ஊரில் பெரும் போர் புரிந்து அபராஜித விக்ரமவர்மன் என்னும் அரசனைக் கொன்று வெற்றிபெற்று அருகிலுள்ள திருவிடைமருதூரை அடைந்து மகாலிங்கத்தினிடத்து அளப்பரிய பக்திசெய்வானாயினன். வாதவூரடிகள் சரித்திரத்தில்

இவனைப்பற்றி விவரமாய்ச் சொல்லுவேன். அதைப்பார்க்க. இவன் பக்தியின் மேன்மையைப் புகழ்ந்து வாதவூரடிகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி என்ற மூவரும் பாடியிருக்கின்றனர்: இவன் காலத்திலாவது அதற்குப் பின்னராவது சுந்தரமூர்த்திகள் இருந்திருந்தாலும், தம்காலத்திலும் அதற்குமுன் ஒரு கால அளவுவரையிலும் இருந்த சிவனடியார்கள் பெயரைத் தொகுத்துத் திருத்தொண்டத் தொகை பாடியஅவர், பரம சிவ பக்தனாகிய இப்பாண்டிய அரசனது பெயரை அத்தொகையில் வைத்துப் பாடாதிருக்கமாட்டார். இதுகொண்டு சுந்தர மூர்த்திகள், வரகுணன் II என்பான் காலத்திற்கு முந்தியவர் என்பதில் ஐயம் ஒரு சிறிதுமில்லை என்று கொள்ளலாம். இதனால் கி. பி. 655-க்கும் கி.பி. 862-க்கும் இடையிலிருந்தவர் ஆரூரர் என்றறியலாம்.

நிற்க, சுந்தரமூர்த்திகளும், சேரமான் பெருமாள்நாயனாரும் மதுரை சென்ற காலத்துப் பாண்டிய அரசனும், அக்காலத்தில் மதுரையில் வசித்துக்கொண்டிருந்த அவன் மாப்பிள்ளையாகிய சோழனும் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள் என்பது பெரிய புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. அது,

> "தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
> தொன்மதுரை நகரின்கண் ணினிதிருந்த சோழனார்
> அன்னவர்களுடன்கூட வணையவவ ருங்கூடி
> மன்னுதிரு வாலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார்"
>
> (சேரமான்—புராணம்)

என்பது. மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனார் என்று சொல்லியிருப்பது தஞ்சையைத் தலைநகராகக்கொண்ட விஜயாலயன் என்னும் சோழனாயிருத்தல்கூடாது. அவன் பராக்கிரமசாலி. அயல் அரசர்களின் ஆக்கிரமணத்தால் இருந்த இடம் தெரியாது புகழும் வலியும் குன்றியிருந்த சோழ வம்சத்தை, மிக்க புகழும் வலியுமுள்ள தாக்கி நிலைநாட்டினவன். இவன்சரித்திரத்தை வாசிப்போர், இவன் மாமனார் ஆதரவில் மதுரையில் இனிதிருந்து காலத்தைப் போக்க அவகாசமில்லாதவன் என்று எளிதிலுணரலாம். அவன் நாடு, நகரம் இன்னதென்று அறியக்கூடாதவனாய் இவனுக்குமுன் சோழ வம்சத்திலுள்ளவர்களில் ஒருவ

ளுயிருத்தல் வேண்டும். விஜயாலயன் கி. பி. 849-ல் பட்டம் பெற்றவன். இவனுக்குப்பின்னர்ப் பட்டம் பெற்றவர்களும் பராக்கிரமசாலிகளாய்த் தங்கள் ஆட்சியைப் பரவச் செய்வதே கருத்தாயிருந்தார்கள். ஆதலால்சுந்தரமூர்த்திகள மதுரை சென்ற காலம் கி. பி. 849-க்கு முந்தியிருத்தல்வேண்டும்.

சுந்தரமூர்த்திகளும், சேரமான் பெருமாளும் சமகாலத்தவர்என்பது பெரிய புராணத்தால் நன்கறியப்பட்டதொன்றும். சேரமான் பெருமாளுக்குக் கழறிற்றறிவார் என்றும் பெயருண்டு. பாணபத்திரரிடத்தில் திருமுகப்பாசுரம் கொடுத்துச் சேரமான் பெருமாளிடத்து அனுப்பினார் என்று பெரிய புராணமும், வேம்பத்தூரார் திருவிளையாடலும் தெளிவாய்க் கூறுகின்றன. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலால் அக்காலத்து ஆட்சி புரிந்த பாண்டியன் வரகுணன் என்று அறியலாம். திருவிளையாடல்களில் ஆட்சி புரிந்த பாண்டியர்களின் பெயர்களைக் கொடுப்பதில் ஒரு வரகுணபாண்டியன்தான் காணப்படுகிறான். இக்காலப்பகுதித் துவக்கத்தில் கொடுத்திருக்கிற பாண்டிய வம்சாவளியைப் பார்ப்பதனால் இரண்டு வரகுணபாண்டியர்கள் ஆட்சி புரிந்தனர் என்பது அறியப்படுகிறது. கி. பி. 862-3ல் பட்டம்பெற்ற வரகுணன் சுந்தரமூர்த்திகள் காலத்தவனல்லன் என்பதை மேலே காட்டியிருக்கிறேன். அவன் வரகுணன் II எனப்படுவான். சுந்தரமூர்த்திகள் காலத்தவன் வரகுணம் I என்பவனுயிருத்தல்வேண்டும். அவன் வரகுணன் II என்பான் பிதாமகன். வரக்குணன் II என்பான் காலத்துக்கு ஒரு தலைமுறை முந்தியவன். கி. பி. 840-க்கு முன் வரகுணன் I என்பான் ஆட்சிபுரிந்தவன் என்று கொளவது பொருத்த முடையதாம்.

இனி, சேரமான் பெருமாள் காலம் என்னவென்று ஆராய்வோம். முக்கியமான சேரவம்சத்தரசர்களில் கடைசியாய் ஆட்சி புரிந்தவர் சேரமான் பெருமாள். இவர் மகமதியமதத்தைத் தழுவி மெக்காவுக்குப் போயினர் என்று ஒரு கதை மலையாளத்தில் வழங்குகின்றது. ஞானவுலா அல்லது ஆதியுலா என்று வழங்கும் கைலாயவுலா, சிவபெருமான்மீது அந்தாதி, நான்மணிமாலை முதலிய பாட்டுக்களைப் பாடியவரும்; சிவபெருமான் திரு-

வருளால் கழறிற்றறிவார் ஆகியவரும்; நடராஜப்பெருமானது பாதச்சிலம்பொலி கேட்கப்பெற்றவருமாய் இந்த பரம சிவபக்தராகிய இவர் சுந்தரமூர்த்திகளோடு கைலாயம் சென்றனர் என்று பெரியபுராணம் பிரசங்கிக்கின்றது. இவர் ஆட்சியைவிட்டுச் சென்றது கி. பி. 825-ல் என்பர். அது முதற்கொண்டு தான் கொல்லமாண்டுத் துவக்கம். கிறிஸ்து பிறந்தது முதற்கொண்டு கணக்கிடுமாண்டில் 825 ஐக்கழித்தால் கொல்லமாண்டு கிடைக்கும். ஆதலால் சுந்தரமூர்த்திகள் கைலாயம் சென்றது. கி. பி. 825-ஆம் ஆண்டாம். சிலர் கொல்லமாண்டுத் துவக்கத்திற்கு வேறுகாரணம் கூறுவர். அவரும் சேரமான் பெருமாள் ஆட்சியைவிட்டுச் சென்றது கி. பி. 825-க்குச் சில ஆண்டுகள் முன்னோ பின்னோ என்பர். அவர் கொள்கை உண்மையாயின் சுந்தரமூர்த்திகள் கைலாயம் சென்றது கி. பி. 825-க்குச் சிறிதுகாலம் முன்னோ பின்னோ என்னலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானால் திருமணக்கோலத்தோடு ஆட்கொள்ளப்பட்டபின் சிதம்பரம் சென்றனர். அங்கே (கோயில்) பாடிய பதிகத்தில்,

"மண்ணுலகங் காவல்பூண்ட
உரிமையார் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை
மறுக்கஞ் செய்யும்
பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப்
பெற்றா மன்றே"

என்றும், திருக்கச்சிமேற்றளிப் பதிகத்தில்:

"பாரூர்பல் லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்ச்
சீரூரும் புறவிற் றிருமேற் றளிச்சிவனை
யாரூ ரனடியானடித் தொண்டனாரூ ரன்சொன்ன
சீரூர் பாடல் வல்லார் சிவலோகஞ் சேர்வாரே"

என்றும் பல்லவனைப் பாடியிருக்கின்றனர். பல்லவர்களுக்குக் காடவர் என்றும்பெயருண்டு. சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையில்,

"கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்"

என்று சொல்லியிருப்பதும் கவனிக்கத்தக்கது. சிலர் கழற்சிங்கனுக்குக் காக்கின்ற என்னும் நிகழ்காலப் பெயரெச்ச அடை

மொழி கொடுத்திருப்பது சுந்தரமூர்த்திகள் காலத்தில் பல்லவ அரசனுயிருந்தவன் அவன் என்பதைக் காட்டும் என்பர். பல்லவ வம்சாவளியைப் பார்ப்பதால் கழற்சிங்கன் எனப் பெயரிய பல்லவ அரசன் ஒரு காலத்தும் இருந்ததில்லை என்பது புலப்படும். சிங்கன் என்று முடியும் பெயரையுடைய ஒரு பல்லவ அரசனே அப் பெயர் சுட்டுமோ வெனில் நரசிங்கன், ராஜசிங்கன் போன்ற பெயரையுடைய பல்லவ அரசர்கள் ஒன்பதாம் நூற்றுண்டின் முற்பாதியிலாவது எட்டாம் நூற்றுண்டின் பிற்பாதியிலாவது இருந்ததில்லை. மேலும் பல்லவ அரசர்கள் அனைவரும் வடமொழிப் பெயர் உடையவர் என்பது வம்சவிருக்ஷத்தைப் பார்ப்பதனுல் அறியக்கிடக்கிறது. கழல் என்னும் சொல் சுத்தத்தமிழ்ச்சொல். தமிழுக்கே உரிய ழகரம் அதனிலிருப்பது அதற்குச் சான்றும். ஆதலால் சுவாமிகள் கழற்சிங்கன் என்றதைப் பல்லவ அரசனது இயற்பெயராய்க் கொள்வதற்கிடமில்லை. புகழ்ப்பெயராயிருத்தல் வேண்டும் என்பது வெளி. சுந்தரமூர்த்திகள் காலத்துத் திருமுனைப்பாடி நாடு, சிதம்பரம் முதலிய இடங்களெல்லாம் பல்லவ ராட்சிக்குட்பட்டிருந்தன. அதனுல்தான் சுவாமிகள் சிதம்பரப் பதிகத்தில் பல்லவனைப் பரிவுடன் பாடினுர். இவர் காலத்தில் பல்லவ அரசனுயிருந்தவன் தந்திவர்மன் அவன கி. பி. 780 முதல் கி. பி. 830 வரை ஆட்சிபுரிந்தவன் என்பர். 50 ஆண்டுகள் அவன் ஆட்சி யிருந்ததென்பதை மறுப்பாரில்லை. ஆனுல் அவனது ஆட்சி கி. பி. 780-க்கும் சில ஆண்டுகள் பின்னர் ஆரம்பித்து கி. பி. 830-க்குச் சில ஆண்டுகள் பின்னர்வரை இருந்ததென்பாரோடு நான் ஒவ்வுகின்றேன். இவனுட்சியில் கி. பி. 804-ஆம் ஆண்டில் ராஷ்டிரகூட அரசன் கோவிந்தன் III என்பான் காஞ்சிமேற் படையெடுத்துவந்து வெற்றிபெற்றுன். தந்திவர்மன் அவனுக்குத் திறைகொடுக்கும்படி நேரிட்டது. அக்காலத்தில் தந்திவர்மனுக்குத் திறைகொடுக்கும் சிற்றரசர்கள் திறைசெலுத்துவதை மறுப்பதற்கிடம் கொடுத்தது. இதைக் குறிப்பிட்டுத்தான் சுந்தரமூர்த்திகள் சிதம்பரப் பதிகத்தில் "பல்லவர்குத் திறைகொடா மன்னவர்" என்று கூறியதென அறியலாம். அவர் பாடிய காலம் கி. பி. 804-க்கும், கி.பி. 825-க்கும் இடையே இருக்கவேண்டும்.

பல்லவ அரசர்களில் 'மகேந்திரன் I என்பான் முதல், நரசிம்மன் II என்பான் வரை யாவரும் ஆழ்ந்த சிவபக்தர்கள்; ஆனால் விஷ்ணுத் துவேஷமில்லாதவர்கள். சில விஷ்ணு ஆலயத்திருப்பணியும் செய்திருக்கின்றனர். பரமேசுவரன் II என்பான் முதல், பிந்திருந்தவர்கள் விஷ்ணு பக்தர்கள். ஆனால் சிவத்துவேஷமில்லாதவர்கள். சிவ ஆலயத்திருப்பணியும் செய்திருக்கின்றனர். தந்திவர்மனைச் சிவபக்தனென்றும் சொல்லலாம். திரிசிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள ஆலம்பாக்கம் என்னும் ஊர் இவன் காலத்துத் தந்திவர்ம மங்கலம் என்று இவன்பெயரால் அழைக்கப்பட்டது. அவ்வூரிலுள்ள கைலாஸநாதர் கோயில் இவனால் அமைக்கப்பட்டதென்றும், அதிலுள்ள லிங்கத்திற்குத் தந்திலிங்கம் என்பது பெயராம் என்றும் தெரிகிறது. (Ep. Rep. 1910 p. 81 Inscription E. 723) இவன்சிவபக்திமான் என்பது இதனாற் புலப்படும். சுந்தரமூர்த்திசுவாமிகள் பரிவுடன் இவன் விஷயமாய்ச் சிவபிரானை வேண்டியதற்குக் காரணமிதுவாம்.

சுந்தரமூர்த்திகள் பாடியன 38000 பதிகம் எனத் திருமுறைகண்ட புராணம் கூறும். இப்பொழுதுள்ளன நூறு பதிகங்களே. சமயாசாரியர்கள வயதைச்சொல்லும் வெண்பா "சுந்தரர்க்குமூவாறு" என்னும். இவருக்கு மணம் பதினாறும் வயதில் நடந்திருந்தால் இவர் தலயாத்திரை செய்தது, பதிகம் பாடியது எல்லாம் இரண்டு ஆண்டுகளுக்குள்ளிருக்கவேண்டும். இவர் செய்த தலயாத்திரையைச் செய்யவும், 38000 பதிகங்களைப் பாடவும் அந்தக்காலம் போதுமாவென்றும் சங்கை எழும். பெரியபுராணம் இவர் வயதைக்குறிக்கவில்லை.

சிலர் சுந்தரமூர்த்திகள் பல்லவ அரசனாகிய இரண்டாவது நரசிம்மவர்மன் காலத்திருந்தவர் என்பர். அவன் ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும், எட்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் ஆட்சிபுரிந்தவன். அவன் எல்லையிகந்த சிவபக்தியையுடையவன். பரமசிவனுக்குத் திருப்பணி அதிகம் செய்தவன். தான் வணங்கும் கடவுளாகிய சிவபெருமானுக்கு அந்தரங்கபக்தனாகிய பல்லவனை அடிகள் அன்போடு புகழ்வது இயல்பே. அவ்வரசனுக்கு நரசிங்கன், ராஜசிங்கன் என்னும் பெயர்களுண்டு. கழற்

சிங்கன் என்று அடிகள் சொல்லியிருப்பது . அவனையே என்பர். இவர்கள் கொள்கையை அங்கீகரிக்கச் சில தடைகளுள. அடிகள் கோயில் பதிகத்தில் "பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை" என்று சொல்லியிருப்பது அடிகள் காலத்திருந்த பல்லவ அரசனுக்குக் குறுநில மன்னர் சிலர் திறை செலுத்துவதை மறுத்தனர் என்பதைக் காட்டும். இரண்டாவது நரசிம்மனோ மிக்க பராக்கிரமசாலி. அவன் ஆட்சிக்குட்பட்டிருந்தவர்கள் அவனிடத்து அன்பும், அச்சமுமுடையவர்களாயிருந்தார்கள். திறை செலுத்துவதை மறுப்போர் இருந்ததாகநினைப்பதிற்கிடமில்லை. அவன் ஆட்சிக்காலம், குழப்பம் முதலிய இல்லாதிருந்ததாகப் பிரசித்தி பெற்றது. அன்றியும் நான் மேற்சொல்லியவெல்லாம் இரண்டாவது நரசிம்மவர்மன் காலத்தோடு பொருந்துமா என்பதை ஆலோசிக்கவேண்டும். தமிழ்நாட்டுச் சரித்திர ஆராய்ச்சி விஷயங்கள் மேற்செல்லச்செல்லத் தெளிவாகும்.

மாணிக்கவாசகர்:—இவர்க்கு மணிவாசகர், வாதவூரடிகள் என்ற வேறு பெயர்களும் உண்டு. இரண்டு திருவிளையாடல்கள், வாதவூரர் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், உத்தரகோசமங்கைப்புராணம் இவைகளில் இவர் சரித்திரம் விரிவாய் கூறப்பட்டுளது. அவரிருந்த காலத்தைப் பற்றிச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும், தமிழ்ப்புலவர்களும் கொண்டிருக்கும் அபிப்பிராயபேதங்களை ஆராய்வதானல், அஃது ஒரு பெரிய புத்தகம் ஆகுமென்பதில் ஐயமில்லை. அவர்கள் சொல்வதைக் கணக்கிட்டால் கிறிஸ்து பிறப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் முதற்கொண்டும் கி. பி. பதினோராம் நூற்றாண்டுக்கும் இடையிட்ட காலத்தில் பல ஆண்டுகளாம். சிலர் கணக்கின்படி சங்ககாலத்துக்கு முன்னிருந்தவராவர். சிலர் சொல்வதன்படி சங்ககாலத்திருந்தவராவர். சிற்சிலர் சங்ககாலத்துக்குப்பின்னுள்ள ஒவ்வொரு நூற்றாண்டுகளையும் காட்டுவர். இவரிற் சிலர் தேவாரம்பாடிய மூவர்க்கும் முந்தியவர் என்பர். சிலர் அவருக்குப் பிந்தியவர் என்பர். இவ்வாறு கூறுவோரிற் பலர் தங்கள் துணிவையே நிலைநாட்டுங் கொள்கையினராய் . விஷயத்தை முற்றும் ஆராயாது மனம்போனவாறெல்லாம் எழுதிக்

தாங்கள் எழுதுவது, மூன்பின் முரணுவதையுங் கவனியாது விடுத்தனர். சிலர் தங்களோடு மாறுபட்ட கருத்தினர் கூறும் நியாயங்களை முடிவானவை அல்லவென்றுவது, போதுமானவை அல்லவென்றுவது காட்டுவதொன்றைக் கொண்டே தங்களது கொள்கையை நிலைநாட்டிவிட்டதாகக் கருதி எழுதினர். சிலர் தங்களோடு ஒத்து நினைக்காதவர்கள் மீது கடுஞ்சொற்களைப் பிரயோகித்துத் தாக்குவதைக்கொண்டே தங்களது கட்சியை வெற்றியடைந்ததாகக் கொண்டனர். சிலர் பொய்ச்செய்திகளை மெய்யெனக்கொண்டு தங்கள் துணிவுகளை ஸ்தாபிக்க முயன்றனர். இவர்கள் சொல்வதையெல்லாம் ஆராய்வது பயனில் பணியாம்.

சங்ககாலத்துக்கு முன்னுவது, சங்ககாலத்திலாவது இவர் இருந்திருந்தால் பாண்டியனது அமைச்சராயும் பெரும் புலவராயுமிருந்த இவரைச் சங்கப்புலவர் ஒருவரும் சொல்லாதுவிட நியாயமில்லை. இவர் செய்யுட்களைச் சங்கப்புலவரியற்றிய செய்யுட்களோடு சேர்க்காமலிருப்பதற்கும் நியாயமில்லை. இவர் பாடிய திருக்கோவையாரில் "உயர்மதிற்கூடலினுய்ந்தவொண் டீந்தமிழின் றுறை" எனச் சங்கப்புலவர்கள் தமிழாய்ந்ததை இறந்த காலத்ததாக இவர் சொல்வது சங்கத்திறுதிக்காலத்திற்குப் பின்னர் இவர் இருந்தவர் என்பதைக் காட்டும். அன்றியும், நக்கீரர் கடைச்சங்கத்திறுதியிலிருந்தார் என்ப. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலில் அவர் சண்பகமாறன் என்னும் பாண்டியன் காலத்திருந்தனர் என்று சொல்லியிருக்கிறது. பட்டம்பெற்ற பாண்டியர்களில் சண்பகமாறனுக்குப் பிந்தியவர்களில் பதினுருவதாக உள்ளவன் அரிமர்த்தன பாண்டியன். வாதவூரடிகள் அவன் காலத்தவர். இதனுலும் சங்கத்திறுதிக் காலத்துக்குப் பின்னிருந்தவர் என்றேற்படும். இன்னும் பலவற்றுலும் சங்கத்திறுதிக் காலத்திற்குப் பின்னர் இருந்தவர் வாதவூரடிகள் எனக் காட்டலாம். இப்பொழுது அவற்றைவிட்டு மணிவாசகர் தேவாரம்பாடிய மூவர்க்கு முன்னிருந்தவரா, பின்னிருந்தவரா என்பதை ஆராய்வாம்.

முன்னிருந்தவர் என்பார் கூற்றில் முக்கியமானவற்றை ஈண்டு விசாரிப்போம். எல்லாவற்றையும் விசாரிப்பது வீண் காலம் போக்குவதாகும்.

1. சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையில் 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்று கூறியிருப்பது வாதவூரடிகளை; ஆதலால் வாதவூரடிகள்சுந்தரருக்கு முற்காலத்தவராவர் என்பர். நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில் பொய்யடிமையில்லாத புலவரைச் சொல்லிய செய்யுள் பின்வருவது. அது,

"தரணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர் நக்கீரர் முதனூற்பத் தொன்பது பல்புலவோர்
அருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே."

என்பது. இதனால் அவர் சங்கப்புலவரைப் பொய்யடிமையில்லாத புலவர் எனக்கூறினரே அன்றி, சங்கப்புலவரில் ஒருவரல்லாத வாதவூரடிகளை அன்றென்பது வெளிப்படை. இறையனாரையும் கூட்டிச் சங்கப்புலவர் நாற்பதொன்பதின்மர் என்றனர். சேக்கிழார் பொய்யடிமையில்லாத புலவரைச் சொல்லிய செய்யுட்கள் பின்வருவன. அவை,

"செய்யுணிகழ் சொற்றெளிவுஞ் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே யெனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்.

"பொற்பமைந்த வரவாரும் புரிசடையார் தமையல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினின் மெய்யடிமை யுடையராம் பெரும்புலவர்
மற்றவர்தம் பெருமையா ரறிந்துரைக்க வல்லார்கள்."

(பொய்யடிமை—புராணம்.)

என்பன. சேக்கிழார் சங்கப்புலவர்களைக் குறிப்பிடாது போனாலும் "மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார்" ஆகியும், "புரிசடையார் தமையல்லால் சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்றார்" ஆகியும் உள்ள அனைவரையும் பொய்யடிமையில்லாத புலவர் என்றனரே அன்றிப் பாண்டியனது

அமைச்சராயமர்ந்த வாதவூரடிகள் ஒருவரைமட்டும் குறிப்பிட்டார் என்றல் எவ்வகையிலும் பொருந்தாதாம். இவ்வாறு சுந்தரமூர்த்திகள் செய்த திருத்தொண்டத் தொகையை வகைசெய்த நம்பியாண்டார்நம்பியும், விரிசெய்த சேக்கிழாரும் கூறியதற்கு முற்றிலும் மாறுய்க்கூறுபவர் வாதம் பொருந்தாதனென்றும். மேலும், நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில்,

> "கூட்டமொன் பானொ டறுபத்து மூன்று தனிப்பெயரா
> வீட்டும் பெருந்தவத் தோரெழு பத்திரண் டாம்வினையை
> வாட்டுந் தவத்திருத் தொண்டத் தொகைபதி னொன்றின்வகைப்
> பாட்டுந் திகழ்திரு நாவலூ ராளி பணித்தனனே,"

என்று சொல்லியிருப்பதனால் திருத்தொண்டத்தொகையிற் கூறிய தனியடியார் தொகை 63; தொகையடியார் எண் 9 ஆக அடியார்களின் தொகை 72 என்றுகும். திருத்தொண்டத் தொகையில் 62 தனியடியார்களின் பெயர்கள் மட்டும் காணப்படுகின்றன. பொய்யடிமையில்லாத புலவர் என்பது வாதவூரடிகளைக் குறிக்கும் என்று கொண்டால், 63 தனியடியார்கள் என்பது சரியாய்விடுகின்றது என்பர். இவர் சொல்வது விந்தையிலும் விந்தையே. திருத்தொண்டத் தொகைபாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் பெயரைவிடுத்து ஏனைய தொண்டர்கள் அறுபத்திருவரது பெயர்களைக் கூறினர். தான் ஒன்று ஆக 63 என்று அவர் சொல்லுவரா? பிற்காலத்தில் நம்பியாண்டார்நம்பி, சேக்கிழார், உமாபதி சிவம் முதலிய பலரும் சுந்தரமூர்த்திகளையும் சேர்த்து 63 என்று கணக்கிட்டனர். அடியார் தொகையைக் கணக்கிட்டு முதலில் சொன்னவர் சுந்தரமூர்த்திகளல்லர்; நம்பியாண்டார் நம்பி என்பதைக் கவனிக்கவேண்டும். கோயில்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருப்பவற்றின் பெயரை விசாரித்தால் இவர் வார்த்தைக்கிடமிராது. சேக்கிழார் நாயனர் புராணமியற்றிய சந்தானசாரியர்களில் ஒருவராகிய உமாபதி சிவம், தனியடியார் தொகையடியார்களைப் பற்றிய விவ்ரங்களைப் பல விதமாய்ச் சொல்லி முடிவில்,

"அறுபதுபேர் தனித்திருப்பேர் திருக்கூட்ட மொன்ப
தாகவறு பதொன்ப தரனடியார் கதையை
மறுவிறிரு நாவலூர்ச் சிவமறையோர் குலத்து
வருசடைய னார்மனைவி யிசைஞானி வயிற்றில்
உறுதிபெற வவதரித்த வாரூரர் முன்னா
ளுரைசெய்த திருத்தொண்டத் தொகைபதிகத் தடைவே
நறைமலிபூம் பொழில்புடைசூழ் திருநாரை யூரி
னம்பியாண் டார்திருவந் தாதிகடைப் பிடித்து."

என்றனர். முதலில் தனியடியார் அறுபதின்மரைக்கூறி, சடையனார், இசைஞானியார், சுந்தரமூர்த்திகள் இம்மூவரையும் அவருடன் சேர்த்தனர். தனியடியார் அறுபத்து மூவர் இன்னார் என்பது இதனால் ஐயமற விளங்கும். அப்புராணத்தில் அவர், நாயன்மார் செல்கதி சொல்லுமிடத்து "பல்வளஞ் சேராரூரருடன்சேரர் கையிற் பரியுகைக்க வுடன்சென்ற பரிசனமே மண்ணிறந்தோர்" எனத் தனியடியார் கூட்டத்தில் சுந்தரமூர்த்திகளைச் சேர்த்துக் கணக்கிடுகின்றனர். சேக்கிழார் தடுத்தாட்கொண்ட புராணத்தை முதலிலும், ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம், சேரமான் பெருமாள் நாயனார் புராணம், வெள்ளானைச் சருக்கம் இவைகளைப் பிந்தியும் வைத்துச் சுந்தரமூர்த்தி நாயனார் கதையைத் தொடர்ச்சியாய்ச் சொல்லுவதும், நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில் இடையிடையே சுந்தரரைப் பாடுவதும் எற்றுக்காம்? சுந்தரமூர்த்திகள் நாயன்மாரில் ஒருவராகாதிருந்தால் அவர்கள் அவ்வாறுசெய்வதற்கு நியாயமில்லையே? யாவரும் சுந்தரமூர்த்திகளைக் கூட்டித் தனியடியார் தொகை 63 என்று கணக்கிட்டிருக்கின்றனரே அன்றி அதற்கு மாறாய்ச் செய்தவரைக் காண்கிலேம். மேலும், பொய்யடிமையில்லாத புலவர் என்பது தனியடியாரில் ஒருவரைச் சுட்டுவதனால் தொகையடியார் எண்ணிக்கை எட்டாகி மொத்தம் அடியார் தொகை 72 என்றது தவறாய் 71 ஆகி விடுமே என்பதைக் கவனித்தல் அவசியமல்லவா? மேலும், நாயன்மார் திருநக்ஷத்திரம் கூறியிருப்பதில் "கருதுவன் றொண்டர் கடகச் சுவாதி" என்பதையும், "பொய்யடிமை யில்லாப் புலவர்தாள் போற்றி" என்பதையுங் கவனித்தல்வேண்டும். தொகையடியாருக்குத்

திருநக்ஷத்திரம் எவ்வாறு சொல்ல இயலும்? ஆதலால் ஒருவருக்கும் சொல்லவில்லை. வாதவூரடிகளுக்கு நாயன்மாரோடு சேர்த்துத் திருநக்ஷத்திரம் கூறவில்லை. அன்றியும் பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் என்னும் பெயர்களும் தனியடியாரைக் குறிப்பன வென்னலாமே? இதுரை, சான்றோர் யாவருங் கொண்ட கொள்கையை மறுதளிக்கத் தமக்குத் தோன்றியவாறு பொய்யடிமையில்லாத புலவர் என்பதற்குப் பொருள் கொள்வது முறையோ? வாதவூரடிகளிடத்தில் பக்திபாராட்டுவது மிகவும் கொண்டாடத்தக்கதே. அதற்காக நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், உமாபதி சிவம் முதலிய சான்றோர் கூற்றைப் பொருட்படுத்தாது ஒழுகல் நன்றுமா? காலத்தால் முந்தியிருந்தால்தானு வாதவூரடிகளுக்குப் பெருமை?

2. சில தேவாரங்களைக் காட்டி அவைகளில் வாதவூரடிகள் கதை குறிப்பிடப்படுகின்றது. ஆதலால் அத்தேவாரங்களைப் பாடியவர்க்கு வாதவூரடிகள் முந்தியவராகவேண்டும் என்பர். அப்பர் சுவாமிகள் "குடமுழநந்தீசனை வாசகனுக் கொண்டாய்" என்று பாடியிருப்பது அவைகளில் ஒன்று. இதற்கு அவர் கூறும் பொருளாவது "(சிவபெருமான்) குடமுழாவை வாசிக்கும் திருநந்தி தேவரை, ஸ்ரீமாணிக்கவாசகராக அவதரிக்கும்படி திருவுளத்தில் கொண்டருளினர்" என்பது. வாதவூரடிகள் அவதாரத்தைச் சொல்லியிருக்கும் இடங்களில் இவ்வாறு பொருள் கொள்வதற்கு ஆதார மிருக்கிறதா வென்று பார்ப்போம். பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலில் வாதவூரடிகள் அவதாரத்தைக் கூறும் செய்யுள்,

> "ஆயவளம் பதியதனின் அமாத்தியரி லருமறையின்
> தூயசிவா கமநெறியின் றுறைவிளங்க வஞ்சனையால்
> மாயனிடும் புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர்
> சேயவிளம் பரிதியெனச் சிவனருளா லவதரித்தார்."

என்பது. இதில் ஒருவர் அவதரித்தார் என்று சொல்லியிருக்கிறது. நந்தியென்றில்லை. பெயரைச் சொல்வதனுல் நாமறியக்

கூடாதவராயிருப்பின் பெயரைச் சொல்லாதுவிடுவது இயல்பே. குடமுழ நந்தி ஒருவரே யுளர். அவர் பெயரை அறியாதாரில்லை. அவதரித்தவர் நந்தியாயிருந்தால் புராணம் சொன்னவர். அவர் பெயரைச் சொல்லியிருப்பாரென்பது ஒருதலை. பரஞ்சோதி முனிவர் வலைவீசின படலத்தில் "நந்தியை வெகுண்டு நோக்கா" என்றோரிடத்திலும், "நந்திப்புத்தே ளடுசுறவாகி" என்றோரிடத்திலும், "மீனந்தானும்—நன்னிலைவடிவேபோன்று நந்தியாய் முந்தித்தோன்ற" என மற்றோரிடத்திலும், நந்தி பெயர்வரும் வேறிடங்களிலும் இவ்வாறே குறித்துச் சொல்லியிருப்பதும் நான் சொன்னதற்குச் சான்றாம்.

வாதவூரர் புராணத்தில் அடிகள் அவதாரத்தைச் சொல்லும் செய்யுட்கள்,

"அந்நகரின் மறையோரி லருள்புனைமாத் தியர்குலத்தில்
தன்னிகரில் சைவநெறித் தலைவனவன் றனிததேவி
மின்னனையாள் திருவயற்றில் மென்கொடிபங் கினனருளால்
தென்னவன்செங் கோல்முதல்வர் திருவவதாரஞ் செய்தார்."

"பொய்ம்மையா முலகின் மாயப் பொங்கிரு ளகல வன்னோர்
தம்மையாழ் நரகிற் றள்ளுஞ் சமையதா ரகை மழுங்க
எம்மையா ளுடையா னன்ப ரிதயதா மரைக ளெல்லாம்
செம்மையாய் மலரும் ஞான தினகர ருதயஞ் செய்தார்."

என்பன. இதிலும் நந்தி அவதாரம் செய்தாரென்று சொல்லவில்லை.

பெரும்பற்றப் புலியூர்நம்பி திருவிளையாடலில் திருவாதவூரர் அவதாரத்தைச் சொல்லும் செய்யுள்,

"மன்னுமிந் நகரி தன்னுள் மானமங் கலத்தா ராகும்
தொன்னெறி முனிவ ராமாத் தியர்தொழு குலத்துட் டோன்ற
நன்னெறி விடையிற் போந்தோர் நன்கணத் தலைவர்நாம
மின்னெறி வாத வூர ரென்னவந் துதயஞ் செய்தார்."

என்பது. இதில் வாதவூரராய் அவதாரஞ் செய்தவர் ஒரு கணத்தலைவர் என்று சொல்லியிருக்கிறது. கைலாயத்தில் கணத்தலைவராயுள்ளார் பல்லாயிரவர். குடமுழநந்தியாக அங்குள்ளார்

ஒருவரே. இப்புராணமுடையவர் அவதாரம் செய்தவர் நந்தியா யிருந்தால் அவர் பெயரைச் சொல்லியிருப்பரென்பது அவர் மற்ற விடங்களில் சொல்லியிருப்பதனுல் விளங்கும். மணஞ்செய்த திருவிளையாடலில்

"நந்திமா முனிவன் குண்டோ தரனென்று நாமம் பூண்டோர்
வெந்திறற் பூத மாகி வெண்மதிக் குடைநி ழற்ற'

என்றும், வலைவீசின திருவிளையாடலில் ஓரிடத்தில்

"நந்திதன் னுருவம்பெற்று நயந்தடி வணங்கி நிற்ப"

என்றும், மற்ருெரிடத்தில்

"இத்தகைமை யிற்றிகழு மெல்லையினி லுட்புக
விலங்குகண நாதனொருவன்
முத்தனது கண்டகடை விட்டதிரு நந்தியை
முனிந்தினிய சாபமிடுவான்
அத்தியுழை யிற்சுறவு ருங்கொடு புகுந்துலவி
டாகம மெடுத்தெனுமுனம்
புத்தியுடை நந்தியு முதித்துல வினன்பெரிய
புத்தகமெ டுத்துமுடியில்."

என்றும் சொல்லியிருப்பன மேற்சொல்லியதற்குச்சான்ருகும். கடைசிச் செய்யுளில் நந்தியைக் கணநாதரினின்று வேறுபடுத்தியும், நந்தி என்னும் பெயருக்குமுன் அடைமொழி கொடுத்தும் கூறுவதும் கவனிக்கத்தக்கது. இப்புத்தகத்தை பதிப்பித்த மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் "மன்னுமிந் நகரிதன்னுள்" என்னும் செய்யுளின் குறிப்புரையில் பின்கண்டவாறு எழுதியிருப்பதும் இதை விளக்கும் அஃதாவது "ஒரு கணநாதர் சிவபெருமான் கட்டளைப்படியே வந்து திருவாதவூரராக அவதரித்தன ரென்பதை,

'கணநாதர் தமிலொருவன் விடையிற் போந்து,
கமழ்மதுக மதுவாத புரத்து வாழுந்
தணராமாத் தியர்குலத்துட் டோன்றி.'

(கடம்பவனப்புராணம்-லீலா-27)

ஏன்பதனுலுமுணர்க. இந்நூலில்

'இத்தகைமை யிற்றிசமு மெல்லையினி லுட்புக
விலங்குகண நாதனொருவன்.'

என்றதும் இங்கே அறியற்பாலது'' என்பதாம்.

திருப்பெருந்துறைப் புராணம் திருவாதவூரர் திருவவதாரப் படலத்தில் பௌத்தமதம் தமிழ்நாடெங்கும் பரவி ஆதிக்கம் பெற்றதை யால் அயன் முதலோர் சிவபெருமானிடத்துத் தெரிவித்துக் கொண்டனர் என்பதை யுணர்த்தும் செயயுட்கள்

"அதுதெரிமா முனிவரரு மமர்ருமற் றவர்க்கிறையுஞ்
சதுமுகனு நெடுமாலுந் தாங்கரிய கவலையராய்
முதுபுகழ்சா திருக்கயிலை முன்னுபுநந் தியைவணங்கிக்
கதுமெனயா மிறைவன்போற் கழறொழுவந் தனமென்றார்"

"நந்திபுகுத் திடப்புகுந்து நம்பெருமான் கழல்வணங்கி."

என்பன. அதுகேட்ட இறைவன் 'பௌத்தமத வலியைக் குன்றச்செய்வோம்; நீவிர் போமின்' என்றனர். பிறகு சிவபிரான்

"அதுகருதி யமர்தருநா ளாயிரவர் கணநாதர்
சதுமறையும் புகழ்நாலாஞ் சத்தினிபா தத்தவர் குழுமிப்
புதுமதிய முடித்தபிரான் பொன்னடிதாழ்ந் தனரெழுந்தார்
முதுபுகழா கமதத்துண்மை மொழிந்தருள வேண்டுமென."

வேண்டினர். வேண்டலும், சிவபெருமான் 'உத்தரகோச மங்கையில் உபதேசம் செய்வோம்; நீவிர் அவ்விடம் போமின்' என்றனர். அவரவ்விடம் செல்லச் சிவபிரானுஞ் சென்று "ஆகமத்தின், செழுமயமாமுண்மை சொல உபக்கிரமஞ் செயல் குறித்தார்." அப்போழ்து,

"வெளியாய நடவையிடை விளங்கவரு மிந்திரனைக்
களியாய கருத்தினொடுங் கண்டுவந்தொல் லையின்மறந்தார்
தெளியாய கணநாத ராயிருட் சேரொருவர்
வளியாய வுணவுனும்பூண மாதேவ னஃதுணர்ந்து"

"உண்மையுரைத் திடநாமே யுபக்கிரமஞ் செய்யுங்காலை
வண்மையிது வெனவேறோர் விடயத்து மனமுய்த்தாய்
தண்மையின்மற் றிதனலித் தரணியிலோர் பிறப்புற்றே
அண்மையினச் செல்வமனு பவித்துநமை யடைகென்றான்."

"விடைகொண்டு பரமனருள் மேற்கொண்ட கணநாதர்
உடைகொண்ட கடன்மடந்தை வுவப்பெய்த வாதவூர்
நடைகொண்ட சம்புபா தாசிருதர் நன்மனை யாள்
அடைகொண்ட திருவயற்றி னங்குரிக்குங் கருவானார்."

சம்புபாதாசிருதர் என்போர் வாதவூரடிகள் பிதா. மேற்கண்டவற்றால் வாதவூரடிகளாக அவதரித்தவர் ஆயிரங் கணநாதர்களில் ஒருவரேயன்றி நந்திபெருமான் அல்லர் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்கிக் கிடக்கின்றது.

திருவுத்தரகோசமங்கைப் புராணத்திலும் வாதவூரடிகள் அவதாரம் சொல்லப்பட்டுள்ளது. இதில் வேறு கதை காணப்படும். இதிலும், ஒரு முனிவர் அல்லது கணநாதர் வாதவூரராய் வந்தனரென்று சொல்லியிருக்கிறது. நந்திபகவான் பிரஸ்தாபமில்லை.

இவ்வாறு இரண்டு திருவிளையாடல்கள், வாதவூரர்ப்புராணம், கடம்ப வனப்புராணம், திருப்பெருந்துறைப் புராணம், திருவுத்தரகோச மங்கைப் புராணம் இவைகளில் சொல்லியவற்றிற்கு மாறாய் நந்தியே வாதவூரடிகளாய் அவதாரம் செய்தனர் என்று திருப்பதிகத்துக்கு வலிந்து பொருள்கொளவார் கூற்றுக்கு ஆதாரமென்னவிருக்கிறதென்று பார்ப்போம். சிலர் திருப்பெருந்துறையின் வடமொழிப்புராணமாகிய ஸ்ரீ ஆதிகைலாச மாகாத்மியத்திலும், வாதவூரடிகளுடைய வடமொழிச் சரித்திரமாகிய ஸ்ரீ மணிவாக்கிய சரித்திரத்திலும் இக்கதை சொல்லப்பட்டிருக்கிறதென்கின்றனர். தமிழ்ப் புராணங்களில் எங்கும் ஆதாரமிருப்பதாய்ச் சொலலவில்லை. அடிகள் தமிழ்நாட்டில் தமிழப் பிராம்மணர் மகவாய்ப் பிறந்து, தமிழ்நாட்டில் வளர்ந்து, தமிழைக் கற்றுத் தமிழ்ப்புலவராய்த் தமிழ்க்கவிகள் பாடி, தமிழரசனுக்கு அமைச்சராயமர்ந்து, தமிழ் மக்களொடு பழகி, தமிழ்நாட்டில் தம் வாழ்நாட்களைக்கழித்து, தமிழ் நாட்டில் சிவபெருமான் அருள்பெற்று தமிழ் நாட்டில் சிவபதமடைந்தனர். இவர் சரித்திரத்தினுண்மையைத் தமிழ்ப்புலவர் ஒருவரும் அறியவில்லை; அது வடமொழிப்புலவர் மூலமாய்வெளிப்பட்டதென்றால் அதுவிந்தையே! வடமொழியில் இந்த உண்மையைச் சொல்லும் கிரந்தங்கள் இதுகாறும் எங்கு ஒளித்தன? மேற்சொல்லிய தென்மொழிப் புராணங்களை இயற்றிய சான்றோரில் ஒருவராவது இவ்வுண்மையை அறியவில்லையே. அவர் சொல்லும் வடமொழிப் புராணங்களைச் செய்

தவர் யாவர்? எந்நாட்டார்? எக்காலத்து எவ்விடத்து இயற்றப் பெற்றன? என்ன ஆதாரங்களைக்கொண்டு இயற்றினர்? மேற்கண்ட தமிழ்ப் புலவர்களுள் ஒருவராவது அப்புராணங்களை அறியா திருந்ததற்கு நியாயமுண்டா? வடமொழிப் புராணங்களில் சொல்லப்படும் கதைதான் உண்மையென்றால் தமிழ் மக்களால் போற்றப்படும் மேற்சொல்லிய தமிழ்ப் புராணங்கள் அத்தனையும் பொய்யெனப்பட்டுத் தள்ளவேண்டியன ஆகுமே? மனம்போன வாறெல்லாம் கதைகளைச் சிருஷ்டி செய்வதும், இடைச்செருகுவதும் வழக்கமாயுள்ள இந்நாட்டில் புதிதாய் வெளிப்படுங் கதைகளுக்கு என்ன மதிப்புக் கொடுக்கலாமென்பது உய்த்துணரற்பாலதன்றோ? அப்பர் சுவாமிகள் தமிழராயினும் அவர் ஒருவர் மட்டும் உண்மையை அறிந்து சொல்லினர் என்பது பொருத்தமுடையதாமா?

மேலும், திருப்பெருந்துறைக்கு ஆதிகைலாயம் என ஒரு பெயர் உண்டென்பது அவர் கொள்கை. வாதவூரடிகள் செய்யுட்களில் இப்பெயர் எங்கேயாவது காணப்படுகிறதா? திருப்பெருந்துறைக்குள்ள பெயர்களை அவர் பல இடங்களில் சொல்லியிருக்கின்றனர். தம்மை இறைவன் ஆட்கொண்ட தலத்துக்கு ஆதிகைலாயம் என்ற ஸர்வோத்கிருஷ்டமான பெயர்இருந்தால் அதை மட்டும் சொல்லாதிருப்பதற்கு நியாயமுண்டா? அந்தத் தலத்தினிடத்து அவருக்குத் துவேஷமா? அல்லது அப்பெயருண்டென்பது தெரியாதா? அல்லது மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டானோ? அல்லது ஆதிகைலாயம் என்கிறபெயரிடத்து வெறுப்பா? முன்னோர்களால் இந்தப் பெயர் எங்கேயாவது சொல்லப்பட்டிருக்கிறதா? திருநெய்த்தானப் பதிகத்தில் "ஆதிகைலாயனீயே யென்றும்" என்பதும் திருப்பெருந்துறையைச் சுட்டியிருக்கிறதென்பர். அந்தத் தேவாரத்துக்கு அவ்வாறு பொருள் கோடல் பொருத்தமுடையதன்றே! அத்தொடர்மொழிக்கு 'ஆதியாயுள்ள கைலாயத்தை இடமாகவுடையவனே' என்று பொருள் கொள்வதால் வரும் இழுக்கென்னே? திருப்பெருந்துறையை ஆதிகைலாயம் என்றால் கைலாயம் என்று யாவராலும் அறியப்பட்

டது புதுக்கைலாயமா? அல்லது அநாதி கைலாயமா? உண்மையன்றேனும் புதுப்பொருள் கற்பித்தால் அதைக்கண்டு மயங்குவோருளர் என்பதற்கு இஃது ஒரு சான்றாம். இவர்,

"காரேறு நெடுங்குடுமிக் கைலா யன்காண்'
'வான்கைலை வெற்பின் மகிழ்ந்தார் போலும்"

என வருவனவற்றிற்கு என்ன பொருள் கூறுவர்?

நிற்க, திருப்பதிகத்தின் பொருள் என்னவென் றாய்வோம். வாசகன் என்னும் மொழி மாணிக்கவாசகன் எனப்பொருள்படும் என்கின்றனர். சான்றோர் அம்மொழியை, அவ்வாறு பிரயோகம் செய்திருந்தால் அவற்றைக் காட்டலாமே? மாணிக்கவாசகரைச் சொல்லுமிடத்து இடையில் சுருங்கக் கூறலைக்கருதி ஒருவர் வாசகன் என்று அவரைச் சுட்டியிருந்தால் அது காட்டாகாது. வாதவூரடிகளுக்குச் சிவபெருமான் மாணிக்கவாசகன் எனக் காரணச் சிறப்புப் பெயரைக் கொடுத்தனர் என்று பரஞ்சோதி முனிவர் மண்சுமந்த படலத்தில் சொல்லுகின்றனர். அது,

"பின்னுமவர் கனவின்கண் மன்றுள்நடம் பிரியாத
பெருமான் வந்து
முன்னவனைப் பெருந்துறையிற் குருந்தடியி லாட்கொண்ட
முறையி னாலும்
இன்னிசைவண் டமிழ்மணிபோற் பாடுங்கா ரணத்தானும்
யாமன் றிட்ட
மன்னியபேர் மாணிக்க வாசகனென் றழைமின்கள்
வருவ னென்றார்"

என்றதனால் அறியப்படும். வாசகன்என்னுஞ் சொல்லொடு அடைமொழிகளைச்சேர்க்க அமிர்தவாசகன், பிரியவாசகன், மிருதுவாசகன், கோரவாசகன், கடூரவாசகன் என்பனபோலப் பல தொடர்மொழிகளாம். வாசகன், என்னுந் தனிமொழியை இத்தொடர்மொழிகளில் எதற்குக் கொள்வது? சிவபிரான் வாதவூரடிகளுக்கு வாசகன் என்ற பெயரைக் கொடுக்கவில்லையே. அஃது இப்புதுக் கொள்கையோர் கொடுத்த பெயராம். திருவாசகத்தில் அடிகள் 'மாதிவர் பாகன் மறை பயின்ற வாசகன்' எனச் சிவபெருமானைச்

சொல்வினர். எல்லாவற்றிற்கும் மேலான மறையைச் சொல்லிய சிவபெருமானை வாசகன் என்னலாகாதா?

வாயில்காக்கும் நந்திபெருமானுக்குக் கடமைகள் பலவுள. அவற்றுள் சிவபெருமான் ஆனந்த நடனம் செய்யும் காலத்துக் குடமுழாத்தட்டுவது ஒன்று; சிவபெருமானது சேவைக்கு வருபவர்கள் சொல்வதை உள்ளே சிவபெருமானுக்குத் தெரிவித்து, அவரிடுங் கட்டளையை வந்திருப்பவர்களுக்கு அறிவித்து நிறைவேற்றுவது வேறொன்று; மற்றொன்று வேத சிவாகமங்களின் பொருள்களை முனிவர் சித்தர் முதலியோருக்கு உபதேசிப்பதாம். முதலிற் சொல்லிய குடமுழாத் தட்டுவது எங்கும் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது கடமையைவலைவீசின திருவிளையாடலில் சிவபெருமானது உத்தரவு பெறாது நந்தி சிலரை அவர் சந்நிதியில் விட்டதற்குச் சிவபெருமான் வெகுண்டு சபித்தனர் என்றும், திருப்பெருந்துறைப் புராணத்தில் சதுமுகன் நெடுமால் முதலியோர் சிவபிரான் சந்நிதியில் 'நந்தி புகுத்திடப்புகுந்தனர்' என்றும் சொல்லியிருப்பவை விளக்கும். மூன்றாவது கடமையை,

'நந்தியருள் பெற்ற நாதரை நாடிடில்
நந்திக ணால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்
என்றிவ ரென்னோ டெண்மரு மாமே." (திருமந்திரம்) எனவும்,

"அந்தியிளம் பிறைக்கண்ணி யண்ணலார் கைலையினின்
முந்தைநிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி
இந்திரன்மா லயன்முதலா மிமையவர்க்கு நெறியருளும்
நந்திதிரு வருள்பெற்ற நான்மறையோ கிகளொருவர்."
(பெரியபுராணம்) எனவும்,

"ஆதியில் நந்திபா லளித்த தொன்மைசேர்
காதைகள் யாவையுங் கருணை யாலவன்
கோதற வுணர்சனற் குமரர்க் கீந்தனன்
நீதியோ டவனிடை நிலத்திற் கேட்டியால்."
(கந்தபுராணம்) எனவும்

"போதமிகுத் தோர்மிகுத்த பேதமைக்கே
பொருந்தினோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
வேதநெறி யெனுமவர்க ளறியமுன்னா
ளிறைவனரு ணந்திதனக் கியமப நந்தி
கோதிலருட் சனற்குமரர்க் குச்கூறக்
குவலயத்தி லவ்வழியென் குருநாதன் கொண்டு
தீதகல வெனக்களித்த ஞான நூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே."

(சிவஞான சித்தியார்.)

எனவும் வரும் செய்யுட்கள் விளக்கும்.

இவ்வாறே பலருங் கூறியிருக்கின்றனர். இரண்டாவது மூன்றாவது கடமைகளைச் செய்யுங்காலத்து வாசகன் என்னும் மொழி நந்திபெருமானைக் குறிக்கும். ஆப்டே என்பவர் தாம் இயற்றிய சம்ஸ்கிருத அகராதியில் வாசகன் (वाचकः) என்னும் பதத்திற்கு Messenger என்றும், ராமநாதன் என்பவர் தாம் இயற்றிய தமிழகராதியில் அப்பதத்திற்குத் தூதுவன் என்றும் பொருள் எழுதியிருக்கின்றனர். வாயிற்காப்போராயிருந்து வெளியில் வருவோர் சொல்வதைத் தமது ஆண்டவனுயுள்ள சிவபெருமானுக்குத் தெரிவித்து அவரது கட்டளையை வந்தவர்களுக்குத் தெரிவிப்பதைக் கடமையாயுள்ள நந்திபெருமானே வாசகன் என்னும் பதம் உணர்த்துமென்பதில் ஐயமென்னே?

சப்த கல்பதுருமம் என்னும் வடமொழி அகராதியில் வாசகன் என்னும் பதம் புராணம் முதலிய வாசித்துச் சொல்வோனை யுணர்த்தும் என்று எழுதப்பட்டிருக்கிறது. அது,

"वाचकः = कथकः, पुराणादि पाठकः ॥" என்பது.

மதியைமுடித்தவனே, பாம்பைப் பூண்டவனே, இடபத்தை வாகனமாக வுடையவனே என்று சிவபிரானைத் தோத்தரிப்பவர் 'நந்தியை வாயிற்காப்போனாக உடையவனே, தனக்குப் பிரதியாய் வேதாகமப் பொருள்களை முனிவர் முதலியோருக்கு உபதேசிக்கநந்தியைஉடையவனே' என்றுதோத்தரிப்பது இயல்புதானே "குடமுழநந்தீசனை வாசகனுக்கொண்டாய்" என்பது இவ்வாறு

பொருள் படாது என்பார் கூற்றை அறிவுடையோர்" கொள்ளா ரென விடுக. நந்திபகவான் மணிவாசகராய் அவதரித்தார் என்று தமிழ் நாட்டில் புதிதாய்த் தோன்றிய ஆக்ஷேபகரமான கதையை ஆதாரமாகக்கொண்டு நீண்டகால பரம்பரை வழக்கிற்கு விரோத மாய் வாதவூரடிகள் தேவாரம் பாடிய மூவர்க்கு முந்தியவர் என்பது பொருந்த முடையதன்றும்.

3. சிலர் 'திருவாரூர்ப்பதிகத்தில் அப்பர் சுவாமிகள் "நரியைக் குதிரைசெய் வானும்" என்று சொல்லியிருப்பது வாதவூரடிகளுக்காகச் சிவபிரான் நரியைப் பரியாக்கிய கதையைக் குறிக்கிறது; ஆதலால் வாதவூரடிகள் அப்பருக்குக் காலத்தால் முந்தியவராம்' என்பர். அத்தேவாரம்,

"நரியைக் குதிரைசெய் வானும் நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல் லானும் விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் னோட முன்பணிந் தன்பர்க ளேத்த
அரவரைச் சாத்திநின் றானு மாரூ ரமர்ந்தவம் மானே.'

என்பது. இத்தேவாரத்தில் "நரியைக் குதிரை செய்வானும்" என்பது மணிவாசகர் கதையைக் குறிக்கிறதென்றால் "நரகரைத் தேவுசெய்வானும்" என்பதும், "விரதங்கொண் டாடவல்லானும்" என்பதும், "விச்சின்றி நாறுசெய் வானும்" என்பதும், "அரவரைச் சாத்தி நின்றானும்" என்பதும் எந்தக் கதைகளைக் குறிக்கின்றன? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கதையைக் குறித்துக் காட்டுவாருமுளர். அவர் காட்டுவன நகைக் கிடங்கொடுப்பனவாம். ஆதலால் அவற்றைப் பொருட்படுத்தாது விடுத்தேன். 'நரியைக் குதிரை செய்தான், நரகரைத் தேவுசெய்தான்' என்று சொல்லாது, 'செய்வான்' என்று சொல்லியிருப்பதனால், அப்பர் சுவாமிகளது கருத்து இத்தேவாரத்தில் நிகழ்ந்த கதைகளைக் குறிப்பிடுவது அன்றென்பதையும், சிவபெருமானது அகடிதகடனா சக்தியைச் சொல்லுவதே அவர் கருத்தென்பதையும் விளக்கும். மேலும், வாதவூரடிகள் கதையைக் குறிப்பிடுவதாயிருந்தால் அவர் பெயரைச் சொல்லலாமே. மற்றவர்கள் கதைகளைக் குறிப்பிடுமிடத்துப் பெயர்களைச் சொல்லுகின்றனரே. வாதவூரடிகளது பெயரை எங்கும் சொல்லவில்லையே. இவ்வாறே வாதவூரடிகள்

"விச்சதன்றியே விளைவு செய்குவாய்—விண்ணு மண்ணகம் முழுதும் யாவையும்—வைச்சுவாங்குவாய்" என்று சொல்லியிருப்பது எந்தக் கதைகளைக் குறிக்கின்றது? தேவாரம், திருவாசகம் இரண்டிலும் சிவபெருமானது ஸர்வசக்தியைக் குறித்துப் பொதுவாய்ச் சொல்லிய இடங்கள் பலவுள. அவற்றில் "நரியைக் குதிரைசெய்வானும்" என்பதொன்றும். இதை வாதவூரர் கதையைக் குறிப்பதென்று கொண்டால் திருவாசகத்தில் "கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்" என்பதைச் சம்பந்த மூர்த்தியடிகளுக்குக் காட்சி கொடுத்ததைச் சொல்லுவது என்று ஏன் கொள்ளக்கூடாது? வாதவூரடிகள் "செந்நாவலர் பரசும்" என்றும், "பண்சுமந்த பாடல்" என்றும் திருவாசகத்தில் சொல்லி யிருப்பவற்றைத் தேவாரம் பாடிய மூவரைக் குறிப்பன என்று ஏன் கொள்ளக் கூடாது? "நரியைக் குதிரைசெய் வானும்" என்னும் செய்யுள் நான் சொல்லும் பொருளையும் ஏற்காதென்று சொல்லஇயலாதே. ஒரு செய்யுள் இரண்டு வகையாய்ப் பொருள் படுமானால் அவற்றில் தங்களுக்கியைந்த ஒருவகைப் பொருளைக்கொண்டு சரித்திர வாராய்ச்சியில் பெரிய விவாத அம்சமாயிருக்கிற விஷயத்தை வேறு ஆதாரமின்றி முடிவுசெய்ய முயலுவது சரியாமோ? அப்படி முடிவு செய்வதற்கு அவர்கள் கொள்ளும் பொருளைத்தவிர்த்துச் செய்யுளுக்கு வேறு பொருள் கொள்வதற் கிடமில்லாதிருக்க வேண்டும். அல்லது அவர்கள் கொள்கையை நிலைநாட்டுவதற்கு வேறு பிரமாணங்கள் உளவாயின் அவற்றோடு இதையுங் கூட்டலாம்.

4. திருவிசைய மங்கைத் தேவாரத்தில் "வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே" என்பதில் மங்கல வாசகர் என்னும் தொடர்மொழி வாதவூரடிகளைக் குறிப்பதென்பர். அத்தேவாரம்,

> "குசையு மங்கையிற் கோசமுங் கொண்டவவ்
> வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே
> இசைய மங்கையுந் தானுமொன் றாயினன்
> விசைய மங்கையுள் வேதியன் காண்மினே."

என்பது. இதில், மங்கலவாசகர் என்றிருப்பது மாணிக்கவாசகரை உணர்த்துமெனில் மங்கலம்என்னும்பதம் மாணிக்கமென்று

பொருள் படவேண்டுமே? இல்லை, மங்கலம் என்னும் பதத்திற்குச் சுபமென்பது பொருளென்னில் வாசகன் என்னும் பதம் மணிவாசகன் என்று பொருள்படவேண்டும். இதைப்பற்றி முன்னமேயே நான் சொல்லிவிட்டேன். மேலும், குசையும் அங்கையிற் கோசமுங்கொண்ட மங்கலவாசகர் மாணிக்கவாசகரா? வாசகர் என்னும் பதம் பன்மையிலிருப்பதுங் கவனிக்கத்தக்கது. வாசகன் அல்லது வாசகர் என்னும் பதத்தை எங்குக் கண்டாலும் தாவிப்பிடித்து அதை மாணிக்கவாசகராக்கப் பார்க்கின்றனர்.

5. திருப்பூவணத் தேவாரத்தில் "வையைத்—திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றும்" என்றிருப்பது சிவபிரான் வையைக்கரையில் பிட்டுக்கு மண்சுமந்ததைக் குறிக்கும் என்பர். நின்றது என்னும் சொல்லுக்கு மண்சுமந்தது என்று பொருள் கொள்கின்றனர். மண்சுமந்து நின்றாரா? நடந்தாரா? கோடு என்னும் பதத்திற்குக் கரை என்பதுபொருள். சோமசுந்தரக் கடவுள் நிலைபெற்றிருப்பது வையைக் கரையிலுள்ள மதுரையிலன்றோ? பின்கண்ட செய்யுட்களைக் கவனிக்க அவை,

"வையைதன்-நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்." (கலித்தொகை.)
வந்து மதுரை மதில்பொரூஉம் வான்மலர் தாஅ
யந்தண புனல்வையை யாறு" (பரிபாடல்.)
"அமிழ்த வெண்டிரை வையையு மொருபுறத் தகழாம்."
(திருவிளையாடல்.)

என்பன. மேற்கண்ட சொற்றொடர்களை மதுரையில் சோமசுந்தரக்கடவுள் நிலைபெற்றிருப்பதை உணர்த்துவன என்று கொள்ளாது, தங்களது தவறான கொள்கையை நிலைநாட்டுவதற்குத் திருப்பதிகங்களைத் தங்கள மனம்போனவாறெல்லாம் வலிந்து பொருள்கொள்வது சரியாமோ?

6. இரண்டு திருவிளையாடல்களிலும் வாதவூரடிகள் சம்பந்த மூர்த்தி சுவாமிகளுக்கு முன்னிருந்தார் என்று சொல்லியிருப்பது தங்கள் கொள்கைக்குப் பெரிய பிரமாணம் என்பர். பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல், சோமசுந்தரக்கடவுள்

வரகுண பாண்டியன் காலத்துத் திருமுகப்பாசுரம் கொடுத்துப் பாணபத்திரரைச் சேரனிடத்து அனுப்பினர் என்று கூறும். அந்தச் சேரனைக் கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் என்று பெரிய புராணம், மற்றொரு திருவிளையாடல் இரண்டும் கூறும். சுந்தரமூர்த்திகளும் கழறிற்றறிவாரும் சமகாலத்தவர் என்பதுயாவரும் அறிந்ததே. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்படி வாதவூரடிகளை அமைச்சராய்க்கொண்ட அரிமர்த்தன பாண்டியன் வரகுண பாண்டியனுக்கு 43 தலைமுறை பிந்தியிருந்தவனுவன். இதனால் சுந்தரமூர்த்திகள் வாதவூரடிகளுக்கு வெகு காலம் முந்தியிருந்தவர் என்றேற்படும். சுந்தரமூர்த்திகள் சம்பந்த சுவாமிகளுக்குக் காலத்தால் பிந்தியவர் என்று முன்னமே காட்டினேன். இஃது உண்மையானால் திருவிளையாடல்களைப் பிரமாணமாய்க் கொள்பவர் கூற்று விழலாய்ப்போமே. ஈண்டு, திருவிளையாடல்கள் சரித்திர ஆராய்ச்சிக்குப் பிரமாணம் ஆகுமா வென்பதை விசாரிப்போம்.

திருவிளையாடல் புராணவரலாற்றில், காசியில் விசுவேசுவரர் சந்நிதியில் சனகாதி நால்வர், நாரதர், கோதமர், பரசுராமர், வசிஷ்டர், அகத்தியர் முதலியோர் கூடியிருந்த காலத்து ஏனைய முனிவர்கள் அகத்திய முனிவரை நோக்கித் தென்னாட்டிலுள்ள தலங்களில் மிகச்சிறந்த தலத்தைச்சொல்லும்படி பிரார்த்திக்க, அவர் மதுரைத்தலத்தின் சிறப்பையும், அதில் நிகழ்ந்த 64 திருவிளையாடல்களையும் சொன்னதாகப் பழைய திருவிளையாடலும்; அகத்தியர் கூறியதைச் சம்புபத்தன், சதானந்தன் முதலியோர்க்குச் சூதர் சொல்லியதாகப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலும் கூறுகின்றன. அகத்திய முனிவர் இந்த மாகாத்மியங்களை யாரிடத்து உணர்ந்தார் என்பதை யுணர்த்தும் பழைய திருவிளையாடற் செய்யுள்கள்

"ஓதரிய வுத்தரமா புராணந் தன்னு
 ளுண்மைதரு சாரசமுச் சயத்து முன்னே
மேதகுநன் கதைவிரிவிற் கண்டெ னக்கு
 வியாதன்வான் மீகியெச்சன் சொன்ன வெண்ணெண்
டிதில்விளை யாடல்களிற் பிறங்கு மிந்தத்
 திருவிளையா டலின்பரப்பைச் சுருக்கி யின்று

போதமுற வுமக்குரைத்தேன யானுஞ் சொக்கன்
புகழினையார் கரைகண்டு புகலு வாரே.'

"வியாதன்வான் மீகியெச்சன் விரித்திறை விளையாட் டோங்க
ஆதியில் வருமென் றுய்ந்த அறுபத்து நாலி லக்கந்
றாய்தரு கவிகள் தம்மைச் சுருக்கிமூ வாயிரத்தின்
ஒதிரு னகத்தி யன்பின் புரைத்தனன் றமிழா லின்றே.'

என்பன. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலிற் கீழ்க்கண்ட செய்யுட்கள் இவ்வரலாற்றைக் கூறுவன. அவை,

"இன்ன வாறனுட் சங்கர சங்கிதை யென்று
சொன்ன நூலினை யுணர்த்தினன் சங்கரன் றுணைவிக்
கன்ன போதவன் மடிமிசை யிருந்துகேட் டதனை
மின்னி வேல்பணி கொண்டவேள் வெளிப்பட வுணர்ந்தான்."

"குன்றெ றிந்தவேள் வழிபடு குறுமுனிக் குரைத்தான்
அன்று தொட்டிது அகத்திய சங்கிதை யாகி
நின்ற தன்னது கேட்பவர்க் கரனடி நீழல்
ஒன்று பின்பவீ டளிப்பதா வொருதல னுரைக்கும்."

"அங்கயற் கண்ணி தன்னையு மெந்தை
யாலவா யரனையு மிதய
பங்கயத் திருத்திச் சமாதியி லிருந்து
பரவச மடைந்துபார்ப் பதிக்குச்
சங்கர னருளிச் செய்தசங் கிதையைத்
தாரக னுடலிரண் டாகச்
செங்கைவேல் விடுத்த சேவகன் எனக்குத்
தெருட்டின னனையசங் கிதையில்."

"பெறற்கருந் தவஞ்செய் தகந்தெளிந் தரிதிற்
பெறுங்கதி கேட்டவர்க் கெளிதா
யுறப்படுந் தலநீர் விளையமூச் சிறப்பு
முள்ளதெத் தலத்தினுங் கழிந்த
சிறப்பினுக் கெண்ணெண் டிருவிளை யாடல்
செய்தருள் வடிவெடுத் தென்றும்
மறைப்பொருள் விளங்கு மாலவா யதனை
மண்ணின்மேற் சிவனுல கென்னும்."

என்பன. உத்தரமா புராணத்தில் சாரசமுச்சயம் என்னும் பகுதியிலிருந்து வான்மீகி யெச்சன் அகத்தியருக்குத் திருவிளையாடல்களைச் சொன்னதாகப் பழைய திருவிளையாடல் கூறுகின்றது.

சிவபெருமான் சங்கர சங்கிதையிலிருந்து கூறக் குமரக்கடவுள் கேட்டு அகத்தியருக்குச் சொன்னார் என்றும், அகத்தியர் கேட்ட காலமுதல் அப்புராணம் அகத்திய சங்கிதை என்னும் பெயரை அடைந்தது என்றும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் கூறுகின்றது. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலி லுள்ளவற்றைவிடப் பழைய திருவிளையாடலில் மூர்த்தியாருக்கு அரசளித்த திருவிளையாடல், காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடல், புல்வாய்க்கு முலையருளின திருவிளையாடல் என்ற மூன்று திருவிளையாடல்கள் அதிகமாயுள்ளன. பரஞ்சோதிமுனிவர், திருவிளையாடல் 64 என்னுந் தொகையைச் சரிப்படுத்தப் பழைய திருவிளையாடலிலுள்ள கதைகளில் இரண்டு கதைகளை ஒவ்வொன்றை இரண்டிரண்டாக்கினர். ஒரு திருவிளையாடலில் ஒரு பகுதியை விடுத்து மிகுந்த பகுதியை ஒரு திருவிளையாடலாக்கினர். ஒவ்வொரு திருவிளையாடலிலும் பழைய திருவிளையாடலில் காணப்படும் சில விசேஷங்கள் பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலில் காணக்கிடையா. பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலில் காணப்படும் சில விசேஷங்கள் பழைய திருவிளையாடலில் காணக்கிடையா. ஒன்றிற் சொன்னதற்குமாறாய் மற்றொன்றிலுள்ள கதைகள் பலவாம். உதாரணமாகச் சிலவற்றை மட்டும் ஈண்டுக் காட்டுகின்றேன். அவை:

| விஷயம். | பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் | பழைய திருவிளையாடல. |
|---|---|---|
| பாணபத்திரருக்குத் திருமுகப்பாசுரம் கொடுத்தது: | வரகுணபாண்டியன் காலத்தே. | வரகுணன் ஆட்சிக்குப் பின் அவன் மகனது ஆட்சி; அதற்குப் பின்னர் ஆட்சி புரிந்த ஒரு பாண்டியன் காலத்தே. |
| நந்தியைச் சுறாமீனாகப் பிறக்கும்படி சிவபெருமான் சாபமிட்டது. | விநாயகர், குமரக்கடவுள் இவர்களை உத்தரவின்றி உள்ளே விட்டதற்காக. | ஒரு கணநாதரை உத்தரவின்றி உள்ளே விட்டதற்காக |
| சங்கப் புலவர்களுள் கலகம் நேர்ந்தது. | தாம் தாம் பாடிய பாடல்களின் உயர்வு தாழ்வுகளைப் பற்றி. | இறையனார் சூத்திரத்திற்கு அவர்கள் செய்த உரையின் உயர்வு தாழ்வுகளைப் பற்றி. |
| இந்திரன் முடிமேல் வளையை எறிந்தது. | உக்கிர பாண்டியன். | வீரமாறன் என்னும் பாண்டியன்; இவன் வேறு |
| மேருவைச் செண்டாலடித்தது. | உக்கிர பாண்டியன். | உக்கிரபாண்டியன் குலத்துதித்த தென்னன் ஒருவன் |
| இறைவனார் மண்சுமந்தபோது பிரம்படிபட்டது. | கையிற் பொற்பிரம்பு வாங்கி வேந்தன் அவர் முதுகில் வீசினான். | தென்னன் முறைசெய்வோர்கள் நடுமுதுகில் கறுத்தடித்தார். |

பழைய திருவிளையாடலைப் பதிப்பித்து மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் இரண்டு திருவிளையாடற் புராணங்களிலுமுள்ள வேறுபாடுகளிற்சிலவற்றைக் காட்டியிருக்கின்றார்கள். வேறுபாடுகள் அநேகமுள.

தில்லை நம்பி பாண்டியர்களில் ஆறு பேருக்குத்தான் பெயர் சொல்லியிருக்கின்றனர். பரஞ்சோதி முனிவர் 73 பாண்டியர்களின் பெயரைச் சொல்லுகின்றனர். தில்லைநம்பி தத்தன் என்று பாண்டியன் பெயரைக் கூறியவிடத்துப் பரஞ்சோதி அனந்தகுண பாண்டியன் என்றெழுதியிருக்கின்றனர். தில்லை நம்பி வீரமாறன் என்னும் பெயர் கூறியவிடத்துப் பரஞ்சோதி அரசபுரந்தர பாண்டியன் என்று வரைந்துள்ளார்.

தில்லைநம்பி யுகத்துக்குப் பதினாறாக 64 திருவிளையாடலும் நான்கு யுகங்களில் நடந்தன என்றனர். அஃது.

“ஈனமிலா விந்நகரி தன்னுள் எந்தை
யிலங்குபுக ழறுபத்து நான்குண் டோதின்
மீனவர்கோன் குலஞ்செய்த தவத்தி னானும்
மேதினிமான் முயன்றவருந் தவத்தி னானும்
ஞானமுனி வர்கள்கேண்மின் உகமொன் றிற்கு
நானான்கு நானான்கா நான்கு கத்து
மானவவை தமையுரைப்ப லநாதி மும்மை
யகலாத வல்வினைக ளகல வென்றே.”

என்ற செய்யுளால் அறியப்படும். தில்லை நம்பி திருவிளையாடலில் சொல்லுகிறபடி வாதவூரர் திரேதாயுகத்தில் இருந்தவராதல் வேண்டும். அவர் கதை 27, 28, 29, 30 இந்தத் திருவிளையாடல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. அஃது இரண்டாவது பதினாறிலடங்கும். சம்பந்தமூர்த்திகள் கதை துவாபர முற்பாதியில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். அது 37, 38-ஆம் திருவிளையாடல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டு திருவிளையாடல்களிலும் திருவிளையாடல்களின் வரிசைக்கிரமம் முற்றிலுமாறுபாடுகின்றது. பரஞ்சோதி முனிவரும் பாண்டியர் வம்சபரம்பரையைத் தொடர்ச்சியாய்ச் சொல்லிக் கதைகளும் அம்முறை

யிலே நிகழ்ந்தனவென்பர். சோமசுந்தரக் கடவுள் பெயரும் உக்கிரபாண்டியன் பெயரும் இரண்டு திருவிளையாடல்களிலும் முதலில் சொல்லப்படுகின்றன. தில்லை நம்பி திருவிளையாடலில் சொல்லியபடி அவர்கள் கிருதயுக ஆரம்பத்திலிருந்தவராதல் வேண்டும். வாதவூரர் கதையைச்சொல்லும் திருவிளையாடல்களுக்கும், சம்பந்தமூர்த்திகள் கதையைச்சொல்லும் திருவிளையாடல்களுக்கும் இடையில் வேம்பத்தூரார் திருவிளையாடலில் விருத்தகுமார பாலரான திருவிளையாடல், மாறியாடின திருவிளையாடல், பழியஞ்சின திருவிளையாடல், மாபாதகந்தீர்த்த திருவிளையாடல், அங்கம்வெட்டின திருவிளையாடல், மதுரையான திருவிளையாடல் என்ற இவை காணப்படுகின்றன. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலில் இரண்டு கதைகளும் ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இடையில் வேறு திருவிளையாடல் ஒன்றும் இல்லை. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்படி சம்பந்தசுவாமிகள் காலத்துப் பாண்டியன் கடைசிப் பாண்டியன், தில்லை நம்பி புராணத்துச் சம்பந்தசுவாமிகள் கதையைச் சொல்லும் திருவிளையாடல்களுக்குப் பின்னர் 26 திருவிளையாடல்கள் உள.

மேலும், தில்லை நம்பி திருவாலவாயான திருவிளையாடலின் (47) பிரமகற்பம் நேரிட்டதையும், அதற்குப் பின்னர் நிகழ்ந்த

"பிரளய காலஞ் சென்று முடித்தபின் பெருகி வந்த
திரைபொருங் கடலு முன்போற் சேர்தலும் னிலையி னிற்பச்
சுரர்பர னருளால் வையந் தோன்றிட மடைவின் முன்னோர்
தருமமார் வடிவ மன்னன் தோன்றினான் சசிகு லத்து."

அக்காலத்துத் தோன்றிய பாண்டியன் வேண்ட இறைவன் நாகத்தை மதுரைக்கெல்லை காட்டும்படி செய்தனர் என்று சொல்லியிருக்கிறது. பிரமகற்பம் முடிந்து பூமி சிருஷ்டிக்கப்பட்டவுடன் இது நிகழ்ந்ததாயிருந்தால் அக்காலம் கிருதயுக ஆரம்பமாயிருத்தல் வேண்டும். இது நாற்பத்தேழாவது திருவிளையாடலில் சொல்லப்பட்டிருக்கிறது. அது துவாபரயுக அந்தமாயிருக்கவேண்டும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல்,

"வெள்ளநீர் வறப்ப வாதி வேதியன் ஞால முன்போல்
உள்ளவா றுதிப்ப நல்கி யும்பரோ டிம்ப ரேனைப்
புள்ளொடு விலங்கு நல்கிக் கதிருடற் புத்தேண்மூவர்
தள்ளரு மரபின் முன்போற் றமிழ்வேந்தர் தனையுந் தந்தான்""

என்றுகூறுகின்றது. அக்காலத்துத் தோன்றிய பாண்டியன்வங்கியசேகரன். வரிசைக்கிரமத்தில் நாற்பத்தொன்பதாவது படலத்தில் இக்கதை சொல்லப்பட்டிருக்கிறது. வங்கியசேகரன் கிருதயுகத்தில் இருந்தவனாதல் வேண்டும். இவன் மகன் வங்கிய சூடாமணி என்பான். அவனுக்குச் சண்பகமாறன் என்னும் பெயருமுண்டு. இவன் காலத்திலேதான் தருமிக்குப் பொற்கிழி யளித்ததும்; இடைக்காடர் நக்கீரர் முதலிய சங்கப்புலவர் இருந்ததும்; சங்கத்தார் கலகந்தீர்த்ததும். சங்கத்திறுதிக் காலத்திருந்த நக்கீரர் முதலியோர் கிருதயுகத்தினராதல் வேண்டும்.

இது நிற்க, உக்கிரபாண்டியன் மகன் வீரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் ஒரு மகாகற்பம் நேரிட்டதாகப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலில் வேதத்துக்குப் பொருளருளிச் செய்ததைச் சொல்லிய பதினாறாவது படலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அஃது,

"ஐம்பெரும் பூத நிலைதிரிந் தீரே
முடுக்கிய வுலகொடு மயன்மால்
உம்பர்வான் பதமு முதித்தவா றொடுங்க
வுருத்தவோ ரூழிவந் தெய்தச்
செம்பொருண் மறையு மொடுங்கிய வழிநாட்
செஞ்சுடர்க் கடவுள்முன் மலரும்
வம்பவிழ் கமல மெனவரன் றிருமுன்
மலர்ந்ததா லகிலமு மாதோ."

என்பதால் அறியப்படும். பிரபஞ்சம் மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்ட பிறகு வேதத்துக்குப் பொருள் தெரியாது கண்ணுவர் முதலியோர் இடர்ப்படுவாராயினர். அவர்க்கு இறைவன் வேதத்துக்குப் பொருளருளிச் செய்தனன். இக்காலத்தும் வீரபாண்டியன் இருந்தான் என்பது வியப்பே. அயன் மால் இவர்களும் முடிவடையும் மகாகற்பத்தைக் கடந்து மானிடயாக்கையைத் தாங்கிய பாண்டி

யன் ஒருவனிருந்தான் என்பது பொருத்தமுடையதாகுமா? அடுத்த படலத்தில் இவன் உழுவைக் கோட்பட்டான் என்று சொல்லியிருக்கிறது. வேதத்துக்குப் பொருள் அருளியது பதினூறாவது படலம் என்பதை முன்னமே சொன்னேன். பதினூறாவது படலத்தில் ஒரு பிரளயமும் நாற்பத்தொன்பதாவது படலத்தில் ஒரு பிரளயமும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டிற்குமிடையே அநேகமாயிரம் சதுர்யுகங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். தில்லை நம்பி அதை 64-வது திருவிளையாடலாக வைத்து ஒரு பிரளயம் நேர்ந்ததாகச் சொல்லி அதைப் பிரமகற்ப மென்றனர். வேதத்துக்குப் பொருளருளியது ஒரு கிருதயுகத்திலும், நாகம் மதுரைக்கு எல்லை குறித்தது வேறோர் கிருதயுகத்திலுமாதல் வேண்டும். திருவிளையாடல்கள் பல சதுர் யுகங்களில் நிகழ்ந்தவை என்றாகும். தில்லை நம்பி "உகமொன்றிற்கு நானூன்கு நானூன்கா நான்குகத்து மானவை" என்றது இதனோடு எவ்வாறு பொருத்தமுடைத்தாம்?

மேலும், உக்கிரபாண்டியனது பெயரனின் பெயரனாகிய ராஜசேகர பாண்டியன் ஆட்சிக்காலத்து மாறியாடின திருவிளையாடல் நிகழ்ந்தது. அதைச் சொல்லும் படலத்தில் பின்கண்ட செய்யுட்கள் உள்ளன. அவை,

"சிலம்பி வாயினூ லிழைத்திடு பந்தரிற்
செங்கண்மால் தொழவைகும்
அலம்பு தொண்டிரைப் பொன்னியந் தண்டுறை
யானைக்கா விறைக்கன்பு
கலந்த சிந்தையான் மூவிரு பத்துநாற்
கலைகளும் பயின்றுள்ள
மலர்ந்த வன்கரி காற்பெரு வளத்தவன்
வையகம் புரக்கின்றான்.'

"பொன்னி நாடவன் வாயிலுள் ளாரொரு
புலவன்வந் தலர்வேம்பின்
கன்னி நாடனைக் கண்டுமுன் பரவுவான்
கனைகழற் கரிகாலெம்
மன்ன வற்கறு பத்துநாற் கலைகளும்
வருழ்வரா தனக்கொன்று
தென்ன ரேறனை யாயது பரதநூல்
தெரிந்திலை யெனச்சொன்னான்."

என்பன. இச்செய்யுட்களால் கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழனும், ராஜசேகர பாண்டியனும் சமகாலத்தவ ரென்பதேற் படுகிறது. சோழவம்சத்தில் கரிகாலன் என்னும் பெயருடைய அரசர் சிலர் இருந்தனர். கரிகாற் பெருவளத்தான் என்னும் பெயர் தாங்கிய சோழன் ஒருவனே இருந்தான். கரிகாலன் என்னும் பெயரை வகித்த மற்றையவரும் பெருவளத்தானுக்குப் பிந்தியவரே. சரித்திரவாராய்ச்சிக்காரர் கரிகாற் பெருவளத்தான் கி. பி. முதலாவது நூற்றூண்டின் பிற்பாகத்திலோ இரண்டாம் நூற்றூண்டின் முற்பாகத்திலோ இருந்தவன் என்பர். உக்கிர பாண்டியனும் கிரிஸ்து பிறந்த காலத்தையொட்டி இருந்தவனுவன். சம்பந்தமூர்த்திகள் காலம் ஏழாம் நூற்றூண்டு என்று முன்னமே சொன்னேன். அவர் காலத்திருந்தவன் கூன்பாண்டியன். அவனுக்கும் உக்கிரபாண்டியனுக்கும் சுமார் 70 தலைமுறை வித்தியாசம் எனத் திருவிளையாடலில் சொல்லியிருப்பது பொருத்தமுடையதாமா? தில்லை நம்பி புராணத்தில் மூர்த்தியார்க் கரசளித்த திருவிளையாடல் கூறப்பட்டுளது. அவர் காலம் கி. பி. ஆறும் நூற்றூண்டாயிருத்தல் வேண்டும் என்று காட்டினேன். வரகுணபாண்டியன் காலமும் சொல்லியாயிற்று. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலில் சொல்லியிருக்கிற பாண்டியர்களனைவருடைய காலத்தையும், தலைமுறைக்கு 30 ஆண்டாகவைத்துக் கணக்கிட்டால் 2200 ஆண்டுகளுக்கு மேற்படாதென்பதும் கனிக்கத்தக்கது.

இஃதன்றியும், சங்க காலத்து நூல்களால் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, நிலந்தரு திருவிற் பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், வெற்றிவேற் செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், உக்கிரப் பெருவழுதி முதலிய பல பாண்டியர்கள் இருந்ததாகத் தெரிகிறது. இவர்களனைவரும் சம்பந்த மூர்த்திகளுக்குக் காலத்தால் முந்தியவர்கள். இவர்களில் ஒருவர் பெயரையாவது திருவிளையாடலில் காணேம். உக்கிரப்பெருவழுதியும் உக்கிரபாண்டியனும் ஒருவர் என்று கொள்வதற்கில்லை. உக்கிரபாண்டியன் சோமசுந்தர பாண்டியாது புத்திரன். உக்கிரப்பெருவழுதி தலையாலங்கானத்துச் செருவென்ற

நெடுஞ்செழியன் மகன். இருவர் சரித்திரங்களும் பலவகையில் மாறுபடும். களப்பிரர் ஆக்கிரமணத்துக்குப் பிறகு ஆட்சி புரிந்த பாண்டியர்கள் பெயரும் திருவிளையாடலில் கணக்கிடையா. சங்க நூல்களில் கண்டவற்றையும், சாஸனங்களில் கண்டவற்றையும் பொய் என்றுசொல்வதற்கில்லை. திருவிளையாடல்களில் அசம்பாவிதமான பல செய்திகள் காணப்படும். அவைகளைத் தொகுப்பதனால் பயனில்லையென விடுத்தேன். மேற்கண்டவைபோன்ற அசம்பாவிதங்களுக்குச் சமாதானம் சொல்ல ஒருவர் முன்வரும் வரையில் சரித்திரவாராய்ச்சிக்குத் திருவிளையாடல்களைப் பிரமாணமாகக் கொள்வதற்கில்லை. அவைகள் சம்பந்தமூர்த்திகள் காலமாகிய ஏழாம் நூற்றாண்டுக்கும் வாதவூரடிகள் காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதிக்கும் பின்னர் இயற்றப்பட்டனவாயிருத்தல் வேண்டும். அவைகளில் வரும் பாண்டியர்களின் பெயரைப் பார்ப்பதனால் வடமொழிப் பண்டிதர்கள் எழுதிய என்பதை அறியலாம். சங்க காலத்து இருந்த பாண்டியர்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்கள். இப்புராணங்கள் சங்க காலத்துக்குப் பிந்தியவைகளே.

ஒன்றோடொன்று முரணுவவாயும் அசம்பாவிதங்கள் பொதிந்துள்ளனவாயுமுள்ள இக்கதைகளைத் திரிகாலமுணர்ந்தவரும் பரமசிவனால் தனக்கொப்பானவர் என்று சொல்லப்பட்டவரும், உத்தமோத்தம முனிசிரேஷ்டருமாகிய அகத்தியபகவான் சொல்லினர் என்பது சரியாமா? பிற்காலத்தவர் மனம்போனவாறு புனைந்து பெரிய முனிவர்கள் பெயரால் வெளிப்படுத்திய கிரந்தங்கள் பலவற்றுள் இவைகளும் சேர்ந்தவைபோலும்! பெரியார் பெயரைக் கண்டு நம்பி யாவரும் ஒழுகவேண்டும் என்பது அவர்கள்நோக்கம். இதனால் திருவிளையாடல்களைப் பொய் என்று நான் சொன்னதாகக் கொள்ளுதல்கூடாது. உண்மைச் சம்பவங்களோடு பலவற்றைக் கூட்டியும் மாற்றியுங் கூறுவார் செயல்களைச் சொன்னேன்.

தமிழில் திருவிளையாடல்களைச் செய்த இருசான்றோரும் உயர்ந்த கல்விமான்கள். ஆழ்ந்த சிவபக்தர்கள். பக்திரஸம் முதலிய ரஸங்களு சொட்டும்படி தாங்கள் நம்பியதை அழகாய்ப் பாடியிருக்கிறார்கள். இல்லைநம்பி சொல்லும் உத்தரமா புராணம் இருக்கு

மிடம் தெரியவில்லை. பரஞ்சோதி முனிவர் சொல்லும் சங்கர சங்கிதை எங்கும் கிடைக்கிறது. இக்கதைகளை அதில் காணேம். ஹாலாஸ்யமகாத்மியம் என்னும் வடமொழிக் கிரந்தத்தைப் பரஞ்சோதிமுனிவர் தமிழில் மொழிபெயர்த்தனர் என்பர். அது சங்கர சங்கிதையின் பகுதியாமோ? அதை யார் எங்கு எக்காலத்தில் செய்தனர்? ஒன்பதாம் நூற்றுண்டிக்குப் பின்னர் இயற்றப்பட்டவைகளில் ஒன்றும்.

இது நிற்க, வாதவூரடிகள் தேவாரம் பாடியவர்களுக்கு முந்தியவர் என்பார் தங்களது கூற்றை நிலைநாட்ட இரண்டு தேவாரங்களுக்கு உண்மைக்கு மாறுய்ப் பொருள் கொள்வர். ஒன்று சம்பந்தசுவாமிகள் பாடிய "பாணனிசை பத்திமையாற் பாடுதலும் பரிந்தளித்தான்" என்னும் திருக்கோளிலித் தேவாரம். அவர் அதில் பாணன் என்றுள்ளதற்குப் பாணபத்திரன் என்றும்; அளித்தான் என்பதற்குத் திருமுகம் கொடுத்தான் என்றும் பொருள்கொள்வர். சம்பந்தமூர்த்தியடிகள் பாணன் என்றது யாரை என்பதையும், அளித்தான் என்பதற்குத் திருமுகம் கொடுத்தான் என்பது பொருளா என்பதையும் ஈண்டு ஆராய்வாம். பெரியபுராணம் பாடிய சேக்கிழார்நாயனுர் சம்பந்தமூர்த்திகளுடனிருந்து அவர் பாடிய பதிகங்களை மனைவியும் தாமுமாக யாழிலும் குரலிலும் பாடிய நீலகண்ட யாழ்ப்பாணர் எனப்பொருள் கொண்டார் என்பது வெளிப்படை. சோமசுந்தரக்கடவுள் திருமுகப்பாசுரம் கொடுத்தனுப்பியது சுந்தரமூர்த்திகளோடு சமகாலத்தவரும், அவரது நண்பருமான சேரமான் பெருமாளுக்கென்றால் தேவாரத்துக்கிவர் செய்யும் அர்த்தம் முற்றிலும் பொருந்தாததொன்றும். பெரியபுராணம்—சேரமான் பெருமாள் நாயனுர் புராணத்தில் திருமுகப்பாசுரம் கொடுத்துப் பாணபத்திரை அனுப்பியது அவரிடத்தென்று தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சேரமான் பெருமாள் பாணபத்திரர்க்கு நிதிகொடுத்தனுப்பியதைப் பின்கண்ட செய்யுட்கள் உணர்த்தும். அவை,

"பரந்த நிதியின பரப்பெல்லாம் பாண னார்பத் திரனார்க்கு
நிரந்த தனங்கள் வெவ்வேறு நிறைத்துக் காட்டி யற்றிவையும்
உரந்தங் கியவெங் கரிபரிகள் முதலாவுயிருள் ளனதனமும்
புரந்தவரசுங் கொள்ளுமெனமொழிந்தார் போறையர் புலவலனார்"

"பண்பு பெருகும் பெருமாளும் பாண னார்பத் திரனார்பின்
கண்கள் பொழிந்த காதனீர் வழியக் கையாற் றொழுதணைய"

என்பன. பத்திரனார்சென்றனர் என்று சொல்லியிருக்கிறது. பொறையர் புலவலனாராகிய பெருமாள் கொடுக்க, பாணபத்திரனார் பெற்றனர் என்பது இதனால் தெளிவாய் விளங்கும். பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடலிலும் சிவபெருமான் பத்திரனார்க்குச் சொல்லியதை அடியிற்கண்ட,

"உனக்கினி யளித்தற் கென்பா லுறுபொரு ளில்லை யென்றன்
மனத்தினுக் கினியன் றாயான் மகிழ்ந்துநம் மடியார்க் கென்றும்
நினைத்தன கொடுக்க வலவான் நிலத்துயிர் கழறுஞ் சொற்கள்
அனைத்தையு மறிந்திரங்கு மன்புடைச் சேரமான்காண்.'
(திருமுகங்கொடுத்த திருவிளை.)

என்ற செய்யுளுணர்த்தும். இதைச் சொல்லித் திருமுகத்தைக் கொடுத்தனர். சிவபெருமான் பெருமாளுக்கு அரசளித்தகாலத்து அவருக்கு அளித்த மற்றவை இன்னவென்பதைப் பின்கண்ட பெரிய புராணச் செய்யுள் காட்டும். அது,

"மேவு முரிமை யரசளித்தே விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாருங் கழறினவு மறியு முணர்வு மீறில்லாத்
தாவில் விறலுந் தண்டாத கொடையும் படைவா கனமுதலாங்
காவன் மன்னர்க் குரியனவு மெல்லாங் கைவந் துறப்பெற்றார்.'

என்பது. இதனால் யாவும், யாருங் கழறினவும் அறியும் உணர்வைப் பெருமாள் பெற்றதனால் கழறிற்றறிவார் எனப் பெயர் வாய்த்தனர் என்பது அறியப்படுகிறது. இந்தக் காரணச்சிறப்புப் பெயர் வேறொருவருக்கும் யானறிந்தவரையில் தெரியவில்லை. நம்பியாண்டார் நம்பி தாம்செய்த திருவந்தாதியிலும் இப்பெயர் பெருமாளுக்கு உண்டென்பதை விளக்குகின்றனர்.

"மன்னர்பி ரானெதிர் வண்ணா னுடலுவ ரூறியநீ
றன்னபி ரான்றமர் போல வருதலுந் தான்வணங்க
வென்ன பிரானடி வண்ணா னெனவடிச் சேரனென்னுந்
தென்னர் பிரான்கழ றிற்றறி வோனெனுஞ் சேரலனே."
(சேரமான்—புராணம்.)

என்ற செய்யுளாலும் கழறிற்றறிவார் என்பது பெருமாளது பெயர் என்பது நன்கு விளங்கும். சுந்தர மூர்த்திகள் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையிலும் இந்நாயனாரைச் சேரமான் பெருமாள் என்னாது கழறிற்றறிவார் என்றே சொல்லுகின்றனர். அது,

"கார்கொண்ட கொடைகழறிற் றறிவார்க்கு மடியேன்."

என்பதனால் அறியப்படும். பெரிய புராணத்தில் சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தைக் கழறிற்றறிவார் நாயனார் புராணம் என்று புலவர் பலரும் எழுதியிருப்பதைப் பார்க்கலாம். சான்றோர் நீண்டகாலமாய்க்கொண்ட கொள்கைக்கு மாறாய்ச் சிலர் பெருமாளுக்குக் கழறிற்றறிவார் என்னும் பெயரில்லை என்பர். அவர் கூற்று ஒரு சிறிதும் பொருத்தமின்றாம். இவர் தம் மயக்கத்தைச் சான்றோர்மேலேற்றி அவர் மயங்கினர் என்பர். தம் தலைச்சுற்றினால் உலகஞ் சுற்றுவது போலத் தோன்றுவது இயல்பே.

கழறிற்றறிவார்நாயனார் நடராஜப்பெருமானது கழலையே நம்பினவராய்ச் சிவபூஜை செய்வாராயினர். நடராஜர் அடிகளின் பூஜை முடிவில் தம் காற்சிலம்பொலியை அவர் கேட்கும்படி அருளினர். அது,

"நீடு முரிமைப் பேரரசா
ணிகழும் பயனு நிறைதவமும்
தேடும் பொருளும் பெருந் துணையுந்
தில்லைத் திருச்சிற் றம்பலத்துள்
ஆடுங் கழலே யெனத்தெளிந்த
வறிவா லெடுத்த திருப்பாதம்
கூடு மன்பி லருச்சனைமேற்
கொண்டார் சேரர் குலப்பெருமான்."

"வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ் சாந்த மணித்தூபம்
தேசிற் பெருகுஞ் செழுந்தீப முதலா யினவுந் திருவமுது
மீசற் கேற்ற பரிசினா லருச்சித் தருள வெந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பி னொலியளித்தார்"

(கழறிற்—புராணம்.)

என்பதனால் அறியப்படும். கல்லாடமுடையார் "பரிபுரக் கம்பலை யிருசெவி யுண்ணும்--குடக்கோச் சேரன்" என்றதும் இதை உணர்த்தும். கழறிற்றறிவாராயும், நடராஜனது பாதச்சிலம்பொலி கேட்போராயும், அளப்பரிய சிவபக்தி யுடையோராயும், சிவனடியார் முதலாயவர்க்கு மேகம்போல் வழங்குபவராயும் இருந்த சேரமான் பெருமாளிடத்துக் கடவுள் திருமுகப்பாசுரம் கொடுத்துப் பத்திரரை அனுப்பினார் என்று யாவரும் சொல்ல, அதற்கு மாறாய் மேற்கண்ட சிலர் பத்திரர் திருமுகப்பாசுரம் கொண்டுபோனது வேறொரு சேர அரசனுக்கென்பர். திருமுகப் பாசுரத்தில் "நின்போ லென்பா லன்பன்" என்று கூறியிருப்பதைக் கவனித்திலர்போலும். பத்திரர் தம்மிடத்து வைத்த அன்பிற்கு உவமையாகப் பெருமாள் தம்மிடத்து வைத்த அன்பைக் காட்டினர் என்றால் பெருமாளது பத்திமையின் பெருமையை எவ்வாறு அளவிடுவது? உயர்ந்ததையே உவமை காட்டுவது என்னும் விதியும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது. பெருமாளைத் தவிர்த்துச் சேரர் வம்சத்தில் இத்துணைப் பெரிய சிவபக்திமான் வேறொருவர் இருந்ததாக இதுகாறும் கூறுவாரைக் காணோம். இருந்தால் அச்சேர அரசன் பெயர் என்ன? அவனை யார் எங்குச் சொல்லியிருக்கின்றனர்? நமது கொள்கையை நிலைநாட்ட நமது இஷ்டப்படி மனோசிருஷ்டி செய்யலாமா? தம் கூற்றுக்காதாரமாய்ப் பரஞ்சோதி முனிவரைக் காட்டுவர். அவர் சேர அரசன் பெயரைச் சொல்லவில்லை. பெயரைச் சொல்லாமையால் சேரமான் பெருமாள் அல்லாத வேறொரு சேரராயிருத்தல் வேண்டும் என்பர். சேரமான் பெருமாளாக இருந்தால் கட்டாயம் பெயரைச் சொல்லவேண்டும் என்றும், வேறொரு சேர அரசனாக இருந்தால் பெயரைச்சொல்ல வேண்டியதில்லை என்றும் இவர் சொல்வதற்கு ஆதாரம் என்னவோ? அவரே போலும்!

பெரிய புராணத்திற் சொல்லப்பட்டதனைக் கொள்ளற்பாதவன் றென விடுக்க என்பர். திருவிளையாடற் செய்யுள்களுக்கு வலிந்து பொருள்கொண்டு தங்கூற்றுக்காதாரமாய்க்காட்டிப் பெரிய புராணத்திற் சொன்னது பிரமாணம் அன்றெனவிடுக்க என்னும்

இவர் கூற்று வியக்கற்பாலதன்றோ? பரமசிவம் 'உலகெலாம்' என்று கொடுத்தவாக்கைப் புனையாகக் கொண்டு அதைப் பெரிய புராணத்தின் முதல், இடை, கடை என்னும் இடங்களில் அமைத்துத் திருவருள் இயக்கப் புராணத்தைப் பாடி முடித்தனர். சந்தானாசாரியாரில் ஒருவராகிய உமாபதிசிவம் சேக்கிழாரை நாயன்மாரோடு கூட்டிச் சேக்கிழார் நாயனர் புராணம் பாடியிருப்பதை அறியாதார் யாவர்? திருவருளால் அமைந்தது பெரிய புராணமென்பதையும், அக்காலத்து இருந்த சோழஅரசர் முதலியோர் சேக்கிழார் நாயனரிடத்தும் பெரிய புராணத்தினிடத்தும் காட்டிய பக்தியையும் உமாபதிசிவம் இயற்றிய புராணத்தில் பார்க்கக்காணலாம். சான்றோரால் பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறை என்று அமைக்கப்பெற்று யாவராலுங் கொண்டாடப் படுகிறது. பிற்காலத்துச் சான்றோரும் பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைச் சேக்கிழார் நாயனர்மீது இயற்றினர். அத் திருமுறையைத் தல புராணத்தினுங் கீழாய்த் தள்ளுவது சரியாமோ? நம்பியாண்டார் நம்பிசெய்த நூற்றந்தாதிக்குப் பெரிய புராணம் வழிநூல்; அந்தாதியில் சொல்லாதனவற்றைப் பழைய உண்மை வரலாறுகளோடு முரணுமாறு பெரிய புராணம் கூறுவதால் அது பிரமாணம் அன்று என்பர். சுந்தர மூர்த்திகள் தொகையாய்ச் சொன்னதை நம்பியாண்டார் நம்பி வகையாகவும், சேக்கிழார் நாயனர் விரியாகவும் செய்தனர் என்பதும்; இம்மூவரும் சிவபிரான் அருளால் செய்தனர் என்பதும யாவரும் அறிந்தனவே. தொகையில் சொலலாததைச் சொல்ல வகையும், வகையில் சொல்லாததைச் சொல்ல விரியும் எழுந்தன. நம்பியாண்டார் நம்பி அந்தாதியில் சொன்னவெல்லாம் திருத்தொண்டத் தொகையில் காணப்படாமையினலே அதைப்பிரமாணம் அன்றெனத் தள்ளலாமா? நம்பியாண்டார் நம்பி எல்லாவற்றையுஞ் சொல்லியிருந்தால் பெரியபுராணம் செய்திருக்கவேண்டியதில்லையே. இம்மூவரும் சொன்னவற்றில் அடங்கிய உண்மைகளுக்குப் பழைய உண்மை வரலாறு வேறிருப்பதுபோல் சொல்லுகின்றனர். மற்றப் புராணங்கள் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப் படுவது போலத் திருத்தொண்டர்புராணம் செய்யப்பட்டதல்லவே.

தொகை, வகை விரி எல்லாம் தமிழே. இவற்றிற் கண்டவற்றிற்கும் பழைய வரலாறு உண்டென்று சொல்வது விந்தையே.

இது நிற்க, நான் மேற்காட்டிய தேவாரத்திற்குப் பொருள் என்னவென்று பார்ப்போம். பாணன் என்று தேவாரத்தில் சொல்லியிருப்பது நீலகண்ட யாழ்ப்பாணரைக் குறிக்குமென்பது சான்றோர் பலர் கொள்கையாதலால் அவர் சரித்திரமாகப் பெரிய புராணத்தில் சொல்லியிருப்பதை விசாரிப்போம். அஃது,

"ஆலவா யமர்ந்தார் கோயில் வாயிலை யடைந்து நின்று
பாலையி ரேழு கோத்த பண்ணினிற் கருவி வீக்கிக்
காலமா தரித்த பண்ணிற் கைபல முறையு மாராய்ந்
தேலவார் குழலாள் பாகர் பாணிகள் யாழி விட்டார்."

"மற்றவர் கருவிப் பாடல் மதுரைநீ டால வாயில்
கொற்றவன் றிருவுள்ளத்துக் கொண்டுதன் றொண்டர்க் கெல்லாம்
அற்றைநாட் கனவி லேவ அருட்பெரும் பாண னாரைத்
தெற்றினார் புரங்கள் செற்றார் திருமுன்பு கொண்டு புக்கார்."

"திரிபுர மெரித்த வாறுந் தேர்மிசை நின்ற வாறுங்
கரியினை யுரித்த வாறுங் காமனைக் காய்ந்த வாறும்
அரியயற் கரிய வாறு மடியவர்க் கெளிய வாறும்
பரிவினாற் பாடக் கேட்டுப் பரமனா ரருளி னாலே"

"அந்தரத் தெழுந்த வோசை யன்பினிற் பாணர் பாடும்
சந்தயாழ் தரையிற் சீதந் தாக்கில்வீக் கழியு மென்று
சுந்தரப் பலகை முன்னீ ரிடுமெனத் தொண்ட ரிட்டார்
செந்தமிழ்ப் பாண னாருந் திருவுளம் பெற்றுச் சேர்ந்தார்."

என்ற செய்யுட்களால் விளங்கும். இவற்றால் சாதி இழிவினால் கோயிலுக்குள் போகக்கூடாத பாணரை இறைவன் கோயிலுக்குள் அழைத்துவரும்படி செய்ததும், தங்கப்பலகை இடும்படி ஆகாசவாக்கு எழும்பச்செய்ததும், பிறவும் அறியப்படுகின்றன. இவைகளெல்லாம் பாணனிசை பத்திமையாற் பாடியதற்குப் பரிந்தளித்தவையாகாவோ? பிறகு, பாணர் திருவாரூருக்குச் சென்ற பொழுது

"கோயில் வாயில் முன்னடைந்து கூற்றஞ் செற்ற பெருந்திறலும்
தாயி னல்ல பெருங்கருணை யடியார்க் களிக்குந் தண்ணளியும்
ஏயுங் கருவி யிற்றொடுத்தங் கிட்டுப் பாடக் கேட்டங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார்."

பாணருக்கென்றே இறைவனருளால் புதுவாயில் வகுக்கப்பட்டுப் பாணர் அதன் வழியே உட்புகுந்து வணங்கினார் என்றால் பாணருக்கு இறைவனருளியதை ஐயமறவறிந்திருந்தோமன்றோ? இவை நிகழ்ந்த பின்னர்ச் சம்பந்தமூர்த்தி அடிகளைச்சேர்ந்து சோதியில் கலக்கும்வரை பாணர், அடிகள் பாடிய பதிகங்களைத் தமது மனைவியாருடன் யாழோடு பாடிவந்தனர். சம்பந்த மூர்த்திகள் திருமுலைப்பா லூட்டப்பெற்று ஞானத்தையும், பதிகம் பாடும் வன்மையையும் அடைந்ததுமன்றி, இறைவனால் பொற்றாளமுங் கொடுக்கப்பெற்றார். பிறகு யாழ்ப்பாணர் தாம் பாடும் பதிகங்களைக் கூடவிருந்து யாழுடன் பாடவும் பெற்றார். அதை இந்தத்தேவாரத்தில் சொன்னார் என்று ஏன் கொள்ளக்கூடாது? 'பொற்கிண்ணத்திற் பாலும், பாடும் வன்மையும், பொற்றாளமும் எனக்கு இறைவன் பரிந்தளித்ததுமன்றிப் பாணர்பத்தியோடு கூடவிருந்து இசைபாடுதலையும் பரிந்தளித்தான்' என்று பொருள் கொள்வதால் படும் இழுக்கென்னை?

மேலும், சேரமானிடத்துத் திருமுகங்கொண்டு சென்றவர் பாணபத்திரர். அவர் பெரும்பாலும் பத்திரர் என்னப்படுவார். நீலகண்ட யாழ்ப்பாணர், பாணர்எனப்படுவார். பெயர்முடிவுகளே நான் சொன்னதை விளக்கும். இஃதன்றி, ஞானசம்பந்தசுவாமிகள் தம்மோடு கூட இருப்பவராயும், அறுபத்து மூன்று தனியடியார்களில் ஒருவர் என்று கணக்கிடப்பட்டிருப்பவராயுமுள்ள பாணரைவிட்டுப் பாணபத்திரரைச் சொன்னார் என்றல் எவ்வாறு பொருத்தமுடையதாம்? பத்திரரை அடிகள் சொல்லியிருந்தால் நீலகண்டயாழ்ப்பாணரைக்குறிக்காதென்னலாம். அடிகள் அப்படிச்சொல்லவில்லையே.

மற்றொரு தேவாரம் மதுரைத் திருயமகப் பதிகத்தில் "தாரமுய்த்தது பாணர்க் கருளொடே" என்று சம்பந்தசுவாமிகள் பாடியிருப்பது. சேக்கிழார் நாயனார் சம்பந்தமூர்த்திநாயனார் புராணத்தில் இது நீலகண்டயாழ்ப்பாணரைக் குறித்ததென்பர். அது,

"திருவியம கத்தி னுள்ளுந் திருநீல கண்டப் பாணர்க்
கருளிய திறமும் போற்றியவரொடு மளவ ளாவித்
தெருளுடைத் தொண்டர் சூழத் திருத்தொண்டி னுண்மைநோக்கி
இருள்கெட மண்ணில் வந்தா ரினிதமர்ந் தருளி னாரே."

என்பது. இதற்குமாறாய்ச் சிலர் தாரம் என்பது ஆகுபெயராகச் சட்தாரியினை உணர்த்திற்று என்றனர். தாரம் சாதாரியானால், பாணர் பாணபத்திரர் ஆவர் என்பது அவர் கொள்கை. பண்டையோர் இசையை நான்கு பண்ணும், இருபத்தொரு திறனுமாய் வகுத்தனர். அவற்றில் முல்லைப் பண்ணின் திறனில் சாதாரி ஒன்று. இறைவன் முல்லை நிலத்தில் விறகுவெட்டிச் சுமை கொண்டுவந்த தனால் அந்நிலத்திற்குரிய திறனில் ஒன்றாகிய சாதாரியைப்பாடினர். தாரம் என்பது ஏழிசையில் ஒன்று. ஏழிசையாவன குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி. தாரம் என்பனவாம். முல்லை, செவ்வழி என்பன ஒரு பொருட் கிளவி. செவ்வழிப்பாலையாவது கைக்கிளையைக் குரலாயமைத்துப் பாடுவது. ஒவ்வொரு பண்ணும் வெவ்வேறு இசையை முதலாக உடையதாம். சிலப்பதிகாரத்தில் மருதம் பாடுமிடத்து.

"பிழையா மரபி னீரேழ் கோவையை
யுழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி"

என்றதும் கவனிக்கற்பாலதாம். உழைமுதலாக வருவதற்குத் தாரத்தில் இருந்து கணக்கிடவேண்டும். அதிலிருந்து ஐந்தாவதாய் வருவது உழையாம். அவ்விடத்தில்

"தாரத்துட் டோன்று முழையுழை யுட்டோன்று
மோருங் குரல்குரலி னுட்டோன்றிச்—சேருமிளி
யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
கைக்கிளை தோன்றும் புறப்பு."

என்றார் அடியார்க்கு நல்லார். தாரம் என்பதை ஆகுபெயராக்கி முல்லைத்திறன் என்றிடர்ப்படுவார் படுக. தேவாரத்துக்கு என்ன பொருள் என்பதை ஆராய்வாம்.

தாரம் என்பது வல்லிசை அல்லது வல்லோசையை உணர்த்தும். நீலகண்டயாழ்ப்பாணர் பத்தினியார் பாடியதற்கு

இறைவன் யாவருங்கேட்கும்படி அந்தாரத்தோசை எழுப்பி, பொற்பலகை இடுவித்ததை உணர்த்தாதோ? தாரம்—உயர்ந்த ஓசை; உய்த்தது—செலுத்தியது என்பது ஏன் பொருத்த முடையதாகாது? மேலும், தாரம் என்பதற்கு எல்லை என்றோர் பொருள் உண்டு. மதுரையிலும் திருவாரூரிலும பாணர் வரக் கூடிய எல்லையைக்கடந்து கோயிலுக்குள் அவரைக் கொண்டு வரும்படி செய்ததை உணர்த்தலாகாதா? தாரம் உய்த்தது—எல்லையைக் கடக்கச்செய்தது. மேலும், சம்பந்தசுவாமிகள் யாழ்முறி பாடியபோது பாணர் அதை யாழில் வாசிக்க முடியாத தால் யாழை உடைக்க எத்தனித்ததும், அக்கால் சம்பந்த மூர்த்திகள் அவ்வாறு உடைக்காது தடுத்துத் தாம் வாசித்துக் காட்டியதும் யாவரும் அறிந்தனவே. தாரம் என்று பிளவுக்கும் பெயர். யாழ்ப்பாணர் உடைத்திருந்தால் யாழ் பிளவுபட்டிருக் கும். அவ்வண்ணம் பிளவுபடாமல் காப்பாற்றியது என்று பொருள் படாதா? தாரத்தை ஆகுபெயராக்குவானேன்? இல்லை நம்பிக்கு மயக்கமும் சேக்கிழார் நாயனாருக்குப் பொய்யும் கற் பிப்பது சரியாமா?

7. வாதவூரடிகள் மூவர்க்கு முந்தியவர் என்பார் கூறும் வேறொரு நியாயம் வாதவூரடிகள் செய்த திருக்கோவையாருக் குப் பேராசிரியர் உரை எழுதி இருக்கின்றனர்; அவர் 7 அல்லது 8 ஆவது நூற்றாண்டினர்; வாதவூரடிகள் அவருக்குச் சில நூற்றாண்டுகளுக்காவது முந்தியவராயிருத்தல்வேண்டும்; ஆத லால் அவர் மூவர்க்கும் முந்தியவராவர் என்பது. பேராசிரியர் 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டினர் என்பதற்கு ஸ்ரீமான். சு. அனவரதவிநாயகம்பிள்ளை அவர்கள் சிலகாலத்துக்கு முன் எழுதிய வியாசம் ஒன்றை ஆதாரமாகக் காட்டுகின்றனர். பிள்ளை யவர்கள் பிற்காலத்தாராய்ச்சியால் பேராசிரியர் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தியவர் அல்லர் என்று கருதுவதாகத் தெரி கிறது. அவர்கள் எழுதியிருக்கிற தமிழ்ப்பெருமக்கள் வரலாறு என்னும் புத்தகத்தில் மணிவாசகர் சரித்திரம் அடங்கியிருக்

இறது. அதில் அவர்கள் பல நியாயங்களைச் சொல்லி வாதவூரடிகள் தேவாரம் பாடிய மூவர்க்கும் காலத்தால் பிந்தியவர் என்று காட்டுகின்றார்கள். இப்புத்தகத்தில் மூன்றாங்காலப்பகுதியில் பேராசிரியரைச் சொல்லுமிடத்து அவர் இருந்த காலம் இன்னதென்பதைக் காட்டியிருப்பதோடு திருக்கோவையார் உரை அவர் எழுதியது அன்று என்பதையுங் காட்டியிருக்கிறேன்.

8. நம்மாழ்வார், சூடிக்கொடுத்த நாச்சியார், தொண்டரடிப் பொடி ஆழ்வார், திருமங்கை மன்னன் முதலிய ஆழ்வார்கள், வாதவூரடிகளின் திருவாசகத்தைப் பார்த்துப் பாசுரங்கள் பாடியிருப்பதால் வாதவூரடிகள் அவர்களுக்கு முந்தியவராதல் வேண்டும்; அவர்களிற் சிலர் தேவாரம் பாடிய மூவர்க்கு முந்தியவர் என்பர்.

வைணவர்கள் தங்கள் பிரபந்தத்தைப் பார்த்து வாதவூரடிகள் பாடினார் என்பர். இவர் வாதவூரடிகளைப் பார்த்து ஆழ்வார்கள் பாடினார் என்பர். உண்மை இன்னதென்று தீர்மானிக்கப்படுவதற்கு முன்னர்த் தங்களுடைய வேறு தாரமில்லாத கொள்கையை ஒரு நியாயமாகச் சொல்லுவதால் பயனென்னை? பிறந்த பொழுதே துறந்து தாய்ப்பாலும் நீத்து குழவிப்பருவதற்குரிய செயல்கள் அற்று வாசுதேவன் கிருபையால் புளியாழ்வாரடியில் நிஷ்டையமர்ந்து ஓதாதுணர்ந்து உலகமுய்யுமாறு திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்தங்களைத் திருவாய் மலர்ந்தருளிய நம்மாழ்வார், பாசுரம்பாடும் வகை அறியாது திருவாசகத்தைப் பார்த்துச் சில பாசுரங்களைப் பாடினார் என்றல் ஆழ்வார் சரித்திரத்தைச் சிறிது அறிந்தவர்க்கும் வியப்பைத்தருவதேயாம். சூடிக்கொடுத்த நாச்சியார் பெரியாழ்வாரோடு வதிந்து சிரககாரியங்களையும் பெருமாள் காரியங்களையும் கவனித்தவர். அவர் திருவாசகம் படித்தறிந்தபின் குயில்பத்து முதலிய பாடினார் என்பது பொருத்தமில்லாத கதையேயாம். வாதவூரடிகள் இளம் பருவத்தில் கலைகள் பயின்றவர். இவர் கல்வித்திறம் முதலியவற்றிற்காகப் பாண்டிய அரசன் இவரை அமைச்சராய்க்கொண்டான். மந்திரியாய் இருந்தகாலத்தும் இவருக்குப் பாந்த உலக

வியாபகம் இருந்தது. மற்றவரியற்றிய நூல், செய்யுட்களை அறிவது இவர்க்கியல்பே. நம்மாழ்வார் முதலியோர் பிரபந்தங்களை அடிகள் அறிந்திருந்தார் என்பது பொருத்தமுடையதாம். ஆழ்வார்கள் ஒவ்வொருவரிடத்திலும் காணப்படும் செய்யுள் விசேஷங்களை ஒருங்கே இவரிடத்தில் பார்க்கலாம். யார் முந்தியவர் யார் பிந்தியவர் என்பதை இதைக்கொண்டு ஊகிக்கலாகாதோ?

9. வாதவூரடிகளை முந்தியவராதலால் தேவாரம்பாடியவர்களைச் சொல்லவில்லை என்பர். அவர்சொல்லியிருக்கின்றனரெனச் சிலர் கூறுவர். பின்கண்டவாறு கூறுவோர் காட்டும் சில வரிகளையும் முன்னே எழுதியிருக்கின்றேன். இவர் கூற்றும் ஊகமே ஒழிய வெளிப்படையாக ஒன்றுமில்லை. மூவர்கள் வாதவூரடிகளைச் சொல்லியிருப்பதாகக்காட்டும் தேவாரங்களை முன்னமே பார்த்தோம். கோச்செங்கட்சோழனர் சங்ககாலத்திருந்தவர். பெரிய சிவபக்தர். அவர் செய்த சிவதிருப்பணிகள் பல. அவரை ஏன் வாதவூரடிகள் சொல்லவில்லை; நாயன்மாரில் பலரை ஏன் சொல்லவில்லை; என்னும் வினக்களுக்கு என்ன விடை? சிவனடியார்களைத் தொகுத்துச் சொல்லப் புகுந்தவர் சொல்லாதுவிட்டால் அது கவனிக்கத்தக்கதாம்.

இதுவரை, வாதவூரடிகள் காலத்தால் மூவர்க்கும் முந்தியவர் என்பார் சொல்லும் நியாயங்களுள் எனக்குத் தெரிந்த முக்கியமான வற்றைச் சொன்னேன். இனி, அடிகள் காலத்திற் பிந்தியவர் என்பார் சொல்லும் நியாயங்களை ஆராய்வோம்.

1. சைவர்களுக்குள் சைவசமயாசாரியர்கள் முறை வழங்குவதையும், திருமுறை வகுப்பில் அவர்கள முறையமைந்திருப்பதையும் முன்னமே சொன்னேன். இருவகை முறையிலும் வாதவூரடிகள் நாலாவதாகச் சொல்லப்படுவர். பட்டினத்தடிகளும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்

"வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்."

என வாதவூரடிகளைப் பின்னர் வைப்பர். சந்தானசாரியாராகிய உமா பதிசிவம் இயற்றிய கோயில் புராணத்தில் சைவசமயாசாரியர்களை த்துதிக்குமிடத்து வாதவூரடிகள் நாலாவதாக வைகக்கப்பட்டிருக் கின்றனர். அவரை மூவர்க்கு முந்தியவர் என்பார் தங்கள் கூற் றுக்கு ஆதாரமாகக்கொண்ட திருவிளையாடல்கள் இரண்டிலும் வாதவூரடிகள் கடைசியில் வைக்கப்பட்டுள்ளார். வாதவூரடிகளைப் பெரிதுங்கொண்டாடும் வீரசைவர்களுள் புகழ்பெற்ற சான்றோ ராகிய சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நால்வர் நான்மணிமாலை யிலும் வாதவூரடிகளைப்பறியபாடல்கள் நாலாவதாக அமைந்துள் ளன சிதம்பர புராணம், சேதுபுராணம், தமிழ் நாட்டிலுள்ள ஏனைய புராணங்கள் முதலிய யாவற்றிலும் சமயாசாரியர் துதி சொல்லுமிடத்து வாதவூரர் துதி நான்காவதாகவே அமைக்கப் பட்டுள்ளது. திருமுறைவகுத்த நம்பியாண்டார் நம்பியும் திருவாச கத்தை எட்டாவது திருமுறையாகவகுததனர். நான் அறிந்தவரை யில் நால்வர் துதி சொல்லுமிடத்தில் எல்லாம் இவர் நாலாமவரா கவே வைக்கப்படுகின்றனர். இவரை முன்வைத்துத் துதி செய்த தாக ஒரு பிரபந்தங்கூட இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு தமிழ் நாட்டிலுள்ள சான்றோர் அனைவரும் ஒத்து இவரைச் சமயா சாரியர் நால்வரில் கடைசியில் வைத்ததற்குக்காரணம் இருக்க வேண்டும். சைவாகள் பரம்பரையில் வழங்கும் வாய்மொழி முறையையும் சொன்னேன். சமயாசாரியர்களில் பெரியார் சிறி யார் என்ற முறைபற்றி வைத்தது என்றால் அஃது அடாத தாம். ஒரு சைவனும் இவர்கள் யோக்யதையை ஒப்பிட்டுச்சொல் லத்துணியான். ஆதலின அம்முறை இவர்களிருந்த காலக் கிரமத்தால் ஏற்பட்ட முறையாக இருக்கவேண்டுமே அன்றி வேறு சொல்வதற்கில்லை.

1. திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்திகள் வாதவூ ரடிகள்பெயரைச் சொல்லாதிருத்தலால் அவருக்கு இவர்பிந்தியவர் என்பர். இதைமறுப்போர் அகத்தியர் பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலியோர் சிவபத்தியிலும், சிவயோகத்திலுஞ் சிறந்த மெய்யடி யார்கள்; அவர்கள் பெயரைத் திருத்தொண்டத் தொகையினுட் கூறுமையாது காரணமோ அதுவே வாதவூரடிகளைச் சேர்த்தே

தாமைக்குக்காரணம் என்பர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு காலப்பகுதியை எடுத்துக்கொண்டு அப்பகுதியில் தமிழ்நாட்டிலிருந்த அடியார்களைத் தொகைப்படுத்திக் கூறினர். அடியார்கள் தனியடியார் என்றும், தொகையடியார் என்றும் இரண்டு வகைப்படுவர். ஒருவர் சிவபக்தி செய்து நால்வகை முக்திகளில் எதை அடைந்திருந்தாலும் அவரைத் தனியடியார் வகையில் சேர்த்தனர். சுந்தரமூர்த்திகளுள்ளிட்டுத் தனியடியார் அறுபத்து மூவராவர். கல்வியிலும் சிவபக்தியிலும் பெரியராய்ச் சிவபெருமானை அன்றி வேறொருவரைப் பாடாத புலவரைப் பொய்யடிமையில்லாத புலவர் என்றும், அவ்வகைப் புலவர் பாடிய பாட்டையேபாடி இடையறாது சிவபெருமானைத் துதிப்போரைப் பரமனையே பாடுவோர் என்றும், பக்திசெய்து பலவகைத் தொண்டு செய்வோரைப் பத்தராய்ப்பணிவார் என்றும், எப்பொழுதும் சிவத்தியானம்செய்வோரைச் சித்தத்தைச் சிவன்பாலேவைத்தார் என்றும், விதிப்படி திருநீறு அமைத்து மெய்ம்முழுதும் அன்புடன் பூசுவோரை முழுநீறு பூசிய முனிவர் என்று, முப்பொழுதும் இலிங்கத்தைத்தொட்டுப் பூசைசெய்யும் ஆதிசைவரை முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் என்றும், தில்லைவாழந்தணரைத்தில்லைவாழந்தணர் என்றும், திருவாரூர்ப் பிறந்தாரைத் திருவாரூர்ப் பிறந்தார் என்றும் வகுத்தனர். இவ்வெண்வகையருள் முக்காலத்தவரும் வகுப்பில் அடங்குவர். தமிழ்நாட்டில் ஒரு காலப்பகுதியிலுள்ள அடியார்களை மட்டும் தனியடியார் வகுப்பில் சேர்த்தார். அக்காலப்பகுதிக்கு முன்னும் பின்னுமுள்ளாரையும், பிறநாட்டில் சிவபக்தி பண்ணி முக்தியடைந்தவர்களையும், அப்பாலுமடிச்சார்ந்தார் என்னும் தொகையடியார் கூட்டத்தில் சேர்த்தனர். அது,

"மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுக்கப்பால்
முதல்வனா ரடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற்கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமே லடம்புதும்பை
புதியமதி நதியிதழி பொருத்த வைத்த
சேவேந்து வெல்கொடியா னடிச்சார்ந்தாரும்
செப்பியவப் பாலுமடிச் சார்ந்தார் தாமே."

(அப்பாலுமடிச்சார்ந்தார் புராணம்)

என்பதால் விளங்கும். அகத்தியர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் இவர்கள் அப்பாலுமடிச்சார்ந்தாராவர். இவர்கள் சீவன்முக்தராய் இன்னுமிருப்பினும், அவ்வகுப்பில் சேர்ப்பது பொருத்தமுடையதாம். அகத்தியர் வெகுகாலம் முந்தியவர். பார்வதி கலியாணத்துக்குமுன் தமிழ்நாட்டுக்கு வந்தவர். வியாக்கிரபாதர், வசிஷ்டர் தங்கையை விவாகம்செய்து உபமன்யுவைப் பெற்றனர். இந்த உபமன்யுவின் பொருட்டுத்தான் சிவபெருமான் திருப்பாற்கடலை வரவழைத்தது. வியாக்கிரபாதர் வெகுகால முந்தியே சிதம்பரம் வந்தவர். இவருக்குப் பிறகு தில்லைவந்தவர் பதஞ்சலி; ஆதிசேஷனவதாரம். ஆதிசேஷன் சிவபெருமானது திருநடனத்தைக் காண வேண்டி உக்கிர தபசு செய்யச் சிவபிரான் தோன்றிப் பிரசாதம் செய்தபடி அத்திரி மகாரிஷிக்கு அவர் பத்தினி அநசூயை வயற்றில் மகவாய்ப்பிறந்து வியாக்கிரபாதரிருக்கும் தில்லைவந்து சேர்ந்தார். இவ்வாறு இருக்க, கௌடதேசத்தில் மனுவென்னும் பெயருடன் நால்வர் அரசாண்டனர். ஐந்தாவது மனுவாகிய கௌடேசனுக்குச் சரீர முழுதும் சிங்கநிறமாக ஒருமகனும் வேறு இரண்டு தனயர்களும் பிறந்தனர். மூத்தவன் பெயர் சிங்கவன்மன். அவன் தலயாத்திரை செய்யப்புறப்பட்டு வியாக்கிரபாதரிடம் வந்து சேர்ந்தனன். இவன் அங்கு வந்தது பதஞ்சலி வந்த வெகுகாலத்துக்குப் பின்னர். சிங்கவன்மன் வந்தகாலம் பாத்மகல்பம் என்று கோயில் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சிங்கவன்மன் முதலில் பொன்னம்பலம் வேய்ந்தவன். சிங்கநிறமாறி இவன் ஹிரண்ணியவன்மனுயினன். இதுகாறும் நான் சொல்லியது மேற்கண்ட மூவர்காலம் இன்னதென்றறிவதற்காக. தனியடியார் அறுபத்துமூவர் காலம் இம்மூவர் காலங்களுக்கு வெகுகாலம் பிந்தி. இதை அறிந்தால் அவர்களை ஏன் தனியடியார் கூட்டத்தில் சேர்க்கவில்லை என்னும் வினாவெழாது. நான் மேற்சொல்லியபடி இவர்கள் அப்பாலும் அடிச்சார்ந்தாராவர். வாதவூரடிகள் தனியடியார்களின் பகுதியைச்சேர்ந்த கண்ணப்பர், சண்டி இவர்களைப் பாடியிருக்கின்றனர்; ஆதலால், அவர் தனியடியார் காலப்பகுதியினராயாவது அக்காலப்பகுதிக்குப் பிந்தியவராயாவது இருத்தல்வேண்டும் தனியடியார் காலப்பகுதியினராகில் அக்காலப்பகுதியிலிருந்த

தனியடியார்கள் பெயரைத் தொகுத்த சுந்தரமூர்த்திசுவாமிகள் இவர் பெயரைவிட்டிருக்க நியாயமில்லை. ஆதலால் இவர் பிற்காலத்தவரே யாவார்.

3. வரகுண பாண்டியனை வாதவூரர் பாடியிருக்கின்றனர். அவன் பட்டமடைந்தது கி. பி. 862–3ல் என்று சரித்திர ஆராய்ச்சி நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வாதவூரடிகள் வரகுணன் காலத்தவராயாவது அதற்குப் பிந்திய காலத்தவராயாவது இருத்தல்வேண்டும். வரகுணன் கும்பகோணத்திற்குப் பக்கத்துள்ள திருப்புறம்பயத்தில் பெரும்போர் புரிந்து அபராஜித விக்ரமவர்மன் என்னும் அரசனைக்கொன்று மாற்றார் படையை வெருட்டித் திருவிடைமருதூர் சென்று அளப்பரிய சிவபக்தியும் சிவதிருப்பணியுஞ்செய்வானாயினன். இவனை வாதஆரடிகள் திருக்கோவையாரில் இரண்டு துறைகளில் பாடியிருக்கின்றனர். அவை,

"மன்னவன் றெம்முனை மேற்செல்லு மாயினு மாலரியே
றன்னவன் றேர்புறத் தல்கல்செல் லாது வரகுணனுந்
தென்னவ னேத்துசிற் றம்பலத் தான்மற்றைத் தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூவலன் னாளுமற் றோர்தெய்வ முன்னலளே."
"புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம் பலம்புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமுங் காட்டிவருஞ்
செயலோங் கெயிலெரித் தெய்தபி னின்றோர் திருமுகமே."
(திருக்கோவையார்.)

என்பன. வாதவூரடிகளுக்குச் சிறிது பிற்காலத்தே கி. பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்தவரான பட்டினத்தடிகள் வரகுணனது பக்தி மகிமையை மிகவும் பாராட்டிப் பாடியிருக்கின்றனர். சிவபக்தி பண்ணிப் பயனடைந்தோரைச் சுருக்கமாய் நெடுகச்சொல்லி வரகுணனது பக்தியின் பெருமையை விரிவாய்ச் சொல்லியிருக்கிறார். பின்கண்ட செய்யுள், அவர் பேரன்போடுவரகுணனது பக்தியைப் புகழ்வதைக் காட்டும். அது,

"மூன்று கோடி யான்ற முனிவரும்
வசிட்டனுங் கபிலனு மகத்தியன் றானும்
தும்புரு நாரத ரென்றிரு திறத்தரும்

வித்தகப் பாடன் மூத்திறத் தடியரும்
திருந்திய வன்மிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பன்னரி யூளை கேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்து
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல வெம்மித் தலையும்
கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்.''

(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.)

என்பது. ஆதிசேஷனாலும் சொல்லுதற்கரிய வரகுணதேவரது எல்லை யிகந்த பக்தி இதுவாம் எனப் பட்டினத்தடிகளுக்குச் சிறிது காலம் பிந்தியவரும் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தவருமான நம்பியாண்டார்நம்பி கோயிற்றிருப்பண்ணியார் விருத்தத்தில். போரில் எதிரிகள் எய்த கணைகள் வரகுணதேவர் பாதத்தை வந்து வணங்கின என்றதனாலறியலாம். அது,

“பொடியோர் தருமே னியனுகிப் பூசல் புகவடிக்கே
கடிசேர் கணிகுனிப் பக்கண்டு கோயிற் கருவியில்லா
ரடியே படவமை யுக்கணை யென்ற வரகுணன் றன்
முடியே தருகழ லம்பலத் தாடிதன் மொய்கழலே.''

என்பது. இவர் முழுநீறு பூசிய திருமேனியே அதற்குக் காரணம். கோயிற்கருவி' என்பது விபூதிப்பை. இவ்வாறு வரகுணதேவர் காலத்தும் அதைஅடுத்துமிருந்தவர்களான வாதவூரடிகள், பட்டி

னத்தடிகள், நம்பியாண்டார் நம்பி இம்மூவரும் அவரைப் புகழ்ந்திருப்பது அவரது சிவபக்தியின் பெருமைக்குச் சான்றும். இம்மூவரில் முந்தியகாலத்தவரான வாதவூரடிகள் வரகுணதேவரைப் பாடினர். அவருக்கு அடுத்திருந்த பட்டினத்தடிகள் வாதவூரடிகளையும், வரகுணதேவரையும் பாடினர். அவருக்குப் பிந்தியவரான நம்பியாண்டார் நம்பி வரகுணதேவரைப்பாடி, வாதவூரடிகள் பட்டினத்தடிகள் பாடியவற்றைத் திருமுறைகளாகவகுத்தனர். வரகுணதேவரைப் பெரும்பற்றப்புலியூர்நம்பி மிகப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். பரஞ்சோதி முனிவரும் புகழ்கின்றனர். வரகுணனுக்குச் சிவலோகங் காட்டியதாக இரண்டு திருவிளையாடல்களிலும் சொல்லுவது இந்த வரகுணதேவருக்குத்தான் வாதவூரடிகள் போற்றித் திருவகவலில்,

"நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி"

என்பதும் இந்த வரகுணதேவருக்குச் சிவலோகங்காட்டிய வரலாறே. அவரே திருப்பாண்டிப் பதிகத்தில் "பாண்டியற் காரமுதா மொருவரை" என்றனர். தாம் பேரன்பு செலுத்தும் சிவபெருமானிடத்து அளவிறந்த பக்தியுடைய பாண்டிய அரசனைப் பலவாறுகவும் புகழ்கின்றனர். மேற்கண்ட மூவரும் ஒரு வரகுணதேவரையே புகழ்கின்றனர் என்பதில் ஐயமென்னை? வம்சாவளியை பார்ப்பதால் இரண்டு வரகுண பாண்டியர்களிருந்திருக்கிறார்கள் என்றறியலாம். நான் இதுகாறும் சொன்ன வரகுணதேவர் ஒருவர்; அவர்பிதாமகன் ஒருவன். முந்திய வரகுணதேவர் இவரைப்போல் சிவபக்தியிற் சிறந்தவர் என்று தெரியவில்லை. இருந்தால் திருத்தொண்டத்தொகையில் அவர் பெயர் இருக்கும். அவர் இவருக்கு ஒரு தலைமுறைக்கு முன்னிருந்தவராவர்.

சிலர் வாதவூரடிகள் சொல்லிய வரகுணன், வம்சாவளியில் கண்ட இரண்டுவரகுணனுக்கும் முந்திய காலத்தவனாயிருக்கக் கூடாதா என்கின்றனர். இரண்டு திருவிளையாடல்களிலும் ஒருவர

குணனையே சொல்லியிருக்கிறது. வேறு வரகுணன் பிரஸ்தாபம் எங்குங் காணப்படவில்லை. அவர்கள் அவ்வாறு இருப்பதாய்க் காட்டுவதுமில்லை.

இது நிற்க, களப்பிரர் ஆக்கிரமணத்துக்கு முன்னிருந்த பாண்டியர்கள் தமிழ்ப்பெயர் வகித்தவர்கள். களப்பிரர் ஆக்கிரமணத்தை ஒட்டிவந்த சிலர் தமிழ்ப்பெயரும் வடமொழிப் பெயரும் ஒருசேரத்தரித்தனர். வம்சவிருட்சத்தில் எட்டென்று குறிக்கப்பட்டிருக்கிறபாண்டியன்முதல் வடமொழிப்பெயர் தரித்தவர்கள். வரகுணனுக்கு வேறு தமிழ்ப் பெயர்கள் இருந்தாகத்தெரியவில்லை. இதனாலும் பாண்டிய அரசர்காலத்தை ஒருவாறு கண்டு பிடிக்கலாம்.

வாதவூரடிகள் வரகுணதேவரோடு சமகாலத்தவரென்று தோன்றுகிறது. வரகுணதேவரைச் சொல்லும் செய்யுட்களில் நிகழ்கால வினையை உபயோகப்படுத்துகிறார். "தென்னவனேத்துசிற் றம்பலத்தான்", "சிற்றம்பலம்புகழும் வரகுணன்", "பாண்டியற் காரமுதா மொருவரை" என்பன சென்ற காலத்தில் நிகழ்ந்தனவற்றைச் சொல்வதாகத் தோன்றவில்லை. "பாண்டியற் கருளினி போற்றி" என்பதும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது. சிவலோகங்காட்டியது இவர் சொல்லுங்காலத்துக்கு முன்னமே நிகழ்ந்ததென்றேயாம். அருளினை என்பது நிகழ்ந்ததைக் குறிக்கும் பாண்டியற்கு என்று இச்செய்யுள்களில் உள்ள ஒருமொழி ஒரு பாண்டியனைக் குறிக்கும். ஒருமைம் மொழியைய எங்கும் வாதவூரடிகள் பிரயோகித்திருப்பது வரகுணதேவரைக் குறித்தற்கேயாம். பாண்டிய அரசர்களில் வரகுணன் ஒருவன் பெயரையே அடிகள் சொல்லுகின்றனர். இவர் அமைச்சராயிருந்ததும் இவ்வரகுணனிடத்திலோ என்று தோன்றுகிறது. திருவிளையாடலில் அரிமர்த்தனன் என்று சொல்லியிருப்பது சத்துருஞ்சயன் என்பதுபோல சத்துருக்களை ஜயிப்பவன் என்னும் பொருளில்வந்த பெயராயிருக்கலாம். இனிச் செய்யப்படும் ஆராய்சிகளால் வேறு முடிவுக்குவருமளவும் வாதவூரடிகளைக் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்தவூர் எனக்கொள்ளலாம்.

4. அத்வைதம் என்று வழங்குகிற ஏகாத்மவாதம் அல்லது மாயாவாதம் ஒன்பதாம் நூற்றாண்டுக்குமுன் தமிழ்நாட்டில் ஜனங்களால் கைக்கொள்ளப்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. அக்காலத்துக்கு முற்பட்ட தமிழ்ப் புத்தகங்களில் இதன் பெயரைக் காணோம். தேவாரங்களில் இதன் பெயர் காணப்படவில்லை. அக்காலத்தில தமிழ்நாட்டில் பிரசாரத்தில் இருந்த மதங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. சங்கராசாரியார் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்தவர் என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர். அவர் காலத்தில்தான் இம்மதம் தலையோங்கியது. ஒவ்வொரு மதஸ்தர்களும் தங்களுடைய மதம் தொன்றுதொட்டு இருந்ததென்று சொல்வதுவழக்கமே. ஏகாத்மவாதிகளும் அவ்வாறு சொல்லலாம். தமிழிலுள்ள நிகண்டுகளில் சூடாமணி நிகண்டு கி. பி. பத்தாம் நூற்றாண்டின் துவககத்தில் இயற்றப்பட்டது. அதற்கு முந்தியது பிங்கலம். அதற்கு முந்தியது திவாகரம். நிகண்டு என்ற தலைப்பின் கீழ்ப்பார்க்க. திவாகரத்தில் அறுவகைச் சமயங்களே சொல்லப்பட்டிருக்கின்றன அவை, 'வைசேடிகம், நையாயிகம், மீமாஞ்சை, ஆருகதம், பௌத்தம், லோகாயதம்' என்பன. பிங்கலத்தில் மூன்றாவது ஐயர் வகையில் புறச்சமயமாக "உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம்" எனறும் ஆறும், உட்சமயமாக "வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம்" என்னும் ஆறும் கூறப்பட்டுள்ளன. சூடாமணி நிகண்டில் உட்சமயமும் புறச்சமயமும் பின்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கின்றன:

"அரியவுட் சமய மாறே யாவன சைவந் தூய்மை
பெருகுபா சுபதத் தோடு பிறங்குமா விரத மற்றும்
சருதிய வீடு பேறு காட்டுகா ளாமு கந்தான்
மருவிய வாம மிக்க வைரவ மென்ன லாமே."

"அறுபுறச் சமயந் தானே யறையுலோ காய தம்பின்
உறைதரு பௌத்த மேயா ருகதமீ மாஞ்சை யோடு
குறிபெறு மாயா வாதங் கூறிய பாஞ்ச ராத்ரம்
நெறிபெறு மிவையே யென்ன நிகழ்த்துவர் நூல்வல் லோரே."

புறச்சமயங்களிலொன்றாய மாயாவாதம்நிகண்டுகளில் பத்தாம் நூற்றாண்டின் துவக்கத்தினதாகிய சூடாமணி நிகண்டில் முதலில்

சொல்லப்படுகிறது. இதற்குப் பிற்காலத்தில் வைணவ சமயாசாரியர்கள், சைவ சந்தானசாரியர்கள் இவர்களிற் பலர் மாயாவாத கண்டனம் எழுதியிருக்கிறார்கள். வாதவூரடிகள் போற்றித் திருவகவலில்,

> "மிண்டிய மாயா வாத மென்னுஞ்
> சண்ட மாருதஞ் சுழித்தடித் தார்த்து"

என்று சொல்லியிருப்பது இவர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்தார் என்பதை வற்புறுத்தும்.

5. (1) தமிழ் நாட்டில் சைவாகமங்கள், தேவாரங்கள் பாடப்பட்டதற்குப் பிற்காலத்தில் பரவி ஆதிக்கத்தை அடைந்தன. தேவாரங்களில் எங்கும் வேதங்களும் வேதாங்கங்களுமே சொல்லப்பட்டுள்ளன. ஆகமங்களைச் சொல்லுமிடங்கள் மிகச் சிலவே. பாடியவர்கள் தமிழாகமங்களைக் குறிப்பிட்டார்கள் என்று நினைப்பதற்கு இடமில்லை. இவைகளைச்சொல்லும் இரண்டொரு இடங்களிலும் ஆகமங்கள் வேதங்களுக்குப் பின்னர் வைக்கப்பட்டிருக்கின்றன. முதலில் தமிழில் செய்யப்பட்ட ஆகமம் திருமந்திரம். வாதவூரடிகள் காலத்தில் சைவாகமங்கள் தமில்நாட்டில் பரவ ஆரம்பித்துவிட்டன. சந்தானசாரியர் காலத்திற்குள் நன்றாய்ப்பரவிவிட்டன. தமிழ் நாட்டில் சைவர்கள் ஆகமத்துக்குப் பிராதான்யம் கொடுத்து அவற்றின் கொள்கைப்படி ஒழுகத்துவக்கினர். வாதவூரடிகள் சிவபுராணத்தில்

> "ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க"

என்றும், கீர்த்தித்திருவகவலில்

> "மன்னு மாமலை மகேந்திர மதனிற்
> சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்"

> "கேவேட ராகிக் கெளிறது படுத்து
> மாவேட் மாகிய வாகமம் வாங்கியும்
> மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
> முற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்"

என்றும், மற்றவிடங்களிலும் இவ்வாறுசொல்லியிருப்பது தேவார காலத்தினும் அடிகள் காலத்து ஆகமம் பிராதான்யம் அடையத் துவக்கியதைக்காட்டும். தேவார காலத்தில் சிவபக்தர்கள் அடியார்கள் என்றும், தொண்டர்கள் என்றும் சொல்லப்பட்டார்கள். விஷ்ணு பக்தர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டார்கள். வைணவம், சைவம் இரண்டினும் பிற்காலத்தில் ஆசாரியர்கள் தோன்றினார்கள். வைணவ ஆசாரியர்களில் முதல்வர் நாதமுனிகள். அவர்கள் கி. பி. பதினோராம் நூற்றாண்டினர். சைவத்திருமுறைகள் வகுக்கப்பட்ட பிறகு முன்னிருந்த சிவனடியார்களில் சிலர் சமயாசாரியர் ஆக்கப்பட்டனர். சந்தானசாரியர்களில் முதல்வராகிய மெய்கண்ட தேவர் பன்னிரண்டாம் நூற்றாண்டினிறுதி, பதின்மூன்றாம் நூற்றாண்டுத் துவக்கம் இந்தக் காலங்களில் இருந்தவர். ஆகமம் பரவவிட்டுத் தீக்ஷை அவசியமாயிற்று. தீக்ஷைபெற ஆசாரியன் ஒருவனிருக்க வேண்டியது அவசியமாயிற்று. வடமொழி ஆகமங்களில் தீக்ஷையும், ஆசாரியனும் இன்றியமையாமையைப் பரக்கக் காணலாம். வடமொழிச் சைவாகமங்களின் கருத்துகளை அடக்கித் தமிழில் சைவசித்தாந்த சாஸ்திரங்கள் ஏற்பட்டன. அவைகளும் அதைச்சொல்ல ஆரம்பித்தன. அவை,

"ஆசானருளா லடிசேர் ஞானம் வந்திடும்
மற்றொன்றாலும் வாராதாகும்."

(சிவஞானசித்தியார்—சூத்திரம் 12)

"அழிவிலாக் கிரியை யினுதல் சத்திமத் தானுதல்
அத்துவாசுத்தி பண்ணி மலமகற்றி
ஒழிவிலாச் சிவம் பிரகாசிக்கும் ஞானம்
உதிப்பித்துற் பவந்துடைப்ப னரனொரு மூவர்க்கும்."

(சிவஞானசித்தியார்—சூத்திரம் 8.)

என்பன. அறுபத்துமூன்று நாயன்மார்களில் திருமூலரைத் தவிர்த்து ஒருவரும் தீக்ஷை பெற்றவராக கர்ண

ப்படவில்லை. தீக்ஷை இல்லையேல் ஆசாரியனுமில்லை. சம்பந்த மூர்த்திகள் திருமுலைப்பாலூட்டப் பெற்றதைத் தீக்ஷை என்னலாமா? சம்பந்தமூர்த்தி சுவாமிகளோடு சோதியிற் கலந்தவர்கள் தீக்ஷையைப் பெற்றவர்களா? ஆம் என்றால் அஃது என்ன தீக்ஷை? ஆகமங்களிற் சொல்லிய சமயமா, விசேஷமா, நிர்வாண தீக்ஷையா? ஆசாரியன் யார்? அப்பர்சுவாமிகள் சுந்தரமூர்த்திகள் முதலிய அடியார்கள் விஷயத்திலும் இவ்வினாக்கள் எழும். பக்தியின் பெருக்கத்தால் பரமசிவனிடத்திருந்து வேண்டியதைப் பெறுவார்கள். ஆன்மாக்களை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப்பிரித்தும், ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவகைத் தீக்ஷை கற்பிப்பதும், பக்திமார்க்கத்தில் இருப்பவர்களுக்கில்லை. இதைச் சுருக்கமாய்ச் சம்பந்தசுவாமிகள்

> "ஆட்பா லவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்பும்
> கேட்பான் புகிள வில்லை கிளக்கவேண்டா
> கோட்பா லனவும் வினையுங்குறு காமையெந்தை
> தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்கத்தக்கார்."

என்றனர். சிவபெருமானால் ஆளப்படும் பகுதியினர்க்கு அதாவது சிவனடியார்க்கு அவன் அருளும் வண்ணத் திற்களவில்லை. உண்ணின்று, முன்னின்று, பின்னின்று என மூன்று பிரிவாக்கி ஆகமங்களிற் கூறுவது அந்த மார்க்கத்தினர்க்காம். மற்றைச் சைவாசாரியர்களைப் போலல்லாது வாதவூரடிகள் தீக்ஷைபெற்றனர் ஆசாரியனின்றித்தீக்ஷை இல்லாமையால் ஆசாரியனையும் பெற்றனர். இவர் பெற்றதீக்ஷை ஆகமங்களிற் சொல்லப்பட்டிருப்பன வற்றோடு ஒவ்வாது வேறுபடும். இவருக்குப் பரமசிவனே ஆசாரியராய் வந்தார். முன்னின்று தீக்ஷை செய்தார். ஆனால் ஆகமங்களிற் சொல்லியபடி நாற்றோள், முக்கண், கறைமிடறு முதலியவற்றோடு கூடியல்ல. மேலும், அவ்வாறு உபதேசம் செய்வது ஞானத்தை. வாதவூரடிகளுக்கு உபதே

சித்தது பக்தி மார்க்கத்தை. அதன் வழியாய் மலங் கெடும்; ஞானவரும்; சிவமாகாலம். அடிகள் சொல்லியபின்கண்ட செய்யுளால் இது விளங்கும். இது,

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே."

என்பது. ஆகமநெறி சிறிது பரவியும், முற்றும் பரவாமலும் இருக்குங்காலமாம் அது. தமிழ் நாட்டில் தீக்ஷை பெற்றவர்களில் அடிகள் முதல்வராவர் என்னலாம்.

(2) தேவாரங்களில் மலங்களை மூன்று எனச் சொல்லவில்லை. அவற்றை படிப்பவர் வேறு இடங்களில் மும்மலம் என்றிருப்பதைக்கொண்டு தேவாரங்களில் மலங்கள் எனச் சொல்லப்படுவதை மும்மலத்தைச் சொன்னதாகக் கொள்ளுகின்றனர். ஆணவமலம் என்று தேவாரத்தில் காணப்படவில்லை. முற்காலத்தார் மாயை, கர்மம் என்ற இரண்டையே மலம்எனக் கொண்டனர். ஆகமம் பரவவிட்டு ஆணவமலத்தைக்கூட்டி மலம் மூன்றெனப் பட்டது. வாதவூரடிகள் மும்மலம் எனச் சொல்லுகின்றனர். அதை,

"மூல மாகிய மும்மல மறுக்கும்"
(கீர்த்தித்திருவகவல்.) எனவும்,
"உள்ளமல மூன்று மாய வுகுபெருந்தேன்"
(பண்டாயநான்மறை) எனவும்,
"மும்மலப் பழைவினைக்கு ளழுந்தவும்"
(திருக்கழுக்குன்றப் பதிகம்.) எனவும்,
"மும்மைமல மறுவித்து மூதலாய முதல்வன்றன்."
(அச்சோப்பதிகம்.)

எனவும் வருவனவற்றால் அறியலாம்.

(3) 'வினையொப்பு' என்பது ஆகம சாஸ்திரங்களிற் காணப்படும் மொழிகளில்ஒன்றாம். தேவாரங்களில் அதைக்காணேம், திருவாசகத்தில்,

"உணக்கி லாததொர் வித்துமேல் விளையாமல்
என்வினை யொத்தபின்." (திருக்கழுக்குன்றப் பதிகம்.)

என அது காணப்படுகிறது.

(4) தேவாரம் பாடியவர்கள் சிவபெருமான் தம்மைச் சிவமாக்கியதாய் எங்கும் சொல்லவில்லை. சிவபெருமான் இடையறாது அவர்களது உளத்தில் நிறைந்திருந்ததனால் சித்தம் சிவமாக்கி என்பர். தாங்கள் சிவத்தோடொன்றாய்ப் போவதாய்ச் சொல்வதில்லை. பாதத்தில் சேர்த்துக்கொள்ளச் சொல்லிப்பிரார்த்திப்பார். பிறகுதான் ஏகாத்மவாத வாடைவீசியது. சைவர்களும் சிவத்தொடு ஐக்கியமாவதை ஒரு வகையில் ஒப்புக்கொண்டனர். வாதவூரடிகள்,

"சிவமாக்கி யெனையாண்ட."
(கண்டபத்து; அச்சோப்பத்து.) எனவும்,

"பேத மில்லாதொர் கற்பளித்த
பெருந்துறைப் பெருவெள்ளமே."
(திருக்கழுக்குன்றப் பதிகம்.) எனவும்

"போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
அறியவல் லாரெம் பிரானாவாரே"
(திருவார்த்தை) எனவும்,

"சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறைசிவனே."
(கோயிற்றிருப்பதிகம்.) எனவும்,

"தந்ததென் றன்னைக் கொண்டதுன றன்னை"
(கோயிற்றிருப்பதிகம்.) எனவும்,

"தன்னைத் தந்த வென்னாரமுதை"
(புணர்ச்சிப்பத்து.) எனவும்,

"புடைப்பட் டிருப்ப தென்றுகொ லோவென்
பொல்லாமணி யைப்புணர்ந்தே."
(புணர்ச்சிப்பத்து.)

எனவும் கூறிவன இங்குக் கவனிக்கத்தக்கவை. மேற்சொல்லியவற்றால் தேவாரகாலத்திற்குப் பின்னர் ஆக

மம் சிறிது பரவியகாலத்து வாதவூரடிகள் இருந்தார் எனக் கொள்ளலாம்.

6. தாழிசை, துறை, விருத்தம் என்னும் இன இலக்கியங்களைச் சங்ககாலத்தில் சான்றோர் கொள்ளவில்லை என்று முன்னமே சொன்னேன். தேவாரங்களில் விருத்தங்கள் காணப்படுகின்றன. திருவாசகம், திருக்கோவையார் இவற்றில் விருத்தம், துறை இரண்டும் காணப்படுகின்றன. காலஞ்செல்லச்செல்லப் பாவினங்கள் பெருகுவதை அறியலாம்.

7. தேவாரம்பாடிய காலத்துப் பாட்டியலில் சொல்லப்படும் பிரபந்த பேதங்கள் சிலவே. வாதவூரடிகள் கோவை இயற்றியவர் அவர் பாடிய பாவினங்களின் வகைகளும் கவனிக்கத்தக்கன. அவை திருச்சதகம், திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருப்பொன்னூசல், குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி முதலிய இவ்வகைகளைப் பிற்காலத்துப் பெருகியன எனக்கொள்ளலாம்.

8. திருவிசைப்பாப் பாடியவர்களிற் சிலர் தேவாரம் பாடிய மூவரைச் சொல்லுகின்றனர். வாதவூரடிகளைச் சொல்லவில்லை. சேந்தனார்

"பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி"

என்றும், பூந்துருத்திநம்பி கடாநம்பி

"அல்லியம் பூம்பழனத் தாமூர்நா வுக்கரசை"
"எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியார் கோன்."
"களையா வுடலோடு சேரமா னாரூரன்"

என்றும், திருவாலி யமுதனார்

"அடிகளவரை யாரூர்நம்பி யவர்களிசைபாட"

என்றும் பாடியிருக்கின்றனர். வாதவூரடிகளை அவர்களில் ஒருவ

ரும் சொல்லவில்லை. அதனை, வாதவூரடிகளது பிரசித்தி யாவரா லும் போற்றப்படுமாறு பரவாதகால மென்னலாம்.

9. பத்தாம் நூற்றாண்டிக்கு முன் இயற்றப்பெற்ற உரைக ளிலாவது செய்யுட்களிலாவது திருவாசகம், திருக்கோவையார் இவற்றின் செய்யுட்கள் மேற்கோள்களாவது, காட்டாகவாவது எடுத்தாளப்படவில்லை. இறையனார் அகப்பொருள் உரையில் எட் டாம் நூற்றாண்டிலிருந்த பாண்டிய அரசன் மீதியற்றப்பட்ட கோவையிலிருந்து 315 கலித்துறைகள் உதாரணமாய்க் காட்டப் பட்டிருக்கின்றன-இறையனாரியற்றிய சூத்திரங்களுக்கு இறைய னார் அடியாராகிய வாதவூரடிகள் இறையனார் மீதியற்றிய திருக் கோவையார் என்று பிரசித்திபெற்றபிரபந்தத்திலிருந்து ஒருதுறை கூடக் காட்டாகக் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் களவியலுரை செய்யப்பட்ட காலத்தில் திருக்கோவையார் இயற் றப்படாமலிருந்ததேயாம். தொல்காப்பிய அகத்திணையியல், கள வியல், கற்பியல்களுக்கு உரை எழுதிய இளம்பூரண அடிகள் திருக்கோவையாரிலிருந்து ஒரு துறையையும் உதாரணமாய்க் காட்டாதிருப்பதேன்? அவருரை எழுதியகாலத்துத் திருக்கோ வையார் இயற்றப்படவில்லை என்பதே காரணமாம். களவியலுரை, இளம்பூரண அடிகள் உரையெழுதியதற்குப்பின்னர்த்தாம்.

வாதவூரடிகள் மூவருக்கு முந்தியவர் என்பாரும், பிந்தியவர் என்பாரும் சொல்லும் நியாயங்களைச் சீர்தூக்கிப் பார்த்தால், பிந்தி யவர் என்பவர் சொல்வன பொருத்தமுடையன வென்று தோன்று கின்றது. முடிவில் பரம்பரை வழக்கில் சொல்லுமுறையே சரி யென்றும், அதை மாற்றுவோர் கூற்றுத் தவறுடையதென்றும் காணப்படும். காலஞ்சென்றவர்களில் சரித்திர ஆராய்ச்சி நிபுணர் களான ஸ்ரீமான்களாகிய கனகசபைப்பிள்ளை, வெங்கையா, கோபிநாதராயர் இவர்களும் இக்கொள்கையினரே. இன்னும் சிறந்த கல்விமான்கள் பலர் இக்கொள்கையினர். நான் மேற்சொல் லியபடி காலத்தாற் பிந்தியவரைப் பெருமையிற்குறைந்தவர் என்றுகொள்வது இழுக்காம். மணிவாசகர் சரித்திரமாக ஸ்ரீமான்

அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் 'தமிழ்ப்பெருமக்கள் வரலாறு' எனப் பெயரிட்டெழுதிய புத்தகத்தில் எழுதியிருப்பதும், ஸ்ரீமான் கோபிநாதராயர் அவர்கள் கிறிஸ்தியன் காலேஜ் மாகஜீன் என்றும் பத்திரிகையில் ஆங்கிலத்தில் எழுதியிப்பதும் வாசித்தறியத்தக்கனவாம். இவர், வரகுணதேவரோடு சமகாலத்தவர் என்று நினைப்பதற்கு இடமிருக்கிறது என்பது முன்னர்க் கூறப்பட்டது.

## இரண்டாங்காலப் பகுதி—தொடர்ச்சி.

ஆழ்வார்கள்:—வைணவரிற் சிலர் ஆழ்வார்கள் பதின்மர் என்றும் பதினொருவர் என்றும், பலர் பன்னிருவர் என்றுங் கூறுவர். பதின்மர் என்போர் ஆண்டாள், மதுரகவி ஆழ்வார் என்ற இருவரையும் சேர்க்காது கணக்கிடுகின்றனர். பதினொருவர் என்போர் இவ்விருவரில் ஒருவரைச்சேர்க்காது கணக்கிடுகின்றனர். ஆண்டாள் ஏனைய ஆழ்வார்களைப்போலல்லது திருமாலைக் கணவராக மட்டும் வரிக்கின்றனர் என்பதை அவரைச்சேர்க்காது விடுவதற்கு ஒரு நியாயமாகக்காட்டுகின்றனர். மதுரகவிஆழ்வார் ஏனைய ஆழ்வார்களைப்போல் திருமால் திருவடிகளில் பக்திபாராட்டாது அனைத்தையும் குருகூர்ச்சடகோபராகவே கொண்டு அவர்பால் பக்திசெலுத்திவந்ததை அவரைச் சேர்க்காது விடுவதற்கு ஒரு நியாயமாகக்காட்டுவர். பெரும்பாலார் ஆழ்வார்களைப்பன்னிருவராகக்கொள்வர் என்பதை முன்னமே சொன்னேன். அவர்கள் ஆழ்வார்களின் முறையை எங்ஙனம் கூறினார்கள் என்பதை ஆராய்வாம். உடையவர்காலத்திலேயே நாலாயிரப்பிரபந்தம் தொகுக்கப்பட்டது என்பதும், அதில் திருவரங்கத்தமுதனார் இயற்றிய இராமானுஜநூற்றந்தாதி ஒருபகுதியாகச் சேர்க்கப்பட்டது என்பதும் யாவரும் அறிந்தனவே. இராமானுஜநூற்றந்தாதி, நாலாயிரப்பிரபந்தத்தில் இயற்பா என்னும் மூன்றாவது பகுதியில் ஒரு பாகமாய் அமைக்கப்பட்டுள்ளது. அதில் அமுதனார் எட்டுமுதல் பத்தொன்பது வரையிலுள்ள செய்யுட்களில் ஆழ்வார்களைப் புகழ்ந்து பிறகு நாதமுனிகள், யமுனைத்துறைவர், இராமானுஜர் என்னும் ஆசாரியர்களைப் பாடுகின்றனர். நம்மாழ்வாரை ஆழ்வார்கள் முறையில் இறுதியில் வைத்துப்புகழ்கின்றனர். ஏனைய ஆழ்வார்களை அவயவமாகவும், நம்மாழ்வாரை அவயவியாகவும் கருதினாராதலின் அமுதனார் இம்முறையில் வைத்தார் என்பர் சிலர். ஆனால் அமுதனார் இம்முறைவைப்புக்கு அக்காரணத்தைச் சொல்லவில்லை. மேற்கண்ட இராமானுஜநூற்றந்தாதிச் செய்யுள்களைக்காட்டில் இது மிக

விரியுமாதலின் அவற்றை இங்கே காட்டாதுவிடுத்தேன். இராமானுஜருக்குப்பின் ஆசாரிய ஸ்தானத்தை வகித்தவரும், அவதாரபுருஷர் என்று பலராலும் கொண்டாடப்படுபவருமான பராசரபட்டர் செய்த சுலோகத்தில் மற்றும் ஒருமுறை காணப்படுகிறது. அது,

"பூதம்ஸரஸ்சமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலஸேகரயோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குஸமுநிம்ப்ரணதோஸ்மிநித்யம்."

என்பது. பின்பழகிய பெருமாள்ஜீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை என்னும் ஆசாரியர்கள் காலத்திருந்தவர். அவர் இயற்றிய குருபரம்பராப்ரபாவத்தில் நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார்களை முறைவைப்பில் இறுதியில் சொன்னாரேனும், ஐந்தாவதாகக் குலசேகராழ்வாரைச் சொல்லுமிடத்துப் பின்கண்டவாறு கூறுவர். அஃது "இங்கே அவதாரக்கிரமம் பார்க்கில் நம்மாழ்வார் திருவவதார வைபவம் சொல்லியிருக்க, ஸ்ரீ குலசேகராழ்வார் திருவவதார வைபவம் சொல்லுகிறது. அவயவ நிரூபணம் பண்ணியே அவயவியை நிரூபிக்கவேண்டுகையாலே" என்பது. இதனால் இவர் நம்மாழ்வாரை முறையில் ஐந்தாமவராகக் கொண்டனர் என்பது வெளிப்படை. வடகலை வைணவர்களால் பெரிதும் கொண்டாடப்படும் வேதாந்த தேசிகர் தமிழில் பிரபந்தங்களைச் செய்துள்ளனர். அவர் பெரியவாச்சான் பிள்ளைகாலத்திருந்தவர். அதிகாரஸங்க்ரஹம் என்னும் ப்ரபந்தத்திலுள்ள பின்கண்ட முதல் இரண்டு செய்யுட்கள் அவர்கொண்ட ஆழ்வார்களின் முறை அமைப்பில் ஒன்றைக் காட்டும். அவை,

"பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தண்
பொருநைவருங் குருகேசன் விட்டுசித்தன்
துய்யகுல சேகரனம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்தசோதி
வையமெலா மறைவிளங்க வாள்வே லேந்து
மங்கையர்கோ னென்றிவர்கண் மகிழ்ந்துபாடுஞ்
செய்யதமிழ் மாலைகளுந் தெளியவோதித்
தெளியாத மறைநிலங்க டெளிகின் றோமே."

"இன்பத்தி விறைஞ்சுதலி லிசையும் பேற்றில்
இகழாத பல்லுறவி விராக மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கிற் றகவோக்கத்தில்
தத்துவத்தை யுணர்த்துதலிற் றன்மையாக்கில்
அன்பர்க்கே யவதரிக்கு மாயனிற்க
அருமறைக டமிழ்செய்தான் றளேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந்
தொல்வழியே நல்வழிக ணிவார் கட்கே."

என்பன. இவற்றுல் திவ்ய ப்ரபந்தங்களைப் பாடினவர்களைக் கூறியுள்ளார் என்பது விளங்கும். ஈண்டுமுதற் செய்யுளின் வ்யாக்யானத்தில் வ்யாக்யாதா "இங்கு ஸ்ரீ விஷ்ணு சித்தரைச் சொன்னது அவர் திருமகளாரான வாண்டாளுக்கு முபலக்ஷணம்." என்று கூறுவதுங் கவனிக்கத்தக்கது. ஆழ்வார்என்னும் பெயரைச் சொல்லாவிடினும் பன்னிருவரையுங் கூறியிருக்கின்றனர் என்பது புலனும். இவர் இயற்றிய ப்ரபந்தஸாரம் என்னும் மற்ருெரு ப்ரபந்தத்தில்,

"ஆழ்வார்க ளவதரித்த நாளூர் திங்கள்
அடைவுதிரு நாமங்க ளவர்தாஞ் செய்த
வாழ்வான திருமொழிக ளவற்றுட் பாட்டின்
வகையாகத் தொகையிலக்க மற்றுமெல்லாம்
வீழ்வாக மேதினிமேல் விளங்க நாளும்
விரித்து ரைக்கும் கருத்துடனே"

என்று தொடங்கி ஒவ்வொருவரையும் பற்றி முற்கூறியாங்கு விரித்துக்கூறி இறுதில் அனைவரையும் தொகுத்து இரண்டு செய்யுட்களிற் கூறுகின்றனர். அவை,

"எண்ணின்முத லாழ்வார்கண் மூன்று நூறும்
எழின்மழிசைப் பிரானிருநூற் றொருபத்தாறும்
உண்மையிலு மாறன்மறை யாயிரத்தோடு
உற்றவிரு நூற்றுத்தொண் ணூறுமாறும்
வண்மையுடை மதுரகவி பத்துமொன்றும்
வஞ்சியர்கோ னூற்றைந்தும் பட்டநாதன்
பண்ணியநா னூற்றேழு பத்துமூன்றும்
பார்க்கோதை நூற்றேழு பத்துமூன்றே."

"பத்தரடிப் பொடிபாட லைம்பத் தைந்தும்
பாணர்புகழ் பத்துடனே பரகா லன்சொல்
அத்தனுயர் வேங்கடமாற் காயிரத்தோடு
ஆனவிரு நூற்றேரைம் பத்துமூன்றும்

முத்திதரு மெதிராசர் பொன்னடிக்கே
  மொழிந்தவமு தர்பாட ஞாறுமெட்டும்
எத்திசையும் வாழவிவை பாடிவைத்த
  என்பவைநா லாயிரமு மெங்கள் வாழ்வே."

என்பன. இவற்றில் காணப்படும் ஆழ்வார்களின் முறை அமைப்பு அதிகார ஸங்க்ரஹத்திற் காணப்படும் முறைக்கு வேறும். இதில் ஆழ்வார் என்னும் பெயரையுங் கூறியிருக்கின்றனர். இவருக்குக் காலத்தாற் பிற்பட்டவராகிய மணவாளமாமுனிகள் நியமித்தருளிய இயற்பாவோடு சேர்க்கப்பட்டிருக்கிற இயற்சாற்று என்னும் தலைப்பில் ஈற்றுச்செய்யுளில் வேறொருமுறை காணப்படுகின்றது. அஃது,

"ஊழிதொறு மூழிதொறு முலகமுய்ய
  உம்பர்களுங் கேட்டுய்ய வன்பினாலே
வாழியெனும பூதம்பேய் பொய்கைமாறன்
  மழிசையர்கோன் பட்டர்பிரான் மங்கைவேந்தன்
கோழியர்கோன் தொண்டர்தூள் பாணன்கோதை
  குலமுனிவன் கூறியநூல் ஓதிவீதி
வாழியென வருந்திரளை வாழ்த்துவார்தம்
  மலரடியென் சென்னிக்கு மலர்ந்தபூவே."

என்பது. இவர் தென்கலை வைணவர்களால் பெரிதும் கொண்டாடப்பட்டவர்; ஜாமாதா என்ற வடமொழிப் பெயரினை உடையவர். நாலாயிரப்பிரபந்தத்தில் ப்ரபந்தங்கள் அமைந்துள்ள முறையில் ஆழ்வார்களின் வரிசைக்கிரமம் மேற்கண்ட ஆறினும் வேறும். இவ்வாறு ஆழ்வார்களின் முறைவைப்பு வேறுபடுதற்குக் காரணம் இன்ன என்று தெரியவில்லை. சைவசமயாசாரியர்களின் முறை அமைப்பில் பரம்பரை வழக்கிலுள்ள வாய்மொழி முறை ஒன்று; திருமுறை அமைப்பிலுள்ள முறை ஒன்று. அவ்விரண்டு முறை அமைப்புகளுக்கும் காரணங்கள் உள. ஆழ்வார்கள் முறை அமைப்பில் காணப்படும் வேறுபாடுகளுக்குக் காரணம் இனி ஆராய்ச்சியால் வெளிப்படவேண்டும். ஆழ்வார்களின் சரித்திரங்கள் குருபரம்பரா ப்ரபாவம், ஆழ்வார்கள் வைபவம் முதலிய கிரந்தங்களில் விரிவாய் எழுதப்பட்டுள்ளன. அவற்றிற் சொல்லியிருக்கும் ஆழ்வார்களின் காலத்தைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களாவது, கற்றறிந்த வைணவர்களிற் பெரும்பாலராவது ஒப்புக்

கொள்வதில்லை. அவைகளிற் கண்டிருக்கிறபடி பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், மதுரகவியாழ்வார் இந்த ஐவரும் துவாபரயுகத்தில் அவதரித்தவராவர். இவருள் முதல் மூவரும் முதலாழ்வார் எனப்படுவார். நம்மாழ்வார் கலியுகம் பிறந்த நாற்பத்து மூன்றும் நாள் அவதரித்தவர் ஆவர். பெரும்பாலர் திருமங்கை மன்னனைக் கடைசி ஆழ்வார் எனச் சொல்லுகின்றனர். சிலர் கூற்றின்படி அவர் அவதரித்த காலம் கலியுகத்தில் முன்னூற்றுத் தொண்ணூற்றேழாம் ஆண்டுக்கு மேற்சென்ற நளவருஷம். அஃதாவது இற்றைக்கு 4625 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். திருமங்கை ஆழ்வார் இரண்டாவது நந்திவர்மன் என்னும் பல்லவ அரசன் காலத்துக்குப் பின்னர் இருந்தவர். அவனுடைய பராக்ரமங்களைப் புகழ்ந்து பரமேச்சுர விண்ணகரப் பதிகத்திற் பாடியிருக்கின்றனர். அவ்வரசன் இருந்தது கி. பி. எட்டாம் நூற்றாண்டு என்பது சரித்திர ஆராச்சிக் காரர்களாற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அஃது இற்றைக்கு ஆயிரத்து நூற்றுச் சொச்சம் வருஷங்களுக்கு முன்னதாகும். இவர்களது கொள்கை முன்கண்ட கொள்கையோடு முரணும். மேற்சொல்லிய கிரந்தங்களிற்கண்ட ஆழ்வார்களின் திருநட்சத்திரங்கள் முதலியன சாஸனங்களிற்கண்ட ஆழ்வார்களின் திருநட்சத்திரங்களோடு மாறுபடுகின்றன. மேற்சொல்லியபடி ஆழ்வார்களின் முறைகளை ஈண்டுக் குறிக்கின்றேன். அவை,

| திருவரங்கத்தமுதனார் முறை. | பராசரபட்டர் முறை. |
|---|---|
| 1. பொய்கையாழ்வார் | 1. பூதத்தாழ்வார் |
| 2. பூதத்தாழ்வார் | 2. பொய்கையாழ்வார் |
| 3. பேயாழ்வார் | 3. பேயாழ்வார் |
| 4. திருப்பாணாழ்வார் | 4. பெரியாழ்வார் |
| 5. திருமழிசையாழ்வார் | 5. திருமழிசையாழ்வார் |
| 6. தொண்டரடிப்பொடியாழ்வார் | 6. குலசேகராழ்வார் |
| 7. குலசேகராழ்வார் | 7. திருப்பாணாழ்வார் |
| 8. பெரியாழ்வார் | 8. தொண்டரடிப்பொடியாழ்வார் |

9. ஆண்டாள்
10. திருமங்கையாழ்வார்
11. நம்மாழ்வார்
நாதமுனிகள்
யமுனைத்துறைவர்
இராமாநுஜர்

9. திருமங்கையாழ்வார்
10. நம்மாழ்வார்

## பின்பழகிய பெருமாள்ஜீயர் முறை.

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவியாழ்வார்
7. குலசேகராழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. தொண்டரடிப்பொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

## வேதாந்த தேசிகர் அதிகார ஸங்க்ரஹ முறை.

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. நம்மாழ்வார்
5. பெரியாழ்வார்
6. ஆண்டாள் (வியாக்)
7. குலசேகராழ்வார்
8. திருப்பாணாழ்வார்
9. தொண்டரடிப்பொடியாழ்வார்
10. திருமழிசையாழ்வார்
11. திருமங்கையாழ்வார்
12. மதுரகவியாழ்வார்

## வேதாந்த தேசிகர் பரபந்த ஸார முறை.

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவியாழ்வார்
7. குலசேகராழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. தொண்டரடிப்பொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

## மணவாள மாமுனிகளது நியமன முறை.

| | |
|---|---|
| 1. பூதத்தாழ்வார் | 7. திருமங்கையாழ்வார் |
| 2. பேயாழ்வார் | 8. குலசேகராழ்வார் |
| 3. பொய்கையாழ்வார் | 9. தொண்டரடிப்பொடியாழ்வார் |
| 4. நம்மாழ்வார் | 10. திருப்பாணாழ்வார் |
| 5. திருமழிசையாழ்வார் | 11. ஆண்டாள் |
| 6. பெரியாழ்வார் | 12. மதுரகவியாழ்வார் |

---

## நாலாயிரப்பிரபந்த முறை.

| | |
|---|---|
| 1. பெரியாழ்வார் | 7. மதுரகவியாழ்வார் |
| 2. ஆண்டாள் | 8. திருமங்கையாழ்வார் |
| 3. குலசேகராழ்வார் | 9. பொய்கையாழ்வார் |
| 5. திருமழிசையாழ்வார் | 10. பூதத்தாழ்வார் |
| 4. தொண்டரடிப்பொடியாழ்வார் | 11. பேயாழ்வார் |
| 6. திருப்பாணாழ்வார் | 12. நம்மாழ்வார் |

---

நாலாயிரப் பிரபந்தத்தில் அடங்கிய செய்யுட்களின் தொகை விவரம் பின் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| பொய்கையார் | 100 | பெரியாழ்வார் | 473 |
| பூதத்தாழ்வார் | 100 | ஆண்டாள் | 173 |
| பேயாழ்வார் | 100 | தொண்டரடிப்பொடியாழ்வார் | 55 |
| திருமழிசையாழ்வார் | 216 | திருப்பாணாழ்வார் | 10 |
| நம்மாழ்வார் | 1296 | திருமங்கையாழ்வார் | 1253 |
| மதுரகவியாழ்வார் | 11 | திருவரங்கத்தமுதனார் | 108 |
| குலசேகராழ்வார் | 105 | | |
| | | ஆக | 4000 |

மேற்கண்ட முறைகளில் முதலில் முறை ஏற்படுத்தப்பட்டது உடையவர் காலத்தில். அவர் இருந்தகாலம் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பாதியும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பாதியும் ஆகும். கடைசிமுறையேற்பட்டது மணவாளமாமுனிகள் காலத்தில். அவர் இருந்தது கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் பிற்பாகத்திலும் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பாகத்திலும். ஆழ்வார்கள் இருந்தது இம்முறைகள் ஏற்படுவதற்கு வெகுகாலம் முந்தி. நம்மவர்கள் சரித்திரக்குறிப்பு வைக்கிற வழக்க மில்லையாதலாலும், கர்ண பரம்பரையில் வருங்கதைகள் மாறுபடுவது இயல்பேயாதலாலும் ஒன்றோடொன்று முரணுவதாயுமுள்ள பலமுறைகள் ஏற்படலாயின. சரித்திரஆராய்ச்சி பெருகப்பெருக உண்மை வெளிவரும். ஆழ்வார்களுள் காலத்தால் முந்தியவர் எவரோ அவரே பெருமையிலும் முந்தியவர் ஆவர் எனக் கருதிச் சிலர் ஆழ்வார்களை உண்மையிலிருந்ததாக நினைக்கக்கூடிய காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் முந்தி இருந்தவர் என ஸ்தாபிக்க முயலுகின்றனர். அவர் கொள்கை உண்மையானால் மச்சாவதாரம், கூர்மாவதாரங்களினும் இராமாவதாரம், கிருஷ்ணாவதாரங்கள் பெருமையிற் குறைந்தன என்று கொள்ளவேண்டும். பரமதத்துவங்கள் வெளிப்படுவதற்குக் காலத்தை நியமனமாகக் குறிப்பது கிரமமன்று. சில ஆழ்வார்கள் காலத்தைச் சில அறிஞர்கள் ஒருவாறு நிச்சயித்திருக்கிறார்கள். அந்த ஆழ்வார்கள் காலத்தை முதலில் ஆராய்வாம்.

பெரியாழ்வார்:—ஸ்ரீமான். மு. இராகவையங்கார் அவர்கள் செந்தமிழ் (தொகுதி 6. பக்கம் 51.) லும் ஸ்ரீமான். டாக்டர். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் "Early History of Vaishnavisam in South India" முதலிய புத்தகங்களிலும் பெரியாழ்வார் காலத்தை நிர்ணயித்து விஸ்தாரமாக எழுதியிருக்கிறார்கள். என் துணிவும் அவர்களுடைய முடிவை ஒத்ததே. பெரியாழ்வார் தாம் பாடிய பிரபந்தத்தில் அபிமானதுங்கன், நெடுமாறன் என்னும் இருவர் பெயரைக் குறிக்கிறார். அபிமானதுங்கனைச் சொல்லும் பாசுரங்கள்

"அல்வழக்கொன் றுமில்லாவணிகோட்டியர்கோனபிமான துங்கன்
செல்வனைப்போலத் திருமாலேநானுமுனக்குப்பழவடியேன்
நல்வகையாலநமோநாராயணாவென் றுநாமம்பலபரவிப்
பல்வகையாலும்பவித்திரனேயுன்னைப்பல்லாண்டுகூறுவனே" I. 1-10

"நளிர்ந்தசீலனயாசலனபிமான துங்கனைநாடொறுந்
தெளிந்தசெல்வனைச்சேவகங்கொண்டசெங்கண்மாறிருக்கோட்டியூர்
குளிர்ந்துறைகின்றகோவிந்தன்குணம்பாடுவாருள்ளநாட்டினுள்
விளைந்ததானியமுமிராக்கதர்மீதுகொள்ளகிலார்களே.' IV. 4-8.

என்பன. அபிமான துங்கன் என்று இப்பாசுரங்களிற் சொல்லப் படுபவன் பரம விஷ்ணுபக்தன் என்று தெரிகிறது. இப்பொழுது சரித்திர ஆராய்ச்சி இருக்கும் நிலைமையில் அவரைப்பற்றி விசேஷமாய் அறிவதற்கிடமில்லை. அவரைப்பற்றிய விஷயங்கள் வெளியாகுங்காலத்தில் பெரியாழ்வாரைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு அவை உபயோகமாகலாம். நெடுமாறன் என்னும் மற்றொருவரைச் சொல்லும் பாசுரங்கள்.

"மன்னர்மறுகமைத்துனன்மார்க்கொருதேரின்மேல்
முன்னங்குநின் றுமோழையெழுவித்தவன்மலை
கொன்னவில்கூர்வேற்கோன்நெடுமாறன்றென்கூடற்கோன்
தென்னன்கொண்டாடுந்தென் றிருமாலிருஞ்சோலையே' IV. 2-7.

"பருப்பதத்திற்கயல்பொறித்தபாண்டியர்குலபதிபோல்
திருப்பொலிந்தசேவடியென்சென்னியின்மேற்பொறித்தாய்
மருப்பொசித்தாய்மல்லடர்த்தாயென்றென் றுன்வாசகமே
உருப்பொலிந்தநாவினேனையுரித்தாக்கினையே' V. 4—7.

என்பன. இப்பாசுரங்களில் சொல்லப்பட்டிருக்கும் நெடுமாறன் பாண்டிய அரசன். பாண்டிய வம்சவிருக்ஷத்தில் ஏழாவதாகக் குறிக்கப்பட்டிருக்கிற நெடுஞ்சடைய னென்பவனை ஆழ்வார் நெடுமாறன் என்று சொல்லியிருக்கிறார் எனக் கொள்வதற்கு ஆதாரங்களுள. பாண்டியர்கள் சோமசுந்தரக் கடவுள் வம்சத்தினர் என்று சொல்லிக்கொள்வதைச் சின்னமனூர்ச் சாஸனம், மதுரைக் காஞ்சி முதலியவற்றில் பார்க்கலாம். சோமசுந்தரக் கடவுளைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள். அவர்களுக்கு நேரிடும் இடையூறுகள் சிறிதேயாயினும் பெரிதேயாயினும் அவர்கள் சோமசுந்தரக் கடவுளிடஞ்சென்று குறையிரப்பது வழக்கம். பரமசிவபக்தர்கள். விஷ்ணுத் துவேஷத்தையுஞ் சிவபக்தியையும்

ஒன்றெனச் சிலரைப்போலக் கொள்வார் அல்லராயினும், விஷ்ணு பக்தர்களென்று அவர்களைக்கொள்வதற்கில்லை. அத்தகைய பாண்டிய வம்சத்தில் ஓர் அரசன் பரமவைஷ்ணவன் என்று சொல்லப் பட்டு வைணவ ஆழ்வார் ஒருவரை ஞானசாரியனுகக் கொண்டு விஷ்ணுவாலயங்கள் எடுப்பித்து விஷ்ணுவை வழிபட்டான் என்பது அருமையே. மேற்சொன்ன லக்ஷணங்கள் எல்லாம் நெடுஞ்சடையனுக்குப் பொருந்தியிருந்தன. அவனுக்கு முன்னும் பின்னும் ஆட்சிபுரிந்த பாண்டியர்களில் இவ்விலக்கணங்கள் பொருந்தியவர்களாய் ஒருவரும் இருந்ததாகத் தெரியவில்லை. சென்னைப் பொருட்காக்ஷிசாலைச் சாஸனத்தில் இவனை "பாண்டிய நாதன், பண்டிதவத்ஸலன், வீரபுரோகன், விக்ரமபாரகன், பராந்தகன், பரமவைஷ்ணவன், தானாகி நின்றிலங்கு மணிநீண்டமுடி நெடுஞ்சடையன்" என்று சொல்லியிருக்கிறது. அந்த சாஸனத்தில் மற்ருேரிடத்தில் "கொங்கபூமி யடிப்படுத்து... காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத் திருமாலுக் கமர்ந்துறையக் குன்றமன்னதோர் கோயிலாக்கியும்'' என்று கண்டிருக்கிறது. இவற்ருல் இவன் பரம வைஷ்ணவன் என்று சொல்லப்படுவதையும், திருமாலுக்கு ஆலயமமைத்ததையும் அறியலாம். மேற்கண்ட பொருட்காக்ஷிசாலைச் சாஸனத்தில் மற்ருேரிடத்தில் "குருசரிதங் கொண்டாடி" என்று சொல்லியிருக்கிறது. குரு என்பது பெரியாழ்வாரைக் குறிக்கும். பெரியாழ்வார் சரித்திரத்திலும் அவர் பாண்டிய அரசனொருவனுக்கு ஞானசாரியனுன விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. பின்பழகிய ஜீயர், ஆழ்வார் காலத்துக்குப் பல நூற்ருண்டுகளுக்குப் பின்னர் சரித்திரம் எழுதினவரானபடியால் பாண்டியன் பெயரைத் தவறுதலாய்ச் சொல்வதில் வியப்பொன்று மில்லை. நாலாயிரப் பிரபந்தத்தில் பாண்டிய பட்டர் பெரியாழ்வார் விஷயமாய்ப் பாடியிருக்கிற செய்யுளும்இதை விளக்கும். அது,

> பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
> றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
> வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
> பாதங்கள் யாமுடைய பற்று'

என்பது. ஆழ்வார் சரித்திரத்தில் இதில்கண்ட விஷயங்கள் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. இச்செய்யுளில் பட்டர்பிரான்

என்று சொல்லியிருப்பது பெரியாழ்வாரை. அவருடைய பெயர்களில் அஃது ஒன்று. நெடுமாறனைச்சொல்லிய மேற்கண்ட திருமாலிருஞ்சோலைப் பாசுரம் இவன் அத்திருப்பதியிலுள்ள கண்ணபிரானை வழிபடுவதைக்காட்டும். திருமாலிருஞ்சோலை என்னும் அழகர்கோயில் பாண்டியன் தலைநகராகிய மதுரைக்கருகிலுள்ளது. இவ்வாறு மேற்சொல்லிய லக்ஷணங்களெல்லாம் நெடுஞ்சடையனுக்குப் பொருந்தியிருக்கின்றன. இதன்றியில், மாறன்காரி அல்லது மதுரகவியென்கிற மந்திரி ஒருவன் இப்பாண்டியனிடத்து இருந்ததாகத்தெரிகிறது. அவன் மதுரைக்கருகிலுள்ள ஆனைமலையில நரசிம்மஸ்வாமி கோயில் ஒன்றைக் கல்லில்குடைந்து அமைத்தான். அரசன் பரம வைஷ்ணவனாகித் திருமாலுக் கமர்ந்துறையக் கோயிலாக்கியபொழுது அவனது மந்திரியும் அரசனைப் பின்பற்றி ஒழுகுவானாயினன் என்று நினைப்பதற்கு இடங்கொடுக்கிறது. ஆனைமலைக்கற்றளியில் வடமொழியில் ஒரு கல்வெட்டும், தமிழில் ஒரு கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. வடமொழிக் கல்வெட்டில் 'கரவிந்தபுரத்தில் வசிப்பவனாகிய மதுரகவி என்பவன், பராந்தகன் என்னும் பெயரிய பாண்டிய அரசனுக்கு உத்தர மந்திரி விஷ்ணுவுக்குக் கற்றளியமைத்தான்' என்பது முதலிய விஷயங்களும், ஆண்டும் திங்களுங் கண்டிருக்கின்றன. தமிழ்க்கல்வெட்டு பின்வருமாறுளது. "கோமாறஞ்சடையற்கு உத்தரமந்திரி களக்குடி வைமியன் மூவேந்தமங்கலப்பேரரையன் ஆகிய மாறங்காரி இக்கற்றளிசெய்து நிரத்தளியாதே ஸ்வர்க்காரோகணஞ்செய்த பின்னை அவனுக்கு அநுஜன் உத்தரமந்திரி பதமெய்தின பாண்டிமங்கல விசை அரையன் ஆகிய மாறன்னை இன்ன முகமண்டபஞ்செய்து நிரத்தளித்தான்" என்பது. மேற்கண்டவற்றால் பராந்தகன், மாறஞ்சடையன் என்னும் பெயர்களும நெடுஞ்சடையனுக்கு உண்டென்பது புலப்படும். மேலும், மாறங்காரி அமைக்க எத்தனித்த கற்றளி முடிவுபெறுமுன் அவன் இறந்தான் என்பதும், அதைப் பூர்த்தி பண்ணினவன் அவன் தம்பி என்பதும் புலப்படும். வடமொழிக் கல்வெட்டில் கலி 3871-ஆம் ஆண்டில் கற்றளியமைக்கப்பட்டதென்று கண்டிருக்கிறது.

இனி நெடுஞ்சடையன் வைஷ்ணவனான காலமெதுவென்னும் சங்கையெழலாம் இவனே வேள்விக்குடி சாஸனத்தைப் பிறப்பித்தவன். அது வடமொழி தென்மொழி இரண்டிலும் பொறிக்கப்பட்டுளது. வடமொழிப்பொறி சிவஸ்தோத்திரத்தோடு ஆரம்பமாகிறது. நெடுஞ்சடையன் குலகுரு அகஸ்தியர் என்று அதில் கண்டிருக்கிறது. விஷ்ணு வின் பிரஸ்தாபமாவது பெரியாழ்வார் பிரஸ்தாபமாவது அதில் இல்லை. அது நெடுஞ்சடையன் ஆட்சி தொடங்கிய மூன்றும் ஆண்டில் பிறப்பிவிக்கப்பட்டது. அக்காலத்தில் இவன் சைவனாக இருந்தானென்பது வெளிப்படை. அந்த சாஸனத்து ஆஞுப்திமாறங்காரி. ஆனைமலைக் கல்வெட்டுக் காலத்தில் அவனில்லை. அதன்காலம் கலி 3871க்குச்சரியான கி. பி. 769—70. ஆனைமலைக்கல்வெட்டுக்காலத்தில் பாண்டிய அரசன் பரமவைஷ்ணவன். ஆதலால் நெடுஞ்சடையன் பெரியாழ்வாரை ஞானசாரியனாகக் கொண்டது வேள்விக்குடி சாஸனத்துக்குப்பின்னும், ஆனைமலைச்சாஸனத்துக்கு முன்னும் இருக்கவேண்டும். பெரியாழ்வார் கி. பி. 769—70-க்கு முன்னரே இருந்தவரென்று இதனால் அறியலாம். பின்னருமிருந்தாரோ இல்லையோ தெரியவில்லை. நெடுஞ்சடையனது ஆட்சி இத்தனையாண்டுகள் நிகழ்ந்தன என்றுந் தெரியவில்லை.

நெடுமாறன் என்பது நெடுஞ்சடையனுக்குரிய பெயர்களில் ஒன்றன்று. மாறன் என்னும்பதத்திற்குப்பாண்டியன் என்பது பொருள். நெடுமாறன், நெடுமால் என்னும் தொடர்மொழிகளிலுள்ள நெடு என்பது பெருமையை உணர்த்தும் பண்புச்சொல். நெடுமை— பெருமை. நெடுமாறன் என்றது பெருமைபொருந்திய பாண்டியன் என்றாகும். நெடுமாறன் என்று பல பாண்டியர்களைச் சொல்வதைப் பார்க்கலாம். வம்சவிருக்ஷத்தைப் பார்ப்பதனால் நெடுமாறன் என்பது அதிற்கண்ட பாண்டியர்களில் ஒருவருடைய இயற்பெயருமல்ல வென்றறியலாம். நெடுஞ்சடையனுக்குரிய பெயர் சடையன் என்பது. மாறஞ்சடையன் என்பதிலும் அதைப் பார்க்கலாம். அவனுடைய சமஸ்கிருதப்பெயர் சடிலன். சடிலம் என்பது சடை என்று பொருள்படும். நெடு என்னும் அடை

மொழி அதிலில்லை. அவனைச்சிறப்பித்துக் கூறுவார் நெடு என்னும் அடைமொழியைச் சேர்த்துச் சொல்லுவர். பெரியாழ்வாருக்குப் பட்டர்பிரான், விஷ்ணுசித்தன் என்கிற பெயர்களுமுண்டு.

மேற்கண்ட மாறங்காரிக்கு மதுரகவி என்னும் பெயர் இருந்ததைக் கொண்டு சிலர் மதுரகவியாழ்வார் என்பார் இவரே என்பர். அவர் கூற்றை ஒப்புக்கொள்வதில் பல தடைகளுள.

ஆண்டாள்:—இவர் பெரியாழ்வாரின் பெண் ஆவர்; காலம் மேற்சொல்லியவற்றால் விளங்கும்.

திருமங்கையாழ்வார்:—இவ்வாழ்வார் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் மத்தியில் இருந்தவர் என்று சிலரும், முற்பாதியில் இருந்தவர் என்று வேறு சிலரும் கூறுவர். அவர் தம் கூற்றுக்காதாரமாய்ப் பின்கண்ட திருமங்கை மன்னன் பாடிய அட்டபுயகரப் பதிகப் பாசுரத்தைக் காட்டுகின்றனர். அது,

"மன்னவன் றொண்டையர்கோன் வணங்குநீண்முடிமாலைவைரமேகன்
தன்வலிதன்புகழ்சூழ்ந்தகச்சியட்ட புயகரத்தாதிதன்னைக்
கன்னிநன்மாமதின்மங்கைவேந்தன்காமருசீர்க்கலிகன்றிகுன்றா [தமே."
இன்னிசையாற்சொன்னசெஞ்சொன்மாலையேத்தவல்லார்க்கிடம்வைகுந்

என்பது. இப்பாசுரததில் வைரமேகன் என்றிருப்பதை இரட்டைபாடி அரசன் தந்திதுதர்க்கனைச் சுட்டுவது எனக்கொண்டு தொண்டையர்கோனாகிய பல்லவ அரசனால் வணங்கப்படும் வைரமேகன் என்றும், கச்சியை அந்த வைரமேகனது வலியும் புகழுஞ்சூழ்ந்த கச்சி என்றும் பொருள் கொள்கின்றனர். சில வருடங்களுக்கு முன் சரித்திர ஆராய்ச்சி இருந்த நிலைமையில் வைரமேகன் என்னும் பெயருடைய அரசன் இரட்டைபாடி மன்னவனாகிய தந்திதுர்க்கனைத் தவிர்த்து வேறொருவரும் இருந்ததாகத் தெரியவில்லை. மேலும், அவன் காலத்தில் தொண்டையர் கோனாயிருந்தவன் இரண்டாவது நந்திவர்மன். அவனோடு பல்லவ வம்சம் முடிவடைந்து விட்டதாகவும் அப்பொழுது சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கருதினார்கள். பிந்திய ஆராய்ச்சியால் இரண்டாவது நந்திவர்மனுக்குப் பிறகும் பல்லவ வம்சத்தில் புலர் இருந்து

ஆட்சி புரிந்தனர் என்றும், அவர்களில் இருவர் வைரமேகன் என்னும் பெயர் தாங்கினவர் என்றும் தெரிகிறது. சாஸன பரிசோதகர்களின் கி. பி. 1916 ஆம் ஆண்டு அறிக்கை அதை விளக்கும். அது :

"Some names of later Pallava Kings who came into power immediately after the Usurper Nandivarman may now be noticed. Vairamegan as a probable surname of the Pallava King Nandipotharasar was suggested by Mr. Venkaya in his paper on the Triplicane inscription of Dantivarman (Eq. Ind. VIII. 290 ff). From two records copied at Poyanur and Kilpulam in the North Arcot District which belong to the second year of a king named Vairamegan (Nos 150 and 152 appendix C), it appears as if there was a king of that name also among the Pallavas. The characters of the two inscriptions under reference belong however to a some what later period than that of the Triplicane inscription. It now becomes therefore difficult to decide whether the Tondiar King (Pallava) Vairamegan mentioned by Thirmangai Alwar who appears to have lived not long after the incidents connected with the reign of Nandivarman Pallavamalla is a surname of Dantivarman of the Triplicane inscription or of a king Vairamegan mentioned Nos 150 and 152 of appendix C." இதில் இரண்டாவது நந்திவர்மனுக்குப்பிறகு பல்லவ அரசர்களில் இருவர் வைரமேகன் என்னும் பெயரை வகித்திருந்தார்கள் என்பதும், மேற்கண்ட பாசுரத்தில் ஆழ்வார் குறிப்பிட்டது அவ்விருவரில் எவரை என்று அறியக்கூடவில்லை என்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன. நிற்க, மேற்கண்ட பாசுரத்தின் முதல் இரண்டடிக்கும் பதிப்பிக்கப்பட்டிருக்கிற பதவுரையையும், வைணவஆசாரியர்களில் ஒருவராகிய பெரியவாச்சான்பிள்ளை எழுதிய வியாக்கியானத்தையும், அதற்கேற்பட்டிருக்

கிறஅரும்பத உரையையும் உள்ளவாறு ஈண்டு வரைகின்றேன். பதவுரை,

"வைரமேகன்—வைரமேகனென்னும் தன்—அந்த ராஜாவினது
மன்னவன்—ராஜாவான வலி—மிடுக்காலும்
தொண்டையர்கோன்—தொண்டைமான் தன்புகழ்—அவன்யச
சக்கரவர்த்தியாலே சூழ்ந்த—விஞ்சின [ஸாலும்
வணங்கும்—சேவிக்கப்படுபவராய் கச்சி—கச்சிநகரில்
(அத்தாலே) அட்டபுயகரத்து-திருவட்டபுய
நீண்முடி—நீண்டமுடியையுடைய கரத்திலே எழுந்தருளியிரு [க்கிற
மால் (ஐ)-ஸர்வேச்வரனை (இரண்டாம் ஆதிதனை-ஸர்வகாரண
பூதன் வேற்றுமை யுருபுடுக்கு) (ஐ) விஷயமாக" என்பது.

பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானம் "(மன்னவனித்யாதி) ராஜா தொண்டைமான் சக்கரவர்த்தி; பக்தாபிமானியாய் வணங்கின பின்பாயிற்று ஈச்வரன் முடிதரித்ததும் ஸர்வேசவரத்வம் நிலைநின்றதும். முன்பெல்லாம் ஈராசுபட்டிறே போந்தது. (வைரமேகன்) வைரமேகனென்று அவற்கு (க்குடி)ப்பேர். (தன்வலி) எதிரிகளை அழியச்செய்கைக்கீடான அவன்மிடுக்கும், ரக்ஷணத்தால்வந்த புகழும் விஞ்சியாயிற்றிருப்பது. திருவட்ட புயகரத்தில்நிற்கிற ஜகத்காரண பூதனைக்கவிபாடிற்று" என்பது.

அரும்பதம் "(மன்னவனித்யாதி) ஈராசுபட்டிறே என்றது வணங்குகைக்கு முன் த்வம்மேயும்மே என்றிறே போந்தது. யதாராஜா ததாபிரஜா: என்று எல்லாரும் வணங்கினார்களென்று கருத்து. அவற்குப் பேர்—சக்ரவர்த்திக்குப் பேர்" என்பது. இவைகளில் வைரமேகன் என்னும் பெயர் பல்லவ சக்கரவர்த்தியைக் குறிப்பதென்றும், அப்பெயர் பல்லவர் குடிப்பெயர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சாஸன பரிசோதகர் வைரமேகன் என்னும் பெயர் பல்லவ அரசரில் சிலர் வகித்தது என்பர். பிரபந்த வியாக்கியானக்காரர்கள் அது பல்லவருக்குக் குடிப்

பெயர் என்பர். எவ்வாறாயினும், மேற்கண்ட பாசுரத்தில் வைர மேகன் என்று சொல்லி யிருப்பது இரட்டைபாடி அரசனைக் குறிப்பதன்று என்பதும், பல்லவ அரசனைக் குறிப்பதே அவர் கொள்கை என்பதும் வெள்ளிடைமலைபோல் விளங்கக் கிடக்கின்றன. இதற்கு வேறொரு உரை கூறுவாருமுளர். அது, மன்னவனாகிய தொண்டையர்கோன் எனவும், தொண்டையர் கோனாகிய வைரமேகன் எனவும், அவன் வலியும் புகழுஞ் சூழ்ந்த கச்சிஎனவும் இயையும். வணங்குநீண்முடிமாலை என்னும் சொற்கள் வைரமேகன் என்பதற்கு அடைமொழிகளாம். அவற்றின் பொருள் தன்னை வணங்கும் அசர்களது முடிகளை நீண்ட மாலையாகவுடைய வைரமேகன்" என்பது. அடுத்த தாகிய பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தின் முதல் பாசுரம் இக்கொள்கையை வற்புறுத்தும். அது,

"சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச்சுவையொலிநாற்றமுந்தோ
நல்லரனாரணனான் முகனுக்கிடந்தான் றடஞ்சூழ்ந்தழகாயகச்சி [ற்றமுமாய்
பல்லவன்வில்லவனென் றுலகிற்பலராய்ப்பலவேந்தர்வணங்குகழற்
பல்லவன்மல்லையர்கோன்பணிந்தபரமேச்சுரவிண்ணகரமிதுவே."

என்பது. இதில் 'பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற்பல்லவன்' என்பது கூட்டங்கூட்டமாய் அரசர்கள் பல்லவன் கழலைவணங்குவதைக்காட்டும். ஒரேகாலத்தில் பலர் அவனருகில்வந்து வணங்குப்போது மாலைபோலிருந்து வணங்குவது இயல்பே. அட்டபுயகரப் பதிகத்தில் ஆழ்வார்கொண்ட கருத்தை வேறொருபெரிய அரசனைப் பற்றிச் கன்னடபாஷைச் சாசனத்திலுங் காணலாம். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை இவ்விடத்து வரைகின்றேன். அது, 'As the row of other Kings bowed down in present awe at his footstool (Eq Ind XIII p 52 verse 30)' என்பது. இவ்விடத்து row என்பது மாலையாம்" என்பது.

மேலும், ஆழ்வார் அடுத்த பரமேச்சுர விண்ணகரப்பதிகத்தில் பல்லவ அரசனைச் சக்ரவர்த்தி எனப் பாராட்டி அவன் படையின் திறல், பெருமை முதலியவற்றையும், அயல்நாட்டரசர் அவனால் தோல்வியடைந்து பறந்து ஓடுவதையும், அவன் ஆட்சி

யின் விசாலித்த பரப்பையும், மற்றுமுள்ள அவனுடைய பெருமைகளையும் பெரிதும் புகழ்ந்து பாடியிருப்பதை அப்பதிகத்திலுள்ள பின்கண்ட வரிகள் காட்டும். அவை,

"பல்லவன் வில்லவனென் றுலகிற்பலராய்ப்பலவேந்தர்வணங்குகழற்
பல்லவன்மல்லையர்கோன்"

"ஏர்மன்னுதென்னவனைமுனையிற்செருவிற்றிறல்வாட்டியதிண்சிலைக்கோன்
பார்மன்னுபல்லவர்கோன்"

"நிரந்தவர்மண்ணையில்புண்ணுகர்வேனெடுவாயிலுகச்செருவின்முனநாள்
பரந்தவர் பல்லவர்கோன்"

"விண்டவரிண்டைக்குழாமுடனேவிரைந்தாரிரியச்செருனமுனிந்து
பண்டொருகால்வளைத்தான்"

"தேம்பொழிற்குன்றெயிற்றென்னவனைத்திசைப்பச்செருமேல்வியந் [தன்றுசென்று
பாம்புடைப்பல்லவர்கோன்"

"வெண்குடைநீழற்செங்கோனடப்பவிடைவெல்கொடிவேற்படை [முன்னுயர்த்த
பண்புடைப்பல்லவர்கோன்"

"உலகுடைமன்னவன்றென்னவனைக்கன்னியமாமதில்சூழ்கருவூர்வெருவப்
பல்படைசாயவென்றான்"

"விடைத்திறல்வில்லவன்நென்மலியில்வெருவச்செருவேல்வலங்கைப் [பிடித்த
படைத்திறப்பல்லவர்கோன்"

"கறையுடைவாண்மறமன்னர்கெடக்கடல்போன்முழங்குங்குரற்கடுவாய்ப்
பறையுடைப்பல்லவர்கோன்"

"பார்மன்னுதொல்புகழ்ப்பல்லவர்கோன்"

என்பன. திருமங்கையாழ்வாரே திருச்சித்திரகூடப்பதிகத்தில்,

"பைப்பொன்னுமுத்துமணியுங்கொணர்ந்து
படைமன்னவன்பல்லவர்கோன்பணிந்த
செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்ததில்லை" (III. 2-3.)

என்றும், திருவரங்கப் பதிகத்தில்

"துளங்குநீண்முடியரசர்தங்குரிசில்
தொண்டைமன்னவன்றிண்டிறலொருவர்க்
குளங்கொளன்பினோடின்னருள்சுரந்தங்
கோடுநாழிகையேழுடனிருப்ப" (V. 8-9)

என்றும், இன்னும் வேறு இடங்களிலும் பல்லவ அரசனைப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். பல்லவ அரசர்களில் முதலாவது

மகேந்திரவர்மன் முதல், இரண்டாவது நரசிம்மன்வரை உள்ளவர் பரமசிவபக்தர்கள். அவனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாவது பரமேச்சுரவர்மனும், அவனுக்குப் பின்னர்ப் பல்லவ ஆட்சியை அடைந்தவர்களும் விஷ்ணு பக்தர்கள். இவர்களில் முன்னையோருக்கு விஷ்ணுத்துவேஷமாவது பின்னையோருக்குச் சிவத்துவேஷமாவது இருந்ததில்லை. முன்னையோர் விஷ்ணுவாலயத் திருப்பணிகளும், பின்னையோர் சிவாலயத்திருப்பணிகளும் செய்திருக்கின்றனர். 'பரமேச்சுர விண்ணகரம் என்னும் ஆலயம் இரண்டாவது பரமேச்சுரவர்மன் அமைத்தது. அது பூர்த்தியாவதற்கு முன் அவன் இறந்தான். அவனுக்குப்பின் பட்டமடைந்த இரண்டாவது நந்திவர்மன் அதைப்பூர்த்திசெய்து அதற்குப் பல சொத்துகளும் கொடுத்தனன்' என்று சில சரித்திர ஆராய்ச்சிக்காரர் சொல்லுகின்றனர். பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்தில் காணப்படும் வெற்றிகளும், மற்றுமுள்ள புகழ்களும் அவனுடைய என்பது சரித்திரத்தால் விளங்குகின்றது. ஆழ்வார் அந்தவிண்ணகரப் பதிகத்தில் நந்திவர்மன் வெற்றிகளை விரிவாய் சொல்லியிருப்பது சரித்திர ஆராய்ச்சிக்காரரது கொள்கையை வற்புறுத்தும். இரண்டாவது நந்திவர்மனை ஆழ்ந்த விஷ்ணு பக்தன் என்று சாசனங்களில் சொல்லியிருக்கிறது. அவன் வம்சஸ்தர்களும் பரம விஷ்ணுபக்தர்களே. அட்டபுயகர விண்ணகர், பரமேச்சுர விண்ணகர் முதலியன காஞ்சியிலுள்ளன. பல்லவ அரசர்களுக்குக் காஞ்சியே தலைநகர். ஆழ்வார் தாம் வணங்கும் ஸ்ரீமந் நாராயணனிடத்து மிகுந்தபக்தியைச் செத்துபவனும், தாம் சரிக்கும் நாட்டுக்கும் அரசனும், குறுநில மன்னராகிய தம்மால் (ஆழ்வாரால்) ஒரு காலத்துத் திறை செலுத்தப்பெற்றவனும்உள்ள பல்வ வம்சத்தரசனை அட்டபுயகரப்பதிகத்தில் புழ்ந்து பாடியிருப்பது இயல்பே. இரட்டைபாடி அரசனோ துங்பத்திரைக்கு வடக்கிலுள்ள மானியகேத நகரத்தைத் தலைநகராகக்கொண்டவன். காஞ்சிக்கும் மானியகேதத்துக்கும் வெகுதூரம். இரட்டைபாடி அரசன் பல்லவ அரசனுக்கு விரோதி. போருக்கு வருங் காலங்களிலன்றிக் காஞ்சிநகரத்தைப்பாராதவன். அவன் வம்சத்தினர்பெரும்பாலும் ஜைனர். அவனைஆள்வார் புகழ்ந்துப்

டினார் என்பது பொருத்தமுடையதாகாது. அன்றியும் பல்லவ அரசனால் வணக்கப்படுவன் எனறும், அவனது வலியும் புகழும் கச்சியைச் சூழ்ந்திருக்கின்றன என்றும் சொல்வது பல்லவ அரசனை இழித்துக் கூறியதாகுமே. "பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற் பல்லவன்" என்று ஆழ்வார் கூறியிருப்பது ஈண்டுக் கவனிக்கத் தக்கது. ஆழ்வார் பல்லவனை இழித்தும், இரட்டைபாடி அரசனைப் புகழ்ந்துங் கூறுவதற்கு நியாயம் ஒன்றும் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படிச்சொன்னார் என்றால் ஆழ்வார் சமயம் பார்த்து உயர்ந்த கையைப் புழுகிறவர் என்றாமே. ஆழ்வாரோ ஒரு குறுநிலமன்னராயிருந்து உலக வாழ்வைத் தூசாய் மதித்து ஸ்ரீமந் நாராயணனது பகதி ஒன்றையே நன்மை பயப்பதெனக் கடைப்பிடித்தவர். அவர் இத்தகைய இழிந்த ஒழுக்கத்தைக் கொண்டனர் என்று சொல்வது அடாததாம். ஒருகாலும் இந்த அபகீர்த்திக்கு அவர் பாத்திரர் ஆகார்.

அன்றியும், இரட்டைப்பாடி அரசனாகிய தந்திதுர்கன் காஞ்சியின்மீது படையெடுத்து வந்ததாகவாவது, பல்லவ அரசனைக் கீழ்ப்படுத்தியதாகவாவது கொள்வதற்கு இடமில்லை. தந்திதுர்கனது ஆட்சி மிகச் சுருங்கியது. இரண்டொரு ஆண்டுகளே அவனாட்சியின் நீட்சியாம். அவன் கல்யாணபுரத்தரசனை வென்று உடனே அதன் வடபாலுள்ள நாடுகளின்மீது படையெடுத்துச் சென்றனன். கல்யாணபுரத்தரசர், பல்லவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர் என்று சொல்லிக்கொள்வதுண்டு. தந்திதுர்கன் கல்யாணபுரத்தரசனை ஜயித்ததைக்கொண்டு பல்லவனையும் ஜயித்ததாகப் புனைந்துரையாகச் சொல்லிக்கொண்டிருக்கலாம். இதை ஆதாரமாகக்கொண்டு அட்டபுயகரப்பதிகப்பாசுரத்துக்குச் சிலர் பொருள் கொள்ளுதல் பொருந்தாததென்றே தோன்றுகிறது.

இனி, திருமங்கை மன்னன் காலம் எது என்பதை ஆராய்வாம். பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில் ஆழ்வார் இரண்டாவது நந்திவர்மனைப் புகழ்ந்திருக்கின்றனர் என்று முன்னமே கூறினேன். அந்தப் பதிகத்தில் ஒவ்வொருபாசுரத்திலும்

"பல்லவர்கோன் பணிந்த" என்று ஆழ்வார் கூறியிருப்பது இரண்டாவது நந்திவர்மனை இறந்த காலத்தவன் எனக் கொண்டிருக்கிறார் என்பதைக் காட்டும். நந்திபுர விண்ணகரமும் இவ்வரசனாலே அமைக்கப்பெற்றதென்று கொள்வதற்கிடமிருக்கிறது. முதலாவது நந்திவர்மன் அதை அமைத்தவன் என்றாவது அவன் விஷ்ணு பக்தன் என்றாவது கொள்வதற்காதாரம் காணப்படவில்லை. நந்திபுர விண்ணகரப் பதிகத்திலும் திருமங்கை மன்னன் "நந்தி பணிசெய்த" என்று சென்ற காலத்தில் சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது. இவைகளால் இவ்வாழ்வார் இரண்டாவது நந்திவர்மன் காலத்துக்குப் பிற்பட்டவர் எனக்கொள்ளுதலே இயைபுடைத்தாம். அவனது ஆட்சியைக் கி. பி. 784, 785-ஆம் ஆண்டோடு முடிவடைந்ததெனக் கொள்ள வேண்டும் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். அவனுக்குப் பிறகு பட்டமடைந்த அவன் மகன் தந்திவர்மன் கி. பி. 835-ஆம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தவன். மூன்றாவது கோவிந்தன் என்னும் இரட்டைபாடி அரசன் இவனைப் போரில் வென்று கீழ்ப்படுத்தினான். தந்திவர்மன் அவனுக்குத் திறை கொடுக்கும்படி நேரிட்டது. பல்லவர் ஆட்சி பல திக்குகளில் குன்றியது. அவனுக்குத் திறை கொடுக்கும் மன்னர் பலர் திறை கொடுப்பதை மறுத்தனர். இராச்சியத்தில் குழப்பம் நேரிட்டிருந்தது. திருமங்கையாழ்வார் காலத்தில் பல்லவராட்சி குன்றியிருந்ததென்றாவது, அதில் குழப்பம் நேரிட்டிருந்ததென்றாவது நினைப்பதற்கிடமில்லை. சிதம்பரப்பதிகத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் "பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும்" என்று அவர்காலத்தில் நேரிட்டிருந்த குழப்பத்தைக் குறிப்பிட்டிருப்பதுபோல் இவ்வாழ்வார் ஒன்றும் குறிப்பிடவில்லை. பல்லவர்களின் பெருமையையே கூறுகின்றனர். அதனால் ஆழ்வார் தந்திவர்மன் காலத்துக்குப் பிந்தியிருந்தவர் என்று தோன்றுகிறது. மேலும், தந்திவர்மனைச் சில இடங்களில் விஷ்ணு பக்தன் என்று சொல்லியிருப்பினும் அவன் பரமசிவபக்தனாகவும் இருந்தான். தந்திலிங்கம் என்று தன் பெயரால் ஒன்றை ஸ்தாபி

த்தான். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தைப்பார்க்க. இத் தகையவனை ஆழ்வார் அட்டபுயகரப் பதிகத்தில் இருப்பதுபோல் புகழ்ந்து பாடுவரோ என்பதும் ஆராயத்தக்கது. தந்திவர்மன் மகன் மூன்ருவது நந்திவர்மன், பிதாவுக்குப் பிறகு பட்டம் பெற்முன். இவன் மிக்க பராக்கிரமசாலி. பட்டம் பெற்றவு டன் மாற்றரசர்களைப் போரில் வென்று தன் புகழைப் பரவச் செய்தான். பலிஷ்டனுன கங்க அரசனைவென்று அவனது கண் டாபரணத்தையும், பட்டவர்த்தனம் என்னும் பட்டத்து யானை யையும் கைக்கொண்டது நான் மேற்கூறியதற்கொரு சான்ருகும். பல்லர்ஆட்சி பெருகத்துவக்கியது. வேலூர்ப்பாளையச் சாஸனம், தண்டந்தோட்டச்சாஸனம் முதலியவை இவனது வெற்றியையும் கீர்த்தியையும் விளக்கும். தண்டந்தோட்டச் சாஸனத்தில் 'அச்சு தனைத் தன் ஹிருதய சன்னிஹிதனுக உடையவன்' என்ருேரி டத்திலும், 'முகுந்தனையின்றி ஒருவரையும் வணங்கியறியாத முடி யையுடையவன்' என்று மற்ருேரிடத்திலும் சொல்லியிருப்பது இவன் பரம விஷ்ணு பக்தன் என்பதைக்காட்டும். இவன் காலத் தில் திருமங்கைமன்னன் இருந்தவர் என்று தோன்றுகிறது. இவனை அவர் புகழ்வது இயல்பே. இவன் கி. பி. 835-ஆம் ஆண் டிலோ அதை அடுத்தோ பட்டம் பெற்றவன். இவனை 26 ஆண்டு ஆட்சிபுரிந்தவன் என்று சிலரும், 62 ஆண்டு ஆட்சிபுரிந்தவன் என்று சிலரும் கூறுகின்றனர்.

ஈண்டுக் கவனிக்கத்தக்கது வேறொன்று முளது. பெரியவாச் சான் பிள்ளை மேற்கண்ட பாசுரத்துக்குச் செய்திருக்கும் வியாக் கியானத்தில் பல்லவ அரசன் பக்நாபிமானியா யிருந்ததையும், ஈாசுபட்டிருந்ததையு பிறகு அவை திருந்தியதையும் குறிப்பிடு கிருர். இது தந்திவர்மன் முதலில் சிவபக்தனுயிருந்து தன்பேரால் லிங்கம் ஸ்தாபித்துப் பிறகு விஷ்ணுபக்தனுனதைக் குறிப்பிடும் என்று ஏன் கொள்ளகூடாது? அப்படியாஞல் ஆழ்வார் ஒரு தலை முறை முந்தி இருந்தவர் ஆவர். வேறொரு விஷயமும் கவனிக் கத்தக்கது. வைணவர் இவ்வாழ்வாரும் சம்பந்தமூர்த்தி சுவாமி களும் சமகாலத்தவர் என்றும், இவர்கள் கவிபாடுந் திறமையில்

வாதம் நிகழ்ந்ததென்றும் கூறுகின்றனர். சைவர்களைப்பற்றிச் செவ்வனே அறியாத வைணவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தவறுதலாய்ச் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் என்று கருதுவதற்கிடம் இருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தந்திவர்மன் காலத்தவர் என்பதை முன்னமே சொன்னேன். இந்தக்கதையும் ஆழ்வார் தந்திவர்மன் காலத்தவர் என்பதை வற்புறுத்தும். சாஸன பரிசோதகர்கள் ஐயுறுமாறு இந்த ஆழ்வார் தந்திவர்மன் காலத்தவரோ, மூன்றாவது நந்திவர்மன் காலத்தவரோ என்று நிச்சயிப்பது கஷ்டமாயிருக்கிறது. எவ்வாறாயினும் இரட்டைபாடி அரசனாகிய தந்திதுர்கன் காலத்தவர் அல்லர்என்பது வெளி. அக்காலத்தவராயின் ஆழ்வார் கி. பி. 754-ஆம் ஆண்டிலோ அதை ஒட்டியோ இருந்தவராவர். பெரியாழ்வாருக்கு முந்தியோ அல்லது அவர்காலத்திலோ இருந்தவர் என்னல் வேண்டும். நான் மேலே காட்டியிருக்கிற ஆழ்வார்கள் முறைகள் அனைத்திற்கும் இதுமாறாம். ஆழ்வாரைத் தந்திவர்மன் காலத்தவர் என்று சொல்லுவதிற் பல அசம்பாவிதங்களுக்கு இடமுண்டாவதைக் காட்டினேன்.

நான் இதை எழுதி முடித்தபிறகு ஸ்ரீமான். கே. ஜி. சேஷையர் அவர்கள் திருமங்கை மன்னனைப்பற்றி எழுதின வியாசம் ஒன்று கிடைத்தது. அதைப் பார்த்தேன். ஐயரவர்களது தமிழ்ப்புலமை, ஆராய்ச்சி வன்மை, புத்திநுண்மை முதலியவற்றைத் தமிழுலகத்தில் அறியாதாரில்லை. அவர்கள் வைரமேகன் என்பது தொண்டையர் கோனைச் சுட்டுவதே அன்றி இரட்டைபாடி அரசனைக் குறிப்பதன்றெனக் கூறுகின்றார்கள். அவர்கள் எழுதிய வியாசம் அறிஞர்களால் ஓதி உணரத்தக்கது.

நம்மாழ்வார்:—இவருக்குச் சடகோபன், பராங்குசன், குருகைக்காவலன், காரிமாறன் முதலிய பல மறுபெயர்களுமுண்டு. இவரைப் பலரும் அவயவி என்றும், ஏனைய ஆழ்வார்களை அவயவம் என்றும் கூறுவது இவரது அளவிலாப் பெருமைக்கொரு சான்றாம். இவர் பாடியவைகளில் திருவிருத்தம், திருவாசிரியம்,

பெரியதிருவந்தாதி என்னும் திவ்யப்பிரபந்தங்களை ரிக், யஜுஸ், அதர்வணம் என்னும் வேதங்களின் ஸாரம் என்றும், திருவாய்மொழியை ஸாமவேதஸாரம் என்றும் சான்றோர் கூறுகின்றனர். பகவத்கீதையில் பகவான் "வேதாநாம் ஸாமவேதோஸ்மி" என்றபடி ஸாமவேதம் வேதங்களிற் சிறந்ததாகையால், அதன் ஸாரமாகிய திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி, மூவாயிரப்படி, பன்னீராயிரப்படி என்னும் வியாக்கியானங்கள் ஏற்பட்டு வைணவர்களால் பக்திசிரத்தையுடன் ஓதப்படுகின்றன. வாய்மொழி என்னும் பதம் வேதம் என்று பொருள்படும். இங்கு,

"மாயா'வாய்மொழி யுரைதர வலந்து
வாய்மொழி யோடை மலர்ந்த"

என்னும் பரிபாடல் வரிகளிலுள்ள வாய்மொழி என்னும் பதத்திற்குப் பரிமேலழகர்வேதம் என்று பொருள் கூறுவதைப்பார்க்க. திரு என்னும் பூஜ்யவாசகத்தைச் சேர்த்துச் சிறந்த வேதஸாரத்தை உணர்த்துவதைத் திருவாய்மொழி என்றனர். வைணவ ஆசாரிய பரம்பரையில் பூவுலகத்தில் முதல் ஆசாரியர் இவரே. வேதாந்த தேசிகர் செய்த அதிகாரசங்கிரகம் என்னும் பிரபந்தத்திலுள்ள செய்யுள் அதைவிளக்கும். அஃது,

"என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம்புக்கி
யானடைவே யவர்குருக்க ணிரைவணங்கிப்
பின்னருளார் பெரும்பூதூர் வந்தவள்ளல்
பெரியநம்பி யாளவந்தார் மணக்காலநம்பி
நன்னெறியை யவர்க்குரைத்த வுய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரைமுன்னிட்
டெம்பெருமான் றிருவடிக ளடைகின்றேனே."

என்பது. இதனால் யாவருக்கும் முதல் ஆசாரியன் திருமால் என்றும், அவருக்குப்பிறகு முறையே திருமகள், சேனைநாதன், சடகோபன் என்றும் அறியக்கிடக்கின்றது. சடகோபருக்குமுன் சேனைநாதர்வரை சொல்லப்பட்டிருக்கிற ஆசாரியர்கள் வைகுந்தத்தில் உள்ளவர்கள். சேனைநாதரது அம்சபூதர் என்று சொல்லப்படு

இற சடகோபர் பூலோகத்தில் அந்தப்பரம்பரையில் இருந்தவர்களில் முதல்வர். இவரை ஆசாரியர் என்று சொல்வதில்லை. இவர் ஆழ்வார் எனப்படுவர். இவரை உபாஸித்துப் பிரஸாதம் அடைந்த நாதமுனிகள் ஆசாரியர்களில் முதல்வர் எனப்படுவர். அவர் உபாஸித்த வகையையும், பிரஸாதம் பெற்ற விபரத்தையும் குருபரம் பராப்பிரபாவ முதலியவற்றில் பார்க்க. ஈண்டுக் கூறியதனால் நம்மாழ்வார் காலமுதற்கொண்டு வைணவமதம் ஆரம்பித்ததென்று கொள்ளுதல் கூடாது. அஃது அவர் காலத்துக்கு முந்தி வெகு நீண்ட காலமாகவே உள்ளது.

இனி, வைணவ மதத்துக்குப் பேரிலக்கமாயுள்ள நம்மாழ்வாரது காலம் எது என ஆராய்வாம் சிலர் ஆழ்வார் முறையில் நம்மாழ்வாரை ஐந்தாமவர் எனக் கொண்டு அவரிருந்த காலத்தைக் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டு என்கின்றனர். சிலர் இவரை ஆழ்வார் யாவருக்கும் காலத்தாற் பிந்தியவர் எனக்கொண்டு கி. பி. பத்து அல்லது பதினோராம் நூற்றுண்டின் துவக்கம் இவற்றில் இருந்தவர் என்பர். சிலர் இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள காலத்திருந்தவர் என்பர்.

இப்பொழுது சரித்திர ஆராய்ச்சியிருக்கும் நிலைமையில் இவர் காலத்தை நிர்ணயிப்பதில் சங்கடங்களுள. இந்த நிலைமையில் இவர்காலத்தை ஒருவகையாக நிச்சயிப்போர் தங்கூற்றுக் காதாரமாய்ச் சொல்லும் நியாயங்களை ஆராய்வாம். கி. பி. ஐந்தாம் நூற்றுண்டு என்பார் சொல்பவற்றை முதலில் எடுத்துக் கொள்ளுவோம்.

1. வைணவர்கள் பரம்பரைவழக்கில் நம்மாழ்வாரை ஐந்தாவதாமவர் எனக்கொண்டிருக்க அதற்கு மாறுய்ச் சிலர்கூறுகின்றனர் அவர் துணிவுக்குத்தக்க நியாயம் காட்டவேண்டியது அவர் கடமையாகும். அவர்கள் காட்டும் நியாயம் பொருத்தமுடையன அல்ல; ஆதலால் பரம்பரைவழக்கு முறையையே உண்மை எனக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு கொள்ளின், ஏனைய ஆழ்வார்கள் இருந்த காலத்தோடு சேர்த்து யோசிக்க இவ்வாழ்வார் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டென ஏற்படும் என்பர்.

பின்பழகிய பெருமாள்ஜீயர் குருபரம்பராப்பிரபாவம், வேதாந்ததேசிகர் பிரபந்தஸாரம் இவ்விரண்டிலும் நம்மாழ்வாரை ஐந்தாமவராக வைத்துக்கூறியிருப்பது உண்மையே. அவை இரண்டும் கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்டவை. அவற்றிற்கு முன்னும் பின்னும் இயற்றப்பட்டவற்றில் அவரை ஐந்தாவது ஸ்தானத்தில் வைக்கவில்லை. திருவரங்கத்தமுதனார் உடையவர் காலத்திருந்தவர். அவர்பாடிய இராமாநுஜ நூற்றந்தாதியில் நம்மாழ்வாரை ஈற்றில் வைத்திருக்கின்றனர் என்பதை மேலே காட்டியிருக்கின்றேன். பராசரபட்டர் உடையவரை அடுத்து ஆசாரியஸ்தானத்தை வகித்தவர். அவரும் நம்மாழ்வாரை முறையில் ஈற்றில் வைத்திருக்கின்றனர். வேதாந்த தேசிகர் செய்த அதிகாரசங்கிரகம், மணவாளமாமுனிகள் நியமித்தருளிய இயற்சாற்று இந்த இரண்டிலும் நம்மாழ்வார் நாலாமவராக வைக்கப்பட்டிருக்கின்றனர். மணவாளமாமுனிகள், வேதாந்ததேசிகர்-பின்பழகிய ஜீர் இவர்களுக்கு காலத்தால் பிந்தியவர். நாலாயிரப்பிரபந்தத்தில் திருவாய்மொழி ஈற்றில் வைக்கப்பெற்றுளது. சுலோகம், செய்யுள் இவை அமைந்த வகையில் உள்ள முறையை முறை எனக் கொள்ளுதல் தகுதியன்றெனச் சிலர் கூறுகின்றனர். சுலோகம், செய்யுளைச் செய்தோர் பேராற்றல் உடையோர். அவர்கள் செய்த பாக்களில் உண்மை முறையை அமைத்துச்செய்ய அவர்களுக்கு முடியவில்லை என்றல் அடாததென்றும். திருவரங்கத்தமுதனார் பல செய்யுட்களில் முறையை அமைத்துப் பாடியிருக்கின்றனர். அதற்கு இந்த சமாதானத்தைச் சொல்வதற்கில்லை. அதற்கு வேறு சமாதானம் சொல்லுகின்றனர். அமுதனார் இவர் சொல்வதைக் குறிப்பிடவில்லை என்பதை முன்னமே சொன்னேன். கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் ஏற்பட்டதாகச் சொன்ன முறைகளும், மற்ற அம்சங்களில் முழுவதும் ஒத்திருக்கவில்லை. ஆழ்வார்கள் என்றது தொடங்கி இதுவரை சொல்லியிருப்பவற்றைக் கவனித்தால் இவர்கள் கூற்றின்படி வைணவர் யாவரும் ஒப்புக்கொண்டதாக ஆழ்வார்கள் முறையமைப்பு ஒன்று இல்லை என்பது தெளிவாம்.

T-1266



2· முதலாவது இராஜராஜ சோழனது ஆட்சி பதிமூன்றாம் ஆண்டில் உக்கல் என்னும் ஊரிலுள்ள விண்ணகரத்தில் சிலாசாஸனம் ஏற்பட்டிருக்கிறது. அதில் அவ்வூரிலுள்ள பெருமாள் பெயரைத் திருவாய்மொழித்தேவர் என்று சொல்லியிருக்கிறது. நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழியைக் கொண்டு பெருமாளுக்கு அப்பெயர் அமைந்திருத்தல் வேண்டும். பெருமாளுக்கு இப்பெயர் வாய்ப்பதற்கும், திருவாய்மொழி பாடப்பெற்றதற்கும் இடையில் பல நூற்றாண்டுகள் சென்றிருக்கவேண்டும். இராஜராஜ சோழன் பட்டமடைந்தது கி. பி. 985-ஆம் ஆண்டில். அவனாட்சி 13-ஆம் ஆண்டு கி. பி. 998-ஆம் ஆண்டாகும். இது பத்தாம் நூற்றாண்டின் இறுதியானால் ஆழ்வார் இருந்தது 6, 7 நூற்றாண்டுகளாயாவது இருந்திருக்கவேண்டும் என்பர்.

இவர் கூற்றுப் பெரும் விந்தையே. நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழியைக்கொண்டு உக்கல் பெருமாளுக்குப் பெயர் அமைந்தது என்று இவர் எவ்வாறு கண்டுபிடித்தனர்? திருவாய்மொழித் தேவர் என்னும் பதத்துக்குப் பொருள் என்ன? நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழிப் பிரதிபாத்தியமான பெருமாள் என்பதா? அல்லது வேறா? திருவாய்மொழியில் உக்கல் நீங்கலாக வேறு பல திருப்பதிகளில் உள்ள பெருமாளை ஆழ்வார் பாடியிருக்கின்றனர். திருவாய்மொழியில் பாடப்பட்டிருப்பவர் உக்கலில் உள்ள பெருமாள் என்பது பொருத்தமுடையதாகாதே. திருவாய்மொழியைச் சொன்னதேவர் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் நம்மாழ்வார்பாடிய திருவாய்மொழியை இவர் சொன்னவராகார். வாய்மொழி என்பதற்கு வேதம் என்பது பொருள் என்று முன்னமே சொன்னேன். திரு என்பது பூஜ்யவாசகம். வேதத்தை மகாவிஷ்ணு சொன்னாரெனப் பல விடங்களில் சொல்லியிருக்கிறது. நம்மாழ்வார் "வேதம் விரித்தான்" (20-10) என்றும், பூதத்தாழ்வார் "மறைநான்கு மோதினாய்" (48) என்றும், திருமங்கையாழ்வார் "மறையுரைத்த திருமாலை" என்றும், "பன்னு கலை நால்வேதப் பொருளை யெல்லாம் பரிமுகமாயருளியவெம் பரமன் காண்மின்" என்றும் சொல்லியிருப்பதைப் பார்க்க. உக்க

வில் விஷ்ணுக்கிருகம் எக்காலத்தேற்பட்ட தென்பதையும், பெருமாளுக்குப பெயர் அமைந்த காரணம் எது என்பதையும் விசாரிக்காது தம் துணிவை நிலை நாட்டுவதற்கு இவர் வலிந்து பொருள் கொள்வது சரியன்றே. உக்கல் சிலாசாஸனத்தில் "எம்மூர்த் திருவாய்மொழித் தேவற்கு உச்சியம்பொழுது நாழுழி திருவமுது செய்வதற்கு" என்று சொல்லியிருக்கிறது. இவர் கொள்கைக் காதாரமாய் அதில் ஒன்றும் காணப்படவில்லை. பேயாழ்வார் முதலாழ்வார்களில் ஒருவர். அவர் நம்மாழ்வாருக்கு முந்தி இருந்தவர் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். பேயாழ்வார் வேளுக்கை என்னும் திருப்பதியைப் பல இடங்களில் சொல்லியிருக்கின்றனர். வேளுக்கை, உக்கல் என்னும் பெயர்கள் ஒரு திருப்பதியைக் குறிப்பனவோ அல்லது இரண்டு வெவ்வேறு திருப்பதிகளைக் குறிப்பனவோ என்பது ஆராயற்பாலது. இரண்டு பெயர்களும் ஒரு திருப்பதியைக் குறிப்பன என்றால் உக்கல் என்னும் திருப்பதி நம்மாழ்வார் காலத்துக்கு முன்னரே இருந்துவந்தது என்பதும், அத்திருப்பதிப் பெருமாளுக்குப் பெயர் அமைந்ததற்குக் காரணம் வேறிருத்தல் வேண்டும் என்பதும் தெள்ளிதின் விளங்கும்.

3. நம்மாழ்வார் திருப்பேர் என்னும் திருப்பதியில் உள்ள பெருமாளைப் புகழ்ந்து பாடியிருக்கும் பாசுரங்கள் ஒன்றில் "பொன்னித் தென்பால்—திருமால் சென்று சேர்விடந் தென்றிருப்பேரே" (திரு-98) என்று சொல்லியிருக்கிறார். திருப்பேர் என்னும் திருப்பதி இப்பொழுது கோவிலடி என்று வழங்குகிறது. அது தஞ்சை ஜில்லாவில் கல்லணைக்குக் கிழக்கே காவிரியின் வடகரையிலுள்ளது. பாசுரத்தில் "பொன்னித்தென்பால்" என்றிருக்கிறது. இப்பொழுது காவேரி என்று சொல்லப்படும் நதி கரிகாலன் என்னும் மறுபெயருடைய ஆதித்தியன் என்னும் சோழனால் அமைக்கப்பட்டது. அது சோழன் காவிரி என்று அவ்விடத்தில் சொல்லப்படுகிறது. ஆதித்தியன் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்தவன். அவன் காலத்துக்கு முன் காவிரி என்று சொல்லப்பட்டது கொள்ளிடம் என்னும் நதி.

திருப்பேர் அதற்குத்தென்பாலுள்ளது. "பொன்னித்தென்பால்" என்று திருப்பேரைப் பாடிய நம்மாழ்வார் காலம் ஆதித்தியன் காலத்துக்கு வெகு காலம் முந்தியதாய் இருக்கவேண்டும் என்பர்.

ஆதித்தியன் இரண்டாவது கரிகாலன் என்னப்படுவான். முதலாவது கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்தவன் என்பது பல சாஸனங்கள் முதலியவற்றாலும், கலிங்கத்துப்பரணியினாலும் பெறப்படும். காவிரிக் கரையைக் கரிகாலக்கரை என்று கூறும் வழக்கு உண்டென்பதைத் தென்னிந்தியா சாஸனங்கள் (S. I. I.) என்னும் புத்தகம் மூன்றாவது வாலியூம் 113-வது சாஸனத்தில் "கரிகாலக்கரைக்கு வடக்கு" என்பதனால் அறியலாம். முதலாவது கரிகாலனும் காவிரிக்குக் கரை அமைத்தவனே அன்றிக் காவிரி அமைத்தவன் அன்று. காவிரி என்று முளது. சோழன் காவிரி என்று சொல்லப்படுவதன் கரையில் வெகு நீண்டகாலமாய்ப் பலதலங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆதித்திய சோழன் காலத்துக்கு முன் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் நடுவில் இருந்த சம்பந்தமூர்த்தி நாயனார் இந்தக் காவிரிக் கரையில் பல தலங்களைப் பாடுமிடத்துக் காவிரிக்கரையின்மேல் அவை இருப்பதைச் சொல்லுகின்றனர். அவைகளிற் சிலவற்றை அடியில் கொடுத்திருக்கிறேன். அவை,

"வரைநின் றிழிந்த வார்தரு பொன்னி
யரவங் கொடுசேரு மையாறே"

"பூசநீர் பொழியும் புனர்பொன்னியிற் பன்மலர்
வாசநீர் குடைவா ரிடர்தீர்க்கும் வலஞ்சுழி"

"அரவிரி கோட னீட லணிகாவிரி யாற்றயலே
மரவிரிபோது மௌவல் மணமல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலை சூழ்ந்த குழகன் குடமூக்கு"

"பொங்காவரு காவிரி கோலக் கரைமேல்
எங்கோனுறை கின்ற விடைமரு தீதோ"

"கந்தமலி சந்தினொடு காரகிலும் வாரிவரு காவிரியுளால்
வந்ததிரை யுந்தியெதிர் மந்திமலர் சிந்துமயி லாடுதுறையே"

"தத்துநீர்ப் பொன்னி சாகர மேவுசாய்க் காடே"

என்பன. திருச்சாய்க்காடு காவிரிப்பூம் பட்டினத்துள்ளது. சம்பந்த மூர்த்திகள்

"பொன்னி சாகர மேவுசாய்க் காடே"

என்றது சோழன் காவிரி காவிரிப்பூம் பட்டினமிருக்கும் இடத்துக் கடலில் சங்கமம் ஆவதைக்காட்டும். கொள்ளிடம் கடலில் சங்கமம் ஆவது அதற்குப் பல காததூரத்துக்கு வடக்கிலுள்ள தேவிக்கோட்டை இருக்குமிடத்து. கொள்ளிடம் கடலில் சங்கமமாகும் இடத்திற்கும் காவிரிப்பூம் பட்டினத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அந்தப் பட்டினத்திற்குப் பெயர் வாய்ந்தது காவிரி கடலிற் புகுமிடத்திருப்பதனால் என்பது வெளிப்படை. அதற்குப் புகார் என்ற பெயருண்டு. புகார் என்பது கழிமுகம். முதற் கரிகாலன் காலத்துக்கு வெகுகாலம் முந்தி அவன் முன்னோர்களில் ஒருவனாகிய காந்தமன் வேண்டக் காவிரி அங்கு வந்ததென்றும், அதற்கு முன்னர்க் காவிரிப்பூம்பட்டினம் சம்பாபதி என்று அழைக்கப்பட்டதென்றும் கூலவாணிகன் சாத்தனார் சொல்லுகின்றனர். அது,

"செங்கதிர்ச் செல்வன் றிருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
வமர முனிவ னகத்தியன் றனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகிய சம்பா பதி. (மணிமேகலை பதிகம்.)

என்பது. சாத்தனார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சேரன் செங்குட்டுவன் காலத்திருந்தவர். அவர் காவிரிப்பூம் பட்டினத்தை மணிமேகலையில்

"கலத்தொடும் போகிக் காவிரிப் படப்பை நன்னகர் புக்கேன்" என்றும்,
காவிரிப் பட்டினங் கடல்கொளு மென்றவத் தூவுரை"

என்றும் சொல்லுகின்றனர். பட்டினப்பாலையில் உருத்திரங் கண்ணனார் முதலாவது கரிகாலன் உறையூரைவிட்டுக் காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டனன் என்று சொல்லுகின்றனர்.

"பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கி"

என்பது அதை விளக்கும். புறநானூறு முதலிய பல சங்கச்செய்யுட்கள் காவிரியையும், காவிரிப்பூம் பட்டினத்தையும் சொல்லு

கின்றன. இதனுல் சோழன் காவிரி என்று இவர்கள் சொல்வது ஆதித்திய சோழன் காலத்துக்கு வெகுகாலம் முன்னரே காவிரி என்ற பெயரால் வழங்கப்பட்டுவந்திருக்கிறதென்பது புலனும்.

இது நிற்க, காவிரி பலவாய்ப் பிரிகின்றது. கொள்ளிடம் என்பது அவைகளில் பெரிய பிரிவாம். அதில் விளைநிலத்துக்குப் பாயும் கால்வாய்கள் அதிகம் பிரிவதில்லை. பிரிவனவும் பிற்காலத்துண்டானவை. ஆதித்தியன் காலத்துக்குப்பிறகு உண்டானவை அவற்றிற்பல. சோழநாட்டின் செல்வத்துக்கும், பெருமைக்கும் காவிரியின் மற்றப்பிரிவுகளே காரணம். அவைகளிற் சோழன் காவிரியும் ஒன்றும். காவிரிக்குச் சோழன் நதி என்னும் பெயர் சங்ககாலத்திலேயே உள்ளது. அடியிற் கண்ட வரிகள் நான் சொல்லியதற்குச் சான்றும். அவை,

"நீயே தண்புனற் காவிரிக் கிழவனை" (புறம். 58.)

"முழங்குநீர்ப் படப்பைக் காவிரிக் கிழவன்" (புறம். 399.)

"சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர்
மன்பதை புரக்கும் நன்னாட்டுப் பொருந" (புறம். 68.)

"பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தண்புனற் படப்பை யெம்மூர்" (புறம். 166.

"முரசெழுந் திரங்க மூற்றமொடு கரைபொரு
திரங்குபுன லொரிதரு மிகுபெருங் காவிரி
மல்ல னன்னாடு" (புறம். 174.)

"கோட்டை யாயினுங் கோடி .........
காவிரி புரக்கு நன்னாட்டுப் பொருந" (புறம். 393.)

"கரிகாலன் காவிரிசூழ் நாடு"
"காவிரி புரக்கு நாடுகிழ வோனே" } (பொருநராற்றுப்படை.).

என்பன. இன்னும் பல வுள.

கொள்ளிடமும் காவிரியின் பிரிவாதலால் அதைக் காவிரி என்று சொல்லும் வழக்கம் இன்றுமுளது. ஸ்ரீரங்கம் என்னும் திருப்பதியில் வசிப்போரில் அநேகர் ஸ்நானம் முதலியவற்றுக்குக் கொள்ளிடத்துக்குச் செல்கின்றனர். அவர்கள் அதைக் கொள்ளிடம் என்று சொல்வதில்லை. வடதிருக்காவிரி என்று சொல்லுதை இன்றும் கேட்கலாம்.

இராஜேந்திர சிங்கவளநாடு என்பது இராஜராஜசோழன் காலத்தும், இராஜேந்திர சோழன் காலத்தும் சோழநாட்டின் ஒரு பகுதி. அவர்கள் ஆதித்தியனுக்குப் பல தலைமுறை பின்னிருந்தவர். அவ்வளநாடு, சோழன் காவிரி என்று சொல்லப்படுவது துவக்கிக் கொள்ளிடத்திற்கு வடக்கிலுமுளது. கொள்ளிடத்திற்கு வடக்கிலுள்ள சில ஊர்கள் பின்கண்டவாறு சிலாசாஸனங்களில் செல்லப்பட்டிருக்கின்றன. "வடகரை ராஜேந்திர சிங்கவளநாட்டுப் பொய்கைநாட்டுக் கண்டராதித்தியம்" (S. I. I. Vol. II. No. 6.) "ராஜேந்திர சிங்கவளநாட்டு ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதிமங்கலம்" (S. I. I. Vol. II. No. 6.) "வடகரைக் குன்றக்கூற்றமான உத்துங்க வளநாட்டுப்பழூர்" (S. I. I. Vol. II. No. 63.) "வடகரைக் குன்றக்கூற்றமான உத்துங்க வளநாட்டு இரைகுடி." (S. I. I. Vol. II. No. 69.) இவ்வாறே இன்னும் பலவுள. வடகரை என்பது காவிரியின் வடகரை என்று பொருள்படுமென்றே பலரும் கொண்டனர். கொள்ளிடமுங் காவிரியின் பிரிவாதலால் நம்மாழ்வார் "பொன்னித் தென்பால்" என்றது கொள்ளிடத்தின் பெருமையைக் கருதியதாயிருக்கலாம். அல்லது ஸ்ரீரங்கத்தைப் போல் கொள்ளிடத்தின் தென்பாலுள்ள தென்று சொல்லியிருக்கலாம். ஸ்ரீரங்கநகருக்கும் சோழன் காவிரி என்னப்படுவதற்கும் இடையே காவிரியின் வேறொரு பிரிவுளது. அதனால் ஸ்ரீரங்கத்தைக் காவிரி வடபால் என்று சொல்வதற்கில்லை. அல்லது "தென்" என்னும் சொல்லை அழகிய, சிறந்த என்னும் பொருள்களில் ஆழ்வார் உபயோகப்படுத்தி இருக்கலாம். தென்னரங்கம், தென்றிருப்பேர், தென்றிருப்பேரை என்னும் மொழிகளில் தென் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் என்னவாம்? "பொன்னித்தென்பால்" என்பது "காவிரியின் அழகிய, அல்லது சிறந்த பக்கத்தில்" என்றுபொருள் படலாமே. சம்பந்தமூர்த்தி நாயனர் "பொங்காவரு காவிரி கோலக்கரைமேல்—எங்கோனுறைகின்ற விடைமருதீதோ" என்று சொல்லியிருப்பதும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

4. முதல் மூன்றாழ்வார்களும், திருமழிசையாழ்வாரும் விஷ்ணு பக்தியோடு சிவனையும் புகழ்ந்து பாடுவர். சிவனும் விஷ்

ணுவும் ஒன்றென்றும் கூறுவர். நம்மாழ்வாரே சிவனையும், சிவ பக்தியையும் ஒரு படி தாழ்த்திக்கூறுவர். மேற்கண்ட நால்வருக்கும் பின்வந்தவர் இவர் என்பது இதனாலேற்படும் என்பர்.

பூதத்தாழ்வாரையும் திருமழிசையாழ்வாரையும் மற்றிருவரோடு சேர்த்துச் சொல்லுதல் சரி என்று தோன்றவில்லை. பூதத்தாழ்வார் வெண்பா வொன்றைத் (60) தங்கள் கூற்றுக்காதாரமாய்க் காட்டுகின்றனர். அது பல பொருள்படும். திருமழிசைப்பிரானே விஷ்ணுவை "மூன்று மூர்த்தியாகினார்" என்று ஓரிடத்திலும் "ஆறுசடைக்கரந்தானண்டர்கோன்றன்னோடும்--கூறுடையானென்பதுவுங்கொள்கைத்தே" என்றோரிடத்திலும் சொல்லியிருக்கின்றனர். திருவந்தாதியில்

"தேருங்காற் றேவ னொருவனே யென்றுரைப்பர்"

என்று கூறியிருக்கின்றனர். மற்றவிடங்களில் சிவனைத் தாழ்த்திச் சொல்லியிருக்கின்றனர். "சிறியார் சிவப்பட்டார்" என்று அவர் கூறியது அதற்குச் சான்றாம். பேயாழ்வார் ஒரு வெண்பாவிலும் பொய்கையாழ்வார் மூன்று வெண்பாக்களிலும் விஷ்ணு, சிவன் இவர்களது ஒருமையைச் சொல்லுகின்றனர். அவை,

"தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமுஞ்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்—சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து" (பேயாழ்வார் 63)

"அரனா ரணனாம மான்விடைபுள் ளூர்தி
யுரைநூன் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவே னேமி
யுருவமெரி கார்மேனி யொன்று" (பொய்கையார் 5)

"ஏற்றான்புள் ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்பிடந்தான்
நீற்றான் நிழன்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு" (ஷை 74)

"பொன்றிகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலு—மென்றும்
இருவரங்கத் தாற்றிரிவ ரேனு மொருவ
னொருவனங்கத் தென்று முளன்" (ஷை 98)

என்பன. நம்மாழ்வார் விஷ்ணு சிவனது ஒருமையைப் பல விடங்களில் பலவிதமாய்ச் சொல்லுகின்றார். அவற்றில் சிலவற்றை ஈண்டுக் காட்டுகின்றேன்.

"புரமொரு மூன்றெரித் தமரர்க்கு மறிவீந்
தரனயன் எனவுல கழித்தமைத் துளனே" (1-8)

"உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரியயனரனென்னு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின்
மனப்பட்டதொன்றே" (3-6)

"ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினு ணின்ற
நன்றெழி னாரண னான்முக னரனென்னு மிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடைநாளே (3-7.)

"புணர்க்கு மயனு மழிக்கு மரனும்" (18-3)

"ஒளிமதி வண்ணனென்கோ வொருவனென் றேத்தநின்ற
நளிர்மதிச் சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ
அளிமகிழ்ந் துலகமெல்லாம் படைத்தவை யேத்தநின்ற
களிமலர்த் துளவனெம்மான் கண்ணனை மாயனையே" (24-8)

"மூவராகிய மூர்த்தியே" (26-1)

"உரைக்கின்ற முக்கட்பிரான் யானே யென்னும்" (46-8)

"வெள்ளநீர்ச் சடையானு நின்னிடை
வேறலாமை விளங்க நின்றதும்" (50-4)

"சிவனு மயனு மாய்" (59-1)

"அங்குயர் முக்கட்பிரான் பிரமபெருமா னவனீ" (66-4)

"முனியே நான்முகனே முக்கணப்பா வென்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கட்கரு மாணிக்கமே" (100-1)

"அவாவறச் சூழரியையயனை யரனை யலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்" (100-11)

இவ்வாறே இன்னும் பலவிடங்களிலும் சொல்லுகின்றனர். இது சிவனை ஒருபடி குறைத்துக் கூறியதாகுமோ என்பதை வாசிப்போரே உணரலாம். முதல் நாலாழ்வார்கள் சில இடங்களில் சிவ விஷ்ணு ஒருமையைச் சொன்னால் நம்மாழ்வார் அநேக இடங்களில் தெளிவாய்ச் சொல்லுகின்றனர். அவைகளிற் சிலவற்றை அடியில் குறிக்கின்றேன். அவை,

"உடம்புருவின் மூன்றொன்றாய்
மூர்த்திவேறாயுலகுய்ய நின்றானே" (II-5-3)

"சோத்த நம்பியென்று தொண்டர் மிண்டித் தொடர்ந்தழைக்கும்
ஆத்தநம்பி செங்கணம்பி யாகிலுந் தேவர்க்கெல்லாம்
மூத்தநம்பி முக்கணம்பி யென்று முனிவர்தொழு
தேத்துநம்பி யெம்பெருமா னெவ்வுட் கிடந்தானே" (II-2-6)

"மூவராகிய வொருவனை" (III-1-10)

"பாருருவி னீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவின் மூவருமே யென்ன நின்ற
விமையவர்தந் திருவுருவே றெண்ணும் போது
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
யொன்றுமா கடலுருவ மொத்து நின்ற
மூவுருவுங் கண்டபோ தொன்றாஞ் சோதி
முகிலுருவ மெம்மடிக ளுருவந் தானே"

(திருநெடுந்தாண்டகம்-2.)

இன்னும் பல விடங்களில் இவ்வாறே சொல்லுகின்றனர். இந்த ஆழ்வார்கள் ஒவ்வொருவரும் தாங்கள் உபாஸிப்பதற்குக் கொண்ட விஷ்ணுவை உயர்த்தி மற்ற மூர்த்திகளைத் தாழ்த்திச் சொல்லுமிடங்களும் பலவுள. ஆதலால் முதல் நாலாழ்வார்களும் சிவன், விஷ்ணு இவர்களின் ஒருமையை கூறியதாகவும், நம்மாழ்வாரும், பின்வந்தவர்களும் அதினின்று மாறினர் என்றும் கூறுவது உண்மையோ என்பதை நான் மேற் சொல்லியவற்றால் ஒருவாறு அறியலாம்.

5. பௌத்தம், ஆருகதம் என்ற இரண்டு சமயங்களும் இந்நாட்டில் பரவியிருந்தன. அவற்றின் வலியைக் குறைக்கத்திருமழிசையாழ்வாரும், நம்மாழ்வாரும் பக்தியைப் பரவச்செய்தார்கள். ஆதலின் அவர்களிருவர் காலமும் ஒன்றுக்கொன்றணித்தாம் என்பர்.'

ஆழ்வார்கள் அனைவரும் பக்திமார்க்கப் பிரவர்த்தகர்களே. அவர்களில் இருவர்களைப் பிரித்துக் குறிப்பிடுவதற்குத் தகுந்த நியாயங்கள் இல்லை என்பதே எனது துணிவு. ஆழ்வார்களின் பிரபந்தங்கள் முழுவதுமே நான் சொல்லுவதற்குச் சான்றாம்.

கற்றோர் ஒருவரைக் இவ்வப்பிரபந்தங்களில் பக்திரஸம் நிறைந்த செய்யுட்களைச் சொல்லும்படி வேண்டினால் அவர்களிடமிருந்து குலசேகராழ்வார், பெரியாழ்வார், திருமங்கை மன்னன் இவர்களியற்றிய பாசுரங்களையே பெரும்பாலும் சொல்லக்கேட்கலாம். திருமழிசையாழ்வாருக்குப் பக்திஸாரன் என்று வடமொழிப் பெயரிருப்பதைக்கொண்டு பக்திமார்க்கப் பிரவர்த்தகராக அவரையும், நம்மாழ்வாரையும் ஆக்குவது பொருந்தாததாம். திருமழிசையாழ்வார் பௌத்த ஜைனமதங்களை இழித்துக் கூறினாரேஎன்னில் ஆழ்வாரில் பெரும்பாலர் அவ்வாறு கூறியிருப்பதைப் பார்க்கலாம் என்க. நம்மாழ்வார் பக்திமார்க்கத்தை அதிகம் பரவச்செய்தவரே; ஆனால் திருமழிசையாழ்வார் காலத்தை யொட்டி அப்படிச் செய்தார் என்று சொல்வதற்காதாரமில்லை.

நம்மாழ்வார் விஷ்ணுபக்தியைப் பரவச்செய்த காலத்துச் சிவபக்தியும் பரவியிருந்ததென்பது

"மேவித் தொழுதுய்மி னீர்கள் வேதப்புனித விருக்கை
நாவிற்கொண் டச்சுதன் றன்னை ஞானவிதி பிழையாமே
பூவில் புகையும் விளக்கும் சாந்தமுநீரும் மலிந்து
மேவித் தொழுமடியாரும் பகவருமிக்க துலகே" (42-9.)

என்ற செய்யுளால் விளங்கும் என்பர். இச்செய்யுளில் அடியார் என்பது விஷ்ணு பக்தர்களைக் குறிக்கும் என்பது அவர் கொள்கைபோலும்! நம்மாழ்வார் பகவர் என்றது பாகவதர்களை என்பர். செய்யுளை உற்றுநோக்கினால் அடியாரும் பகவரும் தொழுவது ஒருமூர்த்தியையே என்பது புலனாம். அடியார் என்று சொல்லியிருப்பது விஷ்ணு பக்தர்களை. ஆழ்வார்கள் காலத்து விஷ்ணு பக்தர்களும், சிவ பக்தர்களும் அடியார்கள், தொண்டர்கள் என்று சொல்லப்பட்டார்கள், சங்ககாலத்து ஆர்வலர் என்னும் பெயரும் வழங்கியது. விஷ்ணு பக்தர்களைக் குறிக்கும் நம்மாழ்வார் வாக்கியங்கள்

"அடியாரடியார் தம்மடியா ரடியார்தமக்
கடியாரடியாரடியா ரடியார் தம்மடியா ரடியோங்களே" (27-10)

"திருமாலுக்குத் தொண்டர் தொண்டன் சடகோபன்" (59-11.)

"அவனடியாரடியே கூடுதும்" (80-1)

"அடியாரடியா ரடியாரெங் கோக்கள்" (80-10)

"தொல்லடிமை வழிவருந் தொண்டர்" (82-3)

"மீளாவடிமைப் பணிசெய்யப் புகுந்தேன்" (87-4)

என்பன. இங்கே பகவர் என்றது தேவர்கள் என்று பொருள் படலாம்.

இனி நம்மாழ்வார் 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டு என்பார் கூறும் நியாயங்களை ஆராய்வாம்.

1. நம்மாழ்வாருக்கு மதுரகவி, நாதமுனி இருவரும் சிஷ்யர். திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களை அவரிடத்துக் கற்றனர். அம்மூவரும் ஒருகாலத்திருந்தவர் என்பர்.

இவர் இவ்வாறு சொல்வதற்காதாரம் குருபரம்பராப் பிரபாவம் முதலியவற்றில் உள்ள கதைகளைத் தவிர வேறு இருப்பதாகத் தெரியவில்லை. குருபரம்பராப் பிரபாவத்தில், நாதமுனிகள் திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்தங்கள் அடங்கிய கோசத்தை அடைய விருப்புற்றுச் 'சடகோபர் அவதரித்தருளின திருக்குருகூருக்குச் சென்றகாலத்து அங்கே பராங்குச தாஸர் இருந்ததாகவும், நாதமுனிகள் அவரை "ஸ்ரீ கோசமுண்டோ" என்று வினவியதாகவும், அப்பொழுது அவர் "திருவாய்மொழியும் மற்றுமுண்டான பிரபந்தங்களும் நெடுங்காலமுண்டு பிரமுஷிதமாய்த்து; கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் மதுரகவியாழ்வார் திவ்யப் பிரபந்தத்தை 12000 உரு அநுசந்திக்க நம்மாழ்வார் பிரஸன்னமாகிப் பிரஸாதிப்பர்" என, நாதமுனிகள் அவ்வாறே அநுஸந்திக்க, நம்மாழ்வார் நாமுனிவருக்கு ஞான சக்ஷுஸ்ஸையும், திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்தங்களை அசரீரிவாணியாயும் பிரஸாதித்தருளினர்' என்று சொல்லியிருக்கிறது. நேரில் நம்மாழ்வார் தமது சரீரத்தோடு வந்து நாதமுனிகளுக்குத் திருவாய்மொழி முதலியவற்றைச் சொன்னாரென்றில்லை. உபாஸனை செய்து ஒன்றை அறிவது உண்டென்பதை நம்பாதவர்கள் அக்க

தையைத் திரித்து நாதமுனிகள் நம்மாழ்வாரிடத்து நேரில் ஓதினார் என்று சொல்வது அடாதாம். அக்கதையை நம்பாவிட்டால் அதைத் தள்ளிவிடட்டும். மனம்போனவாறு திரிப்பதும், தங்களுக்கு வேண்டிய பகுதியை மட்டும் எடுத்துக்கொள்வதும் சரியல்லவே.

2. பராங்குச தாஸர் மதுரகவிகளது நேர் சிஷ்யர். மதுரகவிகளும், நம்மாழ்வாரும் சமகாலத்தவர். பராங்குச தாஸரும், நாதமுனிகளும் சமகாலத்தவர். ஆதலால் நம்மாழ்வார் காலத்துக்கும் நாதமுனிகள் காலத்துக்கும் இடையீடு மிகச்சிறிதே என்பர். குருபரம்பராப் பிரபாவம் எழுதிய பின்பழகிய ஜீயர் கருத்தும் இஃதே என்பர்.

ஜீயர் குலசேகராழ்வாரை ஐந்தாவதாகச் செல்லுமிடத்து "இங்கே அவதாரக்ரமம் பார்க்கில் நம்மாழ்வார் திருவவதார வைபவம் சொல்லலாயிருக்க" என்று சொல்லியிருப்பதும், நாதமுனிகளைச் சொல்லுமிடத்து "இவ்வாழ்வார்கள தன்னுடைய ஜோதிக் கெழுந்தருளி நெடுங்காலம் சென்றவாறே" அவதரித்தவர் நாதமுனிகள் என்று சொல்லியிருப்பதும் அவர் கருத்து அஃதன்றென்பதைக் காட்டும். இவ்வாழ்வார்கள் என்று ஜீயர் சொன்னது பன்னிரு ஆழ்வார்களையும். மேலும் நம்மாழ்வார் கலியுகம் பிறந்த 43-ஆம் நாள் அவதரித்ததாக ஜீயர் சொல்லுகிறார். உடையவர் அவதரித்ததைச் சகவருடம் தொள்ளாயிரத்து முப்பத்தொன்பதில் என்று அவர் சொல்லுகின்றனர். அது கலி பிறந்த 4118-ஆம் ஆண்டாகும். ஆளவந்தார் காலத்திலேயே உடையவர் கற்றறிந்து புகழ்பெற்றிருந்தனர். ஆளவந்தார் நாதமுனிகளது பௌத்திரன். நாதமுனிகள காலத்திலேயே அவதரித்தவர். ஆதலால் நாதமுனிகளுக்கும் உடையவருக்கும இரண்டு தலைமுறைக்காலம் இடையில் சென்றிருக்கலாம். ஆளவந்தார் வயதில் ஒரு பகுதியே இடையிட்ட காலம். நான் மேற் சொல்லியபடி ஆளவந்தார், நாதமுனிகள் இருக்கும் காலத்தில் பிறந்து, உடையவர் கற்றுப் புகழ்பெற்ற பின்னர்த் திருநாட்டுக்

கெழுந்தருளினவர். ஆதலால் பின் பழகிய ஜீயர் 'இவ்வாழ்வார்கள் ஜோதிக்கெழுந்தருளி நெடுங்காலம் சென்றவாறே' என்றதன் கருத்து வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

இதுநிற்க, மதுரகவியாழ்வாரைப் பராங்குசர் தமது ஆசாரியன் என்று சொன்னதாகப் பின்பழகிய ஜீயர் எழுதியிருப்பதை ஆதாரமாகக்கொண்டு பராங்குசரை மதுரகவியாழ்வாரது நேர் சிஷ்யர் என்றும் இருவரும் சமகாலத்தவர் என்றுங் கூறுவர். ஜீயர் கருத்து பராங்குசர் மதுரகவி யாழ்வாரது சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவரென்பதே. நம்மாழ்வார் காலமும், நாதமுனிகள் காலமும் நான்மேற்சொல்லியவற்றால் புலனும். மதுரகவியாழ்வார் கலியுகம் ஆரம்பித்துச் சிலகாலம் சென்றபின் திருநாட்டுக்கெழுந்தருளினர் என்பது ஜீயர் எழுதியிருப்பதால் விளங்கும். கலியுகம் பிறந்து 4000 ஆண்டுகள் சென்றபின் இருந்தவராகிய நாதமுனிகளது சமகாலத்தவரான பராங்குசரை நேர் சிஷ்யர் என்று சொல்வது ஜீயர் கருத்து என்பது ஒருவாற்றாலும் இயையாது. சிஷ்யபரம்பரையில் உள்ளாரைச் சிஷ்யர் என்று சொல்லும் வழக்கம் உள்ளதே. இராமாநுஜர் சிஷ்யபரம்பரையிலுள்ளாரை இராமானுஜ சிஷ்யர் என்றும், மத்துவாச்சாரியார் சிஷ்ய பரம்பரையிலுள்ளாரை மத்துவாச்சாரியார் சிஷ்யர் என்றும்சொல்வது வழக்கில் இல்லையா? சிஷ்ய பரம்பரையிலுள்ளாரும் மூல ஆசாரியனை ஆசாரியன் என்று சொல்லிக்கொள்வதுமுண்டே. அன்றியும் தமது காலத்துக்கு வெகுகாலம் முன்னிருந்த பெரியாரை ஆசாரியனாக வரித்துப் பலன் பெற்றவர்கள் பலர் உளரே. ஒழிவிலொடுக்கம் என்னும் சாஸ்திரத்தை எழுதிய கண்ணுடைய வள்ளலார் சம்பந்தமூர்த்திகளுக்கு வெகுகாலம் பின்னிருந்தவர். அவர் சம்பந்தமூர்த்திகளைக் குருவாகக் கொண்டிருந்தனர் என்பது யாவருமறிந்ததே. ஒழிவிலொடுக்கத்திலுள்ள சிறப்புப்பாயிர வெண்பா அதைக்காட்டும். அது,

> "வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
> வள்ளல்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தான்—உள்ளத்
> தழிவிலடக் குந்தேனை யன்பரெலா முண்ண
> வொழிவி லொடுக்கநூ லோர்ந்து"

என்பது. சங்கராசாரியரைப் பின்பற்றுவோரைச் சங்கராசாரியர் சிஷ்யர் என்று சொல்வாரில்லையா? மேலும், மதுரகவிகள் நம்மாழ்வாருக்குப் பின்னிருந்து திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்களைப் பிரவசனம் செய்வதையே பெரும்பணியாகக் கொண்டிருந்தனர் என்பது அவர் சரித்திரங்களிற் சொல்லப்படுகிறது. பராங்குசர் அவர் நேர் சிஷ்யராய் இருந்தால் திருவாய்மொழியைக் காமலாவது கற்று மறந்து விடவாவது நியாயமில்லை. திவ்யப்பந்தங்கள் வழங்கி நெடுங்காலமாயிற்று. அவைகளை அந்தக் காலத்தில் அறிவாரில்லை என்று சொல்வரா?

3. ஆழ்வார்கள் அல்லது திவ்யப்பிரபந்தங்களைச் சொல்லும் சிலாசாஸனம், தாம்பிர சாஸனங்கள் முதலாவது குலோத்துங்கன் காலத்துக்கு முன் இல்லை. ஆதலால் ஆழ்வார்கள் குலோத்துங்கன் காலத்துக்குபின் இருந்திருக்கவேண்டும்என்பர்.

அவர்கள் அவ்வாறு சொல்லிய காலத்திற்குப்பிறகு குலோத்துங்கன் காலத்துக்கு முந்திய சாஸனங்கள் கிடைத்திருக்கின்றன. குலோத்துங்கன் ஆட்சி கி. பி. 1070-முதல் 1118-வரை. அவனுடைய மாதாமகனான முதலாவது ராஜேந்திரனாட்சி கி. பி. 1012-முதல் 1042-வரை. அவன் காலத்திலும் திருவாய்மொழிபாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. தென்னார்க்காடு ஜில்லா எண்ணாயிரம் என்னும் ஊரில் ராஜேந்திரசோழன் காலத்தில் ராஜராஜவிண்ணகர், குந்தவைவிண்ணகர், சுந்தரசோழவிண்ணகர் முதலிய பல விஷ்ணுவாலயங்களும் வேறு தேவதைகளுக்கு ஆலயங்களும் ஏற்பட்டுப் பூசை முதலியன செவ்வனே நடத்தப்பட்டுவந்தன. அவனது ஆட்சி 25-ஆம் ஆண்டிலும் அதை ஒட்டியும் அவ்வூரில் பொறிக்கப்பட்டுள்ள சிலாசாஸனத்தால் திருவாய்மொழிப் பிரபந்தத்தைப் பாடுவதற்கு நால்வர் நியமிக்கப்பட்டிருந்ததாயும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் தினம் முக்குறுணி நெல் பிரபந்தம் பாடுவதற்குக் கொடுத்து வந்ததாயும் அறியக்கிடக்கிறது. (Cp. Rep. 1918 p 144 to 147) அவனாட்சி 25-ஆம் ஆண்டு கி. பி. 1036-ஆம் ஆண்டாகும். இந்த சாஸனங்

களில் உள்ளவைகளை விரிவாய் மூன்றாங்காலப் பகுதியில் நாத முனிகள் வைபவத்தைச் சொல்லுமிடத்துக் கூறுவேன். ராஜேந்திரசோழன் காலத்து நாதமுனிகள் இருந்ததையும், அவனே நாத முனிகள் விஷ்ணு பக்தனாகவும் செய்ததையும் ஆண்டுப் பார்க்க. நாதமுனிகள் காலத்துக்குமுன் திவ்யப்பிரபந்தங்கள் பிரவசனம் செய்யப்படுவது குன்றிஇருந்ததும், முனிகள் முயற்சியால் அவைகள் மறுபடியும் உலகத்தில் நடைபெற்றதும் குருபரம்பராப் பிரபாவம் முதலிய கிரந்தங்களில் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வாறு பிரபந்தங்கள் லோபித்திருந்த காலத்தில் சாஸனங்களில் அவைகளைச் சொல்லாமல் இருப்பது இயல்பே. இதைக்கொண்டு அவைகள் பிந்திய காலத்தவை என்பது பொருத்தமுடையதாகாது.

4. நம்மாழ்வார் எண்பத்திரண்டாவது திருவாய்மொழி நாலாம் பாசுரத்தில் "புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்து ணின்று" என்று பாடியிருக்கின்றனர். வரகுணமங்கை என்னும்ஊர் வரகுணபாண்டியனால் அமைக்கப்பெற்றது. வரகுணன் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்தவன். ஆதலால் நம்மாழ்வார் அவன் காலத்துக்குப் பின்னர் இருந்தவர் என்பர். வரகுணமங்கை என்னும் திருப்பதி வரகுணபாண்டியனால் அமைக்கப்பட்டதென்பதற்கு ஆதாரமின்னவென்று காட்டுவது அவர் கடமையன்றோ? தமது ஊகம் என்பரேல் திருப்பதிக்கு அப்பெயர் வாய்ந்ததைப் பலவகையாய் ஊகிக்கலாமே. ஊர்களுக்குப் பெயர் அமைவது அரசன் பெயரைக் கொண்டு மட்டுமா? அப்படியானால் இந்நாட்டில் உள்ள எல்லாவூர்களுக்கும் பெயர் அரசர்களின் பெயர்களாலமைந்திருத்தல்வேண்டும். காவிரி மங்கலம் என்பது எந்த அரசன் பெயரால் அமைந்தது? சாத்தமங்கலம் அரசன் பெயராலமைந்ததா? சாத்தன் என்ற பெயர் தரித்த அரசன் எங்கு எப்பொழுது இருந்தான்? காசி, காஞ்சி, குடமூக்கு, நெல்வேலி, மதுரை முதலிய எந்த அரசர்கள் பெயரைக் கொண்டன? ஊர்களுக்குப் பெயர் ஏற்படுவதற்குப் பல காரணங்களுள. வரகுணமங்கை என்னுந் திருப்பதியில் தாயார்

பெயர் வரகுணமங்கை என்பது. ஏன் அத்திருப்பதிக்கு அப் பெயர் அமைந்திருத்தல் கூடாது? வரகுணமங்கை என்னும் ஊர் எக்காலத்து ஏற்பட்டது? அதிலுள்ள விஷ்ணு கிருகம் எக்காலத் தேற்பட்டதென்பதை விசாரித்து அவற்றினுண்மையை உணர்த் தக்கூடிய ஆதாரங்களைச் சேகரிக்காது, தாங்கள் கொண்ட கொள் கைக்கு ஒத்தவாறு ஊகிப்பது சரியன்றே. வரம், குணம் என் னும் பதங்கள் இந்நாட்டில் எவ்வளவு காலமாய் வழங்குகின்றன? பாண்டியனுக்கு வரகுணன் என்னும் பெயர் அமைவதற்குமுன் இந்நாட்டில் வழக்கில் இருந்த பதங்களைச் சேர்த்துத்தானே அவ னுக்குப் பெயர் வைத்திருக்கவேண்டும்? ஊர்ப்பெயர், தெய்வத் தின் பெயர் இவற்றை அமைப்பதற்குப் பாண்டியன் காலத்துக்கு முன்னரே அவ்வகைச் சேர்க்கை நிகழ்ந்திருத்தல் கூடாதோ? இவர்கள் சொல்லும் பாண்டியனது பிதாமகனுக்கும் வரகுணன் என்னும் பெயர் இருந்ததை வம்சவிருக்ஷத்தைப் பார்ப்பதனால் அறியலாம். இவர்கள் ஊகத்தைவிட்டு இரண்டாவது வரகுண பாண்டியன் காலத்திலோ அதற்குப் பின்னரோ இந்தத்திருப்ப திக்கு அப்பெயர் அமைந்ததென்று தகுந்த ஆதாரத்தோடு காட் டும்வரை அவர் கூற்றை ஒருபுறம் வைப்பாம்.

5. ஆழ்வார்

"உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாம்
கண்ணனெம் பெருமானென்றென்றே கண்கணீர்மல்கி"
(திருக்கோளூர்த் திருவாய்மொழி—57.)

என்று சொல்லியிருக்கின்றனர். கி. பி. 500-ஆம் ஆண்டுக்குமுன் இந்நாட்டில் வெற்றிலை தின்னும் வழக்கம் இருந்ததில்லை. அவ் வழக்கம் நாட்டில் பரவவும், ஆழ்வார் அதைச்சொல்லவும் வழக் கம் ஏற்பட்டு வெகுகாலம் சென்றிருத்தல் வேண்டும் என்பர்.

கி. பி. 500-ம் ஆண்டுக்குமுன் வெற்றிலை தின்னும் வழக்கம் இந்நாட்டில் இருந்ததில்லை என்பார் தம் கூற்றுக்காதாரங்களைக் காட்டக் கடமைப்பட்டவரன்றோ? தோன்றியவாறெல்லாம் கூறி, அதை யாவரும் உண்மையென ஒப்புக்கொள்ளவேண்டும்; இல் லாவிடில் வழக்கம் அக்காலத்திருந்ததென்று காட்டுவது அவரது கடமை என்று இவர் சொல்வது விந்தையே.

முதலாவது கரிகாலன். கிள்ளிவளவன் இவர்கள் காலத்துச் சோழர் தலைநகராக இருந்தது காவிரிப்பூம் பட்டினம். அவர்களிருந்தது கி. பி. ஒன்று, இரண்டு இந்த நூற்றாண்டுகளில். அப்பொழுது காவிரிப்பூம்பட்டினம் மிகவும் விசாலித்திருந்ததென்பது ஆராய்ந்தார் யாவருமறிந்ததே. காவிரிப்பூம்பட்டினத்தில் அக்காலத்து வெற்றிலை விற்கும் இடமாக இருந்தது இக்காலத்தும் இலையமுதுக்கூடம் என்னும் பெயரோடு இப்பொழுதுள்ள காவிரிப்பட்டினத்திற்குச் சிறிது தூரம் மேற்கே தனிக்கிராமமாயிருக்கிறது. வெற்றிலையையும் தின்னும் மற்றைப்பண்டங்களையும் அமுது என்று சொல்லியிருப்பதைப் பழைய சாஸனங்களிலும், புத்தகங்களிலும் பார்க்கலாம். வெற்றிலைக்கு இலையமுது, தாம்பூலம், நாகவல்லி என்னும் பெயர்களும் நீண்டகாலமாய் வழங்குகின்றனவே. அவைகளெல்லாம் கி. பி. 500-ஆம் ஆண்டுக்குப்பின் தமிழில்வந்து வழங்குகின்றன என்று எந்த ஆதாரத்தைக் கொண்டு சொல்லுகின்றனர். இவர்தமக்குத் தோன்றியவாறு கூறுவது பிரமாணமாகுமோ?

பாக்குக்கு அடைக்காய் என்னும் பெயரைப் பழைய புத்தகங்களிற் பார்க்கலாமே. வெற்றிலையோடு உபயோகப்படுத்தப்படுங் காயாதலால் அஃது அடைக்காய் என்னும் பெயரைப்பெற்றது. அடை என்பதற்குத் தமிழில் இலை என்னும் பொருள் உண்டு என்பதை அறியாத தமிழறிஞர் உண்டோ? சிலப்பதிகாரத் (XVI. 54-55) தில் "உண்டினிதிருந்த வுயர் பேராளற்-கம்மென் றிரையலோ டடைக்காயீந்த" என்னுமிடத்து அடைக்காய் என்னும் பதத்திற்கு என்னபொருள் கூறுவரோ இவர்? திரையல் என்பதற்கு அரும்பத வுரையாசிரியர், அடியார்க்குநல்லார் இருவரும் வெற்றிலைச்சுருள் என்று பொருள் எழுதியிருப்பதைவிட்டு இவர் புதுப்பொருள் கூறுவரோ? திரை என்னும் பகுதியடியாகப் பிறந்த திரையல் என்னும் தொழிலாகு பெயர் சுருளை யுணர்த்தும் என்பதில் ஐயமென்னை? அடைக்காயோடு கொடுக்கப்படும் சுருளை வெற்றிலைச்சுருள் என்றது வேறு என்ன இலைச்சுருள் என்பரோ? சிலப்பதிகாரத்தின் காலம் முன்னரே

குறிக்கப்பட்டது. அடைக்காய்க்குக் கோலம், துவர்க்காய், பாக்கு என்னும் பெயர்கள் தமிழில் புதிதாய் வந்து வழங்குகின்றன என்பரோ? தமிழ்நாட்டில் வெகுகாலமாய் இருந்துவரும் அடைக்காய்க்கு வேறு என்ன உபயோகம் கற்பிப்பரோ? தாம்பூலத்தோடு தரிக்கப்படும் ஏலம், இலவங்கம் முதலியவற்றைத் தமிழ் மக்கள் முற்காலத்தில் தாம்பூலத்தோடன்றித் தனியே தின்றனர் என்பரோ? தாம்பூலம் தரிக்கும் வழக்கம் இந்நாட்டில் கி. பி. 500-க்குப்பின் வந்திருந்தாலும் நம்மாழ்வார் பத்தாம் நூற்றாண்டினர் என்று அதைக்கொண்டு எவ்வாறு ஏற்படும்?

6. நம்மாழ்வார்

"இலிங்கத்திட்டபுராணத்தீருஞ்சமணருஞ்சாக்கியரும்
வலிந்துவாதுசெய்வீர்களும்மற்றுந்தெய்வமுமாகிநின்றான்"
(நாற்பதாவது திருவாய்மொழி)

என்று திருக்குருகூர்பதிகத்தில் சொல்லுகின்றனர். இதனால் நம்மாழ்வார் இருந்தது புராணங்களுண்டான காலத்துக்குப் பின்னர் இருக்கவேண்டும். புராணங்களோ பிற்காலத்துண்டானவை. ஆதலால் நம்மாழ்வார் காலம் அதற்கும் பிந்தியதாம் என்பர்.

புராணங்கள் பிற்காலத்துண்டானவை என்று எந்த ஆதாரத்தைக்கொண்டு செல்லுகின்றனர். மற்றப் புராணங்களைப் பற்றிப் பிந்திக் கவனிப்போம். நம்மாழ்வார் குறிப்பிட்ட இலிங்கபுராணத்தை முதலில் எடுத்துக்கொள்ளுவோம். திருநாவுக்கரசு சுவாமிகள் கி. பி. ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவதரித்து ஏழாம் நூற்றாண்டு மத்தியகாலம்வரை இருந்தவர் என்பதை முன்னமே காட்டினேன். அவர் "இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை" பாடியிருக்கின்றனர். அதன் ஈற்றுச் செய்யுள்

"செங்கணானும்பிரமனுந்தம்முள்ளே
எங்குந்தேடித்திரிந்தவர்காண்கிலார்
இங்குற்றேனென்றிலிங்கத்தேதோன்றினான்
பொங்குசெஞ்சடைப்புண்ணியமூர்த்தியே"

என்பது. அவர் தசபுராணப்பதிகம் பாடியிருப்பதும் யாவருமறிந்ததே. இவைகளால் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரே இந்நாட்

டார் புராணங்களை அறிந்திருந்தனர் என்பது புலனாகும். வேதங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக உள்ளன என்பதை ஐரோப்பியர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவைகளில் பிராம்மணம் என்பது ஒரு பகுதி. பிராம்மணத்தில் புராணம் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்பதை வடமொழியிற் சிறந்த புலவராகிய ஜெர்மானியர் வீபர் "Side by side with the Itihasa we find the Purana mentioned in the Brahmanas" (Weber's History of Indian Literature-Popular Edition - p. 190.) என்று கூறி ஒப்புக்கொள்ளுகிறார். சரித்திர ஆராய்ச்சி வல்லுநராகிய வி. எ. ஸ்மித் என்பவர் "Early History of India Third Edition - p. 23. I may add that Puranas is some shape were already authoritative in the fourth Century B. C. The author of the Arthasastra ranks the Atharva veda and Itihasa as the fourth and fifth vedas; and directs the King to spend his afternoons in the study of Itihasa which is defined as comprising six factors namely (1) Purana,......................................................................

என்று எழுதுகிறார். இதனால் கி. மு. நாலாம் நூற்றாண்டுக்கு முன்னரே புராணங்கள் பிரமாணங்களாகக் கொள்ளப்பட்டிருந்தன என்பது புலனாகும். சரித்திரவல்லுநராயும வடமொழிப் புலவராயுமுள்ள பார்ஜிடர் என்னும் மற்றொருவர் (The Purana Text of the Dynasties of the Kali age) "The versified chronicles were first collected about or soon after the middle of the 3rd century in the shape found in the Matsya, and that they were extended to the rise of the Gupta Kingdom before the year 335" என்றோரிடத்திலும், மற்றோரிடத்தில் கீழ்க்குறிப்பில் "There is an apparent indication that a compilation was begun in the latter part of the 2nd century" (XIII) என்றும் சொல்லுவதோடு வேறோரிடத்தில் (P. XVII note) "It has been shown above that the Bhavishya existed in the middle of the 3rd century, hence some at least, if not many, of the true Puranas.

must be considerably older." என்றும் சொல்கின்றனர். இவர் முற்காலத்தில் பாரத்வருஷத்தில் ஆட்சிபுரிந்த அரசவம்ச சரித்திரத்தை எழுதப்புகுந்தவர். தாம் மேற்கொண்டகாரியத்தை விளக்கும் புராணங்களைச் சொல்லுகின்றனர். நமது நாட்டாரிற் பலர் முன்னமே உள்ள புத்தகங்களில் தங்களுக்குத் தோன்றியவாறு கூட்டுவதும் மாற்றுவதும் உண்டென்பதை நான் விளக்கிக்காட்டவேண்டுவதில்லை. இடைச்செருகலைக் குலதர்மமாகக் கொண்டோர்பலர். பாரதம், ராமாயணம் இவை யிரண்டிலும்கூட இவ்வாறு கூட்டப்பட்டன பலஎன அறிஞர் பலர் கூறுகின்றனர். பார்ஜிடர் இடைச்செருகுவதையுங் கருதிச்சொன்னவர். இடைச்செருகுவதற்கு முன்னரே புராணம் இருக்கவேண்டியதில்லையா? நான் இதுகாறும் சொல்லியவற்றால் புராணங்கள் நீண்டகாலமா யுள்ளன என்பதும், சில் நூற்றாண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டன என்பார் கூற்று அங்கீகரிக்கத்தக்கதல்ல என்பதும் தெளிவாம்.

7. திருவாய்மொழிப் பாசுரங்களுக்குப் பண்ணமைக்கப்பட்டுள்ளன. திருமங்கை மன்னன் முதலியோர் பாசுரங்களுக்கு அமைககப்படவில்லை. சைவர்களைப் பார்த்துப் பிற்காலத்துச் செய்ததாய் இருக்கவேண்டும் என்பர்

சங்ககாலத்திலேயே பண்ணுள்ளன என்பதை அறியாதார் கூற்று இஃதாம். தொல்காப்பியம், பரிபாடல், சிலப்பதிகாரம் முதலியவற்றை உற்றுநோக்க இவர் ஐயம் நீங்கும். பண்ணோடு பாடுவது பத்தாம் நூற்றாண்டு முதற்பாதிக்குப் பின்னர்க் குறைந்தது. சைவத் திருமுறைகளில் ஒன்பதாவதாகிய திருவிசைப்பாவரை பண்ணோடு பாடப்பட்டன. இது நிற்க, திருமங்கைமன்னன் பண் அமைத்துப்பாடவில்லை என்று இவர் எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்லுகின்றனர்? இக்காலத்தார் அவர் பாசுரங்களைப் பண்ணோடு பாடாமலிருப்பது ஆதாரமாகுமா? பண் என்பது இசைதானே. தம் பாடல்களைத் திருமங்கை மன்னன் பண்ணோடு பாடினாரோ இல்லையோ என்பதைப் பின்கண்ட அவருடைய பாக்களே காட்டும்.

"திண்ணார்மாடங்கள்சூழ்திருமங்கையர்கோன்கலியன்
பண்ணார்பாடல்பத்தும்பயில்வார்க்கில்லைபாவங்களே (I. 9—10)

"பண்ணுளார்தரப்பாடியபாடலிப்பத்தும்வல்லாருலகில்
எண்ணிலாதபேரின்பமுற்றிமையவரோடுங்கூடுவரே' (IV.2—10)

"கல்லின்மன்னுதிண்டோட்கலியனொலிசெய்த
நல்லஇன்னிசைமாலைநாலுமோரைந்துமொன்றும்" (III. 5—10)

"கல்லின்மன்னுந்திண்மங்கையர்கோன்கலிகன்றிசொல்
நல்லஇன்னிசைமாலைகள்நாலிரண்டுமிரண்டுமுடன்" (V. 4—10)

"செருநீர்வேல்வலவன்கலிகன்றிமங்கையர்கோன்
கருநீர்முகில்வண்ணன் கண்ணபுரத்தானை
இருநீரின்றமிழின் இசைமாலைகள்கொண்டுதொண்டீர்
வருநீர்வையமுய்யவிவைபாடியாடுமினே" (VIII. 9—10)

"கன்னிநன்மாமதிண்மங்கையர்காவலன்காமருசீர்க்கலிகன்றி
இன்னிசைமாலைகள்ஈரேழும்வல்லவர்க்கே தமிடரில்லையே' (X. 7—14)

"கலிகெழுமாடவீதிவயன்மங்கைமன்னுகலிகன்றிசொன்னபனுவல்
ஒலிகெழுபாடலபாடியுழல்கின்றதொண்டரவராள்வரும்பருலகே'
(XI. 4—10)

ஒலிகெழுபாடல் பாடுவது பண்ணுன்றியோ? திருமங்கைமன்னன் அப்பர் முதலியோர் திருநெடுந்தாண்டகம் பாடியிருக்கின்றனர். அப்பர் திருநெடுந்தாண்டகத்துக்குப் பண்ணுண்டென்பவர் திருமங்கை மன்னன் செய்ததற் கில்லையென்னல் விந்தையே.

8. மணிவாசகரைப் பார்த்து நம்மாழ்வார் கவிபாடினர் என்பர். நம்மாழ்வாரைப் பார்த்து மணிவாசகர் கவிசெய்யவில்லையென்று இவர் சொல்வதற்காதார மென்னை? மணிவாசகர் சரித்திரத்தைப்பார்க்க. ஒருவர் ஒருவரைப்பார்த்துச் செய்திருக்க வேண்டுமென்று கொள்வதவசியமா? பழமொழி முதலியன நெடுங்காலம் வழக்கிலிருந்தவற்றை இருவரும் தனித்தனியே பிரயோகித்திருத்தல் கூடாதா? தமிழ்ப்பதங்கள் அநேக நாளாக உள்ளவை; அப்பதங்கள் பலராலும் ஆளப்பட்டு வருகின்றன; அங்ஙனம் ஆண்டவர்களில் இருவரையட்டும் எடுத்துக்கொண்டு ஒருவரைப்பார்த்து ஒருவர் எழுதினதாகச் சொல்லுவது பொருத்தமுடையதாகுமா?

9. ஆனைமலை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருமங்கை முதலிய திருப்பதிகளை நம்மாழ்வார் பாடவில்லை. இவைகள் அப்ரஸித்தியை அடைந்தகாலத்தில் நம்மாழ்வார் இருந்திருக்கவேண்டுமென்பர். அது பிறழ்பட்டகாலமாகும். நம்மாழ்வார் பல திருப்பதிகளைப் பாடவில்லை. அவர் பாடாத திருப்பதிகளெல்லாம் அவர்காலத்தில் அப்ரஸித்தியை அடைந்திருந்தனவென்று கொண்டால், என்றும் பிரஸித்தி பெற்றவையென்று யாவராலும் கொள்ளப்பட்டிருக்கிற பல திருப்பதிகளும் அவர் காலத்து அப்ரஸித்தியை யடைந்திருந்தனவென்று கொள்ளல்வேண்டும். நம்மாழ்வார் தமது காலத்துப் பிரஸித்திபெற்றிருந்த திருப்பதிகளை விடாது பாடுவதென்று சங்கல்பம் செய்துகொண்டிருந்தாரென்று காட்டுவது அவ்வாறு கூறுவோர் கடமையாம். திருமங்கைமன்னன் அநேக திருப்பதிகளைப் பாடியிருக்கின்றனர். அவரும் எல்லாத் திருப்பதியையும் பாடவில்லை. மற்ற ஆழ்வார்கள் சில திருப்பதிகளையே பாடியிருக்கிறார்கள். அவர்கள் காலத்தில் அவர்களால் புகழப்படாத திருப்பதிகள் இருந்ததில்லை யென்னலாமோ?

10. நம்மாழ்வாரால் ஆளப்பட்டிருக்கும் சமஸ்கிருத பதங்களும், சில இலக்கணவிதிகளும் அவரைப் பிற்காலத்தவரெனக் காட்டுமென்பர். இவர் குறிப்பிடும் பதங்களும் விதிகளும் எக்காலத்தில் முதலில் தமிழறிஞர்களால் உபயோகப்படுத்தப்பட்டனவென்று இவர் காட்டுவாரா? முதலில் அவைகளை உபயோகித்தவர் நம்மாழ்வாரா? அவருக்கு முன்னிருந்தவர்களா? முன்னிருந்தவர்களானால் அவர் யாவர்? எக்காலத்தவர்? அக்காலத்து நூல்கள், செய்யுட்கள் முதலிய அனைத்தும் இக்காலத்துள்ளனவா? இறந்துப்பட்டன பல என்பதை மறுப்பாருண்டோ? இவர் தாம் சொல்வதை யெல்லாம் வேதவாக்காகக்கொண்டு, இவர் சொல்வதை இல்லை யென்று காட்டும் கடமை அவரை மறுப்போர் பாலது என்பர். இவர் சொல்லும் ஒவ்வொரு பதத்தையும் விதியையும் எடுத்து ஆராயப்புகின் வீண் காலதாமதமென்று விடுத்தேன்.

இனி, நம்மாழ்வார் காலத்தைக் குறிப்பிடுவோர் சொல்லும் நியாயங்கள் எல்லாவற்றையும் தள்ளிவிடுவதற்கில்லை. சில இன்னும் நன்ருய் ஆராயற்பாலன. அவற்றுட் சிலவற்றை அடியில் குறிக்கின்றேன.

1. திருமங்கை மன்னன் காலத்தில் ஸ்ரீரங்கத்தில் திருவாய்மொழி பாடுவது முதலிய சில ஏற்பாடுகளைச் செய்திருந்தனர் என்று பரம்பரையில் ஒரு கதை வழங்குகிறது. குருபரம்பராப் பிரபாவத்தில் இந்தக்கதை காணப்படவில்லையேனும் அநேகர் இதை உண்மையெனக் கொள்கின்றனர். குருபரம்பராப்பிரபாவத்தில, பெரிய திருமொழி முதலிய ஆறு பிரபந்தங்களையும், ஸ்ரீசடகோபவாங்மயமான திராவிட வேத சதுஷ்டயத்துக்கு ஷடங்கமாகத் திருமங்கை மன்னன் அருளிச் செய்தார் என்று சொல்லியிருப்பதும், வைணவர்களால் கொண்டாடப்படும் உபதேசரத்தினமாலை என்னும் பிரபந்தத்தில்

"மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங்கூற"

என்று சொல்லியிருப்பதும் கவனிக்கத்தக்கவை. திருமங்கை மன்னன் ஸ்ரீரங்கத்தில் மேற்சொன்னபடி திருவாய்மொழிபாட ஏற்பாடு செய்திருந்தது உண்மையென்று ஏற்பட்டால் நம்மாழ்வார் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டுக்கு முன்னிருந்தவராவர். எவ்வளவு காலம் முன்னிருந்தவர் என்பது தெரியவில்லை. இக்கதைக்குள்ள ஆதாரங்கள் ஆராயத்தக்கவை.

2. ஸ்ரீமான் வெங்கோபாராயரவர்கள் செந்தமிழ்த்தொகுதி (IV. ப. 228-9)யில் பின்கண்டவாறு எழுதியிருக்கின்றனர். அது "மாறவர்மன் மகனுகிய ஜடிலவர்ம பாண்டியனென்னும் முதல்மாறஞ்சடையனுல் வேலங்குடி யென்னும் கிராமம் அதன் பழம்பெயர் நீக்கப்பட்டு ஸ்ரீ வரமங்கலம் என்னும் புதுப்பெயரால் மகதப்பிராம்மணனுகிய ஸுஜ்ஜட பட்டனுக்குத் தானமாக அளிக்கப்பட்டதென்று பழையதான ஒரு தாமிரசாஸனத்தால் தெரியவருகிறது. இவ்விஷயத்தை அடியில் வருமாறு வரைந்துளார். 'யக்ஞவிதியையோடெஞ்சாத சாஸ்திரங்களைக் கரைகண்ட ஸுஜ்ஜட,

பட்டருக்குத் தென்களவழிநாட்டு வேலங்குடியைப் பண்டைத் தன் பழம் பேர் நீக்கி ஸ்ரீவரமங்கலமெனப் பெயரிட்டுப் பிர்ம்ம தேயமாகக் காராண்மையும் மீயாட்சியுமுள்ளடங்க் ஸர்வ பரிஹாரமாக நீரோட்டிக் கொடுக்கப்பட்டது. இச்சிரீவரமங்கலமே பிற்காலத்து சிரீவரமங்கை, வானமாமலே, தோதாத்திரி, நாங்குனேரி யென்னும் பல பெயரால் விளங்கி நிற்குந் திவ்யதேசம்'' என்பது. ஸ்ரீவரமங்கையை நம்மாழ்வார் (147வது திருவாய்மொழி) பாடியிருக்கிறுர். மேற்கண்டசாஸனத்தில் சொல்லிய மாறஞ்சடையன் கி. பி. 769—70-ஆம் ஆண்டில் ஆட்சி புரிந்தவன். நம்மாழ்வார் அக்காலத்துக்குப் பின்னிருந்தவராதல் வேண்டும் என்பர். இதற்கு மாருய்க் கூறுபவர் ஸ்ரீவரமங்கல நகரம் என்று முன்னது. அதனுடைய உபக்கிராமமாகிய வேலங்குடிக்குப் பாண்டிய அரசனல் ஸ்ரீவரமங்கலம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது உண்மையே. பாண்டியனது செய்கைக்கு முன்னமே ஸ்ரீவரமங்கல நகரம் ஒன்றிருந்ததில்லை என்பதைக் காட்டாதென்பர். ஸ்ரீமான் வெங்கையராயரவர்கள் சொல்வது உண்மை என்று எற்பட்டால் நம்மாழ்வார் மாறன் சடையன் காலத்துக்குப் பின் இருந்தவராவர். இந்தப் பாண்டியன்காலத்துப் பெரியாழ்வார் இருந்தார் என முன்னே காட்டினேன். இது நன்ருய் ஆராயற்பாலது.

3. சிலர் திருவரங்கத்தமுதனர், பராசரபட்டர் இவர்கள் ஆழ்வார்கள் முறையமைப்பில் நம்மாழ்வாரை ஈற்றில்வைத்ததையும், நாலாயிரப்பிரபந்த அமைப்பில் ஈற்றில் திருவாய்மொழி வைக்கப்பட்டிருப்பதையும் காட்டி நம்மாழ்வார் முறையை இதனல் அறியலாமென்பர். நம்மாழ்வார் ஈற்றில் வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் இன்னதென்று திருப்திகரமாய்த் தெரிந்துகொள்ளும்வரை இஃது ஆராயற்பாலதாம்.

4. சிலர் நாதமுனிகள் திருவாய்மொழி மட்டுமன்று எல்லா திவ்யப்பிரபந்தங்களும் அடங்கிய ஸ்ரீ கோசத்தைத்தேடிக் குருகூருக்குச்சென்றனர் என்பது சடகோபாழ்வார் பிற்காலத்திருந்தவர் என்பதைக்காட்டும் என்பர். ஆழ்வார் பிற்காலத்திருந்தவர்

என்பதற்கு வேறு ஆதாரங்கள் காணப்பட்டால் இதையும் ஒன்ருய் எடுத்துககொள்ளளாமே அல்லது இந்தக்கொண்டுமட்டுங் ஒரு முடிவுக்கு வர இயலாது.

5. சிலர் நாதமுனிகள் காலத்துக் கங்கைகொண்ட சோழபுரத்துக்கடுத்துள்ள குருகைக்காவலப்பன்கோயில் என்னும் ஊர் இருந்ததென்பது அதற்கு வெகுகாலத்துக்கு முன்னமே குருகைக்காவலன் என்னும் நம்மாழ்வார் இருந்ததைக் காட்டும் என்பர். இஃது ஆராயர்பாலது.

6. சாஸ்திரத்தின் கருத்துக்கள் பலகாலம் செல்லச்செல்ல திருந்திய உருவத்தை அடையும். அவ்வித உருவத்தை யடைந்த கருத்துக்கள் பல நம்மாழ்வார் பாடல்களில் காணப்படுகின்றன. (More developed Ideas) ஏனைய ஆழ்வார்கள் செய்யுட்களில் அவைகள் குறைவு. இது நம்மாழ்வார் பிற்காலத்தவர் என்பதைக் காட்டும் என்பர். இவர் கூற்று உண்மையா னைபது ஆராயற்பாலது.

7. சிலர் மணிவாசகர் பாட்டுக்களில் காணப்படும் கருத்துக்களுக்கும், சொற்றொடர்புகளுக்கும் நம்மாழ்வார் பிரபந்தங்களில் உள்ள கருத்துக்களுக்கும், சொற்றொடர்புகளுக்கும் ஒற்றுமையிருக்கின்றது. ஆதலால் அவர்கள் இருந்த காலங்களுக்கு இடையீடு சிறிதாயிருக்கவேண்டும் என்பர். இஃது ஆராயற்பாலதாம்.

நம்மாழ்வார் காலத்தை நிர்ணயிப்பதில் சங்கடங்கள் பலவுள. தக்க ஆதாரம் அகப்படும்வரை காத்திருக்கவேண்டும். பலவற்றையோசிக்க எட்டாம் நூற்றாண்டுக்கு முந்தியவர் அல்லரோ என்னும் ஐயம் நிகழ்கின்றது.

மதுரகவியாழ்வார்:—இவர் நம்மாழ்வாரோடு சமகாலத்தவர் என்பது யாவராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

குலசேகராழ்வார்:—இவரைச் சிலர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினர் என்பர். முதலாவது குலோத்துங்க சோழனது ஆட்சியின் பதினெட்டாம் ஆண்டில் திருவரங்கம் கோயிலில்

பொறிக்கப்பட்டுள்ள சிலாசாஸனத்தில் " அம்பிகைத் தேர்த்திரு நாளிலும், பங்குனித் திருநாளிலும் தீர்த்தம் பிரஸாதித்தருளின அன்றிரா திருப்புன்னைக்கீழ் எழுந்தருளியிருந்து தேட்டருந்திறல் கேட்டருளும்போது" என்று கண்டிருக்கிறது. "தேட்டருந்திறல்" என்பது குலசேகராழ்வார் திருவரங்கம் மணவாளப் பெருமாள் விஷயமாய்ப் பாடிய பத்துக்களில் இரண்டாவது பத்து. குலோத்துங்கன் பட்டமடைந்தது கி. பி. 1070-ல் அவனாட்சியின் பதினெட்டாம் ஆண்டு கி. பி. 1088 ஆகும். கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பாதி; இது குலசேகராழ்வார் பன்னிரண்டாம் நூற்றாண்டென்பார் கூற்றைத் தவறெனக் காட்டும். குலசேகரன் என்பது சாதாரணப் பெயர். சேரர்களிலும், பிற்காலத்துப் பாண்டியர்களிலும் குலசேகரன் எனப் பெயர்தரித்தோர் பலர். அப்பெயருடைய வேறொருவரை ஆழ்வார் எனக் கொண்டு பன்னிரண்டாம் நூற்றாண்டினர் எனச் சொல்லுகின்றனர். மேற்சொல்லிய சாஸனத்தில் திருவழுதிநாடுதாஸர், ஸ்ரீசடகோபதாஸர், குருகைக்காவலன் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. நாதமுனிகள் ராஜேந்திரசோழன் காலத்திருந்தவர் என்றும், எண்ணாயிரம் என்னும் திருப்பதியில் அவ்வரசன் காலத்துத் திருவாய்மொழி பாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதென்றும் முன் சொன்னேன். ஆழ்வார்கள் அனைவரும் நாதமுனிகள் காலத்துக்கு முன்னிருந்தவரென்பதில் ஒருசிறிதும் ஐயத்திற்கிடமில்லை.

குலசேகரன் என்னும் பெயருள்ள சேரன் ஒருவன் சமஸ்கிருதத்தில் சிலநாடகங்களை எழுதியிருக்கிறான். அவனும் விஷ்ணு பக்தன். இவைகளைக்கொண்டு அந்த நாடகங்களை எழுதியவர் ஆழ்வாரே எனச் சிலர் கூறுகின்றனர். அவைகளில் அவற்றைச் செய்த சேரனைப்பற்றிச் சொல்லியிருப்பனவற்றை ஆழ்வாருக்குக் கற்பிக்கின்றனர். நான் மேற் சொல்லியவற்றால் நாதமுனிகள் காலத்துக்கு வெகுகால முன்னரே ஆழ்வார்கள் இருந்திருக்க வேண்டும். அவர்காலத்திலாவது அதற்குக் கொஞ்சம் முன்னாவது ஆழ்வார்கள் இருந்திருந்தால் திவ்யபிரபந்தங்கள் லோபமாய்ப்

போகவும், முனிகள் அவைகளடங்கிய கோசங்களைத் தேடிச் செல்லவும் நேர்ந்திரா.

இது நிற்க, ஆழ்வார் தம்மைப்பற்றிப் பிரபந்தங்களில் சொல்லிக்கொள்வதைப்பார்ப்போம். "கூடலர்கோன்" "கொல்லிகாவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குலசேகரன்" "கொங்கர்கோன் குலசேகரன்" "கொல்லி நகர்க்கிறை கூடர்கோமான் குலசேகரன்" "கொல்லிகாவலன்" "கோழியர்கோன் குடைக்குலசேகரன்" என்று சொல்லிக்கொள்ளுகின்றனர். கொல்லி என்பதைக் கொல்லம் என்று சிலர் சொல்லுகின்றனர். இது மேல்கடற்கரையில் உள்ளது. இவர்கள் சொல்லுவதைத் தவிர்த்து வேறு எங்கும் கொல்லத்தைக் கொல்லி என்று சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. மேற்கண்டவற்றால் குலசேகரப் பெருமாள், பாண்டிய சோழர்களின் தலைநகர்களையும் தன்னாட்சிக்குட் படுத்தினர் என்று சொல்வதற்கிடங்கொடுக்கும். ஆனால் சேரர்கள் தமிழ் நாட்டரசராகிய மற்றிருவரையுங் கீழ்ப்படுத்தியதாகச் சொல்லிக்கொள்வது வழக்கம் என்பதைப் பல விடங்களில் பார்க்கலாம். உதாரணமாக இரண்டிடங்களைப் பின் காட்டுகிறேன். அவை,

"காவிரி மண்டிய சேய்விரி வனப்பிற்
புகார்ச் செல்வ பூழியர் மெய்ம்மறை
கழைவிரிந் தெழுதரு மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந" (பதிற்றுப்பத்து—73)

"கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பலவேற் றானை யதிக மானோ
டிருபெரு வேந்தரையு முடனிலை வென்று
முரசுங் கொடையுங் கலனுங் கொண்டு"
(பதிற்றுப்பத்து எட்டாம் பத்துப் பதிகம்.)

என்பன. பூழியர்கோ என்று அவரைச் சொல்லியிருப்பதைப் பார்க்கலாம். குலசேகரப்பெருமாள் கோழிக்கோன், கோழியர்கோன் என்று தம்மைச் சொல்லிக்கொள்வதை மேலே காட்டினேன். கோழி என்பது உறையூர். திருவரங்க நகரையும் உறையூரையும் பிரிப்பது இடையிலுள்ள காவிரியே. இரண்டும் ஒன்றுக்கொன்று அணிமையிலுள்ளன. உறையூருக்கு இவர் அரசு

ராயிருக்குங் காலத்துத் திருவரங்கம் வேறொரு அரசனாட்சியில் இருந்ததென்று கருதுவதற்கிடமில்லை. இவர் ஒரு பத்தில்

"திருவரங்கப் பெருநகருட் டெண்ணீர்ப் பொன்னித்
திரைக்கையா லடிவருடப் பள்ளிகொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டென்
கண்ணிணைகளென் றுகொலோ களிக்குநாளே" என்றும்,

"காயாம்பூ மலர்ப்பிறங்க லன்னமாலைக்
கடியரங்கத் தரவணையிற் பள்ளிகொள்ளு
மாயோனை மணத்தூணே பற்றிநின்றென்
வாயார வென்றுகோலோ வாழ்த்துநாளே" என்றும்,

"அணியரங்கத் தரவணையிற் பள்ளிகொள்ளும்
அம்மான்ற னடியிணைக்கீ ழலர்களிட்டங்
கடியவரோ டென்றுகொலோ வணுகுநாளே"

என்றும் தம்முடைய பத்துப் பாசுரங்களிலும் சொல்லுகின்றனர். திருவரங்கம் இவரது ஆட்சியில் இருந்தால் பெருமாளைச் சேவிக்கப் பெருங்காதல்கொண்ட இவருக்குத் தம்மெண்ணத்தை நிறைவேற்ற இருந்த தடை வேறு என்னவாம்? அரசாட்சியைப் பிறரிடத்து ஒப்புவித்த பிறகு விஷ்ணு அடியாராய்த் திருவரங்கம் வந்து தங்கினர் என்று தெரிகிறது. மேலே கொல்லிக் கூற்றம் சேரர் ஆட்சியைச் சேர்ந்ததென்று காட்டினேன். கொல்லிக் கூற்றம் என்பது கொல்லிமலையைச் சூழ்ந்த மலைகளையுடைய நாட்டை. அந்நாட்டில் சேரர் வசிக்கும் நகர் கொல்லிநகர் எனப்படலாம். மேல் கொங்குசேரர் நாடென்பது பிரஸித்தம். திருவனந்தபுரம் முதலிய திருமால் அமர்ந்துறையுந் திருப்பதிகள் மேல் நாட்டிலுமுள. குலசேகராழ்வார் அவைகளைப் பாடியதாகத் தெரியவில்லை. இவர் பாடியன வெல்லாம் தென்னாட்டிலுள்ளவற்றில் திருவரங்கம், திருவேங்கடம், வித்துவக்கோடு, திருக்கண்ணபுரம், திருச்சித்திரகூடம் இவைகளே. அனந்தசயனனைத் தரிசியாதிருப்பதற்குக் காரணம் என்னை?

விஜயாலயன் என்னும் சோழன் தஞ்சையைக் கி. பி. 849-ல் தன் தலைநகராக்கிக்கொண்டான். அவன் காலத்துக்கு முன்னரே திரிசிராப்பள்ளியும், பக்கத்துள்ள நாடும் பல்லவர் ஆட்சியில் இருந்

தன. அவன் காலத்துக்கு முந்திச் சோழவம்சம் குன்றிய நிலைமையில் இருந்தது. உறையூர், சோழராட்சியில் இல்லாவிடினும் வேறு நகரை அவர்கள் ராஜதானியாகக் கொண்டிருக்கவில்லை என்று நினைப்பதற்கு இடமிருக்கிறது. ஆதலால் சோழரைக் கீழ்ப்படுத்தினேம் என்று தம்புகழ்கூறும் அரசர் உறையூரைத் தவிர்த்து வேறு நகரை அக்காலத்தில் சொல்வதற்கில்லை. குலசேகராழ்வார் விஜயாலயன் காலத்துக்குமுந்தி இருந்தவராயிருத்தல் வேண்டும். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னிருந்தவர் என்று கொள்ளுதல் தகுதியுடைத்தாம். எவ்வளவு காலம் முந்தி என்பதை இப்பொழுது தீர்மானிப்பதற்கில்லை.

முதலாழ்வார் மூவர்; திருமழிசையாழ் வார்:— இவர்களில் பொய்கை யாழ்வார் கச்சியிலும் பூதத்தாழ்வார் கடல்மல்லையிலும், பேயாழ்வார் திருமயிலையிலும் அவதரித்தனர் என்பர். இம்மூன்று திருப்பதிகளும் தொண்டைநாட்டில் உள்ளவை. தாமரைப்பொய்கையில் பிறந்ததினுல் பொய்கையார் எனப்பெயர் வந்ததென்று குருபரம்பராப் பிரபாவத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கச்சியைச் சூழ்ந்த நாட்டுக்குப் பொய்கை நாடு என்று பெயர் இருந்ததால் பொய்கையார் என்று சொல்லப்பட்டார் எனச் சில சரித்திர ஆராய்ச்சிக்காரர் சொல்லுகின்றனர்.

சிலர் பொய்கையார் என்றழைக்கப்பட்ட சங்கப்புலவரும் இவ்வாழ்வாரும் ஒருவரே எனச் சொல்லி யாப்பருங்கலவிருத்தியுடையார் கூற்றை அதற்கு மேற்கோளாகக் காட்டுவர். குருபரம்பராப் பிரபாவமுதலியவற்றில் இவர் வைபவம் சொல்லுமிடத்து இந்த விஷயம் சொல்லப்படாததோடு இதற்கு நேர் விரோதமாய்ப் பல விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன. முதலாழ்வார்கள் மூவரும் யோகி ஜாதரல்லர் என்றும், புஷ்பஜாதர்கள் என்றும், அவதரித்த பொழுதே ராஜஸ—தாமஸ குணரஹிதராய்ச் சுகமுனிவரைப் போல் பிறந்த பொழுதே துறந்து பகவத்குணதாரகர்களாயிருந்தார்கள் என்றும், ஸம்ஸாரிகள் ஸஹவாஸத்தை வெறுத்து ஒரு நாளிருந்த இடத்தில் ஒரு நாளிராமல் சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், திருக்கோவலூரில் ஓரிரவு மூவரும் சந்தித்தார்.

கள் என்றும், பின்னர் இம் மூவரும் திருமயிலேயில் திருமழிசை யாழ்வாரோடு சிலகாலம் உடனுறைந்தனர் என்றும் அதில்சொல்லி யிருக்கிறது. எந்தக் காலத்திலாவது பொய்கையாழ்வார் அரசர்கள் போன்ற ஸம்ஸாரிகளோடு பழகினர் என்றாவது, லௌகீக விஷயப் பிரவர்த்தகராயிருந்தார் என்றாவது சொல்லவில்லை. சங்கப் புலவராயிருந்த பொய்கையார் உலகப்பிரவிர்த்தியுடையவராய் அரசர்களுக்கு நண்பராய் அவர்களைப் புகழ்ந்து பாடியவர். ஆழ்வாரோ.

“நாடிலு நின்னடியே நாடுவ னாடோறும்
பாடிலு நின்புகழே பாடுவன்—சூடிலும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவேற்
கென்னாகி லென்னே யெனக்கு”

எனப்படுவர். அவர் வாக்குக்கும், ஆழ்வார் வாக்குக்கும் ஒற்றுமை காணப்படுகிறதா? இருந்தால் எந்த விஷயங்களில்? ஆழ்வார் வாக்கைச் சங்கக் கோவைகளில் ஏன் சேர்க்க வில்லை? சங்கப் புலவராயிருந்த பொய்கையாராயிருந்தால் ஆழ்வார்வாக்கும் சேர்க்கப்பட்டிருக்குமன்றோ? பெயரொற்றுமை ஒன்றைக்கொண்டு இம்முடிவுக்கு வரலாமோ? அப்படியானல் உலகத்தில் இராமன் கிருஷ்ணன் என்று பெயர் வைத்துக்கொண்டிருப்பவர்களை ஒருவரை மற்றொருவராகக்கொள்ளுதல் பொருத்தமுடையதாமோ? ஐங்குறு நூற்றின் ஐந்தாம் நூறாகிய முல்லைத்திணையைப் பாடியவர் பேயனார் என்பவர். அவர் சங்கப்புலவர். அவரைப் பொய்கையாழ்வாருக்குச் சமகாலத்தவரான பேயாழ்வாரென்னலாமே? பொய்கையாழ்வார் திருவரங்கம், திருவேங்கடம், விண்ணகர், வெஃகா, கோவல் இத்திருப்பதிகளைத்தான் பாடியிருக்கிறார். இவற்றில் திருவரங்கம், விண்ணகர் இரண்டும் காவிரிக்கரைமேலுள்ளவை. மற்றவை அவற்றிற்கும் வடக்கேயுள்ளன. பாண்டிய நாட்டை அறிந்தவர் என்பதற்காதாரம் என்னை?

மேலும் முதலாழ்வார் மூவரும், திருமழிசையாழ்வாரும் சமகாலத்தவர் எனக் குருபரம்பராப் பிரபாவம் முதலியவை கூறும். திருமழிசைப்பிரான் ஒரு பல்லவ அரசன் காலத்திருந்தவர் என்பதை அவைகளால் அறியலாம். பல்லவ வம்சத்தார் தொண்

டைநாட்டையும், காஞ்சியையும் கி. பி. மூன்றும் நூற்றுண்டின் மத்தியகாலமுதற்கொண்டு ஒன்பதாம் நூற்றுண்டின் முடிவுவரை ஆட்சி புரிந்தனர். சங்ககாலத்துக்குப் பின்னரே பல்லவ வம்சம் உண்டாகியது என்பது பலருமறிந்ததே. ஆதலால் பல்லவராட்சிக் காலத்திருந்த ஆழ்வார் சங்ககாலத்திருந்த சங்கப்புலவராகமாட்டார். பெரியாழ்வார் எட்டாம் நூற்றுண்டில் இருந்தவர் என்று சொன்னேன். முதலாழ்வார்கள் அவருக்கு முந்தியிருந்தவர்கள் என்பதை மறுப்பாரில்லை. ஆதலால் இவர்கள் மூன்றும் நூற்றுண்டுக்கும், பெரியாழ்வார் இருந்த காலத்துக்கும் இடையில் இருந்திருக்கவேண்டும். திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில்

> "காப்பு மறந்தறியேன் கண்ணனே யேன்றிருப்பன்
> ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும்—ஆக்கை
> கொடுத்தளித்த கோனே குணபரனே யுன்னை
> விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம்" (93)

என்று சொல்லியிருப்பதைக் கொண்டும், பல்லவ அரசனுகிய மகேந்திரவர்மனுக்குக் குணபரன் என்னும் சிறப்புப்பெயர் இருந்ததைக்கொண்டும் அவன் காலத்தவர் ஆழ்வார் என்பர். செய்யுளில் குணபரன் என்று சொல்லியிருப்பது திருமாலை என்பது வெளிப்படை. ஆயினும், அந்நாட்டார் தமக்கரசனுயுள்ளவனைக் குணபரன் என்னும் பெயரால் குறிப்பிட்டதுபோல், ஆழ்வார் தமக்கரசனுயுள்ள திருமாலை உண்மையான குணபரன் நீயே என்று ஏன் குறிப்பிட்டிருக்கக்கூடாது? அனந்த கல்யாண குணங்களைப் பரிப்பவனுகையால் தாம் வழிபடுகடவுளைக் குணபரனே என்று குறிப்பிட்டார் எனக் கொள்ளலாமே. திருமாலுக்குப் பலபெயரிருக்கக் 'குணபரன்' என்று இங்கே விளித்தது ஏற்றுக்காம்? குணபரன் கி. பி. 600-முதல் ஆட்சிபுரிந்தவன். அவனே ஜைனனுயிருந்து வைதீக மதத்தைப் பிற்காலத்துத் தழுவியவன். பௌத்தமும், ஜைனமும் நிரம்பியிருந்தகாலம். ஏழாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில்தான் வைதீக பக்திமார்க்கங்கள் தலையோங்கின என்று தோன்றுகிறது. சைவசமயாசாரியர்களில் முக்கியவரான அப்பர் சுவாமிகள் இருந்தது அந்தக் காலம் என்று முன்னே காட்டி

னேன். முதலாழ்வார்கள் நால்வரும் இருந்ததும் அக்காலமாதலால் வைணவ சைவ பக்திமதங்களை பெருகத் தொடங்கியது அக்காலம் என்னலாம். ஆழ்வார்கள் பன்னிருவரும் சைவசமயாசாரியர் நால்வரும் கி. பி. ஏழு, எட்டு, ஒன்பது இந்த நூற்றாண்டுகளில் இருந்தவராவர்.

தொண்டரடிப்பொடியாழ்வார்; திருப்பாணாழ்வார்:—திருமங்கையாழ்வார் வைபவத்தைச் சொல்லுமிடத்து, பின்பழகிய ஜீயர் "திருமங்கை மன்னன் உபக்கிரமித்துத் திருமதிள் கட்டுவிக்கிற செவ்வையிலே ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் பெரிய பெருமாளுக்குத் திருமாலை சேர்க்கிற இடம் நேர்பட அவ்விடத்தைத் தப்பி ஒதுங்கத் திருமதிள் கட்டுவித்தருள, தொண்டரடிப் பொடியாழ்வார் பார்த்தருளி" என்று எழுதியிருப்பது திருமங்கை மன்னனும் தொண்டரடிப்பொடியாழ்வாரும் சமகாலத்தவர் என்பதைக் காட்டும். திருப்பாணாழ்வார் காலமும் அதை ஒட்டியதேயாம்.

திருமுறைவகுப்பு:—இனி, திருமுறைகள் வகுத்தகாலத்தையும், முறையமைப்பையும் விசாரிப்போம். இப்பொழுதுள்ள திருமுறைகள் பன்னிரண்டு என்பதும், மூவர் பாடிய தேவாரங்கள் முதல் ஏழு திருமுறைகள், மணிவாசகர் பாடியன எட்டாந் திருமுறை, திருவிசைப்பாக்கள் ஒன்பதாந் திருமுறை, திருமந்திரம் பத்தாந்திருமுறை, பல சான்றோர் பாடிய சில்லறைப் பிரபந்தங்கள் பதினோராந்திருமுறை, பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறை என்பதும் யாவருமறிந்தன. பதினொரு திருமுறைகள் வகுக்கப்பட்ட பிற்காலத்து பன்னிரண்டாவது அவற்றுடன் சேர்க்கப்பட்டது. முதலில் திருமுறை வகுத்த காலம் எது எனப் பார்ப்போம். சிலர் முதலாவது குலோத்துங்கன் காலத்து வகுக்கப்பட்டதெனவும், சிலர் முதலாவது ராஜராஜ சோழன் காலத்து வகுக்கப்பட்டதெனவுங் கூறுகின்றனர். குலோத்துங்கன் காலத்து நிகழ்ந்ததென்பார் தம்கூற்றுக்காதாரமாய் இரண்டு காரணங்களைக் காட்டுகின்றனர். முதலாவது திருமுறைகண்ட புராணத்தில் முறை வகுக்கப்பட்டது அபயகுல சேகரன் என்

னும் அரசன் காலத்து என்று சொல்லியிருக்கிறது; அபயன் என்பது முதலாவது குலோத்துங்கன் ஒருவனையே குறிக்கும்; வேறு அப்பெயருடைய அரசர் இருந்ததில்லை என்பது. இரண்டாவது திருவிசைப்பாப் பாடியவர்களிற் சிலர் ராஜராஜன் காலத்துக்குப் பின்னிருந்தவர் ஆதலால் ராஜராஜன் காலத்தில் திருமுறை வகுப்பு நடைபெற்றிருக்க முடியாது என்பது. முதலாவது காரணத்துக்கு ஆதாரமாய்த் திருமுறைகண்ட புராணத்தில் அவர்குறிப்பிடுஞ் செய்யுள்

"உலகமகிழ் தருசைய மீதுதோன்றி
ஓவாது வருபொன்னி சூழ்சோணாட்டின்
திலகமென விளங்குமணி மாடவாரூர்த்
தியாகேசர் பதம்பணிந்து செங்கோலோச்சி
அலகில்புகழ் பெறுராஜ ராஜமன்னன்
அபயகுல சேகரன்பா லெய்துமன்பர்
இலகுமொரு மூவருள் பதிகமொன்றொன்
றேயினிதி னுரைசெய்ய வன்பாற்கேட்டு"

என்பது. அபயன் என்பது முதலாவது குலோத்துங்கனைக் குறிக்கும் என்பதற்காதாரமாய்ப் பல சாஸனங்களையும், கலிங்கத்துப் பரணியிற் சொல்லியிருப்பதையுங் காட்டுவார். இவர் கூறுவது உண்மையே. ஒருகாலத்தில் அபயன் என்னும் பெயரை வகித்தவனாய் முதலாவது குலோத்துங்கன் மட்டும் இருந்தான். அவன் காலத்துக்குப் பின்னர் அம்மொழி சோழர் என்னும் பொருளில் உபயோகப்படுத்தப்பட்டு வரலாயிற்று. சேது சமஸ்தானம் வித்துவான் ஸ்ரீமான் ரா. இராகவ ஐயங்கார் அவர்கள் "அபயன் என்பது முதற்கண் உபயகுலோத்தமனுக்கு வழங்கி அவன் வழித்தோன்றிய விக்கிரமன் முதலாகப் பலர்க்கும் வழங்கியதாகலின் அதுவும் பொதுப்பெயர் போல்வது" (செந்தமிழ் II 394) என்று எழுதியிருப்பது நான் கூறியதற்கோர் சான்றாம். குலோத்துங்கன் என்னும் பெயரும் இவ்வாறே உபயோகப்பட்டு வரலாயிற்று. ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் மேற்கண்ட பக்கத்தில் பின்கண்டவாறு சொல்வது அதற்குச் சான்றாம். அஃது: "இப்புலவர்கள் ஆங்காங்குப் பாடிய பாடல் பலவற்றுள் குலோத்

துங்கன் என்னும் பெயரேயல்லாமல் விக்கிரமசோழன், அபயன், உத்துங்கன், கண்டன், மானாபரணன், அகளங்கன் என்பன முதலாகச் சோழர் சிறப்புப்பெயரும் பலவாகப் பயில்வன'' என்பது. இவர் இக்காலத்துள்ள தமிழ்ப்புலவர்களில் வெகு கீர்த்திபெற்றவர் என்பதை அறியாதார் இல்லை. தமிழ்க்கல்வி அறிவிற் சிறந்தவராகிய திருக்கோணமலை த. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் தாம் பதிப்பித்திருக்கிற தமிழ்நாவலர் சரிதையில் முதலாவது குலோத்துங்கன் மகன் விக்கிரம சோழனுடைய தேவி ஊடலாய்க் கதவடைத்தபோது புகழேந்திப்புலவர் பாடிய கலித்துறைகள்.

"தூபங்கமழும்பைங்கோதையன்விக்ரமசோழன்மன்னர்
தீபன்புறங்கடைவந்துநின்றானின்றிருப்புருவச்
சாபங்குனியவிழிசிவப்பத்தலைசாய்த்துநின்ற
கோபந்தணியன்னமேயெளிதோநங்குடிப்பிறப்பே"

"நானேயினிச்சொல்லிவேண்டுவதில்லைநளினமலர்த்
தேனேகபாடந்திறந்திடுவாய்செம்பொன் மாரிபொழி
மானேரபயனிரவிகுலோத்துங்கன்வாசல்வந்தால்
தானேதிறக்கும்நின்கைம்மலராகியதாமரையே"

என்பன. ஈண்டு அபயன் என்று விக்ரமசோழனைச் சொல்லியிருப்பது புலனாம். விக்ரமசோழன் துலாபாரதானம் பண்ணியபோது அப்புலவர் பாடியது

"பொருந்த வொருதட்டு மேருப் புகினும்
இருந்த வொருதட் டெழாதால்—திருந்து
மனைபுக்க சொல்லபயா வன்புறவுக்காக
நிறைபுக்க தெவ்வாறு நீ"

என்பது. இதுவும் விக்ரமசோழன் அபயன் என்று சொல்லப்பட்டிருப்பதைக் காட்டும். பாண்டியன் போரிற் புறந்தந்தோடுவது கண்டு வேறொரு சோழனது புலவன் பாடியது.

"மான பரனபயன் வந்தா னெனவழுதி
போனவழி யாரேனும் போவரோ—ஆனால்
படவே யமையாதோ பாவியே னிந்தக்
குடைவே லுடைநுழைந்த கோ"

என்பது. இவற்றில் அபயன் என்னும் சொல் சோழர்களுக்குப் பொதுவாய் உபயோகப்பட்டிருக்கிறது. திருமுறைகண்ட புரா

ணத்தைச் செய்த உமாபதி சிவாசாரியரே சேக்கிழார் நாயனார் புராணத்தைச் செய்தவர். அதில் அவர்

"ஆயுமறைமொழிநம்பியாண்டார்நம்பி
அருள்செய்தகவித்துறையந்தாதிதன்னைச்
சேயதிருமுறைகண்டராஜராஜ
தேவர்சிவாலயதேவர்முதலாயுள்ள
ஏயகருங்கடல்புடைசூழுலகமெல்லாம்
எடுத்தினிதுபாராட்டிற்றென்னவந்தத்
தூயகதையடைவுபடச்சொல்வீரென்று
சோழனுரைசெயக்கேட்டுக்குன்றைவேந்தர்"

என்று சொல்லியிருப்பதில் திருமுறைகண்ட சோழனுக்கு வேறு சிறப்புப்பெயர்களைச் சொல்லாது ராஜராஜன் என்னும் ஒருபெயரையே சொல்லுகின்றனர். திருமுறைகண்ட புராணத்தில் "ராஜராஜ மன்னன் அபயகுலசேகரன்" என்றதில் சோழனது இயற்பெயர் எது? புகழ்பெயர் எது? என்பதில் சந்தேகம் நேரிட்டது. சேக்கிழார் புராணச்செய்யுளால் இயற்பெயர் ராஜராஜன் என்பதுபுலனும்.

மேலும், திருமுறை கண்டபுராணத்தில் "திருவாரூர்த்தியாகேசர் பதம்பணிந்து சேஙகோலோச்சி" என்று சொல்லப்பட்டிருப்பது ராஜராஜனா, குலோத்துங்கனா என்பதை ஆராயவேண்டும். ராஜராஜசோழன் தஞ்சையில் ஆட்சிபுரிந்தவன். ராஜராஜேச்சுரம் என்னும் கற்றளியைத் தஞ்சையில் அமைத்தவன். அவன் தஞ்சையில் தளி அமைத்தது அவனது ஆட்சிதொடங்கி 19, 20 ஆண்டுகளுக்குப் பின்னர். குலோத்துங்கன் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஆட்சிபுரிந்தவன். அந்நகரியில் பெரிய கற்றளி அவன் மாதா மகனான ராஜேந்திரசோழன் காலத்திலேயே அமைக்கப்பட்டிருந்தது. அதற்குக் கருவூரார் திருவிசைப்பாப் பாடியிருக்கிறார். கோயில் என்னும் தில்லை சமீபத்தில் உள்ளது. தஞ்சைக்கோயிலில் வயது முதிர்ந்தோராய் இக்காலத்துள்ள அர்ச்சகர் முதலியோர் ராஜராஜன் தஞ்சையில் தளி அமைப்பதற்கு முன்னர்த் திருவாரூர்த்தியாகேசரை உபாஸித்துத் தரிசனத்துக்கு அத்தலத்துக்கு அடிக்கடி போய் வந்ததாக

வும், தஞ்சையில் கோயில் அமைத்தபொழுது திருவாரூர்க் கோயிலில் உள்ள ஏற்பாடுகளையே கைக்கொண்டதாகவும், தஞ்சை நாயக்கர் ஆட்சியில் வந்தகாலத்து அவர்கள் வைணவப் பற்றுடையராய்த் தஞ்சைக் கோயிலைக் கவனிக்காமையினாலே ராஜராஜன் காலத்தும் அவன் மகன் ராஜேந்திரன் காலத்தும் ஏற்படுத்தப்பட்ட வழக்கங்கள் நழுவினதாகவும், மகாராஷ்டிரர் ஆளுகையில் தஞ்சை வந்தகாலத்து அவர்கள் சைவர்களாதலால் சோழர் காலத்து நழுவிய வழக்கங்களை அறிந்து அரசனே நேரில் திருவாரூர் சென்று வழக்கங்களைச்செவ்வனே விசாரித்து எழுத்தில் அமைத்துக்கொண்டு வந்து நழுவிய வழக்கங்களை நடைபெறும்படி செய்ததாகவும், எழுத்தில் அமைத்தது பத்திரம்முதலிய கடிதங்கள் வைத்திருக்கும் இடத்திலிருப்பதாகவும் கூறுகின்றனர். இவர் கூற்றை உண்மை என்று கொள்வதற்கு ஆதாரமாய் அக்கோயிலில் இப்பொழுது காணப்படுவனவற்றுள் சிலவற்றை ஈண்டு வரைகின்றேன். திருவாரூர்க்கோயிலில் தியாகேசர் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுபோல் தஞ்சைப்பெருவுடையார் கோயிலிலும் தியாகேசர் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார். மற்றைப் பலகோயில்களில் அந்த ஸ்தானத்தில் சோமாஸ்கந்தரும், நடராஜரும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பர். திருவாரூரில் தியாகராஜாவுக்கு விடங்கர் என்று பெயர் இருப்பதுபோலத் தஞ்சையிலும் விடங்கர் என்னும்பெயர் வைக்கப்பட்டுள்ளது. (S. I. I. Vol II Part V. Rajaraja's Life 13) சிலாசாஸனங்களில் தஞ்சை விடங்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திருவாரூரில் தியாகராஜாவுக்குரியது அஜபாநடனம். தஞ்சையிலுமஃதே. திருவாரூர்க்கோயிலில் நடைபெறுவதுபோல் தஞ்சையிலும் வஸந்தோற்சவம் 18-நாள் நடைபெறுகின்றது. திருவாரூரில் தியாகராஜவுக்குள்ள சுத்தமத்தளம் எக்காளம் தஞ்சையிலுமுள. திருவாரூரில் தியாகராஜா வஸந்தோற்சவத்தில் எந்த தினங்களில் எவ்விதம் புறப்படுகிறாரோ அதே தினங்களில் அவ்விதமே தஞ்சையிலும் தியாகராஜாவுக்கு புறப்பாடு, திருவாரூரில் தியாகராஜருக்குப் பூஜை நடந்த பின்னர் மூலலிங்கத்துக்குப் பூஜை; தஞ்சையிலும் தியாகராஜாவுக்குப் பூஜை நடந்த பின்னர் மூல லிங்கத்துக்குப் பூஜை. திருவாரூரில்

உற்சவத்தில் குறவஞ்சி நாடகம் நடைபெறும்; தஞ்சையிலும் குறவஞ்சி நாடகம் உற்சவகாலத்தில் நடைபெற்றுவருகிறது. திருவாரூரில் சிலகாலமாய்க் குறவஞ்சி நடைபெறுவது நழுவியிருப்பதாய்த் தெரிகிறது. குறவஞ்சி நாடகம் ராஜராஜன் காலத்தில் தஞ்சையில் ஏற்படாமலிருந்தது. அவன் பின்னேனில் ஒருவனுகிய ராஜேந்திரன் ஆட்சியில் ஏற்படுத்தியதாக (S. I. I. Vol II Rajaraja's Life p. II note) சிலாசாஸனம் ஒன்றில் அறியக்கிடக்கிறது. திருவாரூரில் சுவாமி புறப்படும்போது சுந்திரமூர்த்திகள் விக்ரகம் முன்கொண்டு போகப்படுவது வழக்கம். ராஜேந்திரன் காலத்தில் அந்த ஸ்தானத்தில் தன் பிதாவாகிய ராஜராஜன் விக்கிரகத்தைக் கொண்டுபோகும்படி ஏற்பாடு செய்தான். அஃது இன்னும் நடைபெறுகிறது. திருவாரூர் தேர் எல்லாக்கோயில் தேரையும்விடப் பெரியது. தஞ்சையிலும் அம்மாதிரி ஒரு பெரிய தேர் அமைக்கப்பட்டிருந்தது. கடைசியாய் இருந்த சிவாஜி காலத்தில் அவரிடத்தில் மந்திரி ஸ்தானம் வகித்திருந்த சோமநாத பண்டிதர் பெரியதேரை இழுக்க ஆள் சேகரிப்பது கஷ்டமாயிருந்ததற்காக அதை அழித்துவிட்டு இப்பொழுதுள்ள தேரை அமைத்ததாகத்தெரிகிறது. மேற்சொல்லியவை தியாகேசர்பதம் பணிந்து செங்கோலோச்சியவன் ராஜராஜன் என்பதைக்காட்டும்.

குலோத்துங்கனிருந்தது கங்கைகொண்டசோழபுரம். அது கொள்ளிடத்துக்கு வடகரையிலுள்ளது. கங்கைகொண்டசோழபுரத்திலிருந்து சிதம்பரம் போய்வருவது சுலபம். திருவாரூருக்கும் கங்கைகொண்ட சோழபுரத்துக்கும் இடையில் பலநதிகளுள. முன்காலத்தில் அவற்றைக் கடக்கப் பாலம் ஏற்பட்டிருக்கவில்லை. கங்கைகொண்டசோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டபிறகு சோழர்கள் சிதம்பரம் நடராஜாவைக் குலதெய்வமாகக் கொண்டதாகத் தெரிகிறது. குலோத்துங்கன் காலத்திலும் அப்படி இருந்திருக்கவேண்டும். இவன் மகன் விக்கிரமசோழனுட்சியின் பதினைந்தாம் ஆண்டில் திருமழபாடிக்கோயிலில் பொறிக்கப்பட்டிருக்கிற சிலாசாஸனத்தில், இவன் ஆட்சி பத்தாம் ஆண்டில் சிதம்பரம் நடராஜாவுக்கு நிதிகள் கொடுத்ததாகக் கண்டிருக்கிறது. அது

பின்கண்டவாறுளது. "[தந்குல] நாயகந்தாண்டவம் பயிலுஞ் செம்பொநம்பலஞ் சூழ்திருமளிகையும் கோபுரவாசல் கூடசாலை களும் உலகுவலங்கொண்டொளி விளங்கு நேமிக்குலவரை உதைய குன்றமொடு நின்றெனப் பசும் பொன் மேய்ந்து பலிவளர் பீடமும் விசும்பொளி தழைப்ப விளங்கு பொன்மேய்ந்து இருநிலந் தழைப்ப இமையவர் களிப்பப் பெரிய திருநாள் பெரும் பெயர் விழாவெனும் உயர்புரட்டாதி உத்திரட்டாதியில்" (S. I. I. Vol III. No. 34) இதில் தன்குல நாயகம் என்று சொல்லி யிருப்பது நான்மேற் சொல்லியதை விளக்கும். இதுகாறும் சொல்லியவற்றால் தியாகேசர் பதம்போற்றிச் செங்கோலோச்சியவன் ராஜராஜனே யன்றிக் குலோத்துங்கன் அன்றென்பது விளங்கும்.

இதுவன்றி முதலாவது ராஜராஜன் காலத்திலேயே தேவாரம் பாடியவர்களுடைய விக்கிரஹங்கள் பலகோயில்களில் எழுந்தருளச் செய்யப்பட்டதோடு தேவாரங்களை நியமமாய்ப் பாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் தெரிகிறது. ராஜராஜன் காலத்துக்கு முன்னரே தேவாரம் பாடுவதற்கு நிபந்தம் செய்ததைக் காட்டும் சாஸனங்கள் மூன்று கிடைத்திருக்கின்றன. ஒன்று விஜயநந்தி விக்கிரமவர்மன் ஆட்சி பதினேழாம் ஆண்டினது. திருவல்லம் பில்வநாதேச்சுரர் கோயிலில் பொறிக்கப்பட்டுளது. அதில் "திருப்பள்ளித்தாமம் பறிப்பார்க்கும், திருப்பதியம்பாடுவாருள்ளிட்ட பலபணி செய்வார்க்கு நெல்லு நானூற்றுக்காட்டியும்" (S. I. I. Vol. III No. 43) என்று கண்டிருக்கிறது. மூவருள் பதிகமொன்றேன்றே சொல்லியகாலத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம். பலபணிகளோடு தேவாரம் பாடுவதையும் கூட்டியிருப்பது அவ்வாறு நினைப்பதற்கிடங்கொடுக்கும். இந்தசாஸனம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டதெனச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மற்றொரு சாஸனம் உத்தம சோழனது ஆட்சி பதினாலாம் ஆண்டில். உத்தமசோழன் முதலாவது ராஜராஜனுக்கு முன் ஆட்சி புரிந்தவன். அவனாட்சி பதினாலாம் ஆண்டு கி. பி. 983, 984 ஆக இருத்தல் வேண்டும். அந்தசாஸனத்தில் ஒரு பகுதிதான்

கிடைத்திருக்கிறது. "செயகண்டிகை ஒன்றுக்கு மும்மாவரையும், திருப்பள்ளித்தாமம் இரண்டுக்குக் காலும், திருமெழுக்கு மூன்றுக்கு ஏழுமாவரையும், நெய்யமுது பொதுவழக்காக நிசத முழக்கானபடியினால் நிலம் முக்காலும், காடிகையொன்றுக்குக் காலும், திருப்பதியம் பா............" என்று சாஸனம் முடிகிறது. திருப்பதியத்தைப்பற்றிச் சொல்லியிருப்பது என்ன என்று தெரியவில்லை. இஃது அந்துவநல்லூரில் திருவாலந்துறையார் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. (S. I. I. Vol III No. 139) மூன்றாவது சாஸனம் உத்தமசோழன் ஆட்சி எட்டாம் ஆண்டில் திருநல்லம் (கோனேரிராஜபுரம்) கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. அஃது அவன் தாய் செம்பியன் மாதேவியார் விட்ட நிபந்தனைகளைக்காட்டும். அதில் "திருப்பதியம் பாடுவார் இருவர்க்கு நிசதம் தூணிப்பதக்காக ஓராட்டைக்கு நெல்லு நூற்றிரண்பதின் கலத்துக்கு" (S. I. I. Vol III No. 151 A) என்று கண்டிருக்கிறது. செம்பியன் மாதேவியாருக்கு உடைய பிராட்டியார் என்றும் பெயருண்டு.

திருமுறைகண்ட சோழனாகிய ராஜராஜன் ஆட்சி ஆறும் ஆண்டில் உடைய பிராட்டியார் திருநல்லம் கோயிலில் பதியம் பாட இருவர்க்குப் பூங்குடி கிராமத்தில் நிலம்விட்டதாகக் கண்டிருக்கிறது. (Ep. Rep. 1910 P. 87) இவனாட்சியில் தேவாரம் பாடியவர்களுடைய விக்கிரகங்கள் எழுந்தருளச் செய்யப்பட்டன. "ராஜேந்திர சிங்களவநாட்டுப் பொய்கைநாட்டுக் கிழவனை ஆதித்தன் சூரியன் என்பான் தேவாரம் பாடிய மூவர் பிரதிமங்களைத் தஞ்சைக்கோயிலில் எழுந்தருளச்செய்து அவைகளுக்கு பூஜை முதலிய நடைபெற ஏற்பாடு செய்தனன்." (S. I. I. Vol. II. Nos. 38 and 41) ராஜராஜன் திருப்பதியம் பாடுவதற்கு நாற்பத்தென்மரை நியமித்து அவர்களுக்கு நிபந்தம் ஏற்படுத்தினன். (S. I. I. Vol. II. No. 65) அதில் "ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையவர்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் கொடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும் இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும், இவர்களிலே நிலையா

கக் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்குப்பேரால் நிசதீம் நெல்லு முக்குறுணி நிலந்தமாய் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னுமரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்திலே பெறவும்'' என்று கண்டிருப்பதோடு நியமிக்கப்பட்ட ஐம்பதின்மர் பெயர் முதலிய விவரங்களுங் கண்டிருக்கின்றன. அவர்கள் பெயர் சிவனென்று முடிவதோடு பலர் தேவாரம் பாடிய மூவர் பெயரையே வைத்துக்கொண்டிருந்ததாகவும் அறியலாம். நியமமாய் நாற்பத்தெண்மர் தினம் திருப்பதியம் பாட நியமிக்கப்படுவதற்கு முன்னரே திருப்பதியங்கள் திரட்டப்பட்டிருக்கவேண்டும். ராஜராஜனுக்குப் பின்னும் குலோத்துங்கனுக்கு முன்னும் ஆட்சிபுரிந்த சோழர்களில் பலர் திருப்பதியம் பாடுவதற்கு ஏற்பாடு செய்தார்களென்பதைச் சிலாசாஸனங்களால் அறியலாம். குலோத்துங்கன் காலத்துப் பதியங்கள் திரட்டப்பட்டிருப்பின் மேற்சொல்லிய ஏற்பாடுகள் நடைபெற்றிராவென்று கொள்ளலாம்.

மேலும், ராஜராஜன் பரம சிவபக்தனாயிருந்தானென்பது அவன் சரித்திரத்தைப் படிப்போரால் எளிதில் உணரக்கூடியது. அவன் சிவபாதசேகரன் என்னும் பெயரை வகித்ததும் அதற்குச் சான்றும். குலோத்துங்கனோ சளுக்கிய வம்சத்தில் பிறந்து சோழர் ஆட்சியை அபகரித்தவன். இவனுக்குமுன் ஆட்சிபுரிந்த வீரராஜேந்திர சோழனது மகனைக் கொலை செய்து சோழர் ஆட்சியை அடைந்தான். மேலைச் சளுக்கிய வம்சத்தினன். ஆறுவது விக்ரமாதித்தன் என்னும் பராக்கிரமசாலியான அரசனுக்கும் இவனுக்கும் யுத்தம் நடந்ததற்கு காரணமிதுவே. விக்கிரமாதித்தன் வீரராஜேந்திரன் மகளைக் கலியாணம் செய்தவன். குலோத்துங்கன் தான் அபகரித்த சோழராஜ்யத்தைக் காப்பாற்றிக்கொள்வதில் வெகுகாலம் போக்கினன். அவனைப் பரம சிவபக்தன் என்று கருதுவதற்கு இடமில்லை. திருப்பதியங்களை இவன் சேகரித்துத் திரட்டினன் என்று கொள்வதற்கு வேண்டிய அடையாளங்களுங் காணப்படவில்லை.

இனி, திருமுறைகண்டவன் குலோத்துங்கன் என்பவர் சொல்லும் இரண்டாவது காரணத்தை ஆராய்வாம். நம்பியாண்டார்நம்பி இளமைப்பருவத்தே திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரைப் பூஜித்து அருள் பெற்றதும், அதைக்கேள்வியுற்ற ராஜராஜமன்னன் நாரையூர்சென்று நம்பியைக்கொண்டு பொல்லாப் பிள்ளையாரிடம் திருமுறைகள் சிதம்பரத்தில் சேமிக்கப்பட்டிருக்கின்றன என்றறிந்து நம்பியுடன் சிதம்பரம் சென்று திருமுறைகளை வெளிப்படுத்தி அவற்றை அவ்வகைக்கொண்டு வகுத்ததும் திருமுறைகண்ட புராணத்தில் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. பின்கண்ட செய்யுட்கள் அதை விளக்கும். அவை,

"மன்னுதமிழ்விரகரெங்கள் காழிவேந்தர்
வகுத்தருளாலமைத்ததிருமுறையோர்மூன்றும்
அன்னவகைவாகீசர்முறையோர்மூன்றும
ஆரூரருரைத்ததிருமுறையதொன்றும்
துன்னவகையேழாகத்தொகுத்துச்செய்தான்
தூயமனுவெழுகோடியென்பதுன்னித்
தன்னிகரில்திருவாளன்மன்னன்றானும்
தாராணிபோர்வீடுபெருந்தன்மைசூழ்ந்தே"

"பண்புற்ற திருஞானசம்பந்தர் பதிகமூந் நூற்
றெண்பத்தி னான்கினா லிலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் மூந்நூற்றேற் மூன்றினால்
வண்பெற்ற முறையொன்று நூற்றினால் வன்றொண்டர்."

"ஆகவளர்திருமுறையேழருட்டிருவாசகமொன்று
மோகமெறிதிருவிசைப்பாமாலைமுறையொன்றுசிவ
போகமிகுமந்திரமாமறையொன்றுபுகழ்பெறவே
பாகமிகுந்திருமுறைகள்பத்தாகவைத்தார்கள்"

"வைத்ததற்பின்நம்பிகழல்மன்னர்பிரான்மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதருமிறைமொழிந்ததிருமுகப்பாசுரமுதலா
வுய்த்தபதிகங்களையுமொருமுறையாச்செய்கவெனப்
பத்திதருந்திருமுறைகள்பதினொன்றாப்பண்ணினார்"

"ஆக்கியபின்திருத்தொண்டத்தொகையடைவேயருளாலே
நோக்கியபின்நாயன்மார்நடங்கடைவுந்தொழிற்பேறும்
பாக்கியத்தாலிபமுகத்தோனருள்செய்தபகுதியினால்
வாக்கியல்சேரந்தாதிநம்பியடைவேவகுத்தார்"

என்பன. இச்செய்யுள்களில் வாதவூரடிகள் செய்த கோவையைத் திருமுறை வகுப்பில் சேர்ந்ததாகச் சொல்லவில்லை. இப்பொழுது அஃது எட்டாந்திருமுறையின் பகுதியாய் அமைக்கப்பட்டுள்

ளது பிற்காலத்திற்சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். யாரால் எக்காலத்திற் சேர்க்கப்பட்டதென்று தெரியவில்லை. மேலும் ஈற்றுச் செய்யுளில் பதினோரு திருமுறைகளை வகுத்த பின்னர் நம்பியாண்டார்நம்பி அந்தாதியைப் பாடியதாகச் சொல்லியிருக்கிறது. அந்த அந்தாதியும், நம்பியாரால் இயற்றப்பட்ட வேறு பிரபந்தங்களும் பதினோராந்திருமுறையின் பகுதியாக வழங்குகின்றன. திருமுறைகளைப் பாடிய சான்றோர்களோடு தம்மையும் கூட்டி நம்பியே தம் பிரபந்தங்களைத் திருமுறையில் சேர்த்திருப்பார் என்று நினைப்பதற்கில்லை. பிறரால் பின்பு சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். யாரால் எக்காலத்துச் சேர்க்கப்பட்டதென்று தெரியவில்லை. திருவிசைப்பாமாலை முறை ஒன்று திருமுறை வகுப்பில் சேர்க்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறது. அம்மாலையில் அக்காலத்துச் சேர்ந்திருந்தன இன்ன என்றும், பின்னர்ச்சேர்க்கப்பட்டவை இன்ன என்றும் கணக்கிட்டுச் சொல்வதற்கில்லை. ஆயினும், கருவூரார் கங்கைகொண்ட சோளீச்சுரத்தைப் பாடியவை போன்றன பின்னரே சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறையாகப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். சேர்க்கும் வழக்கமுண்டென்பதற்கு இது சான்றாம். இதுகாறும் நான் சொல்லியவற்றால் இரண்டாவது காரணமாக அவர்கள் சொல்லுவதும் நிற்கத்தகுந்ததன்று என்பது புலப்படும்.

இனி, சம்பந்தமூர்த்தியடிகள் பாடியவற்றை முதலில்வைத்ததற்குக் காரணம் என்ன என்று ஆராய்வாம். சில சான்றோர் இதை அந்த அடியார்கள் சிவபதம் அடைந்த முறையென்பர். மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் சொன்னதாக மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன். நால்வரையும் இப்பொழுது வழங்கும் முறையில் வைத்ததற்குக் காரணம் அவர்கள் அடைந்த காலத்தின் கிரமத்தைப் பொருத்ததென்றே தோன்றுகிறது. சம்பந்தமூர்த்தியடிகள் மதுரை சென்று திரும்பிய பின்னர் அப்பர் சுவாமிகளைத் திருப்பூந்துருத்தியில் சந்தித்ததைச் சொன்னேன். கடைசியாக அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தது அந்தக்காலத்தில்தான். பிறகு சம்பந்தமூர்த்தியடி

கள் வடதிசை நோக்கிச்சென்று சீர்காழிவந்து ஆச்சாபுரத்தில் ஜோதியில் கலந்தனர். அப்பர் சுவாமிகள் தென்திசை நோக்கிச் சென்று திரும்பி மறுபடியும் சோழநாட்டிலுள்ள தலங்களுக்குச் சென்று திருப்புகலிவந்து தங்கிச் சிவபத மடைந்தனர். இவரும், சம்பந்தமூர்த்தியடிகளும், நீலநக்கர், முருகர், சிறுத்தொண்டர் முதலிய அடியார்களும் திருப்புகலியில் அதற்கு முன் ஒருகாலம் உடனுறைந்ததைச் சொன்னேன். அப்படி உடனுறைந்தது முருகனார் மடத்தில். அப்பர் சுவாமிகள் கடைசியாய்த் திருப்புகலியில் வதிந்த காலத்தில் மேற்கண்ட அடியார்கள் பிரஸ்தாபமே காணோம். சிறுத்தொண்டர் திருப்புகலியில் உடனுறைந்ததற்குச் சில காலத்துக்குப் பின்னர்ச் சீராளரின் ஐந்தாம் வயதில் சிவபத மடைந்தார். ஆதலால் அவர் பிரஸ்தாபம் வருவதற்கில்லை. நீலநக்கர், முருகனார் இவர்கள் பிரஸ்தாபம் வாராததற்குக் காரணம் திருப்பெருமணத்தில் அவர்கள் சோதியில் கலந்தகாலத்திற்குப் பின்னர் அப்பர் சுவாமிகள் புகலிக்குவந்ததனால் என்று தோன்றுகிறது. சோதியில் கலந்ததை.

"சீர்பெருகுநீலநக்கர்திருமுருகர்முதற்றொண்டர்
ஏர்கெழுவுசிவபாதவிருதயர்நம்பாண்டார்சீர்
ஆந்திருமெய்ப்பெரும்பாணர்மற்றெனையோரணைந்துளோர்
பார்நிலவுகிளைசூழப்பன்னிகளோடுடன்புக்கார்"

(திருஞான—புராணம்.)

என்ற செய்யுள் சொல்லும். சம்பந்த சுவாமிகளுக்குத் திருமணம் நடந்தபொழுது அப்பர் சுவாமிகள் மேல்திசை யாத்திரையில் இருந்திருக்கவேண்டும். திருப்புகலிக்குக் அப்பர் சுவாமிகள் கடைசியாய் வந்தகாலத்தில் முருகனார் அந்த ஊரிலிருந்திருந்தால் தமது மடத்துக்குச் சுவாமிகளை முன்போல அழைத்துச் சென்றிருப்பர். சிலகாலம் அந்த ஊரில் அப்பர் தங்கியதனாலே நீலநக்கரும் அவரைப்பாராமல் இருக்க நியாயமில்லை. மேற்சொல்லியவற்றால் அப்பர், சம்பந்தர் இருவர்களில் முதலில் சிவபத மடைந்தவர் சம்பந்தர் என்று கொள்வதற்கிடமிருக்கிறது.

சிலர் வேறு காரணங்களுங் கூறுவர். அவற்றில் ஒன்று தலயாத்திரை செய்து பதிகம் பாடுவதை முதலில் தொடங்கியவர் சம்

பந்தமூர்த்தியடிகள். ஆதலால் அவர் பெயர் முன்வைக்கப்பட்டதென்பது. சம்பந்தமூர்த்தியடிகள் மூன்றுமாண்டில் பொன்வள்ளத்தில் திருமுலைப்பாலுண்ட பின்னர்த் தலயாத்திரை செய்யப் புறப்பட்டுச் சிதம்பரம், திருமுதுகுன்றம் முதலிய தலங்களுக்குச் சென்று பதிகம் பாடிக் காழிக்கு மீண்டும் வந்தனர். பிறகு உபநயனம் நடந்தது. அப்பர் சுவாமிகளைச் சந்திக்கும்வரை அங்கு வதிந்தனர். அவ்வாறு வதிந்தது நான்கு ஆண்டுகள் இருக்க வேண்டும். அப்பர் சுவாமிகள் கடலில் கல்லிற் கட்டிப்போடப் பட்டபின் திருப்பாதிரிப்புலியூர்க்கரையில் ஒதுங்கித் தாம் வசித்துக்கொண்டிருந்த தலமாகிய திருவதிகை சென்றனர். தாம் கரையேறிய தலத்திலும், செல்லும் வழியிலுள்ள தலங்களிலும் உள்ள சிவலிங்கங்களைப் பாடினர். இவர் தலயாத்திரை செய்யவேண்டும் என்று கருதிச்சென்று அக்காலத்தில் பாடவில்லை. பிறகு திருவதிகையில் வெகுகாலம் இருந்தனர். அதற்குப்பின் தலயாத்திரை செய்யவேண்டும் என்று தோன்றிப் புறப்பட்டுத் திருவெண்ணெய் நல்லூர், திருக்கோவலூர், பெண்ணாகடம் முதலிய தலங்களுக்குச் சென்று பதிகம் பாடிச் சிதம்பரம்வந்து தங்கி சம்பந்த மூர்த்தியடிகள் அருளைப் பெற்றதை அடியவர்கள் பாலுணர்ந்து காழி வந்தனர். மேற்சொல்லியநாலு தலங்களிலும், சிதம்பரத்தின் பக்கத்திலும் இவர் தங்கிஇருந்தது ஆறுமாதகாலத்துக்குமேல் இருந்திருக்கும் என்று நினைப்பதற்கில்லை. ஆதலால், இவர் தலயாத்திரை செய்யத் துவங்கியது காழியில் சம்பந்த அடிகளைச் சந்திப்பதற்கு ஆறுமாதம் முன்னிருக்கும் என்னலாம். சம்பந்தமூர்த்திகள் தலயாத்திரை செய்யத் துவங்கியது அப்பரைக் காணுவதற்கு நாலாண்டுகளுக்கு முன்னர்.

"இந்நாளிற்றிருப்பணிகள்செய்கின்றவின்றமிழ்க்கு
மன்னனை வாகீசத்திருமுனியுமதிச்சடைமேற்
பன்னகமணிந்தவர்தம்பதிபலவுஞ்சென்றிறைஞ்சிச்
சொன்னமத்தமிழ்புனைந்துதொண்டுசெய்வான்றொடர்ந்தெழுந்தார்"

(பெரிய புராணம்)

என்ற இச்செய்யுள் அப்பர்சுவாமிகள் தலயாத்திரை செய்ய முதலில் விருப்புற்றதைக் காட்டும். பிறகுதான் அவர் திருவெண்ணெய்

நல்லூர் முதலிய தலங்கள் சென்று பதிகம்பாடியது. அவ்வாறு பாடிய பதிகங்களைத் திருமுறைகளாக வகுத்ததனாலே முதலில் பாடியவர் பதிகங்களை முதலில் வைத்தனர் என்பர்.

திருவிசைப்பா பாடியவர்கள் வாதவூரடிகளுக்குக் காலத்தால் பிந்தியவர் எனத் தோன்றுகிறது. சிலர் பிந்தியவர் என்பதில் ஐயமில்லை. சிலர் தேவாரம் பாடியவர்களைப் பாடியிருக்கின்றனர். கண்ட ராதித்தனார் என்பாரைச் சிலர் பராந்தகச் சோழன் மகனார் கண்ட ராதித்தனார் என்றும், சிலர் அவன் மகன் உத்தமசோழன் மகன் கண்டராதித்தனார் என்றுங் கூறுவர். இருவரும் பெரிய சிவபக்தர்களே. முதல் கண்டராதித்தனது மனைவியார் உடைய பிராட்டியார் என்னும் செம்பியன் மாதேவியார். இவர் எடுத்த சிவாலயங்கள் அநேகம். பிராட்டியார் சிவபக்தியின் பெருமையைப் புகழாதாரில்லை. உத்தம சோழன் மகனார் முதலாவது ராஜ ராஜன் காலத்திருந்தவர். அவர் சிவாலய விசாரணை செய்துகொண்டிருந்ததாகச் சரித்திர ஆராய்ச்சி வல்லோர் கூறுகின்றனர். (S. I. I. Vol II Part V Introduction p. 20 note) திருவல்லம் வில்வநாதேச்சுரர் கோயிலில் பொறிக்கப்பட்டிருக்கிற சிலாசாஸனம் ஒன்றில் "மதுராந்தகன் கண்டராதித்தனார் ஆழ்வாரை ஸஹஸ்ர கலசமாட்டுவிக்க வந்து திருவடி தொழுது நிற்க" (S. I. I. Vol. III No. 49) என்று கண்டிருக்கிறது. இதில் கண்ட காலத்தைப் புரொபெசர் கீல்ஹாரன் கி. பி. 991 செப்டம்பர்மீ 26வ என்று குறிப்பிடுகின்றனர். திருவிசைபாப் பாடிய கண்டராதித்தனார் இன்னார் என்று தீர்மானிப்பதற்குமுன் அவர் பாடிய திருவிசைப்பாவில் வரும்.

> "சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடிதன்னைக்
> காரார்சோலைக்கோழிவேந்தன் தஞ்சையர்கோன்கலந்த
> ஆராவின்சொற்கண்டராதித்தனருந்தமிழ்மாலைவல்லார்
> பேராவுலகிற்பெருமையோடும்பேரின்பமெய்துவரே"

என்ற செய்யுள் கவனிக்கத்தக்கது. பதினோராந் திருமுறையில் தேவாரம் பாடிய மூவருக்கு முன்னிருந்தவர், பின்னிருந்தவர்

என்ற இருவகையார் பாடியனவும் தொகுக்கப்பட்டுள்ளன. பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இரண்டாவது குலோத்துங்கன் காலத்து இயற்றப்பட்டது. திருமுறை என்னும் பெயர் இத்தொகுதிக்கு அமைந்ததற்குக் காரணம் என்ன என்கின்ற வினா எழும். தொண்டர்கள் சிவபிரானிடத்துச் செய்த முறையீடு அடங்கிய தொகுதியாதலால் அப்பெயர் வாய்ந்ததெனச் சிலர் கூறுகின்றனர். அவற்றுள் முதலில் நம்பியாண்டார் நம்பி வகுக்க ஆரம்பித்தது. மூவர் பாடிய தேவாரங்களை மட்டும் என்பது திருமுறை கண்ட புராணத்தால் புலனும். பிறகு அவ்வகையினதாகிய திருவாசகத்தை எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப் பாமாலையை ஒன்பதாந் திருமுறையாகவும் அமைத்தனர். திருமந்திரம் அவ்வகை முறையீடு அன்றேனும் சைவத்தை விளக்குவதான ஆகம சாஸ்திரம் தமிழில் அக்காலத்தில் இருந்தது அஃதொன்றே ஆதலால் முறையீடுகளுக்குப் பிறகு பத்தாந் திருமுறையாக அஃது அமைக்கப்பட்டது. ராஜ ராஜனது வேண்டுகோளுக்கிணங்கிப் பதினோராந் திருமுறை வகுக்கப்பட்டது.

ராஜ ராஜன் ஆட்சியில் திருமுறை வகுக்கப்பட்ட காலம் எது என ஆராய்வாம். ராஜ ராஜன் கி. பி. 985-ஆம் ஆண்டு முதல் 1013 வரை ஆட்சி புரிந்தவன். சரித்திர ஆராய்ச்சி வல்லோர் அவன் சிவபாத சேகரன் என்னும் சிறப்புப் பெயர் வகித்தது அவனாட்சியில் 18, 21 இரண்டு ஆண்டுகளுக்கும் இடையில் என்பர். திருமுறை வகுத்தது இதற்கு முந்தியாதல் வேண்டும். மேற்சொல்லிய இரண்டு ஆண்டுகளுக்கும் இடைப் பட்ட காலமே ராஜராஜ சோழன் பிற அரசரோடு போர்புரியாது இருந்தது. ஆதலால் தஞ்சைக்கற்றளியை அமைக்கத் துவக்கியதும், சிவபாத சேகரன் என்னும் பட்டம் வகித்ததும் இக்காலமாயிருக்கலாம் என்பது அவர்கள் ஊகம். அவர்கள் ஊகத்தை உண்மை எனக் கொள்ளினும் திருமுறை வகுப்பும் அக்காலத்திலேயே நிகழ்ந்ததெனக் கொள்ளவேண்டும் என்பதில்லை. இவன் ஆட்சி தொடங்கி எட்டு வருஷம் வரையில் போர் புரியப் புறப்

படவில்லை. (S. I. I. Vol. II Intro. p. 2) அந்தக்காலத்தில் நடைபெற்றிருக்கவேண்டும் என்று கருதுகிறேன். செம்பியன்மா தேவியார் திருநல்லம் கோயிலில் முன்னமே திருப்பதியம் பாடுவதற்கு ஏற்பாடு செய்திருந்ததும், அதை உறுதிப்படுத்தி என்றும் அந்த ஏற்பாடு நடைபெறவேண்டிப் பூங்குடியில் இருவர்களுக்கு நிலம் விட்டதும், ராஜராஜனது ஆட்சி 9-ஆம் ஆண்டில் ஒருவன் சுந்தரமூர்த்திகளின் விக்ரகத்தை ஸ்தாபித்துப் பூஜைக்கு ஏற்பாடு செய்ததும் திருமுறை வகுப்புக்குப் பின்னர் இருக்கலாம் என்று தோன்றுகின்றன. முதல் எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இடைவிடாது பிறநாட்டரசரோடு போர்புரிந்துகொண்டிருந்த காலத்தில் பலமுறை திருவாரூருக்குச் செல்ல இயன்றிராது. பதினெட்டாவது ஆண்டுக்குப் பின்னரே தஞ்சைக் கற்றளி அமைப்பதில் காலத்தைச்செலுத்தியிருத்தல் வேண்டும். முதல் எட்டு ஆண்டுகள் கி. பி. 994-வரை எட்டும். கி. பி. 990-க்கு முன்னரே திருமுறை வகுக்கப்பட்டிருக்கலாம். அது பத்தாம் நூற்றாண்டின் இறுதியாகும்.

சில உரையாசிரியர்:—களவியலுரையுடையாரும் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணவடிகளும் இப்பகுதியினர். முதலாங்காலப்பகுதியில் இறையனார் என்னுந் தலைப்பின் கீழ்க் களவியலுரையுடையாரைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இளம்பூரணவடிகளைத் தொல்காப்பியர் என்னும் தலைப்பின் கீழ்ச்சொல்லியிருக்கிறேன். இவர் களவியலுரையுடையாருக்கு முன்னிருந்தவர் என நினைப்பதற்கிடமிருக்கிறது. தொல்காப்பியச் சிறப்புப் பாயிர வுரையில் தமிழ்நாட்டெல்லைகளைச் சொல்லுமிடத்து "தெற்கும் எல்லை கூறுவாராயினர்; பிறநாடு முண்மையின்" என்று எழுதியிருப்பது 'குமரிக்குத் தெற்கே தமிழ்நாடுகளிருந்தன' என்று களவியலுரையுடையார் பாயிரத்தில் எழுதி வெளியிடுவதற்கு முன்னர் எழுதியதென்பதைக் காட்டும். இளம்பூரணரை ஜைனர் என மயிலைநாதர் முதலியோர் கொண்டனர். என்பது அவர்கள் எழுதியிருப்பவற்றால் விளங்கும். களவியலுரையுடையாருக்குமுன் இளம்பூரணர் இருந்தவர் என்று சொல்

வதைத் தவிர்த்துக் குறிப்பிட்டு இன்ன காலத்திருந்தார் என்று சொல்வதற்கில்லை.

சீவகசிந்தாமணி:—பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய இதன் காலத்தை ஆராய்வாம். சிலர் காந்தர்வ தத்தையார் இலம்பகத்தில் இரண்டு செய்யுட்களில் குறிப்பிட்டிருக்கிற காலங்களையும், அந்த இலம்பகத்தில் முதல் செய்யுளுக்கு எழுதியிருக்கும் உரையில் நச்சினார்க்கினியர் குறிப்பிடுங் காலத்தையுங்கொண்டு சிந்தாமணி கி. பி. 813-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதென்பர். காந்தர்வதத்தைக்கும் சீவகனுக்கும் விவாகம் நடந்த காலம் சொல்லப்பட்டிருப்பதைச் சிந்தாமணி எழுதிய காலம் என்று சொல்லுதல் எவ்வாறு பொருத்தமுடையதாகும்? ஜீவகனுடைய கதை முன்னாளியது. அதைத் திருத்தக்கதேவர் பிற்காலத்தில் எழுதினார். இவர் தமிழில் சிந்தாமணி இயற்றுவதற்கு முன்னரே வடமொழியில் பலர் அக்கதையை எழுதியிருந்தனர். கதைநடந்த காலத்துக்கும், சிந்தாமணி தமிழில் செய்யப்பட்ட காலத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. திதிவார நக்ஷத்திரங்கள் ஒருவகையாய்க் கூடுவது மேலும் மேலும் நிகழ்வதாம். சமீபகாலத்தில் அவ்வாறு ஒருதடவை கூடியிருக்கலாம். அதற்கு முன்னர் அவ்வாறு ஒருகாலும் கூடவில்லை என்று சொல்ல எப்படியியலும்?.

சமஸ்கிருதத்தில் ஜீவகசரித்திரம் மகாபுராணத்திலுள்ளது. அது பூர்வபாகம் என்றும் உத்திரபாகம் என்றும் இரண்டு பகுதிகளை உடையதாகும். பூர்வபாகத்தை ஜினஸேனாசாரியர் இயற்றினர். அவர் காலம் சென்ற பிறகு உத்தர பாகத்தை அவர் சிஷ்யர் குணபத்திராசாரியர் இயற்றினர். உத்தரபாகத்தில்தான் ஜீவக சரித்திரமடங்கியிருக்கிறது. உத்தரபுராணம் செய்து முடிக்கப்பட்டது ராஷ்டிரகூட அரசன் அகாலவர்ஷன் என்பவனது ஆட்சிக் காலத்தில்; கி. பி. 898-ஆம் ஆண்டில் பிங்கள வருடம் ஆனி மாதத்தில். அதில்சொல்லிருப்பன

''அகாலவர்ஷபூபாலேபாலயத்யகிலாமிளாம்''
''சகநர்பகாலாப்யந்தரவிம்சத்யதிகாஷ்டசதமிதாப்தே
மங்களமஹார்த்தகாரிணிபிங்களாநாமநிஸமஸ்தஜனஸுகதே

ஸ்ரீபஞ்சமியாம்புதார்த்ராயுஜிததிவஸகரேமந்த்ரிவாரேபுதாம்சே
பூர்வாயாம்விஹ்ரமல்கனேதநுஷிதரணிஜேவர்ச்சிதார்க்கௌதுலாயாம்"
"ஸர்ப்பேசுக்ரேகுளீரேகவிசஸா௱ருமெளநிஷ்டிதம்பவ்யவர்யை
ப்ராப்தேஜயம்ஸர்வஸாரம்ஜகதிவிஜயதேபுண்ணியமேதத்"

என்பன. குணபத்திரருடைய பாரம்பரை வருமாறு:—.

வீரஸேநாசாரியர்.
(சிஷ்யர்கள்.)

ஜினஸேநாசாரியர். — விநயஸேநாசாரியர்.

(சிஷ்யர்)
குணபத்ராசாரியர்.
(மகாபுராணம் உத்தரபாகம் செய்தவர்.)

(சிஷ்யர்.)
மண்டலபுருஷன்.
(சூடாமணி நிகண்டு செய்தவர்.)

ஸ்ரீமான் டீ. யஸ். குப்புசாமி சாஸ்திரியார் அவர்கள் தமிழகத்தில் (வால். I. p. 130.) திருத்தக்கதேவர் மகாபுராணக்கதையை ஆதாரமாகக்கொண்டு தமிழில் ஜீவகசிந்தாமணியைச் செய்தனர் என்று கூறியதற்கு நியாயங்களையும் சொல்லுகின்றனர். அப்படியானால் கி. பி. 899-க்குப்பின்னர்ச் செய்திருத்தல்வேண்டும். கி. பி. பத்தாம் நூற்றாண்டின் துவக்கம் என்று கொள்ளலாம். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் சொல்வதாகக் கொண்டு ஜைனர்கள் இதை மிகவும் பாராட்டுவர். ஜைனாசாரியர்களையும், அவர்கள் இயற்றிய நூல்களையும் புகழ்ந்து சொல்லும் கல்வெட்டு ஒன்றில் சிந்தாமணியையும், சூளாமணியையும் பின் கண்டவாறு சொல்லியிருக்கின்றது. கல்வெட்டு மைசூர் ராஜாங்கத்தைச் சேர்ந்த சிரவண பெல்கோலா என்னும் ஜைனஸ்தலத்திலுளது (Ep. Indica-Vol. III p. 190—1.)

"தர்மார்த்தகாமபரிநிர்விர்த்திசாருசிந்தசிந்தாமணி:
ப்ரதிநிகேதமகார்யேந"
"ஸஸ்தூயதேஸரஸஸௌக்யபுஜாஸ௱ஜாதச்சிந்தாமணிர்
முநிவருவேஷாநகதஞ்ஜநேந"

"சூளாமணிங்கவீநாம்சூளாமணிநாமஸேவ்யகாவ்யகவி:
ஸ்ரீவர்த்ததேவஏவஹிக்ருதபுண்ய: கீர்த்திமாகர்த்தும்."

இவற்றின் பொருள் "அறம் பொருளின்ம் வீட்டை விளக்கும் அழகிய கருத்துக்களடங்கிய சிந்தாமணியை வீடுகள்தோறும் போற்றும்படி யாரால் செய்யப்பட்டதோ அந்த நற்குலத்திற் பிறந்த முனிசிரேஷ்டனைச் சிந்தாமணியால் மேலான சுகத்தை அனுபவிக்கிற எந்த மனிதன் புகழாதிருப்பன்"

"கவிகளுக்குச்சிரோரத்தினமாயும், யாவரும் பாராயணம் பண்ணுதற்குத் தக்கதான சூளாமணி என்னும் காவியத்தைச் செய்தவராயும்" என்பன.

இவற்றால் சிந்தாமணி, சூளாமணி என்னும் இரண்டு காவியங்களும் ஜைனர்களால் பெரிதுங் கொண்டாடப்படுவன என்றறியலாம். சிலர் சிந்தாமணி, சூளாமணி என்று இவ்விடத்துச் சொல்லியிருப்பன வேறு புத்தகங்களைக் குறிக்கும் என்பர். இது தமிழ்ச் சிந்தாமணியையும், சூளாமணியையும், அவற்றைச் செய்த திருத்தக்கதேவரையும், தோலாமொழிப் புலவரையுங் குறிக்கும் என்பது ஸ்ரீமான் கோபிநாதராயர் அவர்கள் அபிப்பிராயம். (செந். V. 99.) ராயர் அவர்கள் "குணபத்திர முனிக்குப்பின் குமாரசேனர் என்றொருவரும், அவருக்குப்பின் சிந்தாமணி ஆசார்யரும், அவருக்குப்பின் ஸ்ரீவர்த்த தேவரும் இருந்தார்கள்" என்று எழுதியிருக்கிறார்கள். (செந். V. 98) அவர்கள் சொல்லுகிறபடி திருத்தக்கதேவர் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இருந்தவராவர். சிந்தாமணி சிறப்புப் பாயிரத்தில் "பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்—திருத்தகு முனிவன் கருத்திது வென்ன" என்பதால் திருத்தகு முனிவன் என்பது சிந்தாமணி ஆசாரியர் இயற்பெயர் என்பது விளங்கும். பொய்யா மொழி புகழ்" என்று சொல்லியது பொய்யாமொழிப் புலவரைக் குறிக்குமெனச் சிலர் கூறுகின்றனர். அவ்வாறாயின், பொய்யாமொழிப் புலவரும், திருத்தக்க தேவரும் சமகாலத்தவராவர். பொய்யா மொழிப் புலவர் என இருவர் வெவ்வேறுகாலங்களில் இருந்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது. கோபிநாதராயர் அவர்களும்

மகாமகோபாத்தியாய ஐயரவர்களும் கங்க அரசன் சத்தியவாக்கியனைக் குறிக்கலாம் என்று கருதுகின்றனர். அவன் கி. பி. 908 முதல் 950-வரை ஆட்சிபுரிந்தவன்; திருத்தக்கதேவர் காலத்திருந்தவனுமவன். கங்க அரசர் பலர் ஜைனமத அபிமானிகள். நச்சினார்க்கினியரும் சிந்தாமணியைச் சங்ககாலத்துக்குப் பின்னர் இயற்றப்பட்டதாகக் கூறுகின்றனர். "பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி முதலியனவாம்" என்று அவர் எழுதியிருப்பது அதற்குச் சான்றாம்.

சிந்தாமணி ஜைனர்களால் மட்டும் அன்றித் தமிழ் நாட்டிலுள்ளார் அனைவராலும் பாராட்டப்பட்டுவந்தது. சேக்கிழார் நாயனார் புராணத்தில் உமாபதி சிவம் சோழ அரசன் சிந்தாமணியைக் கொண்டாடியதையும், சேக்கிழார் அவனை அவ்வழியில் நின்றும் திருப்பத்திருத்தொண்டர் புராணத்தைச் செய்ததையும் சொல்லியிருப்பது இதற்கொருசான்றாம். சிந்தாமணி புருஷார்த்தங்களைச்சொல்வதன்றித் தமிழில் மிகச்சிறந்த இலக்கியமாகவும் இருப்பதால் அதைப்பலரும் வாசிக்கின்றனர். திருத்தக்கதேவர் நரிவிருத்தம் என்று ஓர் அருமையான சிறிய பாட்டையும் பாடியிருக்கின்றனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்து அச்சில் அது வெளிவந்துளது.

மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் சிந்தாமணியை நச்சினார்க்கினியர் உரையுடன் யாவரும் மேன்மையாய்ப் பாராட்டத்தக்கவிதமாய் அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டு பெருங்காவியங்களையும் மேற்சொல்லிய வண்ணம் ஐயரவர்களே அச்சிட்டிருக்கிறார்கள். குண்டலகேசி, வளையாபதி இவை இரண்டும் முழுவதும் கிடைக்கவில்லை. கிடைத்தால் அவர்கள் அவைகளை அச்சிட்டு உலகத்துக்குப் பயன்படுமாறு செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

குண்டலகேசி:—இஃதோர் பௌத்த காவியம். குண்டலகேசி என்னும் ஒரு வணிக கன்னிகையின் கதையைக் கூறுவது. அவள் அருக்க சந்திரன் என்பவனிடத்துப் பௌத்த மதத்தைத்

கற்று நாவலந்தீவிலுள்ளாரை வாதத்தில்வென்று பௌத்தரா க்குவேனெனச் சங்கற்பித்துக்கொண்டு பல்லோரும் இயங்கும் கோட்டைவாயில் வழியில் நாவல் மரத்தினை நட்டு மக்கள் அவ் வழிச் செல்வதைத் தடுத்துத் தன்னுடன் வாதுசெய்ய வந்தோரை வாதில் வென்று பௌத்தராக்கி வந்தனள். ஆவணம் என்னும் நகரில் நாதகுப்தனார் என்னும் அருகர் ஒருவரையும் வென்றனள். அவர் அருகமதக் கொள்கைகளில் மேம்பட்ட ஞானமுடையராய் இருந்ததால் ஆருகதர்களுக்கு அவரது தோல்வி மிக்க பரிபவ த்தை விளைத்தது. அருகர்கள் நீலகேசி என ஒரு பிரபந்தத்தை இயற்றி அதில் குண்டலகேசியையும், அவளுக்கு உபதேசித்த அருக்க சந்திரனையும் அருகர் வாதித்து வென்றதாய்க் கூறினர். நீலகேசித் தெருட்டு என்னும் பிரபந்தம் உளது. அதில் குண்டல கேசிவாதச்சருக்கம், அருக்க சந்திரவாதசசருக்கம் முதலிய பகுதிகளுள. இவற்றால் குண்டலகேசியை இன்னதென அறிய லாம். நீலகேசித்தெருட்டும் இன்னும் அச்சில்வெளிவரவில்லை. குண்டலகேசி என்னும் காவியம் பௌத்தமதம் தமிழ்நாட்டில் ஓங்கியிருந்தகாலத்து இயற்றப்பட்டதென அறியலாம். அதில் காணப்படும் பெயர்களும் இக்காலத்து அறியக்கூடிய பெயர்களா யில்லை. சைவ வைஷ்ணவ பக்திமார்க்கங்கள் தழைத்தோங்கத் தொடங்கிய ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர்த்தெனத் தோன்று கிறது. செந்தமிழ்த் தொகுதி (1. 91) யில் ஸ்ரீமான்-ரா. இராக வையங்காரவர்கள் விரிவாய் எழுதியிருப்பதைப் பார்க்க. கேசி யென முடிவன வாதகிரந்தங்களென அறியலாம்.

வளையாபதி:—இஃதோர் ஜைன காவியம். சில செய்யுட் களே கிடைத்துள்ளன. குறிப்பிட்டு இன்ன காலத்தியற்றப்பட்ட தென்று சொல்வதற்கில்லையாயினும் இதுவும் இக்காலப்பகுதியில் இயற்றப்பட்டதெனவே தோன்றுகிறது. சிந்தாமணிக்கு முன்ன மேயாம்.

ஐம்பெருங் காவியங்களுக்கும் முறை யமைந்தது அவைகள் இயற்றப்பட்ட காலத்தைக்கொண்டு அன்றென்பது வெளிப்படை. மணிமேகலை, சிலப்பதிகாரம் இரண்டும் சங்ககாலத்து இயற்றப்

பட்ட காவியங்களாதலால் பின்னுள்ளோர் செய்த சிந்தாமணிக்குக் காலத்தால் முந்தியவாம். அவை இரண்டில் மணிமேகலை சிலப்பதிகாரத்திற்கு முன்னர் இயற்றப்பட்டதென்பது "மணிமேகலைமே லுரைப் பொருள்முற்றிய சிலப்பதிகாரம்" என்பதனாலறியலாம். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்னும் வரிசையிற் சொல்வது அவற்றின் பெருமை சிறுமைகளை நோக்கி இருக்கலாம். இவற்றில் மணிமேகலை, குண்டலகேசி இரண்டும் பௌத்த காவியங்கள். ஏனைய ஜைனமதச் சார்பாயுள்ளன. ஜைனர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் தங்கள் மதச்சார்பாயுள்ளவற்றை முன்னும் பின்னும் வைத்து முறையமைத்திருக்கலாம்.

சிறுகாப்பியங்கள் என்பன சூளாமணி, யசோதர காவியம், உதையணன் காதை, நீலகேசித் தெருட்டு, நாககுமார காவியம் என்பன. இவற்றில் முந்திய இரண்டும் அச்சில் வெளிவந்துள்ளன. இவற்றைச் சிறுகாப்பியமெனத் தொகுத்துக் கூறியது இக்காலத்துப் புலவர்கள் என்றும், முன்னோரால் இவை அவ்வாறு வகுக்கப்படவில்லை என்றும் சில சான்றோர் கூறுகின்றனர்.

சூளாமணி:—இதைச் சூடாமணி என்று சொல்வோருமுளர். சூளாமணி நூற்சிறப்பு,

"திக்கெட்டும்புகழ்படைத்ததிறல்விசயன்
புயலனையகையன்றெவ்வைக்
கைக்கொட்டிநகைக்குமிகற்கார்வெட்டி
யரையன்வளநாடற்கேற்பப்
பொக்கெட்டுமில்லாதான்புகழ்தரும்
தீர்த்தன்மலர்ப்பதம்பூசிப்போன்
சொற்கெட்டாவான்றோலாமொழி
சூளாமணிபுணர்வோர் துறைகண்டோரே"

என்பது. தோலாமொழி என்பது ஆசிரியருக்குப் பிற்காலத்து வந்த பட்டப்பெயர் எனத் தோன்றுகிறது. ஸ்ரீவர்த்ததேவர் என்பது அவர் பெயராயிருக்கலாம், அவர் இக்காவியத்தைக் கார்

வெட்டி அரசன் விசயன் காலத்துச் செய்ததாகத் தெரிகிறது. அவனைப்பற்றி ஒன்றும் இப்பொழுது தெரியவில்லை. பாயிரத்தின் வேறொரு செய்யுளும் கவனிக்கற்பாலது. அது,

"நாமாண்புரைக்குங்குறையென்னினுநாமவென்வேற்
றேமாணலங்கற்றிருமாவெனடுஞ்சேந்தனென்னுந்
தூமாண்டமிழின்கிழவன்சுடராரமார்பிற்
கோமானவையுட்டெருண்டார்கொளப்பட்டதன்றே"

என்பது. இச்செய்யுளில் சேந்தன் என்னும் பெயர் காணப்படுகிறது. நான் சிந்தாமணி என்னுந் தலைப்பின்கீழ்ச் சொல்லியவற்றால் சூளாமணி பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதெனக் கொள்ளலாம்.

யசோதர காவியம்:—இது கி. பி. பதினொராம் நூற்றாண்டின் துவக்கத்தில் இயற்றப்பட்டது. மூன்றாங்காலப் பகுதியில் அதைச் சொல்லுவேன்.

மற்றைக் காவியங்கள் இரண்டாங்காலப்பகுதியனவோ மூன்றாங் காலப் பகுதியின் துவக்கத்தில் இயற்றப்பட்டனவோ அறியக்கூடவில்லை.

இப்பொழுதுள்ள பாரத வெண்பாப் பாடிய பெருந்தேவனார்:- இவர் நந்திக்கலம்பகம் என்றோர் பிரபந்தமும் இயற்றியுள்ளார். இவர் பல்லவ அரசன் இரண்டாவது நந்திவர்மன் காலத்து இருந்தவர் எனச் சிலரும், மூன்றாவது நந்திவர்மன் காலத்திருந்தவர் என வேறு சிலரும் கூறுகின்றனர். இரண்டாவது நந்திவர்மன் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டாகும். மூன்றாவது நந்திவர்மன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டாகும். எவ்வாறாயினும் இவர் இக்காலப் பகுதியினரே. சங்ககாலத்தில் பாரதம் பாடிய பெருந்தேவனார் வேறாவர். அவர் பாடிய பாரதம் கிடைத்திலது. சின்னமனூர்ச்சாஸன முதலியவற்றில் களப்பிரராக்கிரமணத்துக்கு முன்னிருந்த பாண்டியர் காலத்தில் சங்கம் இருந்ததாகவும், அக்காலத்தில் தமிழில் பாரதம் செய்யப்பட்டதாகவும் சொல்லியிருப்பது வேறு பாரதமாம். களப்பிரர் ஆக்கிரமணம் கி. பி.

ஆறும் நூற்றுண்டின் மத்திய காலத்துக்கு முன்னர் நிகழ்ந்ததா யிருத்தல் வேண்டும் என்பதை முன்னே காட்டினேன். பாரதவெண்பாப் பாடிய பெருந்தேவனுர்

'மல்லைவேந்தன் மயிலைகாவலன்'
'பல்லவர்தோன்றல் பைந்தார்நந்தி'
'பல்லவர்கோனந்தி
'அமரர்கோமானடுபோர்நந்தி'
'பைந்தார்நந்தி பல்லவர்கோமன்'

என்று சொல்லியிருப்பது இவர் நந்தி என்னும் பல்லவ அரசன் காலத்தவர் என்பதைத் தெளிவாய்க்காட்டும். பல்லவர் காலத்துத் தமிழ்ச் சங்கமிருந்ததில்லை. பல்லவர்களுக்கு மல்லை, மயிலை இவற்றைத்தவிர காஞ்சிபுரம் பிரதான நகரமாயிருந்தது. மல்லை என்பது மகாபலிபுரம். மயிலை என்பது மயிலாப்பூர்.

புறப்பொருள் வெண்பாமாலை:—செய்தவர் ஐயனுரிதனுர். விநாயகர் துதி, சிவபெருமான் துதி, கலைமகள் துதி இவற்றைப் புத்தகத்தின் முதலில் பார்க்கலாம். சங்ககாலத்து நூல் முதலியவற்றில் இவற்றைக் காணுதலரிது. வேங்கடம், பரஞர், கச்சி இவற்றிலுள்ள கடவுளைத் துதிக்கின்றனர். இவர் தமிழையும் பொருளமைதியையும் நோக்கச் சங்ககாலத்துக்குப் பின்னிருந்தவரெனக் கொள்ளுதல் தவருகாது. இளம்பூரணவடிகள் புறத்திணையியலுரையில் இவர் வெண்பாக்கள் பலவற்றை உதாரணமாகக் காட்டுதலால் அவர் காலத்துக்கு முந்தியவராவர். பன்னிருபடலம் என்னும் முற்காலத்து இலக்கணநூலைத் தழுவிப் புறப்பொருள் வெண்பா மாலையைச் செய்திருக்கின்றனர். இவர் வெண்பாக்கள் சிறந்த நடையில் இயற்றப்பெற்றன. சிறப்புப் பாயிரத்தில் இவரை 'வானவர் மருமான்' என்று சொல்லியிருப்பது சேரர் குலத்தைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டும். தொல்காப்பியர் சொல்லிய புறப்பொருள் இலக்கணத்திற்கும், இவர் சொல்லியிருப்பனவற்றிற்கும் வேறுபாடுகள் சிலவுள. இவரை எட்டாம் நூற்றுண்டிற்கு முன்னிருந்தவர்என்னலாம். எவ்வளவு காலம் முன்னிருந்தவர் என்று சொல்வதற்கில்லை.

யாப்பருங்கலம்:—இதில் அருங்கலம் என்பதன் பொருள் என்ன எனப்பார்ப்போம். ஸ்ரீமான் கோபிநாதராயர் அவர்கள் செந்தமிழ்த் தொகுதி (V. 97)யில் பின்கண்டவாறு சொல்லியிருக்கின்றனர். "மேற்கூறிய ஜைனாசாரியர்கள் பற்பல சங்கத்தாராகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு சங்கத்திலும் பல கணங்களுள. ஒவ்வொரு கணத்துள்ளும் பல கச்சைகள் அடங்கியுள்ளன. தென்றேயச் சங்கங்களில் மிகப் பிரபலமாயிருந்தது திரமிளசங்கம். இத்திரமிளசங்கத்தில் பிரசித்தி அடைந்தது நந்திகணம். நந்திகணத்தில் அருங்கலான்வயம் வெகு பிரக்கியாதி அடைந்தது. அருங்கலான்வயம் 'தீபங்குடியின் நிடும்பறை தீர்த்தத்தின் அருங்கலான்வயம்' என்று ஒரு சாஸனத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்வருங்கலான்வயத்தார் முதல்முதல் தீபங்குடியாராயிருந்திருக்க வேண்டும் என்பது பெறப்படும். இத்தீபங்குடி திருவாரூர்ப் பக்கத்து 4 மைல் தூரத்திலுள்ளது. இவ்வன்வயத்தோர் தமிழரேயாயினும் தமிழ், கன்னடம், சமஸ்கிருதமுதலிய பாஷைகளில் அதிநிபுணர்கள்" அந்வயம்—பரம்பரை.

'ஸ்ரீமத்திரமிளஸங்கேஸ்மிந்நந்திஸங்கேஸ்தருங்கல:
அந்வயோபாதியோசேஷசாஸ்த்ரவாராஸிபாரகை:'

'திரமிளஸங்கதநந்திகணத அருங்கலான்வயத'

'ஸ்ரீமத்திபங்குடிய நிடும்பறைதீர்த்தத அருங்கலான்வயதஸம்பந்த நந்திகண'

என்ற சுலோகங்கள் மேற்சொல்லியவற்றை விளக்கும்.

(Cp. Caru-Shinooga Vol. II No. 35)

வேறொரு சிலாசாஸனம் (S. I. I. Vol. I. No. 152) அருங்கலான்வயத்தைச் சொல்லாவிடினும் இந்த விஷயத்தில் ஜைன சம்பிரதாயம் இன்னதென்பதைக் காட்டும். அதன் கருத்தை ஈண்டு வரைகின்றேன். அது "மூலசங்கத்தில் நந்தி சங்கம் உண்டாகியது. இதில் பலாத்காரகணம். இதைச்சேர்ந்த ஸாரஸ்வத கச்சையில் பத்ம நந்தி தோன்றினர். அவர் அந்வயத்தில் பல பெரியோர் தோன்றினர்" என்பது. இவைகளினால் அருங்கலம் என்பது ஜைன ஆசாரிய பரம்பரையில் ஒரு பிரிவு என்றும், அது

தமிழ்ச்சங்கத்தின் பகுதி என்றும், தீபங்குடியில் முதலில் இந்த வயத்தார் இருந்தவர் என்றும் அறியலாம். சிந்தாமணி இயற்றிய வரும் சூளாமணி இயற்றியவரும் திரமிளசங்கத்து நந்தி கணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கோபிநாதராயரவர்கள் அபிப்பிராயம்.

யாப்பருங்கலத்தைச் செய்தவர் அமிர்தசாகரர். அவ்விலக்கணத்தின் சிறப்புப் பாயிரத்தில் "அளப்பருங் கடற்பெய ரருந்தவத்தோனே" என்று சொல்லியிருக்கிறது. "அமித" என்னுஞ் சொல் அளப்பரும் (அளத்தற்கரிய) என்று பொருள்படும். இவர் ஜைனர். அருங்கலான்வயத்தைச் சேர்ந்தவராதலால் யாப்பருங்கலம் என இப்புத்தகத்துக்குப் பெயரிட்டனர். இவர் பத்தாம் நூற்றாண்டிலோ, பதினோராம் நூற்றாண்டின் துவக்கத்திலோ இருந்திருத்தல் வேண்டும். இவ்வகுப்பினர் கீர்த்திபெற்ற காலம் அஃதாம் எனத் தோன்றுகிறது. இதற்கு மிகவும் அருமையான உரை ஒன்றுளது. இயற்றியவர் பரமசிவபக்தராயிருத்தல் வேண்டும் என்று காணப்படுவதைத் தவிர்த்து அவர் விஷயம் ஒன்றும் தெரியவில்லை.

யாப்பருங்கலக்காரிகை:—இதுவும் அமிதசாகரர் இயற்றியதே. அதற்குக் குணசாகரர் என்னும் ஒரு ஜைனப்புலவர் உரை செய்திருக்கின்றனர். இக்காரிகைதான் பலராலும் இக்காலத்துக் கற்கப்படுவது.

கல்லாடம்:—கல்லாடரால் செய்யப்பட்டதனால் கல்லாடம் எனப் பெயர் அமைந்தது. கல்லாடர் எனப் பெயரிய சங்கப்புலவர் ஒருவர் இருந்ததாகத் தெரிகிறது. கல்லாடம் என்று இக்காலத்து வழங்கும் பிரபந்தத்தை இயற்றியவர் பிற்காலத்திருந்தவர். சுந்தரமூர்த்திகள் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பாகத்திருந்தவர் எனச் சொன்னேன். அவர் நண்பரும், அவருக்குச் சமகாலத்தவருமான சேரமான் பெருமாள் நாயனாரைக் கல்லாடமுடையார் ஓர் அகவலில்

"பரிபுரக் கம்பலை யிருசெவி யுண்ணும்
குடகோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலி புரிசைத் திருமுகங் கூறி
யன்புருத் தரித்த வின்பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென வுறவிடுத் தருளிய
மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்"

எனக் கூறுகின்றனர். இதனால் கல்லாடமுடையார் சுந்தர மூர்த்திகள் காலத்துக்குப் பின்னிருந்தவர் என அறியக்கிடக்கிறது. வாதவூரடிகள் கோவையைத் தழுவிக் கல்லாடம் இயற்றியதனால் அவர் காலத்துக்குப் பின்னிருந்தவர் என்பது ஒருதலை. வாதவூரடிகள் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்தவர் எனக்கொள்ளல் வேண்டுமெனச் சொன்னேன். கல்லாடனார் ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் பிந்தியவர் ஆவர். வாதவூரடிகள் குறிப்பிடும் திருவிளையாடல்களைவிட வேறு திருவிளையாடல்களையும் இவர் குறிப்பிடுகின்றனர். திருவிளையாடல் கதைகள் ஒருங்கு திரட்டப்பட்ட காலத்திருந்தவராவர். பிற்காலத்து இருந்த உரையாசிரியர்கள் இவர் செய்யுட்களை மேற்கோளாகக் காட்டாமையினாலே அவர்களுக்கும் பிந்தியிருந்தவரிவர் என்பர் சிலர். ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னிருந்தவர் என்பதைத் தவிர்த்து வேறு ஒன்றும் இப்பொழுது சொல்வதற்கில்லை. கல்லாடத்தில் அபியுக்தர் கவியெனச் சேர்க்கப்பட்டிருப்பவைகளில்

"கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லர்சங் கத்தில் வந்தருளிச் —சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்"

என்ற வெண்பா ஒன்றும்.

அபியுக்தர் கவி என்று சில புத்தகங்களில் காணப்படுபவை பெரும்பாலும் பிற்காலத்தார் தோன்றியவாறு கவிபுனைந்து சேர்த்தன எனத் தோன்றுகின்றது. கந்தபுராணத்திலும் அபியுக்தர் கவி ஒன்று அதை எழாம் நூற்றாண்டினதாக்குகின்றது. நாலாம் காலப்பகுதியில் கந்தபுராணம் என்னும் தலைப்பின்கீழ்ப் பார்க்க.

நிகண்டுகள்:—திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி என்னும் மூன்று நிகண்டுகளும் இக்காலப்பகுதியில் இயற்றப்பட்டன. திவாகரம் என இக்காலத்து வழங்குவது சேந்தன் திவாகரம் எனப்படுவது. சிலர் பிங்கலரின் பிதாவாகிய திவாகர முனிவரால் இயற்றப்பட்ட ஆதி திவாகரம் என்று விரிவாய் அளவின்றிப் பரந்துகிடந்த நிகண்டு ஒன்றிருந்தது; பிங்கல முனிவர் அதைச் சுருக்கிப் பிங்கலந்தையைச் செய்தார் என்பர். அவ்வாறாயின் பிங்கலந்தைப் பகுதிகளின் முறை, பகுதிகளின் பொருள், அமைதி இவைகள் ஆதி திவாகரத்திலுள்ளவாறு அமைந்திருத்தல் வேண்டும் எனக்கொள்ளுதல் தவறாகாதென்னலாம். சேந்தன் திவாகரத்திலுள்ள பகுதிகளின் முறை, பகுதிகளின் பொருளமைதி, பகுதிகளின் பெயர்கள் இவை யெல்லாம் பிங்கலந்தையிலுள்ளதற்கு முற்றிலும் வேறும். ஆதலால் ஆதி திவாகரம் சேந்தன் திவாகரத்தினின்றும் வேறும். மேலும், சேந்தன் திவாகரமோ மிகச் சிறியது. ஆதி திவாகரம் என்றொரு நிகண்டு இருந்ததென்பதற்கு என்ன ஆதாரங்கள் காணப்படுகின்றன என்று விசாரிப்போம். சூடாமணி நிகண்டின் சிறப்புப்பாயிரத்தில்

> "விரவியதேவர்மக்கள்விலங்கொடமரமிடம்பல் ...
> பொருள்செயும்வடிவுபண்புபோற்றியசெயலொலிப்பேர்
> ஒருசொற்பல்பொருளிஞெடுமுரைத்தபல்பெயர்க்கூட்டந்தான்
> வருமுறைதிவாகரம்போல்வைத்துப்பிங்கலந்தைதன்னில்"
> "ஒருங்குளபொருளுமோர்ந்திட்டுரைத்தனன்"

என்று சொல்லியிருக்கிறது. ஈண்டுக்கூறிய முறை சேந்தன் திவாகரத்திலுள்ளது. அக்காலத்து ஆதி திவாகரம் என்றொன்றிருப்பின் சூடாமணி நிகண்டுடையார் அதைக் கூறாது விடுவதற்கு நியாயமில்லை. அவர் காலத்தும் சேந்தன் திவாகரம் ஒன்றே திவாகரம் என வழங்கியதென அறியலாம். சிலப்பதிகாரத்திற் குரையெழுதிய அடியார்க்கு நல்லார் சேந்தன் திவாகரம் ஒன்றையே பல இடங்களிலும் மேற்கோளாகக் காட்டுகின்றனர். மகா மகோபாத்தியாய ஐயரவர்கள் சிலப்பதிகாரத்தில் எழுதியிருக்கும்

குறிப்புரைகள் அணிந்த விளக்கும். அடியார்க்கு நல்லாரும் ஆதி திவாகரம் என்று ஒரு பெரிய நிகண்டு இருந்தால் அதைவிட்டுச் சேந்தன் திவாகரத்தையே எடுத்து ஆளுவர் என்று கொள்வது சரியாகாது. நன்னூலாரும் உரியியலில்

"இன்னதின்னுழியின்னணமியலும்
என்றிசைநூலுட்குணகுணிப்பெயர்கள்
சொல்லாம்பரத்தலிற்பிங்கலமுதலா
நல்லோருரிச்சொலினயந்தனர்கொளலே"

என அவர்காலத்துப் பெரிய நிகண்டாயிருந்த பிங்கலந்தையைச் சொன்னாரே அன்றி ஆதிதிவாகரத்தைச் சொல்லவில்லை. நூலாசிரியர், உரையாசிரியர்களுள் எவராலேனும் ஆதி திவாகரம் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறதா? இல்லையானால் ஆதி திவாகரம் என ஒருநூல் எக்காலத்தும் இருந்ததில்லை என்பதை யன்றி அதற்கு வேறு காரணமுளதா? நிகண்டுக்குள் ஆதியில இயற்றப்பட்டது சேந்தன் திவகரமானதால் சிலர் இதையே ஆதி திவாகரம் என்று சொல்லியிருக்கலாம். பிற்காலத்தார் ஆதி திவாகரம் வேறென மயக்கமுற்றனரோ என்று தோன்று கிறது.

சேந்தன் திவாகரத்தைச் சிலர் புறநானூற்றின் 385-ஆவது செய்யுள், அதனுரை இவற்றிற் சொல்லப்பட்டிருப்பனவற்றை ஆதாரமாகக் கொண்டு சங்ககாலத்தியற்றப்பட்டதென்கின்றனர். புறநானூற்றுச் செய்யுளடியில் "அம்பர்கிழான் அருவந்தையைக் கல்லாடனார்" என்றெழுதியிருக்கிறது. அச்செய்யுளில்,

"வறனியானீங்கல்வேண்டியென்னரை
நீலத்தின்சிதார்களைந்து
வெளிதுடீஇயென்பசிகளைந்தோனே
காவிரிகணையுந்தாழ்நீர்ப்படப்பை
நெல்விளைகழனியம்பர்கிழவோன்
நல்லருவந்தைவாழியர்"

என்றவரிகள் பயின்று வருகின்றன. ஈண்டு அம்பர் கிழான் அருவந்தை எனப்பட்டவனைச் சேந்தன் என்கிறனர். சங்கம் மூன்றும்

நூற்றாண்டின் முற்பகுதிக்குப் பிறகு இருந்ததில்லை என்று சொல்லியிருக்கிறேன். குந்தளநாட்டரசராகிய சளுக்குவேந்தர் ஆட்சி ஆரம்பித்தது ஆறாம் நூற்றாண்டு நடுவில். திவாகரத்தில் மக்கட்பெயர்த் தொகுதியில் "வேள்புலவரசர் சளுக்குவேந்தர்" என்றும், பல்பொருட் கூட்டத் தொருபெயர்த் தொகுதியில் "கேழல் வேள்புல வரசர் காடியே" என்றும் செல்லியிருக்கின்றன. இதனால் திவாகரம் ஆறாம் நூற்றாண்டின் முந்திய காலத்துக்குப் பின்னர் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலும், அம்பர்கிழான் கல்லாடனாரால் பாடப்பெற்றவன் என்று புறநானூற்றில் சொல்லியிருக்கிறது. சேந்தன் திவாகரத்தில் மரப்பெயர்த் தொகுதி ஈற்றில் "அவ்வை பாடிய அம்பர்க் கிழவன்" என்று இருக்கிறது. புலமைவாய்ந்த பெண்பாலரில் ஔவை என்னும் பெயரோடு பலர் பல காலத்து இருந்திருப்பதாகக் கருதற்கிடமிருக்கிறது. திவாகரச் சேந்தனைக் கல்லாடனார் பாடியதாக அதில் எங்கும் சொல்லவில்லை.

அருவந்தை, சேந்தன் என்னும் இரண்டு பெயர்களும் ஒருவனது இயற்பெயர்களா என்பது ஆராயத்தக்கது. அருவந்தை காரணப் பெயரோ என்று ஐயமுறுதற் கிடமிருக்கிறது. திவாகரம் பல்பொருட் பெயர்த் தொகுதி ஈற்றில் "அருவந்தைச் சேந்தன்" என்றிருப்பது கவனிக்கத்தக்கது.

அம்பர் என்பது சோழநாட்டிற் காவிரிக்கரையின் கண்ணதோரூர். "பழம்புனற் காவிரிப் பெரும்பதி" என்று திவாகரத்தில் சொல்லியிருக்கிறது. ஒரே ஊரில் வெவ்வேறு காலங்களில் இரண்டு பிரபுக்கள் இருந்திருத்தல் கூடாதா? புறப்பாட்டில் சேந்தன் என்னும் பெயர் காணப்படவில்லை. புறப்பாடுக்கும் திவாகரத்துக்கும் பொதுவாயுள்ள பெயர் அருவந்தை என்பது. அது காரணப் பெயராயிருந்தால் அப்பெயரை வகிக்கக்கூடிய இருவர் வெவ்வேறு காலங்களில் ஒரே ஊரிலிருந்திருக்கலாகாதா? இயற்பெயரெனக் கொள்ளினும் வெவ்வேறு காலங்களில் ஒரு பெயரைத்தரித்த இருவர் இருந்திருக்கலாகாதோ?

இது நிற்க, புறப்பாட்டில் எனது நீலவாடையைக்களைந்து வெள்ளிய துடுத்திப் பசியைக்களைந்தோனே என்று மட்டும் சொல்லியிருக்கிறது. அருவந்தையைக் கற்றவனென்று சொல்லவில்லை. இவன் நன்கு கற்றவனாயிருந்தால் கல்லாடனார் அதைச் சொல்லாதிருக்க மாட்டார். திவாகரத்தில் சேந்தனைப் பின்கண்டவாறு சொல்லியிருக்கிறது. அவை,

"வடநூற்கரசன்றென்றமிழ்க்கவிஞன்
கவியரங்கேற்றுமுபயகவிப்புலவன்"

"கற்றநாவினன்கேட்டசெவியினன்
முற்றவுணர்ந்தமூதறிவாளன்"

"செந்தமிழ்ச்சேந்தன்"

"அண்ணல்செம்பாதிக்காணியாட்டியை
பெண்ணணங்கைமூவுலகும்பெற்றவம்மையைச்
செந்தமிழ்மாலையந்தாதிபுனைந்த
நாவலனம்பர்க்காவலன்சேந்தன்"

"அரக்கரைப்பொருதமுரட்போர்வில்லும்
பாரதம்பொருதபேரிசைச்சிலையும்
தாருகற்கடிந்தவீரத்தயிலும்
பாடியபுலவன்பதியம்பர்ச்சேந்தன்"

"புலவிநீக்கியகல்விச்செல்விக்
கமிழ்துசுவையீந்தவரும்பெறலின்பத்
தொருபெருஞ்செல்வனருவந்தைச்சேந்தன்"

என்பன. இவற்றால் இருவரும் ஒருவரே யாவர் என்றற்கியலுமோ? இயலாதென்பதே பொருந்துவது. அவன் சங்ககாலத்தவனாயிருந்தால் அக்காலக்கவிகளில் சேர்த்துத் தொகுக்கப்படாததென்னை?

கல்விகேள்விகளிற் சிறந்தோனாயும் வள்ளலாயுமிருந்த சேந்தன் பெயரால் திவாகரர் என்னும் புலவரியற்றிய நிகண்டு என்று கருதுகின்றேன். நூலுக்கு ஆக்கியோன் பெயர் வைப்பதியல்பே.

தொகுதிகளின் ஈற்றிலுள்ள சில செய்யுட்கள் இக்கொள்கையை ஆதரிக்குமெனத் தோன்றுகிறது. பிங்கலச் சிறப்புப்பாயிரத்தில் "செங்கதிர் வரத்தாற் றிவாகரன் பயந்த—பிங்கல முனிவனெனத் தன்பெயர் நிறீஇ" என்று சொல்லியிருக்கிறது. இதை ஆதாரமாகக்கொண்டு பிங்கலரைத் திவாகரரின் பிள்ளை என்கின்றனர். பிங்கலரைச் செங்கதிர்வரத்தினாலே திவாகரர் பெற்றதாக இதில் சொல்லப்படுகிறது. செங்கதிர் வரத்தினாலே திவாகரர் பிறந்ததாகச் சொல்லவில்லை. சூடாமணி நிகண்டின் சிறப்புப்பாயிரத்தில்

"அங்கதுபோயபின்னையவகில்நூல்பிறந்தமற்றுஞ்
செங்கதிர்வரத்திற்றோன்றுந்திவாகரர்சிறப்பின்மிக்க
பிங்கலருரைநூற்பாவிற்பேணினர்செய்தார்சேர
இங்கிவையிரண்டுங்கற்கவெளிதலவென்றுசூழ்ந்து"

என்று சொல்லியிருக்கிறது. இதில் செங்கதிர் வரத்தினால் தோன்றியவர் திவாகரர் என்று சொல்லியிருப்பதோடு பிங்கலரைத் திவாகரர் மகன் என்று சொல்லவில்லை. "சிறப்பின் மிக்க பிங்கலர்" என்று அடைகொடுத்துச் சொல்லியிருப்பது பிங்கலம் திவாகரத்தினும் சிறந்ததென்பதைக் குறிப்பிடும். திவாகரம், பிங்கலம் இரண்டையும் ஆராய்வதனால் பிங்கலம் திவாகரத்துக்கு நீண்டகாலம் பிந்தியதாயிருத்தல்வேண்டுமென்றும், பிங்கலர் திவாகரரது பிள்ளை அல்லரென்றும் ஊகிப்பதற்கு ஆதாரங்கள் காணப்படும். பிங்கலச் சிறப்புப்பாயிரம், ஆதிதிவாகரம் உண்டென்று நம்பியவரில் ஒருவர், பிற்காலத்தில் அபியுக்தருடைய கவிகள் சேர்க்கப்படுவதுபோல் சேர்த்ததென்று தோன்றுகின்றது. ஆதி திவாகரம் என்று ஒன்று இருந்ததில்லை என்றால் சேந்தன் திவாகரத்தைச் செய்த திவாகரர்தானே திவாகரர் என்று சொல்லப்பட்டிருக்க வேண்டும். சேந்தன் திவாகரத்திலுள்ள பொருளமைதியைத் தழுவாது தாம் வேறு வகையாயமைத்திருப்பதும் திவாகரர் சொல்லாத பலவற்றைச் சொல்லியிருப்பதும், சிலவற்றை மாற்றிச் சொல்லியிருப்பதும், நிகண்டின் பகுதிகளுக்கு வேறு பெயர் கொடுத்துச் சிலவிடங்களில் முறைமாற்றியமைத்திருப்பதும் பிங்கலர் திவாகரரைப் பின்பற்றுவோரல்லர் என்பதைக்காட்டும். தைலும் ஒக்கிய

காலத்துப் பிங்கலர் இருந்தவர் என்பதை இரண்டு நிகண்டு களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அறியலாம். திவாகரத்தினும் பிங் கலம் விரிவானதாயினும் அருகர், புத்தர் இவர்கள் பெயர்களைக் கூறுமிடத்துத் திவாகரம் விரிந்தும் பிங்கலம் சுருங்கியும் இருப் பது கவனிக்கத்தக்கது.. திவாகரத்தில் பல்பொருட்கூட்டத் தொருபெயர்த்தொகுதியில் அறுவகைச் சமயம் பின்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கின்றது. அஃது "அறுசமயம் வைசேடிகம் நையாயிகம் மறுவின்மீமாஞ்சை யாருகதம் பௌத்தம் பிரதிலோ காயிதம் என்னும் பெற்றிய" என்பது. இதில் புறச்சமயங்களை மட்டும் சொல்லப்பட்டிருக்கின்றன. பிங்கலத்தில் புறச்சமயம் இரண்டும் பின்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறன. ஐயர் வகைப்பிரிவு "உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ் சராத்திரம், பாட்டாசாரியம் இவ்வகையாறும் புறச்சமயமாகும்" "வைரவம் வாமம் காளாமுகம் மாவிரதம் பாசுபதம் சைவம் என்றுட்சமயமாறே" புறச்சமயங்களாகத் திவாகரத்தில் சொல்ல ப்படும் வைசேடிகம், நையாயிகம்போய்ப் பாஞ்சராத்திரம், பாட் டாசாரியம் எனவந்து விட்டன. பிங்கலர் காலத்தில், வைஷ்ணவ ஆகமங்கள் பரவ ஆரம்பித்த காலமெனவறியலாம்

சூடாமணி நிகண்டு:—ஸ்ரீமான் ட. யஸ். குப்புசுவாமி சாஸ் திரியார் தமிழகம் என்னும் பத்திரிகையில் இஃது இயற்றப்பட்ட காலம் முதலியவற்றைச் செவ்வனே விளக்கிக் காட்டியிருக்கின் றனர். இந்த நிகண்டைச் செய்தவர் மண்டலபுருடன். இவராசி சாரியன் பெயர் குணபத்திரன் என்பது. குணபத்திரர் மகாபுரா ணம் செய்தவர் என்பது "இருந்திய கமலவூர்தித் திருப்புகழ்ப் புராணஞ் செய்தோன்" என்று நிகண்டில் கூறியிருப்பதால் அறி யலாம். குணபத்திரர் இயற்றிய வடமொழி மாபுராணத்தில் இறுதியிலுள்ள சுலோகங்களின் கருத்தை ஸ்ரீமான் குப்புசுவாமி சாஸ்திரியார் எழுதியிருக்கிறபடி காட்டுகின்றேன். அது, "வண வாஸி என்னும் நாட்டில் வங்காபுரத்தில் அகாலவருஷன் என் னும் அரசன் ஆண்டுவருகையில் சகாப்தம் 820 (கி. பி. 898) க்குச் சரியான பிங்கல வருஷம் ஆனி மாதம் சுக்கிலபக்ஷ பஞ்சமி தினத்

இல் இந்தப் புராணம் முடிவுபெற்று விளங்குகிறது" என்பது. அகாலவர்ஷன் என்னும் அரசனுக்குக் கிர்ஷ்ண II, கன்னரதேவர், சுபதுங்கர் என்னும் வேறு நாமங்களுமுண்டு. இவர் ஆட்சி கி. பி. 874 முதல் 914 வரை. இரட்டைபாடி அரசர். இவ்வரசனது பிதா அமோகவர்ஷன் என்னும் பெயரினன். இந்த இரண்டு அரசர் காலத்தும் ஜினஸேனாசாரியர், குணபத்திராசாரியர் என்னும் ஜைன குரவர்கள் அரசர்களிடத்துத் தாங்கள் அடைந்திருந்த செல்வாக்கால் ஜைனமதத்தை அந்த நாட்டில் பரப்பினார்கள். குணபத்திராசாரியர் மாபுராணத்தைச் செய்து முடித்தது வனவாஸி என்னும் நாட்டில். அஃது இரட்டைபாடி அரசனுக்குட்பட்டிருந்தது. வனவாஸி மைசூர் ராஜ்யத்துக்கு வடமேற்கு மூலையிலுள்ளது. ஈண்டு வின்ஸெண்ட் ஸ்மித் என்பவர் எழுதியிருப்பது நான் மேற்சொல்லியவற்றை விளக்கும். அது "In his old age, he (Amoghavarsha) abdicated in favor of his son Krishna II and devoted the breef remainder of his life to ascetic practices. The Digambara or naked sect of the Jains was liberally patronised by Amoghavarsha. The rapid progress made by Digambara Jainsm late in the 9th. and early in the 10th. century under the guidance of various notable leaders including Jinasena and Gunabhadra who enjoyed the favor of more than one monarch had much to do with marked decay of Buddhism which daily ost ground until it almost wholly disappeared from the Deccan in the 12th. century" (Early History of India) p. 429. என்பது. கிர்ஷ்ண II என்னும் அரசன் கிருஷ்ணராயன் என்று பலவிடங்களில் சொல்லப்படுவதைப் பார்க்கலாம். சூடாமணி நிகண்டுடையார் செயல்பற்றிய பெயர்த் தொகுதியில்

"படைமயக்குற்றபோதும்படைமடமொன்றிலாதான்
மடைசெறிகடந்ததோளான்மதிக்குடைமன்னர்மன்னன்
கெடிமன்னர்வணங்குந்தாளான்கிருட்டிணராயன்கைபோல்
கொடைமடமென்றுசொல்பவரையாதுகொடுத்த[illegible]மே"

எனக் கிருஷ்ணராயனைப் புகழ்ந்திருக்கின்றனர். சூடாமணி நிகண்டை இயற்றியவரும் ஜைனர். கிருஷ்ணராயனும் ஜைனன். இவருக்கு ஆசாரியனுயுள்ள குணபத்திரரை மிகவும் ஆதரித்தவன் அவ்வரசன். அவனைப் புகழாது வேறு யாரைப் புகழ்வர். சிலர் இச்செய்யுளில் கிருஷ்ணராயன் என்று சொல்லியிருப்பது கி. பி. 1509-முதல் 1529-வரை விஜய நகரம் ராஜாங்கத்தை ஆட்சி புரிந்த அரசனை என்று கொண்டு மண்டல புருடனைப் பதினரும் நூற்றுண்டினர் என்பர். அவன் ஜைனன் அன்று. இவர் கூற்று ஒரு சிறிதும் பொருத்தமுடையதன்றென்பது நான் மேற்கூறியவற்றுனே தெற்றென விளங்கும். மண்டலபுருடன் பல்பொருட் கூட்டத் தொருபெயர்த் தொகுதியில்

"அரியவுட்சமயமாறேயாவனசைவம்தூய்மை
பெருகுபாசுபதத்தோடுபிறங்குமாவிரதமற்றும்
கருதியவீடுபேறுகாட்டுகோளாமுகந்தான்
மருவியவாமம்மிக்கவைரவமென்னலாமே"

"அறுபுறச்சமயந்தானேயறையும்லோகாயதம்பின்
உறைதருபௌத்தமேயாருகதமீமாஞ்சையோடு
குறிபெறுமாயாவாதங்கூறியபாஞ்சராத்ரம்
நெறிபெறுமிவையேயென்னநிகழ்த்துவர்நூல்வல்லோரே"

என மதங்களை கூறுகின்றனர். பிங்கலர்காலத்திருந்த மதங்கள் மண்டலபுருடன் காலத்துக்குள் எப்படி மாறின என்று பார்க்கலாம். புறச்சமயங்களுள் பாட்டாசாரியம்போய் மாயாவாதம் வந்துவிட்டது. சளுக்கிய அரசர்பெயர் சூடாமணி நிகண்டில் இல்லை. கி. பி. எட்டாம் நூற்றுண்டின் மத்தியகாலத்தில் தந்திதுர்கன் என்னும் இரட்டைபாடி அரசனுல் சளுக்கிய வம்சம் தொலைந்து போய் இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது சூடாமணி நிகண்டின் காலத்துக்குக் கொஞ்சம் பிந்தி, மறுபடியும் தோன்றியது. சூடாமணிநிகண்டுக்காலத்தில் அந்தவம்சமில்லையாதலால் அவர் அந்தவம்சத்தினரைச் சொல்லவில்லை. பிங்கலரும் சளுக்கியரைச் சொல்லியிருக்கின்றனராதலால் பிங்கலம் திவாகரம் இரண்டும் எட்டாம் நூற்றுண்டின் மத்தியகாலத்துக்கு முன்னும்,

சளுக்கியர்தோன்றிய ஆறாம் நூற்றாண்டின் மத்தியகாலத்துக்குப் பின்னும் இருந்திருக்கவேண்டும். திவாகரப் பிங்கலம் இரண்டுக்கும் இடையிட்டகாலமும் நீண்டதாயிருத்தல் வேண்டும். சூடாமணி பத்தாம் நூற்றாண்டுத் துவக்கத்தில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

சங்கராசாரியர்இருந்து ஏகாத்மவாதத்தைப் பரவச்செய்தது கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுத் துவக்கத்தில். சைவர், வைஷ்ணவர்கள் அதை மாயாவாதம் என்றனர். வைதிக மதஸ்தர்கள் ஜைனர் பௌத்தரோடு போர்புரிந்தது இந்தக் காலப்பகுதியில். வடக்கேயிருந்து வந்த ஜைனம் பௌத்தம் என்ற இரண்டு மதங்களில் இந்தக் காலப்பகுதியின் ஈற்றில் பௌத்தத்தின் வலி மிகவும் குன்றியது. ஆனால் முற்றிலும் இந்நாட்டைவிட்டுப் போய்விடவில்லை. அது குன்றுவதற்கு ஜைனர்களும் காரணராயிருந்தார்கள். ஜைனமதத்தின் வலியுங்குன்றியது, ஆனால் பௌத்தத்தைப்போல் குன்றவில்லை. இந்தக் காலப்பகுதியில் இயற்றப்பட்ட தமிழிலக்கியங்களில் ஜைனராலும், பௌத்தராலும் இயற்றப்பட்டன பல. அவர்கள் வடமொழியிலும் வல்லவர்கள். மணிப்பிரவாளம் என்னும் வடமொழியும் தென்மொழியும் கலந்த பாஷை இந்நாட்டில் வந்து வழங்குவதற்கு முதலில் இவர்களே காரணம். பிற்காலத்தில் அதாவது மூன்றாங் காலப்பகுதியில், வைஷ்ணவர்களும் அதைப் பெரும்பாலுங் கைக்கொண்டனர். கணிதமும் ஜைனர்களாலேயே இந்நாட்டில் பரவச்செய்யப்பட்டது. வைஷ்ணவ சைவ பக்திமதங்கள் வெகு நீண்டகாலமாய் இந்நாட்டில் இருந்தனவாயினும் ஆருகதம் பௌத்தத்தோடு போர்புரிந்து ஓங்கியது இந்தக்காலப்பகுதியிலாம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!